


காதற் பெருமான்
பாலகுமாரன்

# காதற்பெருமான்

## 1

"அருணகிரி..."

அம்மாவின் குரல் கொல்லைப் புறத்திலிருந்து கேட்டது. அருணகிரி பரணியிலிருந்து பிறையில் கால் வைத்து இறங்கினான்.

அது பலகைப் பரணை. அதற்கு மேலே ஓடுவேயப்பட்டிருந்தது. குறுக்கும் நெடுக்குமாய் உத்திரக் கட்டைகள் ஓடின. இடம் மிக இருட்டாக இருந்தது. அதற்குள் தவழ்ந்துதான் போக வேண்டும். ஒரு சிறிய கைவிளக்கு எடுத்துக் கொண்டு போனால், நூற்றுக் கணக்கான பாத்திரங்கள் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அநேகமாய் எல்லா பாத்திரங்களிலும் செப்புக்காசோ, வெள்ளிக்காசோ, பொற்காசோ நிரம்பி இருக்கும்.

ஒவ்வொரு முறையும் அருணகிரியைத்தான் அம்மா பரணி ஏறச் சொல்வாள். ஒரு குறிப்பிட்ட பாத்திரத்திலிருந்து பொற்காசுகள் எடுக்க, அவனுக்கு உத்தரவிடுவாள். அப்படி எடுக்கும் பொழுது அவன் மற்ற பாத்திரங்களையும் சோதனை செய்து பார்த்து வைத்துக் கொள்வான்.

ஒரு பித்தளைச் சொம்பில் வழிய வழிய செப்புக்காசுகள் இருந்தன. நாலைந்து செப்புக் காசுகளை எடுத்து இடுப்புத் துண்டில் முடிந்து, வாயில் அடக்கிக் கொண்டு அம்மாவுக்குண்டான பொற்காசுகளோடு பரணையை விட்டு இறங்குவான்.

அந்த செப்புக் காசுகளை இஷ்டம்போல் செலவு செய்வான்.

இப்போது அம்மா பொற்காசுகள் எடுக்கச் சொல்லவில்லை. ஆனால், அம்மாவும், அக்காவும் கொல்லைப்புறம் போயிருந்தபோது, விளக்குப் பிறையில் கால் வைத்து, பரணைக்குத் தாவி, உள்ளே தவழ்ந்து போய், சில செப்புக் காசுகளை எடுத்து இடுப்பில் இறுக முடிந்து கொண்டான். அம்மா கூப்பிட்டதும் இறங்கினான். குனிந்து பரணை ஏறிய தடயங்கள் தெரிகிறதா என்று பார்த்தான். பரணையில் கால் வைத்த தடயங்கள் இருக்கிறதா என்று சோதித்தான்.

எல்லாம் சரியாக இருந்தது. எந்த மாற்றமும் இல்லாமல் இருந்தது.

மறுபடி அம்மா, 'அருணகிரி' என்று குரல் கொடுத்தாள்.

''எதற்கம்மா கூப்பிடுகிறாய்?'' பதிமூன்று வயது அருணகிரி செப்புக் காசுகளை தொட்டுக் கொண்டே கூவினான்.

''குளிக்க வேண்டாமா சுடுநீர் வைத்திருக்கிறேன். சீக்கிரம் வா.''

''கடவுளே, நல்லவேளை, நேரே போய் கேட்கவில்லை. கேட்டிருந்தால் அம்மா துண்டை பிடித்து இழுத்திருப்பாள். மொத்த செப்புக்காசுகளும் சிதறியிருக்கும். பிறகு ஏகப்பட்ட விசாரணைகள் நடக்கும். அம்மாவும்,



அக்காவும் புலம்பத் துவங்கி விடுவார்கள். அப்பா வந்தவுடன் பெரிதாய் குற்றம் சுமத்தியிருப்பார்கள்.

அப்பா அடிக்க மாட்டார். கடிந்து கொள்ள மாட்டார். வருத்தப்படுவார்.

''உனக்கு வாழ்க்கை தெரியவில்லை தம்பி. ஏன் எப்போதும் பதட்டமாகவே இருக்கிறாய்? ஒரு செயல் செய்வதற்கு முன்பு அமைதியாய் யோசி. கண்மூடி உட்கார்ந்து கொள். உள்ளே இருக்கும் உட்குரலைக் கேள்'' என்று ஏதேதோ சொல்வார்.

கைகட்டி அவரையே பார்த்துக் கொண்டு இருந்தால் மெல்லப் புன்னகை செய்வார்.

''நீ நல்ல பையன். உனக்கு எல்லாம் புரியும். போய் வா'' என்று அனுப்பிவிடுவார். அத்தோடு அந்த குற்றம் மறைந்துவிடும்.

இப்போது அம்மா குளிக்க கூப்பிடுகிறாள். என்ன செய்வது?

அவன் பூஜை மாடத்தில் இருந்த வர்ண மயமான விநாயகர் சிலையை எடுத்தான். பத்து செப்புக் காசுகளையும் விநாயகருக்கு அடியில் வைத்துவிட்டு, கொல்லைப்புறம் ஓடினான். துண்டை வீசிவிட்டு கோவணத்தோடு போய் நின்றான்.

அம்மா துவைக்கும் கல்லில் உட்காரவைத்து, புஜத்தில் சுடுநீர் ஊற்றினாள்.

''சூடு சரியா'' என்றாள்.

அவன் தலையசைத்ததும் முதுகு, கழுத்து, மார்பு எல்லாம் வெந்நீர் ஊற்றிவிட்டு, பிறகு தலையில் கவிழ்த்தாள். வாசனைப் பொடியோடு கூடிய சீக்காயை

தலையில் தடவினாள். வட்டக்குடுமியில் இருந்த எண்ணெயை அகற்றினாள். பிறகு பயத்தமாவை உடம்பெல்லாம் துடைத்தாள்.

''குளித்தவுடன் வெளியே ஓடிவிடவேண்டாம், இன்று உன் அப்பாவின் பிறந்த நாள். பாயசம், நைவேத்தியம் செய்திருக்கிறேன். இங்கு யாருமில்லை குடிப்பதற்கு ஆகவே, இருந்து குடித்துவிட்டுப் போ.''

''தலை துவட்டிவிட்டாள். முதுகு, தொடை, பாதம் எல்லாம் துண்டால் ஒற்றியெடுத்தாள்.

''காலில் வலி இருக்கிறதா?'' என்று கனிவோடு கேட்டாள்.

அருணகிரிக்கு இடது காலைவிட, வலது கால் சற்று சிறியது. உற்று கவனித்தால்தான் தாங்கிநடப்பதுதெரியும். அப்படி கவனித்தவர்கள்கூட என்ன கால் ஆணியா என்றுதான் கேட்பார்கள். ஊனம் என்பது தெரியாது.

அம்மா வலக்கையை துடைத்தாள். வலக்கையில் ஆறு விரல்கள்இருந்தன. இன்னொரு கண்டு விரல் முளைத்திருந்தது. அந்த விரலையும் நன்றாக நீட்டவும், மடக்கவும் முடிந்தது.

அம்மா வலக்கையை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டாள். எப்போதும் குளிக்கும்போது அப்படித் தான் செய்கிறாள்.

''ஏன் இப்படி செய்கிறாய் அம்மா?'' அருணகிரி வியப்போடு கேட்டான்.

''அருணகிரி நல்ல பிள்ளை. படிப்பில் கெட்டிக்காரன் அம்மாவின் மீதும், அக்காவின்மீதும் மிகவும் பிரிய முள்ளவன், தந்தை மீது மிகுந்த மரியாதை உடையவன். அதனால்தான் அவன் கையை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொள்கிறேன்.''



''என் வலக்கையை மட்டும் எடுத்து கண்ணில் ஒற்றிக் கொள்கிறாய்' ஆறு விரல் இருப்பதால் தானே?''

''அதுவும் ஒரு காரணம்.''

''அம்மா நான் முருகப் பெருமான் அம்சமா?''

''அதுவும் ஒரு காரணம்.''

''அம்மா, நான் பெரிய தமிழாசிரியனாவேன். புலவனாவேன் என்று ஜோசியர் சொல்லி இருக்கிறாராமே அக்கா ஆதி சொன்னாள்.''

''அதுவும் ஒரு காரணம்.''

''அக்கா ஆதியை நான் அடித்தாலும், கிள்ளினாலும் பொறுத்துக் கொள்கிறாள். பதிலுக்கு ஏதும் செய்ய மாட்டேன் என்கிறாள்.''

''அவள் உத்தமி சத்தியவதி. என் வயிற்றில் பிறந்த முத்து.''

''நான்?''

''நீ மாணிக்கம்.''

''மாணிக்கம் சிகப்பு நிறம். முருகரும் சிகப்பு நிறம். இல்லையா அம்மா?''

''ஆமாம்.''

''அப்போது நான் முருகரா?''

''நீ அருணகிரி. என் அன்பு மகன் அருணகிரி. ஆறு விரல்களும், சிகப்புமே முக்கியமில்லை. ஒரு பையன் நல்லவனாக இருக்க வேண்டும். அதுதான் மிக முக்கியம். தமிழிலும், கணிதத்திலும் வல்லவனாக இருப்பது சந்தோஷம்தான். நல்லவனாக இல்லாவிட்டால், இவை அத்தனையும் வீண்.''

''நல்லவனாக இருப்பது என்றால் என்ன?''

அருணகிரி, அம்மாவோடு வீட்டிற்குள் நுழைந்தான். அம்மா அவனுக்கு நெற்றியில் திருநீறு பூசினாள். உச்சியில் வைத்து ஊதினாள்.

''பொய் சொல்லக் கூடாது. திருடக்கூடாது. புறம் சொல்லக் கூடாது. தவறு என்று சொல்லி இருக்கிற எதையும் என் மகன் அருணகிரி செய்யக் கூடாது. அருணகிரியா, அவன் மிகமிக நல்ல பையனாயிற்றே என்றுதான் நான் கேட்க வேண்டும்.''

''சரி அம்மா.'' அருணகிரி குழந்தைத்தனத்துடன் அம்மாவைப் பார்த்தான்.

அம்மா அவனுக்கு திருஷ்டி கழித்து, நெட்டிமுறித்தாள் ஒரு வாய் அகண்ட பாத்திரம் நிறைய கடலைப்பருப்பும், வெல்லமும், ஏலமும், குங்குமப்பூவும், முந்திரியும் பச்சைப் பருப்பும் போட்ட பாயசத்தைக் கொடுத்தாள்.

அவன் இன்னும் கொஞ்சம்கூடக் கேட்டு இரண்டு போணி பாயசம் குடித்தான். வாய் கொப்பளித்தான்.

கொடியிலிருந்த மொடமொடப்பான கரைத்துண்டை உடுத்திக்கொண்டு பிள்ளையாருக்கு நமஸ்காரம் செய்தான். காசை எடுத்து, எண்ணிப் பார்த்து, இடுப்பில் முடிந்துகொண்டான். சமையலறைக்குப் போய் அம்மாவின் கன்னத்தில் முத்தம் கொடுத்தான்.

''நான் இலக்கண ஆசிரியர் வீட்டுக்குப் போகிறேன். பின்பு அவரோடு கோவிலுக்குப் போவேன். கோவிலிலிருந்து வேத பாடசாலைக்குப் போய் ஒரு மணி நேரம் உட்கார்ந்திருப்பேன். வேத பாடசாலை முடிந்த பின்பு மனைசாஸ்திரம் தெரிந்து கொள்ள, சிற்பியின் இல்லத்திற்குப் போவேன்.



பிறகு திருவூடல் தெருவில் இருக்கும் நமது உறவினர் வீட்டுக்குப் போய்விட்டு அங்கிருந்து மாலை வீடு வந்து விடுவேன்.

உறவினர் வீட்டில் சோறு போடுகிறார்கள். சிலசமயம் இல்லையென்று சொல்லி விடுகிறார்கள். எனக்கு ஒருகாசு கொடு. ஒருவேளை, உணவு இல்லையென்று சொல்லி விட்டால் கடையில் அப்பம் வாங்கி சாப்பிடுகிறேன்.''

அம்மா பதில் பேசாமல் மரக்குடுவையிலிருந்து ஒருகாசு எடுத்து அவனிடம் நீட்டினாள்.

''ஒரு சந்தேகம்?'' அவனைப் பார்த்து கேட்டாள்.

''என்ன?'' என்று பயத்தோடு வினவினான்.

''தமிழ் இலக்கண வகுப்பு, வேத பாடசாலை, சிற்ப சாஸ்திரம் என்று பலதும் கற்கிறாயே. நீ என்னவாக ஆகப் போகிறாய்? பெரியவனான பிறகு என்ன தொழில் செய்யப் போகிறாய்?''

அருணகிரி பெருமூச்சு விட்டான், நிம்மதி ஆனான் அம்மாவின் அருகே போய், அவள் வலக்கையைப் பற்றிக் கொண்டான்.

''வெளியே யாரிடமும் சொல்லாதே அம்மா.''

''சொல்ல மாட்டேன்.''

''ஆதியிடமும் கூட சொல்லாதே.''

''ஆதியிடமும் சொல்ல மாட்டேன்.''

''நான் அமைச்சராகப் போகிறேன். திருவண்ணாமலையில் யார் ஆட்சி செய்கிறார்களோ, அவர்களுக்கு அருகே அமர்ந்து அரசாங்க நிர்வாகம் பார்க்கப் போகிறேன். அடுத்த வருடத்திலிருந்து எனக்குப் போர்ப்பயிற்சியும் சொல்லித்தர சம்மதித்து இருக்கிறார்கள்.

காஞ்சிபுரம் போய், அங்குள்ள போர்ப் பயிற்சி கழகையில் ஒரு வருடம் தங்கி படிக்கப் போகிறேன். அவர்கள் ஓடச் சொல்வார்களாம். தலையில் சுமை வைத்துவிட்டு ஓடு என்று சொல்வார்களாம். இதுதான் முதல் பயிற்சியாம். நான் இப்போதே அந்தப் பயிற்சி செய்கிறேன். அந்தி சாயும் நேரம், நான் திருவண்ணாமலை சுற்றி ஓடுகிறேன். ஓடி உரம்பெற்ற உடம்பாக இருந்தால், உடனே போர்ப் பயிற்சி ஆரம்பித்து விடுகிறார்களாம்.''

''எதையும் கவனமாக செய் தம்பி. உன்னை நினைத்தால் பெருமையாகவும் இருக்கிறது. அதே சமயம் கவலையாகவும் இருக்கிறது.''

''என்ன கவலை அம்மா.''

''உன் பதினைந்து வயதிலிருந்து, இருபத்தி இரண்டரை வயது வரை உனக்கு ஏழரைநாட்டு சனி. மிக மோசமான காலம். அதை நீ காயமின்றி தாண்ட வேண்டுமே என்ற கவலைதான் எனக்கு.''

''அம்மா, நீ இருக்கும்போது எனக்கு என்ன கவலை. நான் இரவுதான் வருவேன். கவலைப்படாதே.''

அருணகிரி வெளியேறினான். வெளிச்சமும், பரபரப்புமாய் இருந்த திருவண்ணாமலை நகரம் அவனை சுற்றிக் கொண்டது.

வயிற்றில் பாயசம். உடம்பில் உரம். தலை முடியெல்லாம் வாசனை. இடுப்பில் கரை போட்ட வெளுப்பான வேட்டி. கழுத்தில் தங்கத்தில் முடிந்த உத்திராட்சம். காதில் பச்சை கடுக்கன். மாநிறத்திற்கும் மேலான சிவந்த நிறம். நெற்றியில் விபூதி. நடுவே குங்குமப் பொட்டு. கூர்மையான மூக்கு. சுடரும் கண்கள். உறுதியான முகவாய். அகன்ற காதுகள். திருத்த வில் போன்ற புருவம். வளைந்த மேலுதடு. கனிந்த கீழுதடு. கொழுப்பான கன்னம். முகம் முழுவதும் சிரிப்பு.



இடையில், வேட்டி சுருணையில் பத்து செப்புக்காசு. கையில் பதினோராவது செப்புக் காசு.

ஒரு செப்புக்காசிற்கு ஒரு கூடை அப்பம் கிடைக்கும். ஒரு கூடையில் இருபத்தி ஐந்து அப்பங்கள் இருக்கும். ஒரு காசுக்கு பன்னிரெண்டு தோசைகள் கிடைக்கும். இருபது இட்லி கிடைக்கும். கரை போட்ட நாலுமுழ வேட்டி கிடைக்கும்.

அருணகிரி இலக்கண ஆசிரியர் வீடு நோக்கி நடக்கும்போது, அங்கங்கே உட்கார்ந்திருந்த இளைஞர்கள் அவனோடு சேர்ந்து கொண்டார்கள். கோயில் வாசலுக்கு வரும்போது இன்னமும் சிலர் சேர்ந்து கொண்டார்கள்.

சன்னதித் தெருவில் ஒரு வீட்டுத் திண்ணையில் பலகாரங்கள் விற்றுக் கொண்டிருக்க, ஒரு செப்புக்காசை ஒரு பையனிடம் அருணகிரி கொடுத்தனுப்பினான். அந்தப் பையன் ஒரு கூடை நெய்யப்பம் வாங்கி வந்தான்.

ஏழு நண்பர்களும் கூடைக்குள் கைவிட்டு அப்பம் எடுத்து சாப்பிடத்துவங்கினார்கள். நேற்று நடந்த இலக்கண பாடம் பற்றி ஒரு மாணவனை அருணகிரி பேசச் சொன்னான்.

அந்த மாணவன் பேசப்பேச அருணகிரிக்கு நேற்றைய பாடம் முழுவதும் நினைவுக்கு வந்தது.

''இன்று அடுத்த பாடம் வாருங்கள்.''

அவர்கள் யாருக்கும் தமிழ் இலக்கணம் கசக்கவேயில்லை.

அருணகிரியால், அவன் காட்டிய ஆர்வத்தால், மற்ற மாணவர்களும் தமிழை ஊக்கமாய் படித்தார்கள். வகுப்புக்கு வருவதற்குமுன்பே தன் மனத்திறனை மற்ற மாணவர்களோடு சோதித்துக் கொண்டுதான் வருவான். ஒரு உவமானம் சொல்லி, விளக்கப்பட்டவுடன், மாணவர்

களை நூற்றுக்கணக்கான உவமானம் கண்டுபிடிப்பார்கள். கூச்சலும், சந்தோஷமுமாய் தமிழ் வகுப்பு உச்சி நேரத்தில் முடிவடையும்.

பிறகு, வேதபாடசாலை போய், தர்மசாஸ்திரங்கள் படிப்பார்கள். பிறகு உச்சிகால பூஜைக்கு கோவிலுக்குப் போவார்கள். பூஜை முடித்து, திருநீறு வாங்கி பிறகு மடப்பள்ளிக்குச் சென்று மாணவர்களுக்காக அரசு கொடுக்கும் பட்டைசாதம் வழங்குவார்கள்.

கோயில் வாசலிலுள்ள கிழவி, ஒரு காசுக்கு ஒரு குடுவை தயிர் தருவாள். அதை அருணகிரி வாங்குவான். அருணகிரிக்கு ஏடோடு தயிர் ஊற்றிவிட்டு, மீதியை நண்பர்கள் எடுத்துக் கொள்வார்கள்.

பிறகு சிறிது நேரம் கோயில் மண்டபத்திலேயே படுத்துக் கிடப்பார்கள். ஊர் கதை பேசுவார்கள். வெய்யில் சற்று குறைய, தெற்கே, ஸ்தபதிகள் இருக்கும் குடியிருப்புகளுக்குப் போவார்கள்.

கடந்த ஒரு வருடமாக ஒரு வயதான ஸ்தபதி பல்வேறு சிற்பங்கள் பற்றியும், கோயில்கள் பற்றியும் பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறார். எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு அவரிடம் நாற்பது மாணவர்கள் பாடம் கேட்க இருந்தார்கள்.

அந்த நாற்பது மாணவர்களும் சிற்பிகள் அல்ல. கல்லெடுத்து அவர்கள் செதுக்கப்போவதில்லை. ஆனால், எப்படி செதுக்கவேண்டுமென்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பார்கள். எங்கே கோயில் கட்ட வேண்டுமென்பதை அறிந்து வைத்திருப்பார்கள்.

அதுமட்டுமல்ல. வரைபடம் வைத்து, தமிழ்நாட்டின் பல கோயில்கள் பற்றி அவர் நடுங்கும் குரலில் தெரிவித்து வந்தார்.



தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் திருப்புறம்பியம் சிவன் கோயில், காஞ்சீபுரம் கைலாசநாதர்கோயில், கடல்மல்லை குகைக்கோயில்கள், மயிலை, அல்லிக்கேணி, திருவொற்றியூர் கோயில்கள், அதன் சிற்பச் சிறப்புகள், மூர்த்திச் சிறப்புகள், வரலாற்றுக் கதைகள் என்று பேசிக் கொண்டு வந்தார்.

அந்த தள்ளாமையிலும், ஆர்வத்தோடு கதைகள் சொல்வார். இளைஞர் பட்டாளம் சற்று வயது முதிர்ந்தோர் கூட்டம் என்று அமைதியாக பலர் கேட்டுக்கொண்டு இருப்பார்கள். யாத்ரீகர்கள் பலர் அமர்ந்து கொண்டிருப்பார்கள்.

அருணகிரி அந்தக் கிழவரிடம் வெறும் கையுடன் போக மாட்டான். ஒரு காசுக்கு வெற்றிலையும், கொட்டைப் பாக்கும் வாங்கிப் போவான்.

கல்தச்சர்களுக்கு வெற்றிலை போடுவது மிகவும் பிடிக்கும். குடந்தையிலிருந்து வரும் வெற்றிலையை அவர்கள் மிகவும் ரசிப்பார்கள். கிழவர், அருணகிரி கொடுத்த வெற்றிலையை கண்ணில் ஒற்றிக் கொள்வார்.

''அருணகிரி பல நூறு ஆண்டுகள் வாழ வேண்டும்'' என்று கை கூப்புவார்.

சில சமயம் அருணகிரி, அவர் வீட்டுப் பெண்டுகளுக்கு காயும், கனியும் வாங்கிப்போவான். ஒரு தார் வாழைப் பழம் கொண்டு போவான்.

அருணகிரிக்கு அந்த சிற்பக்கூடத்தில் பெரிய வரவேற்பு இருந்தது-

''விதையொன்று போட்டால், சுரையொன்று முளைக்குமா?''

அந்த கிழ ஸ்தபதி அருணகிரியை அருகில் உட்கார வைத்துக் கொண்டு பேசுவார். யாரும் இல்லாதபோது

தன் வீட்டுப் பெண்டுகளுக்கு அருணகிரியை அறிமுகப்படுத்துவார். உண்ணவோ, குடிக்கவோ ஏதேனும் கொடு என்று வற்புறுத்துவார்.

''இவன் தந்தை சந்திரமௌளீஸ்வரன் எனக்கு உற்ற நண்பர். எல்லாக் கலைகளிலும் தேர்ந்தவர் மிகுந்த புத்திசாலி. சிவகோத்திரம், செங்குந்தர் மரபு. இவன் தாய் முத்தம்மை தாஸி. அருணாச்சலேஸ்வரருக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவள். நெல்முனையளவும் ஒழுக்கம் தவறாதவள்.

முத்தம்மையை தன் மனைவியின் சம்மதத்தோடு சந்திரமௌளீஸ்வரன் ஊரறிய திருமணம் செய்து கொண்டார்.

சந்திரமௌளீஸ்வரன் பெரிய அறிவாளி. அரசனைப் போன்ற பணக்காரர். ஆனால், முதல் மனைவியிடம் சுகப்படவில்லை. அவளும் பெரும் சொத்துக்களோடு வந்ததால் இவரை லட்சியம் செய்யவில்லை இறைப்பணிகளில் அவளுக்கு விருப்பமில்லை. நிலம் வளைத்துப் பிடிப்பதிலேயே ஆர்வமாக உள்ள குடும்பம் அவளுடையது. எனவே, தன் ஊர்விட்டு விலகி வந்து திருவண்ணாமலையில் நல்ல தாஸியைத் தேர்ந்தெடுத்து அவளைத் திருமணம் செய்து கொண்டு நிறைய தான தருமங்கள் செய்து வாழ்கிறார்.

ஆச்சரியமான விஷயம் என்ன தெரியுமா. சந்திரமௌளீஸ்வரனும், முத்தம்மையும் விரதமிருந்து இந்தப் பிள்ளையைப் பெற்றார்கள். இந்தத் தேதியில் கலந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்து நாள் பார்த்து நேரம் பார்த்து ஜோஸ்யம் சொல்லியபடியே ஒன்று சேர்ந்தார்கள்.

முத்தம்மை சூல் கொண்டதும் திருவண்ணாமலையில்



உள்ள அத்தனை சாதுக்களுக்கும் சந்திரமௌளீஸ்வரன் தயிர்சாதமும், கோவணமும் தானம் கொடுத்தார்.

தயிர் சோறு ஞானம். ஆடைதானம் செய்தால் புகழ். தனக்குப் பிறக்கும் பிள்ளை ஞானத்தில் புகழுடைய வேண்டும் என்று ஆசை அவருக்கு. அப்படித் திட்டமிட்டு பிறந்த பிள்ளை அருணகிரி.

பதிமூன்று வயதுதான். ஆனால், முதிர்ந்த முகம் உரமுள்ள உடம்பு வாலிபத்தில் இன்னும் சிறப்பாக இருப்பான் என்று என் மனதுக்குப் படுகிறது.

இவன் கேள்வி கேட்பதில் சூரன். அற்புதமான ஞாபகசக்தி. இவன் ஒரு நாள் வரவில்லையென்றாலும் மனது ஏங்க ஆரம்பித்து விடுகிறது. எத்தனை பேர் பாடம் கேட்க வருகிறார்கள். உங்களுக்கு ஏதேனும் வாங்கிவர வேண்டும், வீட்டுப் பெண்களுக்கு மரியாதை செய்ய வேண்டும் என்று தோன்றியிருக்கிறதா. அருணகிரிக்குத்தான் தோன்றியிருக்கிறது.''

''அது ஒரு தந்திரம்.'' அருணகிரி நண்பர்களிடம் சிரித்தபடியே சொன்னான்.

''அவர் சொல்லித் தருவதை நிறுத்தப் போவதில்லை. கொடுத்தாலும், கொடுக்காது போனாலும் சொல்லித் தருவார். வீட்டுப் பெண்களுக்கு அவர் மீது மதிப்பு வர வேண்டும் என்பதால்தான் ஒரு தார் வாழைப்பழம் கொண்டு வந்து கொடுத்தேன். வீட்டுப் பெண்டுகள் மதிக்கக் காரணம் இவன் என்று தெரிந்தால் நம்மீது பிரியம் அதிகமாகும்.

மற்றவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நாம் ஏழு பேர் இருக்கிறோம். நாம் நன்கு பாடம் கேட்க வேண்டும் என்பதே என் ஆசை. நாம் வளர்ந்து நல்ல பதவியில் அமர்ந்து திருவண்ணாமலையிலும் சுற்றியுள்ள

எல்லா ஊர்களிலும் ஆட்சி செய்ய வேண்டும் என்பது தான்.

திருவண்ணாமலையில் கடிகைகள் நிறையத் திறந்து காஞ்சி மாநகரைப் போல் பிரபலமாக்க வேண்டும் என்பது என் விருப்பம். மேலை நாட்டு அறிஞர்களும், வடநாட்டு தபஸ்விகளும் திருவண்ணாமலையைக் கேள்விப்பட்டு வர வேண்டும் என்பது என் அவா.

முடிந்தவரை நாம் நிறைய கற்க வேண்டும். தமிழில் நல்ல நூல்கள் இருக்கின்றன. அவைகளைப் பிரதியெடுக்க ஆட்களை நியமிக்க வேண்டும்.

காஞ்சியிலும், குடந்தையிலும், தஞ்சையிலும் இன்னும் வடக்கே மயிலையிலும் வடமொழிப் பண்டிதர்களே அதிகம் இருக்கிறார்கள். அரச மொழியாய் தெலுங்கு இருக்கிறது. அரேபியர்களின் வலிமையால் புதிய மொழி ஒன்று நடமாடுகிறது. தமிழ் மொழியை பேசக்கூட மாட்டார்களோ என்று பயம் வருகிறது. அதனால்தான் உங்கள் அனைவருக்குமாய் சேர்த்து நான் காசு கொடுக்கிறேன்.''

''அடேயப்பா இப்படி யோசிக்க நீ எங்கு கற்றாய் அருணகிரி.''

''என் தந்தை யோசிப்பார். இரவு உணவு முடிந்த பிறகு என் தாயோடும், தமக்கையோடும், என்னோடும் பேசுவார். நான் மனனம் செய்த தேவாரங்களை ஓதுவேன் அதற்குப் பதம்பிரித்துப் புதிதாகப் பொருள் சொல்லுவார். அந்த சிறப்பு அதாவது திருவாசகத்தின் சிறப்பு வடமொழியில்கூட இல்லையென்று அடித்துப் பேசுவார். தமிழைத் தூக்கி நிறுத்த வேண்டுமென்று அடிக்கடி சொல்லுவார். இதைத்தான் நான் உங்களிடம் பேசுகிறேன்.''



''ஆனாலும், தினமும் காசு கிடைக்கிறதே... அது எப்படி.''

''இது தேவையில்லாத கேள்வி எங்கள் எல்லோரையும் விட அதிகமாக அப்பம் தின்றுவிட்டு, கேள்வியும் கேட்கிறாயா, இதுபற்றி அதிகம் பேசாதிரு. பேசினால் அப்பம் தடைபடும்.'' அருணகிரி நண்பனை அதட்டி நிறுத்தினான். மற்றவர்களும் கேட்டவனை கன்னென்று திட்டினார்கள்.

சூரியன் திருவண்ணாமலை உச்சியில் மறைய நகரில் இருளை சூழ்ந்தது. வெயிலில்லாது வெளிச்சம் மட்டும் இருந்தது.

நண்பர்களை விலக்கிவிட்டு திருவூடல் தெரு நோக்கி நடந்தான். பசித்தது. அது அவன் தூரத்து உறவினர்வீடு. அங்குள்ள பெண்களும் கோவிலுக்கு அர்ப்பணித்துக் கொண்ட தேவரடியார்கள். ஆனால், அம்மாவைப் போல் ஆதிரையைப் போல் பாட்டுடன் நிற்காமல் துள்ளிக்குதித்து நடனமும் ஆடுவார்கள், யாழ் வாசிப்பார்கள். குழலும் மத்தளமும் வெங்கலத்தாளத்தோடு ஒலிக்க குறவஞ்சி நடனமாடுவார்கள், அதற்கு வேடுவப் பெண்களைப்போல் அலங்காரம் செய்து கொள்வார்கள்.

கோவிலின் அவர்கள் நடனமாடும்போது கூட்டம் தெரியும். முன் வரிசையெல்லாம் தளபதிகளும், போர் வீரர்களும், பெரும் வணிகர்களும் உட்கார்ந்திருக்க, அதற்குப் பிறகு புலவர்கள் உட்கார்ந்திருக்க. நான்காவது ஐந்தாவது வரிசையில்தான் இடம் கிடைக்கும்.

ஆவேசத்தில் கூட்டம் அடிக்கடி மேலே வந்து விழும். சில சமயம் மது அருந்தியவருக்கு அருகே இடம் கிடைக்கும். அப்படி மது அருந்திய போர் வீரன் அருகே இருப்பவரை இம்சைப்படுத்திவிடுவான். ஆஹா... இந்த தாஸி என்ன அழகு என்று அருகில் இருப்பவர்களைக் கட்டிப்பிடிப்பான். அதட்டினால் அடிக்க வருவான்.

எனவே கோயிலில் உட்கார்ந்து நடனம் பார்க்காமல் உறவினர் வீட்டுக்குள்ளேயே நடனம் பார்த்து விடுவான்.

எப்படி இருக்கு நடனம் என்று பெண்கள் அபிப்பிராயம் கேட்டார்கள். அவனும் குறை நிறைகளை சொல்வான்.

''பல்லவி நன்றாக அமையவில்லை. ஒரு நல்ல பல்லவி சொல்லேன்'' அவர்கள் கேட்க அவன் பல பல்லவிகள் தருவான்.

அதைத் தவிர வேடுவச்சிமீது வேடன் காதல் கொண்டு கைப்பிடித்து இழுப்பதைப் பார்க்க ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது.

''என்னோடு வந்தால் என்னவெல்லாம் தருவேன் தெரியுமா...'' வேடன் பட்டியலிடுவான்.

அப்போது கூட்டத்திலிருந்து குடிகாரன் ''இன்னும் கூட தரேன். என்கூட வா'' என்று கூச்சலிடுவான்.

கூட்டம் சிரிக்கும் கூப்பிடு, கூப்பிடு, மறுபடி கூப்பிடு என்று உற்சாகப்படுத்தும்.

குடிகாரன் ஏதேதோ சொல்ல வேறு சிலர் காது பொத்திக்கொள்ள அருணகிரிக்கு எல்லாம் ஆச்சரியமாக இருக்கும்.

மன்மதபாணம், இன்பகவம், தலையணை வேதம், மன்மதக் கலை போன்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியவில்லை. ஆனால், கேட்பதற்கு முகமெல்லாம் சிரிப்பாகி ஒரு சந்தோஷம் இருக்கும். கோயில் சிற்பங்களில் கட்டிப்பிடித்த ஆணையும் பெண்ணையும் நண்பர்கள் கூட்டிப்போய் காட்டியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும் போது ஒரு சந்தோஷம் பரவும்.

தன்னை ஒரு வேடனாகவும் வேடுவச்சியைத் தேடி ஓடுவதாகவும் மனசுக்குள் கற்பனை பறக்கும் இந்த முறை



அந்த உறவுக்காரப் பெண்களை நன்கு உற்றுப் பார்க்க வேண்டும். சிற்பத்தின் அழகும் அவர்களின் அழகும் ஒப்பிட்டு நோக்க வேண்டும். அருணகிரி அவன் உறவினர் வீட்டுப் படியில் ஏறினான், சாப்பாடு கேட்டார்.

சோறும் கூட்டும் பரிமாறினார்கள்.

''சாப்பிட்டவுடன் கிளம்பிவிடப்பா இன்று நடனமில்லை'' என்று அவசரப்படுத்தினார்கள்.

எல்லாப் பெண்களும் பரப்பரப்பாக இருந்தார்கள்.

சாப்பிட்டு முடித்து கையலம்பப்பின்புறம்போனபோது பெரிய பல்லக்கு இருந்தது.

''அட யாருடையது இது'' என்று கேட்டபோது எவரும் பதில் சொல்லவில்லை.

அருணகிரி யாரும் அறியாது பின்கட்டு வழியாக மேல்மாடிக்கு போனான். மெல்ல நடனசத்தம் கேட்டது. பாட்டு பாடுவதும் கேட்டது. ஆனால், குரலோ தாளமோ இல்லை.

ஆவல் உந்த அருணகிரி திறந்தவெளியான பின்கட்டிலிருந்து முன்கட்டுக்கு நகர்ந்தான் கதவு அடைத்திருந்தது.

உள்ளேயிருந்து நடனச் சத்தமும் சிரிப்பும் கேட்டன.

சுவர் உச்சியில் ஒருபெரிய வட்டமான வழி இருந்தது. அது பரணைக்கு காற்றுப் புகும் வழி என்று அவனுக்குத் தெரியும். பிறையில் கால் வைத்து அதற்குமேல் இருந்த ஒற்றை ஆணியைப் பிடித்து வாசற்படியில் இருந்த இன்னொரு ஆணியில் கால் வைத்து வட்டத்துக்குள் புகுந்தான். உள்ளே நுழைந்தான்.

பரணையில் ஏகப்பட்ட பாத்திரங்கள் இருந்தன. ஓலைச்சுவடிகள் இருந்தன. கீழேயிருந்த ஜன்னலிலிருந்து மெல்லிய வெளிச்சம் பரணைக்கு வந்து கொண்டிருந்தது. அருணகிரி பரணையிலிருந்து எட்டிப் பார்த்தான். அங்கு அவன் உறவினர் பெண்கள் நடனமாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால், எவருக்கும் உடையே இல்லை.

அங்கே திருவண்ணாமலை நகரத்து அமைச்சர் மஞ்சத்தில் கால் அகட்டிக் கிடந்தார். அவருக்கும் உடையே இல்லை.

அருணகிரி, சூரியன் முற்றிலும் மறைந்து இருட்டாகி, விளக்கேற்றும் வரை அங்கேயே அமர்ந்து வேடிக்கை பார்த்தான். அவனுக்கு மன்மதக்கலை, பெண்சுகம் என்கிற வார்த்தைகளெல்லாம் தெளிவாய் புரிந்தன.

அமைச்சர் ஒரு பொற்பை நிறைய காசுகளை எடுத்து மல்லாக்கப் படுத்துக் கொண்டிருந்த அருணகிரியின் உறவுப் பெண்ணின் அடிவயிற்றில் கொட்டினார்.

அந்தப்பெண் அமைச்சரின் இடுப்பில் முத்தமிட்டாள்.

அருணகிரி பரணையிலிருந்து வெளியே வந்தான். வட்டத்திலிருந்து தரையில் குதித்தான். வீட்டிற்கு நடந்து போனான். அவன் எழுச்சியை அவனால் அடக்க முடியவில்லை. அன்று இரவு அவனுக்கு தூக்கமில்லை. மறுநாள் அவனால் இலக்கண வகுப்புக்குப் போக முடியவில்லை. திரும்பத் திரும்ப அவன் உறவுக்காரப் பெண்களின் நிர்வாணமே அவன் மனதைக் கடித்துக் குதறிக் கொண்டிருந்தது.

இது ஒரு பெரிய துரதிருஷ்டம். அருணகிரிக்கு உடம்பு விழித்துக் கொள்ளும் முன்பே மனம் விழித்துக்கொண்டு விட்டது. வயதுக்கு மிஞ்சிய புத்தி முதிர்ச்சி போல வாழ்க்கை அனுபவம் முதிர்ந்துவிட்டது. இன்னும் மூன்று



வருடங்கள் கழித்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இப்போதே அவன் கண்முன் நடனமாடின. வெள்ளை மனதில் கறை படிந்தது. கள்ளமில்லா எண்ணத்தில் காமம் உட்கார்ந்து கொண்டது.

இது ஒரு மிக மோசமான அனுபவம். வாழ்க்கையில் சில குழந்தைகளுக்கு இப்படி ஏற்பட்டுவிடுகிறது. தாயும், தகப்பனும் கூடியதைப் பார்த்து பேதலித்த குழந்தைகள் அநேகம் பேர் உண்டு.

அருணகிரிக்கு அப்படிப்பட்ட வேதனையை அவன் பெற்றோர் கொடுக்கவில்லை. அவர்கள் கம்பீரமாக வாழ்ந்து அவனுக்கு கனிவான வாழ்க்கையை உபதேசித்தார்கள். ஆனால், விதி அவனை வேறு இடத்திற்கு அழைத்துச் சென்றது. விகாரமான காட்சிகளைக் காட்டியது. அவனைவேறு பாதைக்கு மாற்றியது.

தொல்காப்பியத்திலிருந்து பல சூத்திரங்களை அவன் எளிதில் மனப்பாடம் செய்தான். ரிக்வேத சாகையும், மனுதர்மசாஸ்திரத்தையும், மூன்று வருடங்களில் முடித்தான். சிற்பிகளிடமிருந்தும், கட்டிடக் கலைஞர்களிடமிருந்தும், சங்கீதக் கலைஞர்களிடமிருந்தும் பல விஷயங்களை விரைவே கற்றான்.

எல்லாப் பாடங்களும் அவனுக்கு எளிதில் படிந்தது போலவே பெண்போகம் பற்றியும் அவன் மனம் வேகமாய் ரசித்தது.

மறுபடி அங்கு நடந்த ஒவ்வொரு அசைவுகளையும் ஞாபகத்துக்குக் கொண்டு வர, பல தமிழ்ப் பாடல்கள் உதவி புரிந்தன.

அதரச்சுவை என்பது இதுதானா. அது ஒரு சுவைதானா. அதனால்தான் கண்மூடி அமைச்சர் கிறங்கினாரா கடவுளே... இந்தக் கற்சிலைகள் எவ்வளவு பொய். அவை வெறும் கற்கள்.

பெண் உடம்பு எவ்வளவு மிருதுவானது என்பது பார்க்கும்போதே தெரிந்து விடுகிறது இடுப்பின் மடிப்புகளும், முதுகின் நடுக்கோடும், பிருஷ்டத்தின் திரட்சியும், தொடையின் வழுவழுப்பும் எவ்வளவு ரம்மியம். அந்த அறையில் ஒரு வியர்வை வாசனை சுற்றியது எத்தனை சுகம். மல்லிகைப்பூவும் மருக்கொழுந்தும், சந்தனக் குழம்பும் புனுகு வாசனையும் கலந்த பெண் வாசனை.

மூன்று பெண்களையும் தழுவிக் கொண்டு இந்த அமைச்சர் எவ்வளவு ஆனந்தமாய் இருந்தார். அமைச்சராக இருப்பதால்தானே இந்த சுகம் அடைய முடிந்தது. வெறும் தமிழ்ப் புலவராக இருந்தால் முடியுமா.

அமைச்சராக வேண்டும். நிறைய கற்றுக் கொள்ள வேண்டும். பல போர்களில் சடுபட்டு விழுப்புண்களோடு வரவேண்டும். பல ஊர்களுக்குத் தீ வைத்துக் கொள்ளை யடித்து மூட்டையாக பொற்காசுகளை யானை மீதேற்றி ஊருக்குத் திரும்பவேண்டும். ஒரு செப்புக்காசுக்கு ஒரு ஆடு வாங்கலாம் ஒரு பொற்காசுக்கு இருபத்தைந்து ஆடு வாங்கலாம் அல்லது நான்கு பசுக்கள் வாங்கலாம். அல்லது மூன்று எருமைகள் வாங்கலாம்.

ஒரு மாதம் முழுவதும் சோறு போடலாம், கோவில் மடப்பள்ளித் தலைவரிடம் சொல்லலாம்.

அத்தனை மதிப்புள்ள பொற்காசுகளை ஒரு கைப்பிடி எடுத்து பெண்ணின் அடிவயிற்றில் கொட்டுகிறார் அமைச்சர். ஒரு கைப்பிடியில் முப்பது பொற்காசுகள் இருக்கும். முப்பது பொற்காசுகளுக்கு அருணையின் எல்லையில் வீடு வாங்கலாம். ஒரு வருடம் முழுவதும் ஒரு குடும்பம் நிம்மதியாய் சாப்பிடலாம். எத்தனை சந்தோஷம் அவருக்குள் பொங்கியிருந்தால் பொற்காசுகளை அவள் மடியில் கொட்டலாம்.



அருணகிரியும் பிடிப்பிடியாய் பொற்காசுகளைக் கொட்டினான். மனதுக்குள் தன்னை மிகப்பெரிய அமைச்சராய் நினைத்துக் கொண்டான். அதுவரை கூட்டமாய் அலைந்து திரிந்து கொண்டிருந்த அருணகிரி தனித்துப் போனான். தனக்குள்ளே பொங்கி வரும் கற்பனைகளில் மூழ்கிப் போனான்.

புதிய பாடங்கள் மனதில் பதியவில்லை, பழைய பாடங்கள் ஞாபகத்துக்கு வரவில்லை. பேச்சில் தெளிவு குறைந்தது. கண்களில் ஒளி மங்கியது. உடம்பில் சூடுபரவியது. உணவில் நாட்டம் குறைந்தது. எங்கேயோ வெறித்துப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருப்பதே வழக்கமாயிற்று.

அம்மாவிடம் தமிழாசிரியர் புகார் சொன்னார்.

''என்னம்மா, உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் ஏதேனும் சண்டையா. வீட்டில் எதற்கேனும் தகராறா''

''இல்லையே. என் வீடு அமைதியாக அல்லவா இருக்கிறது.''

''அருணகிரி குழம்பிப் போயிருக்கிறான் தாயே. பித்துப் பிடித்தவன் போலாகிவிட்டான். அவன் வகுப்புக்கு வர மாட்டானா என்று நான் ஏங்குவேன். சந்தேகம் கேட்க மாட்டானா என்று நான் ஆசைப்படுவேன். இந்த சூத்திரத்திற்கு அருணகிரி என்ன உதாரணம் சொல்வான் என்று ஆவலாய் இருப்பேன். ஒருமாதமாய் அவன் பாடம் கவனிப்பதேயில்லை. அவனைக் கண்டிக்க வேண்டாம். அவனைக் கவனித்து வாருங்கள் போதும்''

ஆசிரியர் புகார் சொல்லிவிட்டுப் போனார்.

அம்மா கவலையானாள். அவனிடம் பேச முற்பட்டாள், அவன் பேச மறுத்தான். அவள் தன் கணவரிடம் விவரம் சொன்னாள்.

''இது வயதுக்கோளாறு முத்தம்மை. ஆண்பருவத்துக்கு வரும்போது ஏற்படும் மனச்சிக்கல். அவன் இப்போது சிறுவனுமில்லை. பெரிய வாலிபனும் இல்லை. பதின்மூன்று வயதிலிருந்து இருபது வயது வரை எல்லா பையன்களும் சற்று குழப்பமாகத்தான் இருப்பார்கள். அதில் கெட்டிக்காரப் பையன்கள் அதிகம் குழப்பமடைவார்கள்.

நீ அவனிடம் பேசாதே. நீ என்னபேசினாலும் அவன் தன் மனோநிலைகளை உன்னிடம் சொல்ல மாட்டான். நானும் அவனிடம் கேட்கமாட்டேன். வேறு என்ன வழி என்று யோசிக்கிறாயா. ஒரு இளைஞன் தானாகத்தான் இந்தஇடத்தைத் தாண்ட வேண்டும். இந்த ஏழு வருடங்களையும் அவன் கவனமாகத் தாண்ட வேண்டுமென்று பிரார்த்தனை செய்யலாம். அவன்மீது அன்பு செய்யலாம்.

முத்தம்மை உன் பிள்ளை நன்றாக வளர வேண்டுமென்று நீ விரதநோன்புகள் செய்யலாம். தட்சிணாமூர்த்திக்கு நாள் தவறாமல் வில்வ அர்ச்சனை செய். வியாழக்கிழமை உச்சிவரை அவனுக்காக விரதமிரு. அங்கு தட்சிணாமூர்த்திக்கு கடலை மாலை சார்த்து. அவர் எதிரே பெரிய இழைக்கோலம் போடு. தாமரைத் தண்டு நெய் விளக்கேற்று. இதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது முத்தம்மை.

திருவண்ணாமலை ஊர் மோசமானதுதான். கெட்டுப் போவதற்கு பலவழிகள் இருக்கின்றன. கண்டித்தால், மறித்தால் வேகமாய் கெட்டுப்போவானேயொழிய விவரம் புரிந்து திரும்ப மாட்டான். இவனைப்பற்றி நான் உனக்கு முன்னமே சொல்லியிருக்கிறேன். இவன் ஜாதகத்தை நான் பல பேரிடம் காட்டியிருக்கிறேன். இவனுக்கு இது மோசமான காலம். ஆனால், இறையருள் இவனைக் காப்பாற்றும். சனீஸ்வரனின் பார்வை யிலிருந்து பிரம்மாவே தப்ப முடியவில்லை. இந்தக் குழந்தை எம் மாத்திரம்.



ஆனால், இவன் ஞானவானாகி பெரும்புகழுடன் செல்வத்தோடும், சிறப்போடும் வாழ்வான். மிகச் சிறந்த இறைக் கவிஞனாக மலர்வான். சந்திர சூரியர்கள் இருக்கும் வரை இவன் புகழ் இருக்கும். இவன் பேச்சு இருக்கும்.

இவன் மண் கொடுத்தால மருந்தாகும். முறுவலித்தால் பொன் கொட்டும். கண் மூடினால் இறை பேசும். கடித்து கொண்டால் திசை நடுங்கும்.

எனவே, இவனைப் பற்றிக் கவலைப்படுவதை நான் விட்டுவிட்டேன். இவன் நமக்குக் கிடைத்த இறையருள். இறையருளைப் பற்றி எவரேனும் அச்சம் கொள்வார்களா என்ன பேதமை இது. அச்சம் தவிர் முத்தம்மை.

அவன் அமைச்சராக வேண்டுமென்றுதானே ஆசைப் படுகிறான். உலகாள வேண்டுமென்று பிரார்த்தனை செய் முத்தம்மை நீ உத்தமி. நீ பிரார்த்தனை செய்தால் தெய்வம் இறங்கி வரும்.

ஆதிக்கு மணம் முடிக்க ஏற்பாடு செய். என் கவலை அவனைப் பற்றித்தான்.''

சந்திரமௌளீஸ்வரர் நிதானமாகப் பேசினார்.

''நமக்குப் பிறந்த இரண்டும் இரண்டு விதம். ஆதி திருமணம் வேண்டாம் என்கிறான். வாழ்வின் கடைசி வரை திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறான்.''

''என்ன முட்டாள்தனம் இது, ஏன் அப்படி சொன்னான்'' சந்திரமௌளீஸ்வரர் கோபப்பட்டார்.

''அவனுக்கு சொப்பனமாயிற்றாம்.''

''என்னவென்று?''

''நீ எனக்கா, உனக்கா என்று சிவலிங்கம் கேள்வி கேட்டதாம். உனக்கு என்று இறைவனை நோக்கி கை

நீட்டி சொன்னாளாம். உடனே லிங்கத்திலிருந்து ஒரு ஒளிக்கை நீண்டு அவளைத் தன் மடியில் இருத்திக் கொண்டதாம். இவள் லிங்கத்தைத் தழுவியபடியே மரணமடைந்தாளாம்.''

''கடவுளே, இவள் ஆயில்ய நட்சத்திரத்துப் பெண். ஒரு விஷயத்தை ஆயிரம் விதமாய் யோசிக்கிற புத்தி. இவர்கள் பாதுகாப்புக்காக நாம் ஏதாவது செய்தாக வேண்டும் முத்தம்மை.''

''ஆயுசு இருக்கும் மட்டும் நாம் காப்பாற்றுவோம். பின் இறைவன் விட்ட வழி.''

''நம் ஆயுசு என்னவென்று நமக்கு எப்படித் தெரியும். இப்போதே ஏதேனும் செய்து வைக்க வேண்டும்.''

''ஏன் உங்கள் ஆயுசுக்கு இப்போது ஏதேனும் பங்கமா?'' முத்தம்மை கலவரத்தோடு கேட்டாள்.

''அடடா...உடனே இப்படி யோசிக்காதே. நான் முன்னெச்சரிக்கையாகப் பேசுகிறேன். ஆட்களை வைத்து பரணையிலிருந்து தவலைகளையும், பெட்டிகளையும் இறக்கி வை. இரண்டு சரி பங்காகச் செய். ஆதியின் பங்கை வேறு பரணையில் வை. அல்லது பூமிக்கடியில் இருக்கும் அறையில் வைத்துவிடு. ஆதிக்கு மட்டும் சொல்.

இந்தப் பரணையில் இருக்கின்ற அத்தனைப் பொற்காசுகளும் உன் சொத்து என்று அருணகிரியிடம் சொல்லிவிடு. பிறகு உன் மனதை இறைவனை நோக்கித் திருப்பு.''

''ஏன் திடுக்கென்று இத்தனை வேகமான முடிவுகளையெல்லாம் எடுக்கிறீர்கள்.''

''எந்தக் காரணமுமில்லை முத்தம்மை. நாளை நாளை என்று ஒத்திப் போடாமல் தோன்றியவுடனே செய்வது நல்லதல்லவா.''

முத்தம்மை அவ்விதமே செயல்பட்டாள்.



ஆதிக்கு அவள் சொத்துக்களைக் காண்பித்து வீட்டையும் அவள் பெயருக்கு எழுதி அந்த செல்வங்களை நிலவறையில் வைத்து ஆதிக்குத் தெரியப் பத்திரப்படுத்தினாள்.

ஆதி அக்கறை செலுத்தவில்லை. அவள் தேவாரப் பாடல்களிலேயே லயித்திருந்தாள்.

''நான் இறைவனுக்கு நேர்ந்து கொள்கிறேனம்மா. அதற்கு மட்டும் அனுமதி கொடுங்கள். கூட இருந்து வழி காட்டுங்கள். என் மனம் இனக்கவர்ச்சியில் போய்விடக் கூடாது அம்மா. ஆகவே காதுத்தோடும், கழுத்துக் கருகமணியும் தவிர வேறு எதுவும் நான் அணியப்போவதில்லை.''

''ஆதி, நீ சாதாரணப் பெண்தானே. ஏன் இப்படி இறுக்கிக் கொள்கிறாய்.''

''அம்மா, நம் உறவினர் பெண்கள் தேவரடியார்களாக இருக்கிறார்கள். இறைவனுக்குப் பணி செய்கிறேன் என்று சத்தியம் செய்துவிட்டு நிலைய ஒரு மனிதனோடு சந்தோஷமாக இருக்கிறார்கள். மாதக்கணக்கில் அவர்கள் கோவில் பக்கம் வருவதில்லை. எந்தப் பாட்டும் படிப்பதில்லை. ஒரு விளக்கைக்கூட சுத்தம் செய்வதில்லை. மாறாய் கோவில் வாசலில் நின்று ஆள் மயக்குகிறார்கள். கோபுரத்தில் காற்றாட உட்கார்ந்து வெற்றிலை போடுகிறார்கள். குளத்தில் குளித்துவிட்டு வேண்டுமென்றே அரைகுறை ஆடையோடு உலவுகிறார்கள், மண்டபத்தில் கூரையில் படுத்துக் கொண்டு புகைபோடுகிறார்கள்.

நாற்பது ஆண்கள் சுற்றியிருக்க லஜ்ஜையின்றி பேசுகிறார்கள். சிரிக்கிறார்கள்.

தேவதேவனுக்கு அடியார்தானே தேவரடியார். அதை விட்டுவிட்டு பொதுமக்கள் வாழ்க்கை வாழ்கிறார்கள். இத்தனை ஆட்டமெல்லாம் எவ்வளவு காலம் அம்மா. சனியும்,

ஜுரமுமாய் ஒரு நாற்பது வயதுப் பெண் நம் இனத்தவள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அவளை நேர்ந்துவாரில்லை. இதே விதமாய் ஆட்டம் ஆடியவள் தான் அவள். இப்போது சூதகம் பெருத்துப்போய் அடிக்கடி ரத்தப்போக்கு ஏற்பட்டு எலும்பும், தோலுமாய் ஆகிவிட்டாள், அவளை செத்துத் தொலையேன் என்று ஏசுகிறார்கள்.

அவளை நான் காப்பாற்றுவதாக உறுதியளித் திருக்கிறேன். அவள் உயிர் பிழைத்தால் எனக்குத் துணையிருப்பேன் என்றும் இறுதி மூச்சுவரை இறைப்பணி மட்டுமே செய்வேன் என்றும் வாக்குத் தந்திருக்கிறாள்.

இவளைப் போல் பல தேவரடியார்கள் இருக்கிறார்கள். இவளை விடவும் வயதானவர்கள் இருக்கிறார்கள். இவர்களை யாரும் மதிப்பதில்லை. இவர்கள் நம் இனம் தானே. நம்மில் யாரேனும் இவர்களைக் கவனிக்க வேண்டும்தானே.

"அம்மா என் இறைப்பணி நலிவுற்றவர்க்கு உதவி செய்வது."

அம்மா அயர்ந்து போனாள். மகளின் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

"இந்த வீடு ஒரு விசித்திரமான வீடு."

மிகப் பெரிய சிவனடிச் செல்வருக்கும் கோயில் தாஸிக்கும் பிறந்த பெண் வேறு எப்படி இருப்பாள்?

நம் சுற்றுச் சூழல் அசிங்கம். நம் மனசுக்குள்ளே இறை தத்துவம், இவை இரண்டும் எதிர் எதிரானவை. ஆனாலும், எனக்குப் புரிகிறது."

"அம்மா இன்னொரு கனவு."

"என்ன...என்ன கனவு என்னைப் பற்றியா?"



"இல்லையம்மா. தம்பியைப் பற்றி. எதனாலோ அவன் தண்டிக்கப்படுகிறான். அவன் இரண்டு கைகளும் கால்களும் வெட்டப்படுகின்றன. ஆனாலும் அருணகிரி பாடுகிறான். மிக அற்புதமாகப் பாடுகிறான்.

கடவுளே, அவனுக்கு வைத்தியம் செய்யுங்கள் என்று நான் கதறுகிறேன். பாட்டுத்தான் வைத்தியமாம். பாடினால் கைகால்கள் தானே முளைக்குமாம். அதனால்தான் பாடுகிறானாம்.

தம்பி அருணகிரிக்கு கைகால்கள் முளைக்கின்றன. ஆனால், என்னால்தான் பார்க்க முடியவில்லை. ஒரே கூட்டம். என்னைப் பின்னுக்குத் தள்ளிவிட்டார்கள். அருணகிரி வாழ்க அருணகிரி வாழ்க என்று கூச்சலிடுகிறார்கள். பெரிய மன்னர்களெல்லாம் பணிகிறார்கள். ஒரு கிளி ஆகாயத்தில் வட்டமிட்டு அருணகிரி வாழ்க என்று சப்தமிடுகிறது. நான் சந்தோஷத்தில் அழுகிறேனம்மா."

சொல்லும்போதே ஆதிக்கு அழுகை வந்தது. அம்மாவும் அவளோடு சேர்ந்து அழுதாள்.

நல்லவர்கள் வீட்டில் நல்லவர்களைப் பற்றி இப்படிப் பட்ட குழப்பங்கள் நிகழத்தான் செய்யும். அந்த அக்கறை கொஞ்சம் விம்மி அழத்தான் செய்யும்.

இவை எதையும் அறியாத அருணகிரி மறுபடியும் உதவினர் வீட்டுக்குப் போனான்.

அங்கே அவனுக்கு சோறு போட்டார்கள். பின்கட்டு வழியே படியேறி வட்டத்தின் வழியே பரணைக்குள் புகுந்தான். பரணை காலியாக இருந்தது.

எட்டிப் பார்த்தான். ஆச்சரியம் நெஞ்சைத் தாக்கியது. குவியல் குவியலாய் பொற்காசுகள் பொன் நகைகள் பாத்திரங்கள், வெள்ளிக் கட்டிகள் என்று அங்கே கண்ட

பரப்பி கணக்கெடுத்துக் கொண்டிருந்தார்கள். இழவி முதல் சமீபத்தில் பருவமடைந்த பெண் வரை ஆபாசமாய் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

அவன் பரண் விட்டு கீழிறங்கினான். உடம்பு துடைத்துக் கொண்டான். அந்தத் தெருவின் வழியே நடந்து வேறு யார் வீட்டுக்கு போகலாம் என்று யோசித்தான்.

வேறு ஒரு உறவினர் வீட்டுக்கு விரைந்தான். அங்கே ஆடல்பாடல் நடந்து கொண்டிருந்தன.

''யார் நீ?''

''அருணகிரி. முத்தம்மை மகன் அருணகிரி.''

''அடேய்...சன்னதித் தெருவுக்கு அருகே இருப்பவளா அவள் உத்தமியாயிற்றே. உன்னை ஏன் இங்கு அனுப்பினாள்.''

''அவள் அனுப்பவில்லை. நானாக வந்தேன்.''

''எதற்கு.''

''உங்களுக்கு பாடல்கள் வேண்டுமா.''

''என்ன...''

''ஆடல்களுக்கு பிரத்யேகமாய் பாடல்கள் வேண்டுமா.''

''ஆமாம் வேண்டும்.''

''என்னால் எழுத முடியும்.''

''சரி உள்ளே வா.''

அவனைப் பின்கட்டுக் கூடத்திற்கு அழைத்துப் போய் உட்கார வைத்தான்.

அங்கே எழு பெண்கள் நடனமாடிக் கொண்டிருந்தார்கள்.



யானையை அடக்க வீணை வாசிக்கும் வடமொழிக் கவிஞரின் காதல் கவிதையை நாட்டிய நாடகமாக்கி ஆடிக் கொண்டிருந்தார்கள்.

அருணகிரி அவர்கள் ஆட்டத்தை ஆவலோடு பார்த்தான்.

''உங்களுக்கு வேறு கதை சொல்கிறேன்.'' அவன் கம்பீரமாகச் சொல்ல பெண்கள் அவனைச் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள்.

அருணகிரிக்கு கர்வமாக இருந்தது.

என்ன கதை சொல்வது. அவன் மனம் வேகமாக யோசனை செய்தது.

பெண்ணை வசீகரிக்க ஒரு ஆண்புத்தி என்ன வேண்டுமானாலும் செய்யும். எத்தனை வேகமாக வேண்டுமானாலும் செயல்படும்.

''நான் சொல்லப் போகும் கதை திருவண்ணாமலையார் பற்றிய கதை.

ஒரு சமயம் இங்கு ஆண்டு கொண்டிருந்த மன்னன் சிவபக்தி மிகுந்தவன். சிவனடியார்க்கு இல்லையென்னாது தானம் கொடுத்துக் கொண்டிருந்தவன். அந்த அரசனை சிவபெருமான் சோதிக்க முடிவு செய்தார்.

ஒளிமிகுந்த ஒரு தபஸ்வியாக திருவண்ணாமலைக்குள் நுழைந்தார். அரசனுக்கு வாழ்த்துச் சொன்னார். தாம் வெகு காலம் இமயமலைச் சாரலில் தவம் செய்ததாகவும், மறுபடி தென்திசை போய் தவம் செய்யப் போவதாகவும், அப்படிப் போவதற்கு முன்பு இங்கே இந்தத் திருவண்ணாமலையில் ஏதேனும் ஒரு தேவரடியாரோடு கழித்திருக்க விரும்புவதாகவும், அழகும் அன்பும் இளமையும் உள்ள ஒரு தேவரடியாரை அரசன் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

அரசன் அன்றிரவே ஏற்பாடு செய்கிறேன் என்று வாக்குக் கொடுத்தான். தன் ஆட்களை ஏவினான். சிவ பெருமான் அதற்கு முன்பே தன் பூதகணங்களை ஏவி திருவண்ணாமலையிலுள்ள அத்தனை தேவரடியார்களிடமும் போய் தங்கிவிடச் சொன்னார்.

பொருள் வாங்கிக் கொண்ட தேவரடியார்கள் தேவகணங்களோடு இருக்க ஒப்புக் கொண்டார்கள். திருவண்ணாமலையில் ஒரு தேவரடியாரும் இல்லை. எல்லோரையும் சிவபெருமானது கணங்கள் மனிதராக வந்து வளைத்து விட்டன.

இரவு நெருங்கியது. சித்தர் பெருமான் குளக்கரைக்கு குளிக்கப் போனார். அரசன் தவித்தான். திருநீறு பூசி பூஜை முடித்தார். அரசன் அல்லாடினான். பூஜைக்குப் பிறகு உணவு எடுத்துக் கொண்டார். அரசன் வாக்குத் தவறப் போகிறேனே என்று தலையிலடித்துப் புலம்பினான். சித்தர் அரண்மனை நோக்கி அரசனைத் தேடிக் கொண்டு வந்தார். அரசன் எழுந்து நின்று வரவேற்றான்.

''எல்லாம் சித்தமாய் இருக்கிறதா சித்தர் பெருமான் கேட்டார்.

''இருக்கிறது'' என்று அரசன் பணிவாகச் சொன்னான்.

''அழகும் அன்பும் இளமையும் பொருந்திய தேவதாசியா என்று சித்தர் வினவினார்.

''ஆம் அப்படிப்பட்டவள்தான் என்று அரசன் பதில் சொன்னான்.

அறையின் கதவு திறந்து விட்டான்.

உள்ளே பட்டமகிஷி பணிவோடு நின்றிருந்தாள்.



உள்ளே சித்தர் நுழைந்ததும் வருக என்று கை கூப்பி வணங்கினாள்.

சித்தர் திகைத்தார். என்ன இது என்று கோபமாக அரசனிடம் கேட்டார்.

இன்று தேவதாசிகள் கிடைக்கவில்லை. அதே நேரம் இல்லையென்று சொல்லி உங்கள் மனதைப் புண்படுத்தவும் விரும்பவில்லை. அரசன் சொன்னான்.

ஏதாவது ஒரு தேவதாசி இல்லம் புகுந்து வலுக்கட்டாயமாக அவளை அழைத்து வந்திருக்கலாமே. சித்தர் பெருமான் கேட்டார்.

'தாசியாயினும் ஒரு பெண்ணை அவள் விருப்பமின்றி அடைவது தவறு. சுயமரியாதை உள்ள ஒரு மனிதன் ஒருபொழுதும் பெண்களைத் துன்புறுத்த மாட்டான். எனவே பெண்களைத் துன்புறுத்தும் காரியத்தை ஒரு போதும் நான் செய்ய மாட்டேன். அதுவும் இறைவனுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தேவதாசிகளை நான் கடிந்து கொள்ளவும் மாட்டேன். அதைவிட என் மனைவியை உங்களுக்கு வழங்குவதில் சந்தோஷமடைகிறேன் என்று கை கூப்பினான்.

சித்தர் பெருமான் உங்கள் இருவரையும் ஏற்றேன், என்று ஆசிர்வதித்தார்.

சிவனாக உமையோடு வெள்ளிவிடைமேல் காட்சியளித்தார். அரசனும் அரசியும் நெடுங்காலம் சுகமாக வாழ்ந்தார்கள்.

இதுதான் கதை.

முதலில் விநாயகர் துதி அந்தப் பாடலுக்குப் பிறகு முருகர்துதி. பிறகு சிவபெருமான், விஷ்ணு வணக்கம், பிறகு கலைவாணி வாழ்த்து பிறகு நாட்டு வாழ்த்து. பிறகு

திருவண்ணாமலை நகரச் சிறப்பு பிறகு அரசன் மகிமை பிறகு சித்தர் வருகை என்று பாடல்கள் போதும்.

நாளை விடிவதற்குள் நூறு பாடல்கள் வைத்து நாட்டிய நாடகம் எழுதித் தந்து விடுகிறேன். எனக்கு என்ன தருவீர்கள்.''

''நீ என்ன அன்னியனா நம்மவன் அல்லவா என்ன கேட்டாலும் தருகிறோம்.'' முதிர்ந்த பெண் ஒருத்தி சந்தோஷமாய் சொன்னாள்.

''எதற்கும் விலை பேசிக் கொள்வோமே'' இன்னொரு பெண் மெல்ல இழுத்தாள்.

''அடிபோடி இதற்கெல்லாம் விலை வைக்க முடியுமா? அருணகிரி அவன் நெருங்கிய உறவுகளையெல்லாம் விட்டுவிட்டு நம்மிடம் வந்தது. இறையருள் அவனுக்கு என்ன தர வேண்டுமென்று எனக்குத் தெரியும்.''

''அருணகிரி சற்று மோகாவேசமாக எழுதித் தர முடியுமா. ஜனங்கள் அதை விரும்புகிறார்கள். எங்களுக்கு அப்படியெல்லாம் ஆட விருப்பமில்லைதான் ஆனால், காசு கொடுக்கிறவர்கள் வற்புறுத்துகிற போது ஆடாமல் முடியுமா உன்னால் மோகாவேசமாக எழுத முடியுமா நீ சிறுவனாயிற்றே.''

''நிச்சயம் முடியும். அதையும் நுன்னல் நடையில் எழுத முடியும் தமிழ் இலக்கணத்தில் தொங்கல் என்று ஒரு சூத்திரம் இருக்கிறது. பாட்டிற்கு அப்பால் ஒரு வார்த்தை கூடுதலாக வரும். அது நடனத்திற்கு எளிதாகவும், புதிதாகவும் இருக்கும்.

திருவண்ணாமலை நகரச் சிறப்பு எழுதுகிறபோது பலநூறு தாஸிகள் வாழும் ஊர் என்றும், ஊர் அவர்களை எழுந்து நின்று மரியாதை செய்தது என்றும், அவர்கள் மிகுந்த அழகுள்ளவர்கள் என்றும் ஊர் மக்களை அவர்கள்



நேசித்தார்கள் என்றும், தீவிரமான சிவபக்தி உள்ளவர்கள் என்றும் பிறநறியாது தானதர்மங்கள் செய்பவர்கள் என்றும் எழுதப் போகிறேன்.

கிட்டத்தட்ட இருபது பாட்டுக்கள் தாஸிகளைப்பற்றிப் பாடப் போகிறேன். இலக்கண இலக்கியங்கள் தெரிந்தவர்கள் என்று சொல்லப் போகிறேன். அவர்கள் தாஸிகளாயினும் ஒழுக்கத்திற் சிறந்தவர்கள், வார்த்தை தப்பாதவர்கள், காசுக்கு ஆசைப்படாதவர்கள், கண்ணியம் மிக்கவர்கள் என்று எழுதப்போகிறேன்.''

''உண்மையில் நாம் அப்படியில்லையே.'' ஒரு பெண் மெல்லக் குரல் கொடுத்தாள்.

''அடக்குடி, அருணகிரி சொல்வது புரியவில்லையா. இந்த நாட்டிய நாடகம் சித்தரைப் பற்றியுமல்ல, சிவனைப் பற்றியுமல்ல. நம்மைப்பற்றி. இல்லையா அருணகிரி.''

''ஆமாம். சித்தர் கதை ஒரு சாக்கு.''

''ஆஹா அற்புதம். அருணகிரி, நீ சொல்லும்போதே இது ஒரு அற்புதமான நாட்டிய நாடகமாக வரும் என்று தெரிந்து விட்டது. என்னிடத்தில் உள்ள பெண்கள் அத்தனை அழகில்லைதான். ஆனாலும் துள்ளிக் குதித்து கவர்ச்சியாய் ஆடுவதில் வல்லவர்கள்.

இத்தனை சூட்சுமமாக நீ பேசுவதே சந்தோஷமாக இருக்கிறது. இந்த நாட்டிய நாடகம் மட்டும் நன்கு அமைந்து விட்டால், திருவண்ணாமலையிலேயே நான் பெரிய பணக்காரியாகி விடுவேன், நீ கேட்பதெல்லாம் தருவேன். எத்தனை பொன் கேட்டாலும் தருவேன்.''

''அம்மா, அதிகம் பேசிவிடாதீர்கள்'' ஒரு பெண் மெல்ல முணுமுணுத்தாள்.

"நீ சும்மா இருடி. அருணகிரி நம்மவன். நமக்காக வேலை செய்கிறான். அவனுக்குக் கொடுப்பதில் எனக்கு வஞ்சனையே இல்லை.

அருணகிரி, உணவு எடுத்துக்கொள். மேல் மாடியில் உட்கார். வேண்டுமென்கிற ஓலை நறுக்குகள் எடுத்துக் கொள். ஆறேழு தீபங்கள் ஏற்றி வைக்கிறேன், பாடல்கள் எழுதத் துவங்கு."

அருணகிரி எழுதத் துவங்கினான்.

அவர்கள் சிறிதுநேரம் அவனுக்கு அருகே உட்கார்ந்து விட்டு உறங்கப் போனார்கள்.

அருணகிரி அதுவரை பாடல்கள் எழுதியதில்லை. படித்திருக்கிறான். பாடக் கேட்டிருக்கிறான். அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் அலைந்து நல்ல சந்தத்தோடு பாடல்கள் எழுதினான். அதற்குப் பண்கள் அமைத்தான். பலமுறை பாடிப் பார்த்தான்.

கிழக்கே வெளுத்தபோது அதுவரை அமர்ந்து கேட்ட சபைக்கும் வந்தனம் சொல்லி, வாழ்த்துச் சொல்லி எல்லோரையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டுமென்று சொல்லி நாட்டிய நாடகத்தை முடித்தான்.

அப்படியே தரையில் படுத்து உறங்கிப் போனான்.

பொழுது நன்கு புலர்ந்து வெய்யில் ஏறிய பிறகு தாஸிகள் விழித்துக் கொண்டார்கள்.

காலை உணவு ஆன பிறகு அருணகிரியை சூழ்ந்து கொண்டார்கள்.

அருணகிரி தூங்கி கொண்டிருக்க அவன் பாடல்களை எடுத்துப் படித்துப் பார்த்தார்கள், பரவசமானார்கள்.

அவன் உறக்கம் கலைக்காது வேறு இடம் போய் நடனமாடிப் பார்த்தார்கள்.



பாடல்கள் எளிமையாக இருந்தன. இனிமையாக இருந்தன. துள்ளலாக இருந்தன, குறிப்பிட்ட பண்ணுக்கு குழைவாக இருந்தன. தாஸிகளில் பெரியவள் பிரமித்துப் போனாள்.

பதினாறு வயசுப் பையனுக்கு எவ்வளவு சூட்சுமமான அறிவு, எவ்வளவு இசை ஞானம், எவ்வளவு மொழி வளம். சிவன் கதை சொல்வது போல தாஸிகள் மேன்மை சொல்ல எவ்வளவு தந்திரம் வேண்டும். அதுவும் தவிர இந்த சந்தக் கட்டு புதிதாக இருக்கிறது. பார்க்கிற எல்லோரும் தலையாட்டுவார்கள் நிச்சயம் பாராட்டுவார்கள்.

"அடியே நன்கு துள்ளி குலுங்கி ஆடுங்களடி. ஒரே மாதிரி ஆடுங்கள். வரும் பௌர்ணமி அன்று அரங்கேற்றம் திருவண்ணாமலை மோகத்தில் பற்றியெரிய வேண்டும். நம் வீட்டிற்கு ஆள்மீது ஆள் வரவேண்டும்.

முன்னிரவில் கூத்து, பின்னிரவில் காமம், பகலெல்லாம் தூக்கம். பை பையாய் பொற்காசு.

அடேய். தையற்காரனைக் கூட்டிவா. சித்திரகாரனுக்கு சொல்லி அனுப்பு. பாட்டுப் பாடுகிற பெண்கள் வேண்டுமென்று தெற்கே ஓலையனுப்பு. ஒரு நாளைக்கு ஒரு பெண்ணுக்கு பாட்டுபாட இரண்டு பொன் என்று விலை சொல்.

அருணகிரி, இந்த நாட்டிய நாடகம் மட்டும் ஜெயித்து விட்டால் நீ என்ன கேட்டாலும் தருகிறேன்."

"நம் ஊர் கதையை நம் ஊர் பெண்கள் நாட்டிய நாடகமாய் ஆடப் போகிறார்கள். நல்லோர் வருக நல்லாசி தருக. பௌர்ணமி நிலவின்பால் போன்ற ஒளியில் பத்துப் பெண்களின் கும்மாள நடனம், சிவனுக்கு எதுவும் தருவேன் எனும் நாட்டிய நாடகம்.

முரசறிவிப்பவனுக்கு எப்படிச் சொல்ல வேண்டும் என்று அருணகிரி சொல்லிக் கொடுத்தான். இந்த விளம்பர முறையும் புதிதாக இருந்தது.

தொலைதூரத்தில் உள்ள கிராமங்களுக்கெல்லாம் முரசறிவிக்கப்பட்டது.

பிற்பகலே கோவிலில் கூட்டம் சேர்ந்து விட்டது. வேலையில்லாத இளைஞர்கள் எப்போது நாடகம், எப்போது நாடகம் என்று சுற்றி வந்தார்கள். எந்தப் பெண்கள் வந்தாலும் தாஸிகளோ என்று எழுந்து நின்றார்கள்.

வந்த பெரிய மனிதர்களுக்கெல்லாம் வெற்றிலைப் பாக்கு தரப்பட்டது. கோவில் மண்டபத்தில் பழமும், பணியாரமும் சக்கைப்போடு போட்டு வியாபாரம் நடந்தது. குளிருக்கு சூடாக பானகமும், பசும்பாலும் விற்கப்பட்டன. இனிப்புகள் நன்கு விற்பனையாயின கூட்டத்தில் லேசாக மதுநெடி இருந்தது.

நிலவு இரண்டு பனை உயரத்துக்கு வந்தபிறகு மூடு பல்லக்கில் தாஸிகள் மண்டபத்துக்குப் பின்பக்கம் வந்திறங்கினார்கள். திரைக்குள் பதுங்கினார்கள்.

தத்தோம் தத்தோம் என்று தாளங்கள் முழங்கின.

கணபதி துதி பாடப்பட்டது.

திரை உயரவேயில்லை.

முருகா துதி பாடப்பட்டது. ஒரே ஒரு தாஸி மட்டும் மேடையில் வந்து எல்லோருக்கும் வணக்கம் சொல்லிவிட்டு போனாள்.

சிவன் துதிக்கும், விஷ்ணு துதிக்கும் மும்மூன்று பெண்கள் மின்னலென ஆடிவிட்டு போனார்கள்.



'இப்போது ஆட்சி செய்யும் பிரபுட தேவ மஹாராஜா நீடூழி வாழ வேண்டும்' என்று சிவனிடம் வேண்டிக் கொள்ளப்பட்டது.

எல்லோரும் கை கூப்பினார்கள்.

திருவண்ணாமலை நகரச் சிறப்பு சொல்லப்பட்டதும் கூடுதலாய் மூன்று பந்தங்கள் ஏற்றப்பட்டன. தோரணங்கள் தூக்கப்பட்டன. வண்ணத் துணிகள் விரிக்கப்பட்டன.

அதற்குள் வேறு உடைகள் மாற்றி கொண்டு தாஸிகள் தயாராக இருந்தனர் கூட்டம் கண் கொட்டாமல்பார்த்துக் கொண்டிருந்தது.

பளிச்சென்று திரை விலகியது.

''தத்தோம் தத்தோம். தகிங்கிணதத்தோம்...'' ஏழு தாஸிகளும் குதித்து ஆடினார்கள். துள்ளி கால் வீசினார்கள் .குலுங்கி முன் நடந்தார்கள். சிரித்து பின் நகர்ந்தார்கள்.

கூட்டம் திகைத்தது. பல் காட்டியது. ஆஹா ஆஹா என்று கூவியது. செப்புக் காசுகளையும் வெள்ளிக் காசுகளையும் தரையில் வீசியது.

திருவண்ணாமலையின் சிறப்பைச் சொல்வது போல் தாஸிகளின் உயர்வைச் சொல்ல பலபேர் புருவம் உயர்த்தினார்கள். கதைக்கு வர ஒன்றிப் போனார்கள்.

இரண்டு பொன்னுக்கு இன்று இரவு இவருக்கு வாழ்க்கைப்பட்டு விட்டேன். நீ கோடி கொடுத்தாலும் அரசனுக்குவரமாட்டேன். தாஸி சத்தியம் மீறமாட்டாள்'' என்று அபிநயிக்க கூட்டம் கை தட்டியது. ஓரமாய் நின்றிருந்த பெரியவள் புளகாங்கிதம் அடைந்தாள். இருட்டில் நின்றிருந்த அருணகிரியைக் கட்டித் தழுவிக் கொண்டாள்.

"அற்புதம் அருணகிரி அற்புதம் கன்னங்களில் முத்தமிட்டாள்.

அருணகிரி சிலிர்த்தான். முதன் முதலாக ஒரு பெண்ணின் ஆலிங்கனம் கிடைக்க விழித்து எழுந்தான்.

பெரியவனே இத்தனை சுகமெனில் சிறிசுகள்எத்தனை இதம். அதிசயப்பட்டான்.

அரசர் தவித்தபோது கூட்டமும் தவித்தது.

சித்தர் வந்தபோது அடக்கடவுளே என்றது.

அரசர் வரவேற்றபோது கூட்டம் ஆடியது.

அரசியைக் காட்டியபோது அடாடா என்றது.

அரசி வணங்கியபோது என் சிவனே என்றுஅரற்றியது.

சித்தராக வந்தவர் சிவனாக மாறினார். கால் தூக்கி நடனமாடினார்.

செஞ்சடை விரித்து, உடுக்கு அடித்து நூபுரங்கள் குலுங்க, நான்கு பக்கமும் தீ எரிய, ருத்ர தாண்டவம் செய்தார்.

அரசனும் அரசியும் மண்டியிட்டு வியந்துகிடந்தார்கள்.

சட்டென்று எல்லா தீப்பந்தங்களும் அணைந்தன.

கூடையிலிருந்த விளக்குகள் வெளியே கொண்டு வரப்பட்டன.

நறுமணப்புகை போடப்பட்டது. ருத்ரம் சொல்லப் பட்டது. ஓம் ஓம் என்று குரல்கள் முழங்கின. துந்துபி ஒலித்தது. பேரிகைகள் அதிர்ந்தன.

வெள்ளை வெளேர் என்கிற எருதுப் பொம்மைக்கு முன்னே சிவனும் உமையும் புன்சிரிப்போடு தோன்றி னார்கள்.



கூட்டம் தலைக்கு மேல் கைகூப்பியது. அண்ணா மலைக்கு அரோஹரா என்று வானம் அதிர முழங்கியது. சிலருக்கு சன்னதம் வந்தது. சிலர் மூர்ச்சையானார்கள்.

சிலர் விம்மி விம்மியழுதார்கள்.

சிலர் வாய் பிளந்து திகைத்தபடி இருந்தார்கள்.

மண்டபத்தின் உச்சியிலிருந்து ஒரு கூடை ரோஜா கொட்டப்பட்டது.

வாழிய வாழிய வாழிய வாழியவே என்று மங்களம் பாடப்பட்டது.

சடேரென்று திரை போடப்பட்டது.

பல்லக்குத் தூக்கிகள் தயாராக இருந்தார்கள்.

ஏழு பெண்களும் பெரியவனுமாய் திபுதிபுவென்று பல்லக்கில் ஏறிக்கொண்டார்கள்.

பல்லக்கு நகர்ந்தது.

"அம்மா...அருணகிரி...அருணகிரி..." பெரியவனுக்கு அருகே இருந்த இளம் பெண் அவனை நோக்கி கை காட்டி னாள்.

"அருணகிரி, வா. வந்து ஏறிக்கொள்" பெரியவன் உரக்கக் கத்தினான்.

தூக்கிய பல்லக்கில் அருணகிரி தாவி ஏறிக்கொண் டான். திரை போட்டுக் கொண்டான்.

பல்லக்கு குலுங்கிக் குலுங்கி நகர்ந்தது.

அந்த இளம் பெண் மார்பில் உரசியபடி அருணகிரி இறுக்கி உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அந்த இளம்பெண் அவன் கைகளைப் பிடித்துக் கொண் டாள். அவனிடம் நெருங்கி அமர்ந்து கொண்டாள். சப்த

விடாது அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். வேண்டுமென்றே அவள் மார்புகளை அவன் தோளில் அழுத்தினாள்.

வீடு வந்தது.

அனைவரும் உள்ளே வர, பெரியவள் கதவு சாத்தினாள். விளக்குகள் ஏற்றினார்கள்.

அருணகிரியை நடுவாக நிற்க வைத்து எல்லோருக்கும் கண்ணேறு கழித்தாள்.

அடுப்பில் மிளகாயைப் போட்டுவிட்டு கூடத்திற்கு வந்தாள்.

''அருணகிரி, இப்போது சொல். உனக்கு என்ன வேண்டும்.''

அவன் மனதில் அதிகபட்சம் ஐம்பது பொற்காசுகள் என்று கணக்கு இருந்தது.

அருணகிரி மிளகாய் நெடி தாங்காமல் இருமினான். கண்ணில் ஜலம் வழிய நின்றான்.

''சொல் அருணகிரி. உனக்கு என்ன வேண்டும்.''

அவன் தைரியமாக அந்தப் பெண்ணை சுட்டிக் காட்டினான்.

''எனக்கு இவள் வேண்டும்.''

''அவ்வளவுதானா. எடுத்துக்கொள்.'' பெரியவள் சொன்னாள்.

''இவர்கள் எல்லோரும் வேண்டும்.''

அருணகிரி மறுபடி கைகாட்டினான்.

''உனக்கில்லாத உணவா வேணும்மட்டும் சாப்பிடு'' பெரியவள் கண் சிமிட்டினாள்.



அவர்கள் எல்லோரையும் உட்கார வைத்து இனிப்பு பலகாரங்களும், தோசையும், ஆட்டுக்கறிக் கூட்டும், பசும்பாலும் கொடுத்தாள்.

''அடியே, அவனை வேறெங்கும் போக விடாதே.''

''சரி.''

''அவன் மீது காதல் வசப்பட்டதாக நடி.''

''சரி.''

''அவன் இருக்கும்போது வேறு ஒருவனை நாட வேண்டாம்.''

''சரி.''

''அவனை இதுபோல் இன்னொரு நாடகம் எழுதச் சொல்.''

''சரி.''

''இப்பொழுது எழுதிய நாடகத்தைவிட இன்னும் மோகரஸம் ஏற்றச் சொல்.''

''சரி.''

''அவன் விரும்பிய வண்ணம் இரு. அவனுக்கு சொல்லிக் கொடு.''

''சரி. அருணகிரியிடம் காசு வாங்க வேண்டுமா'' அந்த இளம் பெண் கேட்டாள்.

பெரியவள் யோசித்தாள்.

''முடிந்தால் வாங்கேன்'' என்றாள்.

அந்தப் பெண் வெட்க நடிப்புடன் அருணகிரிக்கு அருகே போயிற்று.

# 2

அவர்களுக்கு நடிப்பு தொழில். குலுக்கல் இயல்பு. கொடுத்தவரோடு படுத்து போகம் தருவது வாழ்க்கை.

அவர்கள் இந்த வாழ்க்கையை விரும்பவுமில்லை. வெறுக்கவும் இல்லை. மனிதர்களுக்கு எத்தனையோ விதமான வாழ்க்கை வழி. இது ஒருவிதமான வாழ்க்கை வழி என்று ஏற்றுக் கொண்டார்கள். எல்லா இடத்திலும் போல அவர்களில் நல்லவர்களும் இருந்தார்கள். கெட்டவர்களும் இருந்தார்கள். மிக மிக மோசமானவர்களும் இருந்தார்கள்.

அதில் மோசமானவர்கள் முத்தம்மையைப் பார்த்து பொறாமைப்பட்டார்கள்.

''எனக்கும் ஒரு செங்குந்த முதலியார் கிடைத்தால், நானும் பத்தினியாக இருந்துவிட்டுப் போகிறேன். பத்தினியாக இருப்பதா கடினம். பத்துப் பேரோடு வாழ்வதுதான் கடினம். ஒவ்வொருவருக்கும் பயந்து பயந்து பரத்தையர் படுகிற கஷ்டம் யாருக்குத் தெரியும்.

யார் சிரித்தாலும், நம்மைப் பார்த்துதான் சிரிக்கிறார்கள், என்று நினைக்கிற வேதனை யாருக்குத் தெரியும்.

''முத்தம்மைக்கு நல்ல ஜாதகம். பேசி மயக்குகிற கெட்டிக்காரத்தனம். ஏனென்றால் முத்தம்மைக்கு ஆடத் தெரியாது. அவள் ஆடினால் யாரும் பார்க்கமுடியாது. நாங்களோ நடனம் நடனம் என்று எங்களை இழந்திருக்கிறோம்.



சரி, நடனமாடினால் என்ன? பாட்டுப் பாடினால் என்ன. உட்கார்ந்து பேசினால் என்ன. வால் ஆட்டினாலும் ஆட்டாவிட்டாலும் நாய் நாய்தான். தாசி தாசிதான். முத்தம்மை முதலியாரிச்சியாக மாறிவிடமுடியுமா மாறத்தான் விடுவார்களா.

ஒரு வகையில் எனக்குப் பொறாமைதான். இத்தனை ஆட்டம் ஆடி நான் சம்பாதிப்பதைவிட உட்கார்ந்து பேசியே சம்பாதித்து விடுகிறாயே என்று பொறாமை தான்.

என்ன செய்ய, கொண்டையுள்ள சீமாட்டி முடிந்து கொள்கிறாள். என் எளியாள் பின்னலைப் பார்த்து நான் பொருமிக் கொள்கிறேன். இது இயல்புதானே.''

இப்படி பேசியவர்களுக்கு முத்தம்மையின் மகன் வலிய வந்தால் விடுவார்களா? அவனைக் கட்டிப்போட திட்டம் போட்டார்கள். தங்கள் பட்டியிலேயே அடைத்து வைக்க முயற்சி செய்தார்கள்.

''என்னடி சொல்கிறான்?'' இளம்பெண்ணைப் பார்த்து பெரியவள் கேட்டாள்.

''எதுவும் சொல்லலே இல்லை. எல்லாம் செயல்தான். மிருகம் போல மேலே பாய்ந்துவிட்டான். குதிரை ஓட்டத் தெரியவில்லை. கண்டபடி முட்டிக் கொள்கிறான். காமத்தில் ஆவேசம் இருக்குமளவுக்கு அறிவு இல்லை. ஏனென்றால் அனுபவம் இல்லை.''

''மடக்கிப்போட முடியுமா?''

''மிக எளிது.''

''காசு ஏதும் வைத்திருக்கிறானா?''

''சில செப்புக்காசுகளை வெட்கத்தோடு காட்டினான். ச்சே ச்சே காசு எதற்கு? உங்கள் புலமைக்கு என் பரிசு என்று கட்டிக் கொண்டேன்.''

''அற்புதம். வேறு என்ன பேசினான்?''

''அவன் என் மீது கொண்டிருப்பது காமமில்லையாம்? காதலாம், என்னைப் பார்த்த முதல் கணமே, அவன் மனதில் நான் நிறைந்து விட்டேனாம்.''

''நீ என்ன சொன்னாய்.''

''நானும் அதையே சொன்னேன்.''

அந்த இளம்பெண் கண் சிமிட்டினாள். எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''பிறகு?''

''என்னைப்பற்றி ஒரு அற்புதமான கவிதை எழுதி வருகிறேன் என்று சொல்லிப் போயிருக்கிறான்.''

''காசு கொண்டு வருவானா?''

''காசு வேண்டுமென்று நான் கேட்கவில்லை. நாளை புடவைக்காரர் வருவார். என்னிடம் நல்ல புடவையே இல்லை. உங்களிடம் எப்படியாவது கெஞ்சிக் கூத்தாடி ஒரு புடவை வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.''

''எப்போது போனான்?''

''விடிந்து ஒரு நாழிகைக்குப் பிறகு.''

''வரட்டும். இன்று நீ உடம்பு சரியில்லை என்று சொல்லிவிடு. உனக்குப் பதிலாய் இவள் போகட்டும். அடியே, நீ வேலை தெரிந்தவள்தானே, அவனை விதம் விதமாக இறங்க அடி. பூனை பாலை ருசி பார்க்கட்டும். பிறகு பட்டினி போடுவோம்.''

அருணகிரி பரணையில் ஏறினான். யாருக்கும் தெரியாமல் ஒளிந்து கொண்டான். உள்ளே பாதி பாத்திரங்



களை காணோம். காசு நிறைந்த சொம்புகள் பலதும் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. ஒரு தவலையை இழுக்க முயற்சித்தான். அது கனத்தது. திருகுமூடியை நீக்கிப் பார்த்தான். தவலையின் கழுத்து வரை பொற்காசுகள் இருந்தன. அதிலிருந்து பொற்காசுகளை எடுத்து ஒரு துணிப்பையில் போட்டுக் கொண்டான். சுருக்கிட்டு இடுப்பில் முடிந்து கொண்டான். இடுப்பில் இன்னொரு துண்டு கட்டி அதை மறைத்தான். பரணையில் இருந்து தொங்கி தரையிறங்கினான்.

''அம்மா, வகுப்புக்குப் போய் வருகிறேன்.'' என்று உரக்கச் சொல்லிவிட்டு வெளியே நடந்தான்.

அந்த அவசரம் அவன் வகுப்புக்குப் போகவில்லை என்பதைக் காட்டியது. முத்தம்மை கவலைப்பட்டாள். அக்காள் ஆதி சந்தேகப்பட்டாள்.

காசு தவிர, கையில் ஒரு ஓலை நறுக்கு இருந்தது. அதில் காதல் கவிதை இருந்தது.

''அதென்ன காதல் கவிதையா? நீ கவிதை எழுதிய வேளை, அவளுக்கு உடம்புக்கு வந்துவிட்டது. நல்ல ஜுரம். இன்று போய் நாளை வாயேன்'' பெரியவள் ஏளனமாய் பேசினாள்.

அருணகிரி முகம் வாடிற்று. வரும்போது செய்த கற்பனைகள் எல்லாம் இருண்டு போயின.

இப்போது என்ன செய்வது. திகைத்து நின்றான்.

''புடவை வாங்க வேண்டுமென்று ஆசைப்பட்டாளே?''

''ஆமாம், ஆசைப்பட்டாள். புடவைக்காரனும் வருவதாக சொல்லியிருக்கிறான். ஆனால் யாரிடம் காசு இருக்கிறது?''

''என்னிடம் இருக்கிறதே.''

''கடவுளே, உன்னிடம் காசு வாங்குவதா. நியாயத்திற்கு உனக்கு நான் காசு தர வேண்டும். ஆமாம் எவ்வளவு வைத்திருக்கிறாய்?'

''தெரியவில்லை. எண்ணவேண்டும்.''

''எண்ணிக்கை இல்லாத அளவுக்குக் காசா?''

அவன் சுருக்குப்பையை எடுத்து, கீழே உட்கார்ந்து தரையில் கொட்டினான்.

பெண்கள் முகம் மலர்ந்தார்கள். ஒரு பெண் அருணகிரிக்கு அருகே வந்து உட்கார்ந்து,குனிந்து எண்ணத் துவங்கினாள். அவள் மார்பகங்கள் பெரிதாக இருந்தன.

''இருபத்தியேழு பொற்காசுகள்.''

''அருணகிரி எனக்கு இரண்டு கொடேன். புடவை வாங்க வேண்டும்'' அருணகிரியை மயக்கப் படுத்தியவள் அருகே வந்து தோள் தொட்டாள். அவள் மார்பகங்கள் உறுதியாக இருந்தன.

அவன் இரண்டு பொற்காசுகளை அவள் கையில் வைத்தான்.

''எனக்கு?'' பெரிய மார்புக்காரி கை நீட்டினாள். அவளுக்கும் இரண்டு கொடுத்தான்.

தொலைவிலிருந்து இதைப் பார்த்துக் கொண்டு இருந்த பெண், அருகே வந்து உரசினாள்; அவளுக்கும் இரண்டு பொற்காசுகள் கொடுத்தான். வெற்றிலை பாக்கு குதப்பிக் கொண்டிருந்த பெரியவளுக்கும் இரண்டு பொற்காசுகள் கொடுத்தான்.

வீட்டுக் காவலன் வந்து காதோடு பெரியவளிடம் ஏதோ சொன்னான்.

''அடியே, எல்லோரும் பின் கட்டுக்குப் போங்கள், நான் சொல்லும் வரை எவளும் வரக்கூடாது. அருணகிரி



நீயும் உள்ளே போய்விடு. அருணகிரிக்கு எதாவது சாப்பிடக் கொடுங்களடி உங்களுக்குப் புடவைக்குக் காசு கொடுத்திருக்கிறானே.''

''அவள் எங்கே.'' அருணகிரி உள்ளே போய்க் கொண்டே கேட்டான்.

''நல்ல ஜுரம் படுத்திருக்கிறாள்.''

''போய் பார்க்கலாமா?''

''எதற்கு?''

''ஜுரம் என்றால் பார்க்க மாட்டார்களா?''

''இது பெண்கள் பிரச்சினை.''

''அப்படி யென்றால்.''

''ரத்தப் போக்கு''

''அப்படி யென்றால்?''

''அருணகிரி, உயிரை வாங்காதே. இன்றைக்கு உன் கூட விளையாட நானிருக்கிறேன். அவளை மற.''

''ஒரு கவிதை எழுதி வந்திருக்கிறேன். அவளிடம் காட்ட வேண்டும்.''

''என்னிடம் காட்டு''

அவன் ஓலையை நீட்டினான். அவளுக்குப் படிக்கத் தெரியாது. தலை கீழாகப் பிடித்தாள். ஓலையை மும்முரமாகப் படிப்பதுபோல் நடித்தாள். ஆஹா, ஓஹோ என்றாள்.

அருணகிரிக்கு ஏமாற்றமாக இருந்தது.மற்ற பெண்கள் அவள் நடிப்பைப் பார்த்து, வாய்விட்டுச் சிரித்தார்கள்.

நல்லவர்கள், நடிக்கிறவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும். நடிப்பவர்கள் இடைவிடாது நடித்துக் கொண்டுதான் இருப்பார்கள். எது பத்தியும் பொய்யாய் தான் இருப்பார்கள். நடிப்பவர்களுக்கு நடிப்பு மட்டுமே நிஜம். மற்ற எல்லா கலைகளும் ஆரவாரம்.

கூத்தாடுபவர்களுக்கும், நடிப்பவர்களுக்கும் இலக்கியம் இளக்காரம். சிக்கலான விஷயம். மூளை விரயம். இலக்கியம் வெறும் வார்த்தைகள். வார்த்தைகளுக்கு ஏதாவது மதிப்பு உண்டா?

சீ நாயே என்று ஏசிவிட்டு, பத்துப் பொற்காசுகள் கொடுத்தால், வேண்டாமென்று சொல்லிவிடுவோமா? அங்கு வார்த்தையா முக்கியம், பொற்காசு அல்லவா? வார்த்தைகளுக்கு முக்கியம் கொடுப்பவர் வகையாய் வாழ முடியாது.

கவிதை என்பது வார்த்தைகள். இதற்கு இறங்க ஆரம்பிப்பது பொறுமைத்திற்கு உதவாது.

எனவே, கவிதையிடமும், கவிஞர்களிடமும் விலகி இருப்பதே கூத்தாடுபவருக்கு நல்லது.

ஆனால், சிறு துரும்பும் பல் குத்த உதவுமல்லவா? இவன் பாட்டுத்தானே அத்தனை பெரிய கூட்டத்தை சேர்த்தது.

அடக்கடவுளே, பாட்டா சேர்த்தது ஆட்டமல்லவா? கதை சொன்ன விதமா சேர்த்தது? கூட்டுமல்தான உடம்பல்லவா?

முதலில் அந்த ஒப்பனைக்காரனுக்கு நன்றி சொல்ல வேண்டும். பிறகு உடை தைப்பவனை கும்பிட வேண்டும் பிறகு பந்தமேற்றி அணைத்தவனைப் பாராட்ட வேண்டும் இத்தனை பேரையும் ஒன்று சேர்த்து நாடகம் தயாரித்த



பெரியவனை விழுந்து கும்பிட வேண்டும். அதற்குப் பிறகு தான் அருணகிரி. கதை சொன்னவன்.

ஆனால் இவனையும் நம் விளையாட்டுக்கு சேர்த்துக் கொள்ளலாம் ஒப்புக்கு சப்பாணியாய் ஓரமாய் உட்கார வைக்கலாம்.

இப்போது முக்கியமான விஷயம் அந்த வீட்டு காவல் காரர்கள். அவர்கள்தான் வீட்டுக்கு பிரபுக்களை கூட்டி வருவார்கள். பிரபுக்களிடமிருந்து பணம் வாங்கித் தருவார்கள். தேவையில்லாதவர் உள்ளே வராமலிருக்க காவல் காப்பார்கள்.

இனி அவர்கள்தான் முக்கியம் அருணகிரி அல்ல. அதே சமயம் அருணகிரியைத் தள்ளவும் முடியாது.

அவர்கள் வேகமாய் சிந்தித்தார்கள். அவர்களுக்குள் கூடிப் பேசினார்கள். அருணகிரிக்கு இவை எதுவும் தெரியவில்லை.

அருணகிரி கவிதையைக் கேலி செய்ததற்கு வருத்தப் படுகிறான் என்று தெரிந்ததும், அவன் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். அருணகிரி மறந்து போனான். அங்கேயே அடித்துப் போட்டார்போல் உறங்கிப் போனான். அவன் கவிதை அறையின் மூலையில் சுருண்டு கிடந்தது.

முன்பக்கம் பிரபுக்கள் வந்தார்கள் பல் தெரிய பெரியவனுடன் பேசினார்கள். நாட்டியத்தைப் புகழ்ந்தார்கள். நல்லதொரு கலை முயற்சி என்றார்கள். பல்வேறு விதமான தத்துவ விளக்கம் கொடுத்தார்கள். இரவு வருவதற்கு அச்சாரம் கொடுத்தார்கள். அதைப் பரிசு என்றார்கள். பாராட்டு என்றார்கள்.

''உங்களைப் போன்ற பிரபுக்கள் கைக்கொடுத்தால் தான் கலை வளரும்,'' பெரியவன் பேசினான்.

''யார் எழுதிய பாடல்?'' கொஞ்சம் விஷயம் தெரிந்தவர் பாராட்டினார்.

''எல்லாம் நாங்களே செய்து கொண்டதுதான். எனக்குக் கீழே இருக்கிறவர் செய்த பாடல்தான்.'' பெரியவன் பெயர் கூட சொல்லாமல் மறைத்தான்.

''பாடல் என்னய்யா பாடல். இவர்களுடைய ஆடலால்தானேய்யா அந்தப் பாடல்.''

விதையின்றி மரம் முளைத்ததென்று அவர்கள் பேசினார்கள். மற்றவர்களும் அதை ஆமோதித்தார்கள்.

அருணகிரி தன் வலிவு தெரியாமல், தன் சூழ்நிலை தெரியாமல், தான் சேர்க்கை கொண்ட இடத்தின் கயமைத்தனம் தெரியாமல், குழந்தை போல தூங்கிக் கொண்டிருந்தான்.

'காமவசப்பட்டவர்களுக்கு கண்ணியம் முக்கியமில்லை. காமம்தான் முக்கியம்.'

அவன் தூங்கியெழுந்து மூன்றாவது பெண்ணைத் தேடினான்.

''சும்மா முடியுமா? காசு கொடு'' அவள் கை நீட்டினாள்.

''எத்தனை?''

''மூன்று பொற்காசுகள்'' அவள் கண்சிமிட்டினாள்.

''ஐந்து பொற்காசுகள் கொடுத்தால், என்ன செய்வாய்?''

அருணகிரி அவளை இறுக்கிக் கொண்டான்.

''உன்னைச் சாகடிப்பேன்.''

''புரியவில்லை.''



''இத்தோடு பெண் போகம் போதும் என்கிற அளவுக்கு தித்திக்க தத்திக்கத் தருவேன்.''

''இந்தா பத்து பொற்காசுகள் என்னைக் கொலை செய். இதற்கு மேல் இல்லை என்று விருந்து வை.''

அவர்கள் எட்டுக்கட்டு வீட்டில், ஏதோ ஒரு இடத்தில் போய் ஒளிந்து கொண்டார்கள். மேல்மாடி தெற்கத்தி ஜன்னலை திறந்து வைத்து, கீழே பாயும், தலையணையும் போட்டுப் படுத்துக் கொண்டார்கள்.

அவள் அவனைச் சாகடித்தாள்.

இது போதும். இதற்கு மேல் தேவையில்லை என்று அவன் சொல்ல நினைத்தான். ஆனால் சொல்ல முடியவில்லை. அத்தனை அயர்ச்சி இருந்தது.

காமம், போதும் என்ற நிறைவைக் கொடுப்பதே இல்லை. தீயில் நெய் விட்டால், ஒரு போதும் தீ அணைவதில்லை.

காமம், காமத்தை வெறுக்க வைக்க வேறு உபாயம் கையாளுகிறது. அது உடம்பைத் தளரவிடுகிறது. புத்தியை குழப்பிவிடுகிறது. எண்ணங்களை ஒருமுகப்படுத்தாது சிதறடிக்கிறது. எந்நேரமும் மனதுள் காமம் இருக்கிறவர்களுக்கு எதுவும் சீராய் செய்ய இயலாது.

காமம் நாய் போல. அதைத் தலையில் வைத்துக் கொண்டு ஆட முடியாது. மார்பில் போட்டுக் கொண்டு தூங்க முடியாது. நாயைக் காலின் கீழ் படுக்க வைப்பது தான் நல்லது.

ஆனால் அப்படி வைத்துக் கொள்ள யாருக்கும் தெரியாது. நாய் நாக்கை தொங்கப் போட்டுக் கொண்டு வந்து உரசும். நாய் உரசுகிறதே என்று நாம் உரசக் கூடாது. நாயையும் அதிகம் உரச விட்டு விடக்கூடாது. நாயை வெறுப்பதும் அநாகரீகம்.

நாய் நல்ல பிராணி. அன்பின் வடிவம் ஆனாலும் மிருகம். அதை எவ்வளவு கொண்டாட வேண்டுமோ அவ்வளவுதான் கொண்டாட வேண்டும். இவ்விதமே காமமும்.

ஒருவர் வாழ்க்கையில் நாயோடு மட்டும் பேசிக் கொண்டு போனால் அவனுக்கு மதிப்பிருக்காது. மனிதனுடைய உயர்வு, சிந்தனைத்திறன் மிக உன்னதமானது. அவன் நாயைக் கொஞ்சுவதில் தவறில்லை. ஆனால் நாயோடு அவன் வாழ்க்கை முடிந்து விடுவதில்லை.

இந்தத் தெளிவிருந்தால் வாழ்க்கை மிக மிக சுகமாக இருக்கும்.

ஆனால் பல பேருக்கு இந்தத்தெளிவு இல்லை என்பது தான் விசித்திரமான விஷயம். அந்தத் தெளிவு இல்லாத போது அவர்கள் வாழ்க்கை நாய்க்குப்பின்னே அலையும் வாழ்க்கையாகப் போய்விடுகிறது. அவர்கள் மீது மிருக வாசனை அடிக்கிறது.

அருணகிரி காமவசப்பட்டான். தாயை மறந்தான். தமக்கையை மறந்தான். தமிழை மறந்தான். அடிக்கடி பரணையில் ஏறி சுருக்குப் பையில் காசெடுத்து அவர்கள் வீட்டுக்குக் கொண்டு போனான்.

அந்த நாட்டிய நாடகம் பல்வேறு கோவில்களில் நடைபெற்றது. அந்தப் பெண்களுக்கு ஏகப்பட்ட சன்மானங்கள் கிடைத்தன. அந்தப் பெண்களின், வீட்டைத் தேடி நகைகளோடும் பொற்காசுகளோடும் நிறைய தனவந்தர்கள் வந்தார்கள்.

ஆடுகிற பெண்ணைவிட அழகான மனைவி அமைந்தாலும் ஆடுகிற பெண்தான் கவர்ச்சி. கவர்ச்சி என்பது உடம்பில் இல்லை. அந்த ஆட்டத்தில் இருக்கிறது. உடம்பு அசைவில் இருக்கிறது. பார்க்கிற பார்வையில்



இருக்கிறது. உதடு கடிப்பதிலும் நாக்கு நீட்டுவதிலும் இடுப்பை அசைப்பதிலும், நெஞ்சு குலுக்குவதிலும் தான் இருக்கிறது. அழகான மனைவி இதை செய்யத் தயங்குகிறாள். கூச்சப்படுகிறாள்.

வெட்கம் விட்ட பெண்களுக்கு இவைகள் எளிதே கைவருகின்றன. இதனால் ஆண்களுக்கு கிளர்ப்பு உண்டாகிறது.

''அடேயப்பா, என்ன அழகு என்று பேசவைக்கிறது.''

''அருணகிரி, இதை விடவும் சிறப்பாக ஒரு நாட்டிய நாடகம் எழுத முடியாதா?''

பெரியவள் அவனை அணைத்துக்கொண்டு கேட்டாள். அவன் அவளிடமும் விஷமங்கள் செய்தான். வயது வித்தியாசமுமில்லாமல் விளையாடினான்.

''அட எழுதினால் போயிற்று.''

''எப்பொழுது.''

''இன்றே, இங்கே, இப்பொழுதே.''

''என்ன கதை.''

''சிவன் மன்மதனை எரித்த கதை. காமதகனம்''

''கடவுளே. உனக்கு எவ்வளவு புத்தி...'' அவன் பெயருக்கே ஆனந்தப்பட்டான். ''என்ன கதை அது.''

''இங்கேயும் நிலைக்களன் திருவண்ணாமலை தான்.'' அவர்கள் அவனைச்சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள். அவன் கதை சொல்லத் துவங்கினான்.

''அருணையில் சிவபெருமான் தவம் செய்து கொண்டிருக்கிறார். மலையாய், மலைக்குள் பொதிந்த அக்னிப் பிழம்பாய், அமைதியாய் தவம் செய்து கொண்டிருக்கிறார்.

வானத்தில் போன மன்மதனும், ரதியும் அருணை நகர் சப்தம் கேட்டுவிட்டு தரையிறங்குகிறார்கள். அருணை நகரில் ஆடலும் பாடலும் வீர விளையாட்டும், விதூஷகப் பேச்சும் வானம்வரை எட்டுகின்றன.

மன்மதனும் ரதியும் இறங்கியவுடன் கந்தர்வர்கள் இறங்குகிறார்கள். பாட்டுப் பாடி சூழல் ஊதி நகரை வலம் வருகிறார்கள். கிரியை நமஸ்கரிக்கிறார்கள்.

''மக்கள் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார்கள். இவர்களைக் காதல் வசப்படுத்தலாமே''ரதி மன்மதனிடம் சொல்ல, மன்மதன் கண்ட மேனிக்கு மலரம்புகள் வீச, எல்லோரும் எல்லோரையும் காதலிக்கிறார்கள். அழகான பெண் குண்டானவரைப் பார்த்து சொக்கிப் போயிருக்கிறாள். பதினாறு வயது இளைஞன், முப்பது வயதுப் பெண்ணைக் காதலிக்கிறான். பத்து வயதுப் பையனும், எட்டு வயதுப் பெண்ணும் முத்தமிட்டுக் கொள்கிறார்கள். கிழவன் கிழவியை நச்சரிக்கிறான். எல்லோரும் காதல் கவிதை எழுதுகிறார்கள். எல்லோரும் சந்தனமும் புனுகும் பூசிக்கொள்கிறார்கள்.

'ஊரே காதலில் மூழ்கிக்கிடக்கிறது பார்' என்று மன்மதன் கொக்கரிக்கிறான்.

'ஆனால் இந்த மலைதான் சலனமில்லாமல் இருக்கிறது' என்று ரதி சொல்கிறாள்.

உடனே மலைமீது மன்மதன் பூச்சரம் எறிகிறான்.

மலை அசைகின்றது. தடதடவென்று அதிர்கிறது. கற்கள் உருண்டு விழுகின்றன.

காற்று சுழன்று அடிக்கிறது. மரங்கள் முறிந்து விழுகின்றன. மக்கள் நான்குபுறமும் அலைமோதித் தள்ளாடுகிறார்கள். வீடுகள் இடிந்து விழுகின்றன. யானைகள் சங்கிலி அறுத்துப் பலரை மிதித்துக் கொல்கின்றன.



மலையின் உச்சி சிதைந்து உடைந்து நெருப்பு பொங்குகிறது. தீப்பிழம்பு இறங்கி ஓடிவருகிறது. நகரை அறுத்து ஊடே ஓடி ஊரை நாசமாக்குகிறது. மக்கள் மடிகிறார்கள், வீடுகள் தீக்கிரையாகின்றன. மரங்கள் கருகி விழுகின்றன. பாம்புகளும் பசுக்களும், குரங்குகளும் வெகுதூரம் ஓடுகின்றன. பறவைகள் சடசடத்துப்பறந்து புகையால் தாக்கப்பட்டு தரையில் மடிந்து விழுகின்றன.

மன்மதன் என்ன இது என்ன இது என்று அலறுகிறான் ஒரு பெரிய நெருப்பு அலை அவன் மீது பாய்கிறது அவன் கருகிச் சாம்பலாகிறான்.

அந்த அலை ரதியை ஒன்றும் செய்யவில்லை.

ரதி அலறுகிறாள். முகம் பொத்தி அழுகிறாள் என்னால் தானே. என்னால் தானே என்று புலம்புகிறாள்.

மலையிடம் ஓடிப்போய் மன்னிப்புக் கேட்கிறாள். என் சிவனே என் சிவனே என்று மனமுருகப்பாடுகிறாள்.

அன்னை பார்வதி அவளுக்கு இரக்கப்படுகிறாள். இறைவனிடம் வேண்டுகிறாள். இறைவன் மன்மதனை உயிர்ப்பிக்கிறான். மன்மதன் எழுந்து மன்னிப்புக் கேட்கிறான். தன் தொழிலைத் தொடரட்டுமா என்று கேட்கிறான். இறைவன் சிரித்தபடி செய் என்கிறான்.

திருவண்ணாமலை மறுபடியும் உயிர் பெறுகிறது. திருவண்ணாமலையில் உண்மையாக சிவன் இருக்குமிடம் இந்த மலைதான். எனவே மலை வலம் வருதல் நலம் என்று ஊர் நிர்மாணிக்கிறது. கும்பல் கும்பலாய் கிரிபிரதட்சணம் நடக்கிறது.

திருவண்ணாமலைக்கு வரும் ஒவ்வொருவரும் கும்பிடுவது இந்த மலையைத்தான். ஏனெனில் இந்த மலைதான் சிவன். சிவன் தான் இந்த மலை.

எப்படி இருக்கிறது கதை...''

''அருணகிரி, நீ அற்புதமான புலவன். பெரியவன் அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவன் நாட்கணக்கில் அங்கே தங்கி நாட்டிய நாடகம் எழுதத் துவங்கினான். பல பெண்களை சுகித்தான்.

முத்தம்மை கவலைப்பட்டாள்.

காமத்தில் திளைத்தவர்களை காமத்தில் திளைக்காதவர்கள் பொறாமையோடு பார்ப்பார்கள். பெண்ணின் அண்மை கிடைத்தவர்களை, பெண்ணின் அண்மை கிடைக்காதவர்கள் ஆத்திரத்தோடு நோக்குவார்கள்.

''அம்மா முத்தம்மா, உன் பிள்ளை ஏன் தாசி வீடே கதி என்றிருக்கிறார்கள். அவர்கள் யாரென்று உனக்குத் தெரியாதா. அவர்கள் உனக்கு உறவினர்களாக இருக்கலாம் ஆனால் மோசமானவர்கள் என்று அறியமாட்டாயா. பாடல் எழுதுகிறானாம். நாட்டியம் சொல்லித் தருகிறானாம். இரவு நேரத்தில் என்ன நாட்டியம் சொல்லித்தர முடியும் எங்களுக்குத் தெரியாதா சிறு வயது. கண்டித்துவை.''

அந்தத் தாசி வீட்டின் அழிக்கம்பியைக் கூட தொட முடியாதவர் அம்மாவிடம் பிள்ளையைப் பற்றி கோள் மூட்டினார்.

''அம்மா, அவன் சொல்வது பொய். நான் எழுதிய நாட்டிய நாடகத்தை உனக்குப் பாடிக் காண்பிக்கிறேன். கேள்.''

பிள்ளை பாடிக் காண்பித்தான். ஆடிக்காண்பித்தான் நடித்துக் காண்பித்தான்.

''நாடகம் மிக நன்றாக இருக்கிறது அருணகிரி. அதை இங்கு உட்கார்ந்து எழுதக் கூடாதா எதற்கு கெட்ட பெயர்.''



''இனிமேல் இங்கேயே உட்கார்ந்து எழுதுகிறேனம்மா.''

''நல்ல பிள்ளை உடம்பு சுடுகிறது, நவநீதம் தருகிறன் சாப்பிடு.''

அம்மா உருட்டி உருட்டி வெண்ணெய் வழங்கினாள்.

பிள்ளை சாப்பிட்டு விட்டு சிரித்தான். சீனிப்பொட்டு கேட்டான். தட்டு நிறைய அதையும் வாங்கித் தின்றான்.

பரணையிலிருந்து காசுகள் எடுத்து இடுப்பில்சொருகிக் கொண்டான்.

''ஐயா வைத்தியரே, எனக்கு வீரியமுள்ள மருந்துகள் வேண்டும்.'' காதோடு பேசினான். காசு கை மாறியது. மருந்து உள்ளே இறங்கியது. இயற்கைக்கு மாறாய் எது செய்தாலும் பக்க விளைவுகள் உண்டு.

''அடியே பெண்டுகளா அருணகிரி இன்னொரு நாடகம் எழுதிக் கொடுத்திருக்கிறான். அவன் நமக்கு நெருங்கிய உறவினன். ஆனால் எவனுக்கோ நாடகம் எழுதிக் தருகிறான். அவனை வழியில் மடக்கி இங்கே கொண்டு வருவது உங்கள் இருவரின் பொறுப்பு.

அவன் இங்கே வந்த பிறகு அவன் மனதை மாற்றி நாடகம் வாங்குவது உங்கள் இருவரின் பொறுப்பு. ஜாதி ஜாதையாய் உறவினளை அனுப்பினாள்.

அவன் அந்தப் பழைய நாடகம் போட்டுக் கொள்ளட்டும். இந்த காமதகனத்தை நாம் நடத்துவோம்.

ஊர்வசி, ரம்பை திலோத்தமையாய் பதினாறு அழகிகள் என்னிடம் இருக்க. அவன் கொடி உயரப் பறக்கிறதே இது என்ன நியாயம்?

அருணகிரி யாரென்று நமக்குத் தெரியாமல்போயிற்று. நன்கு உடுத்திக் கொண்டு கோவிலுக்குச் செல்லுங்கள். அருணகிரி இல்லாது வீட்டிற்கு வர வேண்டாம்.''

அருணகிரியின் நெருங்கிய உறவினன் அந்தப் பெண்களுக்குக் கட்டளையிட்டான்.

அந்தப் பெண்கள் அருணகிரியைக் கடத்தி வந்தார்கள். இன்னொரு பெண்கள் கூட்டம் அருணகிரியைச் சுற்றிக் கொண்டது. என்னைப் பார் என் அழகைப் பார் என்று காட்டியது.

அருணகிரி திணறினான். அவன் வேறு இடம்போனது பார்த்து முதல் நாடகம் போட்ட பெண்மணி அவனுக்கு வலை வீசினாள். மடக்கி வீட்டுக்கு அழைத்தாள். காலைக் கட்டிக் கொண்டு கெஞ்சினாள்.

''அருணகிரியைத் தங்க வைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு'' என்று தன் இனம் பெண்களுக்குக் கட்டளையிட்டாள். அவர்கள் பாய்ந்து இறுகிக் கொண்டார்கள்.

பதினைந்து வயது அருணகிரிக்கு, உடம்பு உரம் மிக்க அந்த வாலிபனுக்கு திகட்டத் திகட்ட தேக சுகம் கிடைத்தது. நாட்டு மருந்து உதவி செய்தது.

அவன் கேட்கும் முன்பே விருந்து தரப்பட்டது அவனுக்குப் பசிக்காத போதும் படையல் படைக்கப்பட்டது. விதம் விதமான மாமிசங்கள் போடப்பட்டன. இப்படி இவ்வுலகில் எவரும் அனுபவித்ததில்லை என்பது போல் அனுபவித்தான்.

ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

உடம்பு பலஹீனப்பட்டது. அம்மா கவலைப்பட்டாள். அக்கா ஆதி வெட்கப்பட்டாள்.

அருணகிரியின் அப்பாவிடம் சொல்ல, அவர் துக்கப்பட்டார், விதி வலிது என்றார்.

பரணையிலிருந்து சுருக்குப் பையோடு இறங்கும்போது அம்மா பார்த்து விட்டாள்.

''சொந்த வீட்டிலேயே திருட்டா? இது என்ன வேலை?'' உரக்கக் கத்தினாள்.



அருணகிரி அந்தப் பொற்காசுகள் தானதருமத்திற்கு என்று பொய் சொன்னான்.

அருணகிரியின் அம்மா, உறவினன் வீட்டுக்குப் போனாள்.

''நான் பத்தினி. இன்னொரு முறை என் பிள்ளையை எந்தப் பெண் தொட்டாலும் அவள் நோயாவாள். இது சத்தியம். எச்சரிக்கை'' என்று உரத்துச் சொல்லி விட்டு திரும்பினாள்.

''அருணகிரி, இந்த பொல்லாப்பு வேண்டாமப்பா'' என்று அவனை விலக்கினார்கள்.

ஆனால் அவன் எழுதிய நாடகத்தை போட்டார்கள். மிகப் பெரிதாய் வளர்ந்தார்கள். ஏகமாய் சம்பாதித்தார்கள்.

யார் எழுதிய நாடகம் என்று ஊர் வினவ, நாங்கள் எழுதிய நாடகம் என்று அவன் பெயரை மறைத்தார்கள். காஞ்சி மாநகரிலிருந்து தூது வந்தது.

''உலகிலேயே மிக அழகான தாஸி உங்களைப் பார்க்க வேண்டுமென்று பிரியப்படுகிறார்கள். பயணத்திற்கு வண்டி கொண்டு வந்திருக்கிறோம். வழிநடைக்கு சோறு வைத்திருக்கிறோம். வம்பு பேச ஊர் எல்லையில் இரண்டு பெண்களையும் நிறுத்தியிருக்கிறோம். எப்போது பயணப்படுவீர்கள்.''

''இப்போதே.''

அவன் வண்டி ஏறினான்.

''வடமொழிப் பாடம் படிப்பதற்காக காஞ்சிமாநகரம் போகிறேன்'' என்று தாய்க்குச் சொல்லியனுப்பினான்.

அவன் வடமொழிக்காவியம் போலத்தான் இருந்தான். திருவண்ணாமலையில் இருக்கிற பெண்கள் அவன் கால்

தூக்கக் காணமாட்டார்கள். அவன் கோதுமை நிறமும் அதரச் சிவப்பும் பல மன்னர்களை ஏங்க வைத்தன.

அவனுக்குத் தனிப்படை இருந்தது. ஒரு தெருவே சொந்தமாக இருந்தது. அரசியலில் பெரும் செல்வாக்கு இருந்தது. அடுத்த தேசத்து ஒற்றர்கள் அவன் வீட்டில் ரகசியமாய் தங்கினார்கள். சதி ஆலோசனைகள் சர்வ சாதாரணமாய் நடைபெற்றன.

மற்ற வீடுகள்போல் பொற்காசுகள் பானையில் இல்லை, ஆளுயரக் குதிரில் இருந்தன.

பொற்காசுகளை முறத்தில் அள்ளி செலவு செய்தார்கள். அந்தப் பளிங்கு மாளிகை முழுவதும் வேலையாட்கள் இருந்தார்கள்.

அந்த தாளி ஆடலில் மிக தேர்ச்சி பெற்றிருந்தான். குரவைக் கூத்து என்று குரங்குபோல் ஆடாமல் மிக ஒயிலாக நடனமாடினான். மிக அழகாக சித்திரம் வரைந்தான். ஏழு தந்தியாழ் வாசித்தான். புல்லாங்குழல் ஊதினான்.

வடமொழியிலும், தமிழிலும் பல கவிதைகள் எழுதியிருந்தான். பரதக் கலையை நன்கு அறிந்திருந்தான், பெரிய வாசக சாலை வைத்திருந்தான்.

கம்பரது ராமாயணத்தைப் பிரதியெடுக்க புலவர்களை நியமித்திருந்தான். தேவார திருவாசகங்களுக்கு தினமும் பூஜை செய்தான்.

அந்த நாகரீகம், அருணகிரியைக் கவிழ்த்துப் போட்டது.

''காமதகனம் நாட்டிய நாடகம் பார்த்தேன். அருணகிரி அவர்களே, நாட்டியம் சரியே இல்லை. ஆனால் காவியம் மிக அருமை. வர்ணனைகள் மிக மிக உயர்வு.



அதுவும், அந்த மலை சீறிப்பொங்குமிடம்...நான் திகைத்து விட்டேன், எவ்வளவு வேகமான வார்த்தைப் பிரயோகங்கள். எவ்வளவு அழகான அளவான வாக்கியங்கள். அந்த சத்தம் என்னைக் கிறங்கடித்துவிட்டது.

உங்கள் பெயரை அவர்கள் சொல்லவே மறுத்தார்கள் நான் மிரட்டி வாங்கினேன்.

எனக்கு ஏதேனும் எழுதித்தர முடியுமா. தருவீராயின் தன்யன் ஆவேன்.''

அவன் கை கூப்பினான்.

அருணகிரி அவனின் ஒவ்வொரு அசைவுக்கும் அசந்து கிடந்தான்.

''எனக்குக் காமக்கூத்து வேண்டாம். உண்மையான காதலை உங்களால் பாடல்களாக்க முடியாதா. ஒரு தூய்மையான தெய்வீகக் காதலைக் காவியமாக்குவது நல்லதல்லவா.''

''செய்யலாம். செய்ய முடியும்.''

''என்ன...சொல்லுங்கள்.''

''வள்ளித் திருமணம்.''

''என் சிவனே'' அவன் ஆர்ப்பரித்தான். தலைக்கு மேல் கை கூப்பினான்.

அருணகிரி பார்த்து கண்கிறங்கினான்.

''வேடுவர் குலம் வேட்டையாடி பாட்டுப் பாடி காட்டுத் தெய்வங்களுக்கு படையல் படைத்து, கள் குடித்து, குடியாட்டமும் வெறியாட்டமும் நடத்திக் கொண்டிருக்கிறது.

வேடர் தலைவன் தன் அழகான மகளுக்கு திருமண மாகுமா என்று வெறியாட்டக்காரனிடம் குறி கேட் கிறான்.

அம்மணி, நீங்கள் குறி சொல்லும் வெறியாட்டம் பார்த்திருக்கிறீர்களா. கையில் உடுக்கையோடு சன்னதம் வந்து ஆடும் ஆட்டமது.

தன தன திமி திமி டகு டகு
திமு திமு.''
அருணகிரி நடனமாடிக் காண்பித்தான்.

அவன் திகைத்துப் போனான்.

''பிறகு.'' ஆவலுடன் கேட்டான்.

''உன் மகள் மனிதருக்கு வாழ்க்கைப்படப் போகிறவள் அல்ல. அவளைக் கைப்பிடிக்க தெய்வம் தரையிறங்கி வரும். எனவே அவளை ஒருபோதும் தனித்துவிட வேண் டாம்.'' வெறியாட்டக்காரன் சொன்னான்.

வள்ளியைச்சுற்றி எப்போதும் பத்துப் பெண்களும், தொலைவே இரண்டுவீரர்களும் காவலிருந்தார்கள். வள்ளி, தெய்வம் எப்போது வரும்...தனக்கு எப்போது திருமண மாகும் என்று ஏங்கினாள். திருமணமே நடக்காது என்ப தைத்தான் இப்படிச் சொல்கிறார்களோ என்று கவலைப் பட்டாள்.

அப்போது தெய்வீக குறத்தி ஒருத்தி தரையிறங்கி னாள்.

அவள் வனதேவதை. வனம்தான் ஒரு தேசத்தின் செல்வம். வனம்தான் மழை பொழியக் காரணம்.

வனம் இருந்தால்தான் அருகே உள்ள கிராமங்களில் நெல் வளம் இருக்கும். வனத்தின் இலைகள்தான் அடியுரம். அதுதான் மேய்ச்சல் நிலம்.



வள்ளி என்பவள் காற்று. முருகன் என்பவன் சூரியன். நிலம் சூரியனால் தாக்கப்பட்டு கடல் நீர் மேலெழும்ப காற்று அந்த மேகத்தை கைப்பிடித்து வர, வனம் செழிப் படையும். அங்கு நல்ல மழை பொழியும்.''

''ஆஹா. ஆஹா. அருணகிரி என்ன அருமையான தத்துவம். உன் புலமைக்கு தலை வணங்குகிறேன். முருகன் வள்ளி திருமணத்தை இப்படிக் கற்பனை செய்ய உன்னால் எப்படி முடிந்தது.

அருணகிரி, இதற்கே உனக்கு ஒரு முறம் பொற்காசுகள் தரலாம்.''

அந்த தாசி மறுபடி கை கூப்பினாள்.

அருணகிரி புன்னகை செய்தான்.

''பிறகு ஆவலுடன் கேட்டான்.''

''முருகன் தரையிறங்கினார். வள்ளி பயந்து ஓடினாள். முருகன் மூத்த சகோதரனை நினைத்தார். சகோதரர் யானை உருவெடுத்தார். வள்ளியை துரத்தினார். செடிகள் சிதறினார்கள்.

முருகன் அங்கு கிழவராய் நிற்க, வள்ளி வந்து அணைத் துக் கொண்டாள். கட்டிக்கொண்ட வள்ளியிடம் முருகன் அத்து மீறினார். வள்ளி விலகினாள். மறுபடி யானை பிளிற வள்ளி முருகனை கட்டிக்கொண்டாள்.

'என்னைத் தொட்டுவிட்டாயே, என்னைத் திருமணம் செய்து கொள்' கிழவர்வற்புறுத்த வள்ளி அழுகிறாள்.

வள்ளி அழ, கிழவர் மனம் உருகுகிறார். கிழவர் முருகராகிறார்.

குறத்தி உள்ளே வந்து என் வாக்கு பலித்ததா என் கிறாள்.

ஓடிப்போன சேடிகள் வேடுவத் தலைவனோடு, வர அங்கேயே வள்ளித் திருமணம் நடக்கிறது.''

''அருணகிரி அருணகிரி நீ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழப்போகிறாய். இது சத்யம்'' தாஸி கண்ணீர் விட்டுச் சொன்னாள். ''சொல், உனக்கு என்ன வேண்டுமென்று சொல். எத்தனை பொற்காசுகள் வேண்டுமென்று சொல். உன் முழங்கால் உயரத்துக்கு குவிக்கட்டுமா?''

''இல்லை, எனக்கு காசு தேவையில்லை.''

''பிறகு?''

அருணகிரி தயங்கினான்.

''தயங்காமல் கேள். தருகிறேன்.''

''நீ'' அருணகிரி அவளை சுட்டிக் காட்டினான்.

தாஸிதளர்ந்தாள். கண் மூடினாள். சரி என்றாள்.

கரடி தேன்கூட்டை அப்படியே விழுங்கியது. இறங்கி தேன் மயக்கத்தில் படுத்துக் கிடந்தது. அதே மயக்கத்தில் பாடல்கள் எழுதியது.

புத்திசாலித்தனத்தோடு தெய்வீகம் சேரவில்லையெனில் அந்தப் படைப்பில் முழுமையிருக்காது. அந்தப் படைப்புக்கு ஆயுசும் இருக்காது.

காஞ்சி மாநகரை வள்ளித் திருமணம் கலக்கியது.

அந்த காஞ்சிபுரத்து தாஸியும் அதை எழுதியது அருணகிரி என்று சொல்லவில்லை. தக்க விலை தந்துவிட்ட பிறகு, பெயர் எதற்கு சொல்லவேண்டும் என்று மௌனமாகி விட்டாள்.



# 3

**தொ**ண்டை நாட்டில் அது ஒரு மோசமான காலம்.

வலிவுமிகுந்த சோழர்கள் பாண்டியர்களால் வீழ்த்தப்பட்டு, பாண்டியசகோதரர்கள் ஒருவர்மீது ஒருவர் கொண்ட துரோகத்தால் முஸ்லீம்கள் உள்ளே வரவழைக்கப்பட்டு அவர்கள் தலைநகரான மதுரை சின்னாபின்னமாக்கப்பட்ட காலம். நூற்றுக்கணக்கான யானைகளில் மதுரையின் செல்வம் கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்டு போகப்பட்ட காலம், மற்ற எல்லா நாடுகளிலும் முஸ்லீம்களைத் தடுத்து நிறுத்த மன்னர்கள் தங்கள் சண்டைகளை மறந்து ஒன்றாக நின்றார்கள்.

ஆனால் தமிழ்கூறும் நாட்டில் மட்டும் நிலைமை தலைகீழாகப் போயிற்று. வடக்கே மைசூரிலிருந்த இஸ்லாமிய அரசரை பாண்டிய நாட்டு மன்னர் குடும்பம், சகோதரச் சண்டையால் உள்ளே அழைத்து வந்தது. மதுரையைக் காட்டிக் கொடுத்தது.

இஸ்லாமியர்களிடமிருந்து இந்து மதத்தைக் காக்க வேண்டி வடகிழக்கே விஜயநகர சாம்ராஜ்ஜியம் உருவாயிற்று. பாண்டிய நாட்டின் அவலத்தை உணர்ந்து விஜயநகரத்தின் வழித்தோன்றல்கள் இந்து மதத்தைக் காக்க வேண்டி உள்ளே அழைத்தார்கள். இஸ்லாமியர்களை, காட்டிக் கொடுத்த தமிழ் மன்னர்களைக் கடுமையாகத் தண்டித்து கோவில்கள் கொள்ளையடிக்கப்படுவதிலிருந்து காப்பாற்றினார்கள்.

விஜயநகர மன்னர்கள் வருகையால் தமிழ் பின்னுக்கு தள்ளப்பட்டது. தெலுங்கும், வடமொழியும் செல்

கோலோச்சின. தமிழைக் கேட்கக்கூட தெலுங்கு மன்னர்கள் மறுத்தார்கள். அரவம் அத்துவானம் என்று தலையடித்துக் கொண்டார்கள்.

நாடும் மொழியும் இவ்விதம் இருக்க சமயம் இன்னும் சிதிலமடைந்தது. முஸ்லீம்கள் படையெடுப்புக்குப் பிறகும் சைவ, வைணவச் சண்டைகள் நடந்தன. வைணவர்கள் சைவர்களை அறவே வெறுத்தார்கள். ச்சீ... ச்சீ... சண்டாளா என்று விலக்கினார்கள். சைவர்கள் வாழ்க்கை நிலையற்றது. அது மாயை என்பதை ஏற்றுக்கொண்டதால் கடைசியில் எல்லாம் சாம்பல்தான் என்று பேசி வந்ததால் குடும்பப் பொறுப்பு இல்லாமல் சுற்றி வந்தார்கள்.

வீடு புறக்கணித்து வீதி வீதியாய் சுற்றினார்கள். எல்லோரும் சாகப் போகிறோம், யார் ஆண்டால் என்ன என்று தத்துவம் பேசினார்கள்.

அதுவரை அடங்கியிருந்த சாக்தம் சீறிக் கிளம்பியது.

சாக்தம் என்கிற சக்தி வழிபாட்டில் வாமாச்சாரம் என்கிற முறைக்கு ஆதரவு அதிகரித்தது.

துர்க்கைக்கு மது மாமிசம் படைத்தாலும், பூஜையின் போதே பெண்ணோடு புணர்தலும் நடந்தது.

யோனி பூஜை பெரிய விஷயமாயிற்று. அது ரகசிய பூஜை என்று வெளியே சொல்லிக் கொண்டு எல்லோரும், எல்லோருக்கும் அதைச் சொல்லி வந்தார்கள்.

வாமாச்சாரம் தாந்த்ரீகத்தின் உச்சக்கட்டம். மிகமிகக் கடுமையான விஷயம். நெருப்பாற்றில் நடக்கிற வித்தை. இதில் மாட்டிக் கொண்டு விழிபிதுங்குகிறவர்களே அதிகம். ஆனால் மக்கள் இதன் ஆபத்து குறித்து எந்த அக்கறையும் படாமல் பொய்யர்களால் உபதேசிக்கப்பட்டு பொய்யாய் பூஜை செய்து வந்தார்கள்.



வழிகாட்ட நல்ல அரசனோ, ஆன்மீகத்தலைவரோ, உண்மையான சன்யாசியோ இல்லாத அந்தக் காலத்தில் இம்மாதிரி நாடகங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின.

விஜயநகர சாம்ராஜ்ஜியம் ஓரளவு இஸ்லாமியர்களைத் தடுத்து நிறுத்தியது. இல்லையெனில், தென்னிந்தியா முழுவதும் முஸ்லீம்கள் நாடாகியிருக்கும். ஆனால் தெலுங்கு மன்னர்கள் சிங்காரப் பிரியர்கள். போகிகள். கூத்தில் ஆர்வம் உள்ளவர்கள்.

மொழி புரிகிறதோ, புரியவில்லையோ பெண்கள் ஆடுவதை வாய் விரித்துப் பார்ப்பதில் ஆர்வம் உடையவர்கள்.

நாடு, போர் வீரர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. இரவானால் போர் வீரர்கள் குடிப்பதற்கு மதுவும், கும்மாளத்திற்கு பெண்ணும் தேடினார்கள். இவை இல்லையெனில் வன்முறையில் ஈடுபட்டார்கள்.

ஒழுக்கமும், உறவும் கெட்ட அந்த காலகட்டத்தில் இம்மாதிரி தாசிக்கூத்துகளுக்கு மிகப்பெரிய வரவேற்பு இருந்தது. அந்த தாசிகள் ஒப்பு உயர்வற்ற கலைஞர்களாக சித்தரிக்கப்பட்டார்கள்.

சோழர் காலத்தில் சிற்பிகளுக்கு மரியாதை இருந்தது. பாண்டியர் காலத்தில் புலவர்களுக்கு மரியாதை இருந்தது. விஜய நகரம் காலத்தில் தாசிகளுக்கு மரியாதை அதிகம் இருந்தது.

எல்லா இடங்களிலும் அவர்கள் முதன்மை பெற்றார்கள்.

சில இடங்களில் அரசாங்கம் தாசி வீடுகளில் தான் நடந்தது.

தாசி அங்கீகரித்தவன்தான் புலவனெனப் பட்டான். தாசியை சித்திரம் எழுதியவன் நன்கு சம்பாதித்தான்.

தாஸி நினைத்தால் ஒருவனுக்கு அமைச்சர் பதவியும், மறுத்து கோபப்பட்டால் சிரச்சேதமும் எழுதப்பட்டன.

நல்லவர்கள் அவள் வம்புக்குப் போக அஞ்சினார்கள். குடும்பப் பெண்கள் இந்தப் பெண்களால் கடும் துயரடைந்தார்கள்.

தாஸியின் ஆட்டம் பார்த்து விட்டு பல கணவன்மார்கள் மனைவியரைத் தொந்தரவு செய்தார்கள். அவமானப் படுத்தினார்கள். சிறு குழந்தைகள் தேவையில்லாது பாலுணர்வு ஊட்டப்பட்டு பரிதவித்தன. இளம் பெண்களை வாலிபர்கள் கேவலமாய் கேலி செய்தார்கள் நாட்டியத்தில் வரும் அங்க வர்ணனையைத் தெருவில் பாடினார்கள்.

இதனால் பெண்கள் தெருவில் போகவே கலவரப் பட்டாரகள்.

பல்வேறு காரணங்களால் நசுக்கப்பட்ட அந்தத் தமிழ் சமுதாயத்தை அருணகிரியின் நாட்டிய நாடகம் மேலும் சிதைத்தது. கூத்தாடிகள் அருணகிரியை உபயோகப்படுத்திக் கொண்டார்கள்.

அருணகிரி கதை சொல்லும் விதத்தை, வர்ணனையை வசனத்தை மேடையில் சொல்லி விட்டு அதைத் தன் விஷயமாய் பீற்றிக் கொண்டார்கள். அங்கே பல நடிகர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. எழுதப் படிக்கத் தெரிந்தவருக்கும் யோசிக்கும் திறன் கிடையாது.

ஆனால் கூத்தாடிகள் தந்திரம் மிக்கவர்கள். நடிக்கும் போது மக்களின் மனமாற்றத்தைக் கவனிக்கும் பழக்கம் உடையவர்கள் என்பதால் எதிராளியின் மனதை எளிதில் எடைபோடும் திறன் அவர்களுக்கு வந்து விட்டது.

பொய்யான பணிவு, பெரிய அளவில் புகழ்ச்சி என்று வெளிப்படுத்தி அவ்வப்போது கையூட்டும் கொடுத்து அரசின் பல விஷயங்களை மறைத்து வைத்திருந்தார்கள்.



சிறிய படைத்தலைவனைக்கூட மகாராசா என்று கூப்பிடுவார்கள். பெரிய படைத்தலைவனைப் பார்த்தால் நடுங்கிப் பதுங்குவார்கள்.

அவர்களிடம் இருந்த பொய் மக்களிடமும் பரவியது. பொய்யாய் பேசுவதும் பழகுவதும் எல்லோருக்கும் வாழ்க்கையாயிற்று.

எல்லோரும் உடுத்துவதில் ஆர்வம் காட்டினார்கள். பத்து வயதுப் பையன்களெல்லாம் வெற்றிலை போட்டார்கள். தெருவில் துப்பினார்கள். வெள்ளை மனதையும், வெள்ளைப் பற்களையும் தென் நாட்டில் பார்ப்பது அரிதாக இருந்தது.

ஒருவரையொருவர் பார்த்தால் தமிழில் பேசுவதா, தெலுங்கில் பேசுவதா என்கிற தடுமாற்றம் இருந்தது. இரண்டையும் கலந்து பேசி இரண்டு மொழிகளையும் சாகடித்தார்கள்.

தாஸிகள், அரசமொழி தெலுங்கு என்பதால் தெலுங்கிலேயே பேசிக் கொண்டார்கள். நாட்டிய நாடகத்துக்கு மட்டும் தமிழைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

காஞ்சீபுரத்து தாஸியின் தொடர்பால் இன்னும் அதிக தாஸிகளின் தொடர்பு அருணகிரிக்குக் கிடைத்தது.

ஆறுமாதம் கழித்து அவன் வீட்டுக்கு வந்தபோது அவன் முக ஒளி முற்றிலும் மறைந்திருந்தது.

முத்தம்மை அருணகிரியைப் பார்த்து வாய்விட்டு அழுதாள்.

''என்ன கொடுமை இது. ஏன் இப்படி நடந்து கொள்கிறாய். உன்னைப் பற்றி நான் கேள்விப்பட்டதெல்லாம் கீழ்த்தரமாகவே இருக்கிறதேயன்றி ஒரு சொல் கூட நன்கு பேசப்படவில்லையே. வெறும் திண்ணையில்

அழுக்கு வேட்டியோடு படுத்துக் கொள்கிறாயாமே பெண்கள் சாப்பிட்ட பிறகு சாப்பிடுகிறாயாமே என்ன கேவலம் இது.

மது அருந்துகிறாயா. ஏன் உன் கண்கள் இவ்வளவு சிவந்திருக்கின்றன.

அருணகிரி நானும் தாஸிதான். நாட்டியகுலம்தான். ஆனால் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு உத்தமியாக வாழ்பவள். எத்தனை துன்பம் வந்தாலும் இது குறித்து பெருமையோடிருப்பவள்.

நான் உத்தமியாக வாழக் காரணம் என்ன தெரியுமா? எனக்கும் உன் தகப்பனாருக்கும் பிறக்கும் குழந்தைகள் ஞானத்தோடு இருக்க வேண்டும் என்கிற ஆசையால்தான் ஊரும் உலகமும் மெச்ச என் குழந்தைகள் சிறப்பாக வாழ வேண்டும் என்பதால்தான்.

அருணகிரி, உன்னைப் பொறுத்தவரை நான் ஏமாந்து விட்டேன். என் கனவுகளில் நீ மண்ணைப் போட்டு விட்டாய். நீ ஞானவானாக இல்லாது போனாலும் பரவாயில்லை. ஞானம் என்பது பூர்வ புண்ணியம். முயற்சித்து வருவதல்ல. நீ அடாது செய்பவனாக இருக்கக் கூடாது என்று ஆசைப்பட்டேன்.

என்று வீட்டில் திருடத் துவங்கினாயோ, அன்றே உன்னைப் பற்றிய மதிப்புகள் எனக்கு உடையத் துவங்கிவிட்டன.

தவறு உன் மீதில்லை அருணகிரி, என்மீது, நான் பாவி. களர் நிலத்தில் நெல் விளையுமா? தாஸி வயிற்றில் ஞானி பிறப்பானா என் ஆசை அதிகம். அடிப்படையில் நான் நிர்மூடம்.

அருணகிரி, உனக்கு பதினாறு வயது நான் உன்னைக் கண்டிக்கப் போவதில்லை. கைத்தடியால் அடித்துக்



காயப்படுத்தப் போவதில்லை. இத்தனை அழுக்காக உன்னைப்பார்த்த அந்தக் கணம் நான் உடைந்துபோனேன். என் மனம் இருண்டுவிட்டது.

இங்கு வா. இந்தப் பானையில் உள்ள செப்புக் காசுகளும் பொற்காசுகளும், நகைகளும், பாத்திரங்களும் உன் சொத்து. ஆதிக்குத் தனியே பிரித்துக் கொடுத்தாகி விட்டது.

இனி, நீ உன் சொந்த வீட்டில் திருட வேண்டாம். இறக்கி உன் அறையில் வைத்துக் கொள் உன் இஷ்டத்துக்கு செலவு செய்.

உனக்கொரு வேண்டுகோள் நான் இறந்தால் தயவு செய்து நீ எனக்குக் கொள்ளி போடாதே. நான் அனாதை பிணமாகச் செத்தாலும் பரவாயில்லை, அயோக்கியப் பிள்ளையின் அம்மாவாக சாக விரும்பவில்லை.

அருணகிரி உன் புத்திசாலித்தனத்தை உன் தமிழறிவை கெட்ட காரியத்துக்கு பயன்படுத்துகிறாய் ஊரை அழிப்பதற்கு உபயோகப்படுத்திக் கொள்கிறாய். உன் சுகத்திற்காக எத்தனையோ உள்ளங்களில் விஷத்தை ஊற்றுகிறாய்.

அருணகிரி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். இது உன்னைத் தாக்கும். பல மனங்களை ஊனம் செய்தவன் உடம்பும் ஊனமாகும்.

அருணகிரி, இது சாபமல்ல. விதி. எழுதப்படாத விதி. எல்லா காலத்துக்கும் பொருந்துகின்ற விதி. மக்கள்மனதில் நஞ்சு விதைத்தவன் மக்களால் விரட்டப்படுவான். எச்சில் உமிழ்ந்து ஏசப்படுவான்.

அருணகிரி. ஒழுக்கம் என்பது அன்பின் அடிப்படையில் ஏற்பட்ட விஷயம். சுயநலமிக்கு ஒழுக்கமில்லை. சுயநலமி

ஜெயிக்க முடியாது. அப்படி ஜெயித்தாலும் வெகுநாள் தங்காது.

அருணகிரி, கூத்து கர்வம் கொடுக்கும் கலை. நடித்து, நடித்து எல்லா நேரமும் வாழ்க்கை நடிப்பாகவே இருக்கும். கூத்தாடிகள் நிஜமறியாதவர்கள். மரணத்தின் போது மட்டுமே அவர்கள் நிஜம் தெரிந்து அழுவார்கள்.

ஆனால் அருணகிரி, நீ உபதேசம் செய்யும் சக்தியை இழந்துவிட்டாய். அலசி ஆராயும் குணம் உன்னை விட்டு போய்விட்டது. கூத்துக்கு பாட்டு எழுதும் செருக்கு மட்டுமே உன்னைச் சுற்றிக் கொண்டிருக்கிறது.

அருணகிரி, கூத்தும் பாட்டும் இறையறிதலுக்கு உண்டான உபாயங்கள். அவைகளை வேறெதற்குப் பயன்படுத்தினாலும் நாசம்தான் உண்டாகும். கத்தியால் காய் வெட்டாமல் கைகளை வெட்டிக் கொண்டது போலாகும்.

அருணகிரி, நான் தாயென்று உன்னிடம் பேசவில்லை. உன் தகப்பனாரால் சமூகச் சிந்தனை ஊட்டப்பட்டவள் என்கிற யோக்யதையிலிருந்து பேசுகிறேன்.

அருணகிரி, தூங்குவதற்குமுன் விழித்துக் கொண்டு விடு. மரணத்திற்குமுன் வாழ்க்கையைப் புரிந்துகொண்டு விடு. இல்லையெனில் மரணமும் புரியாது. வாழ்க்கையும். புரியாது தவிப்பாய்.

அருணகிரி உன்னை அந்த அருணாச்சலேஸ்வரர் காப்பாற்றுவார். என் கவலை ஆதியைப்பற்றி, உன் அக்காள் ஆதியையும் அந்த அருணாச்சலேஸ்வரர் காப்பாற்றுவார். ஆதி அன்பே வடிவானவள். கள்ளம் இல்லாதவள். அவளே உன்னையும் காப்பாற்றுவாள்.

வெளியில் வாசலில் வந்தால்தானே, உன்னைப்பற்றிய செய்திகள் காதில் விழும். நான் இனி தெரு இறங்க மாட்



டேன். இந்த வீட்டின் பின் கட்டிலேயே ஒதுங்கிக் கொள்வேன்.''

அம்மா சொல்லிவிட்டு பின்கட்டுக்குப் போனாள். ஆதி அவளைப் பின்தொடர்ந்தாள். அருணகிரி பரணையில் ஏறி தவலை தவலையாய் பொற்காசுகளைத் தரையில் இறக்கினான். அவனுக்கு அத்தனை காசைப் பார்த்ததும் அழகிய பெண்கள் நினைவுதான் வந்தது. அம்மாவின் குரல் மறந்தது.

தொலைந்து போன முத்தம்மை எழுந்திருக்கவில்லை. ஜோஸ்யர்கள் அவள் மகனைப் பற்றி மிகப் பெரிதாய் கணித்துச் சொல்லியிருந்தார்கள். 'அவனுக்கு மரணமே இல்லை. அவன் புகழ் பாடாத புலவரே இல்லை. அவன் அவன் பெயர் சொல்லாத கோவிலே இல்லை. மிகப் பெரிய தத்துவ ஞானி. அவன் சொடுக்கினால் இறை தரையிறங்கி வரும்' என்றெல்லாம் சொல்லியிருந்தார்கள்.

இப்படி சீரழிவான் என்றும் யாரும் சொல்லவில்லை.

'சற்று சிரமங்கள் இருக்கும். மனம் பேதலிக்கும், சில நதிகள் பூமிக்கு அடியே போய் தோன்றுவதில்லையா. அது போல இவன் வாழ்க்கையும் இருக்கும்' என்று சொன்னார்களே தவிர, அருணகிரியின் தமிழ், ஊரைக் கெடுக்கும் என்று சொல்லவேயில்லை.

அவளுக்குப், பயர் இழுக் கேட்டு வெறுத்துப் போயிற்று. அவன் காயப்படுகிறான் என்று தெரிந்து பொறாமை பிடித்தவர்கள் ஏதேதோ சொன்னார்கள், அருணகிரியின் சுகபோகம் கண்டு எரிச்சலுற்றவர்கள் கோள் மூட்டினார்கள்.

இரண்டு நாட்களுக்குப்பிறகு அவன் ஆதியிடம் அருணகிரியைப் பற்றி விசாரித்தான். ''அன்று மாலையே அவன் ஒரு குடம் காசோடு ஊர்விட்டு போய்விட்டான். கடந்

கரைப் பட்டினமான கடல்மல்லைக்கு வில்வண்டி வைத்துக்கொண்டு போய்விட்டான்.

அம்மா இருண்டு போனாள்.

கடல்மல்லை அந்தக் காலத்து அழகிய துறைமுகம். எல்லாக் கடற்கரைத் துறைமுகத்திலும் வியாபாரிகள் உண்டு. வியாபாரிகள் இருக்குமிடத்தில் வேசிகள் உண்டு. அந்தவேசிகள் விசேஷமானவர்கள், பல மொழிக்காரிகள்.

அருணகிரி காசை வாரியிறைத்தான். பெண்சுகம் அவனுக்கு ஊட்டப்பட்டது. காசு கரைந்ததும் கடல் மல்லையிலிருந்து குதிரை கடன் வாங்கி ஊருக்கு வந்தான்.

மறுபடியும் காசு ஒரு பை நிறைய எடுத்துக்கொண்டு போனான். அம்மாவையோ அக்காவையோ பார்க்கவில்லை.

இப்போதெல்லாம் நாடகமும் எழுத முடிவதில்லை. ''காசு இறைத்தால் பெண்கள் கிடைக்கும்போது மூளையைக் கசக்கி நாட்டியம் எழுதுவானேன். கப்பலில் வந்து இறங்குகின்ற வெளிதேசத்து பெண்களுக்குத் தமிழ்நாட்டியத்தில் என்ன லாபம்.'' அவர்களைப் பொற்காசு கொடுத்து வாங்கிப் போய் விடுதியில் வைத்து உறவு கொண்டான், எல்லோரும் தின்ற எச்சல்பண்டம் அவனுக்கு நோய் கொடுத்தது. நோய் உள்ளுக்குள் போய் தங்கிக் கொண்டு மெல்ல மெல்ல விஸ்வரூபம் எடுத்தது.

முதலில் மேனி கறுப்பாயிற்று. கண்களில் கருவளையம் நின்றது. அடிக்கடி சளி பிடித்து கோளாறு வந்தது. முழங்கால்கள் வீங்கின. கணுக்கணுவாய் வலித்தது. கண்கள் எரிந்தன. அடிக்கடி இருமி இளைத்தது. சுரம் அடித்தது. நடந்தால் தலை சுற்றியது. விரல்கள் வலித்தன.



தொடு உணர்ச்சி குறைந்தது. நடையில் தளர்வு பிறந்தது. தலையில் முடிகள் உதிர்ந்தன. வெகுநேரம் தூங்கும்படி ஆயிற்று. சில சமயம் அதிகம் பசித்தது. சில சமயம் மந்தித்தது. சிறு நீரில் கடும் துர்நாற்றம் வீசியது.

தோலில் கறுப்பான இடம் அரித்தது. சொரிந்தால் நீர் வந்தது. கழுத்து வலித்தது. நீர் வந்த இடம் ஆறாத புண்ணாயிற்று. குழிப்புண்கள் தோன்றின. விரல்கள் சுருங்கின. உடம்பில் கெட்டவாடை வீசியது.

''அடேய் இது குன்ம நோய். இதற்கு மருந்தேயில்லை.'' ஒரு வைத்தியர் கூறினார். ''போ. போ. எழுந்து போ.'' விரட்டினார். அவன் உட்கார்ந்த இடத்தை சாணி கரைத்து அலம்பினார்.

கடல்மல்லையிலிருந்து காசு இல்லாமல் அவன் திருவண்ணாமலைக்கு பல நாட்கள் நடந்து வந்தான். வழியில் பல இடங்களில் பிச்சை எடுத்தான். எச்சல் சோறு உண்டான். உண்ணும் போது அழுதான்.

திருவண்ணாமலை எல்லையில் அவனை இனம் கண்டு கொண்டு அவனை அவன் நண்பர்கள் ஏசினார்கள்.

''மகாபாவி, உன்தாய் இறந்து விட்டாளடா. இன்று பத்தாம் நாள். போய் பார்.''

விரட்டினார்கள்.

அருணகிரி போகும்போது அன்னதானம் நடந்து கொண்டு இருந்தது.

உள்ளே போனால் சோறுபோட நேரமாகும் என்பதால் திட்டித் தீர்த்து விட்டுத்தான் தட்டுப் போட வேண்டும் என்பதால் அருணகிரி நோயாளிகள் வரிசையில் நின்று இலை வாங்கி சோற்றுக்குக் கை நீட்டினான்.

ஆதி அள்ளிப் போட்டாள்.

அருணகிரி ஒரு ஓரமாய் போய் உட்கார்ந்து அள்ளி அள்ளித் தின்றான். அள்ளித் தின்றதாலும், அம்மாவைப் பற்றிய துக்கத்தாலும் தொண்டை விக்கியது.

தொலைவிலிருந்து அதைப் பார்த்த ஆதி ஒரு மண் பாத்திரம் நிறைய நீர் எடுத்து வந்து அவனுக்கு அருகே வைத்தாள்.

அவன் தூக்கி நீர் குடிக்க தோள் துண்டு நகர்ந்தது. கழுத்தில் வெள்ளிக் கம்பியில் கோர்த்த ஒருமுக உத்திராட்சம் தெரிந்தது. அடிக்கடி பார்த்த பொருள்போல் இருக்கிறதே என்று யோசிக்க அவளுக்கு அருணகிரியை அடையாளம் தெரிந்தது. அவள் திகைத்தாள். ஐயோ என்று கூவிக்கொண்டு வீட்டுக்குள் ஓடினாள். அப்பாவை அழைத்தாள்.

சந்திரமௌளீஸ்வரர் பிள்ளையைப் பார்த்து அழுதார். கை பற்றி பிள்ளையை உள்ளே அழைத்து வந்தார்.

ஊர் புரிந்து கொண்டது. அருணகிரியை மென்று தின்றது.

வாழ்ந்தவர் தாழ்ந்தால் ஊருக்கு வெல்லப் பாயசம். மூக்கை உறிஞ்சி உறிஞ்சிப் பேசும்.

"தொழுநோயா அருணகிரிக்கா. நோய் வராது என்ன செய்யும். ஒரு பெண்ணா. இரண்டு பெண்ணா. பார்த்த பெண்களையெல்லாம் மோகித்தவனாயிற்றே.

கடல்மல்லைக்கு அவன் பயணப்பட்டபோது வண்டியின் கடையாணி கழன்றது. அன்றே நினைத்தேன். இவன் நல்லபடியே போய் திரும்பி வரப் போவதில்லையென்று அப்படியே ஆயிற்று.



தொழுநோய்க்கு குணமேயில்லையே மெல்ல மெல்ல மரணம் தானே அருணகிரியை இனி கடவுளும் காப்பாற்றமுடியாது.

ஆனால் காஞ்சிபுரத்தில் அவன் எழுதிய நாடகம் பார்த்தேன். கிறங்கடித்து விட்டான். படித்த படிப்பெல்லாம் பாவம் செய்யத்தான் உபயோகப்பட்டது. இதுதமிழ் தந்த தொழுநோய். அதிகம் ஆடக்கூடாது என்றால் யார் கேட்கிறார்கள்."

அவனிடம் ஒரே கடையில் அப்பம் தின்றவர்கள், அவனின் வருகைக்கு காத்திருந்து. காசு வாங்கியவர்கள் இளக்காரமாய் பேசினார்கள். ஏகடியம் செய்தார்கள்.

அவன் வீட்டிற்குள் தனிமையில் இருந்தான். அக்காள் ஆதி சமைத்துப் போட்டாள்.

மனைவியின் மரணத்தால் சந்திரமௌளீஸ்வரர் அதிர்ந்து போயிருந்தார். மரணத்தை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் அவருக்கு இருந்தது.

ஆனால் அவர் மனைவி இறந்தவிதம் அவருக்கு வேதனை தந்தது. அருணகிரியை சந்தித்தால் கோபப்பட்டு விடுவோமோ என்று பயந்தார். கோபம் அடங்கிய பிறகு அவன் எதிரே அமர்ந்தார்.

"அருணகிரி இன்னமும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. சில மருந்துகள், கடும்பத்தியங்கள், இறை அருள் உன்னை இந்த குன்ம நோயிலிருந்து விடுவிக்கும். உன் தாயிடம் மனதார மன்னிப்புக் கேட்டால் நிச்சயம் விமோசனம் பிறக்கும்.

இன்று ஊர் அடங்கிய பிறகு உன்னை ஒரு வைத்தியரிடம் கூட்டிப் போகிறேன். குச்சிப்பாளையத்திற்கு வண்டி வைத்து அழைத்துப் போகிறேன் வருகிறாயா."

அருணகிரி சரி என்று தலை ஆட்டினான். அன்று இரவு வண்டி வந்தது. தகப்பனார் குச்சிப் பாளையத்தில் இருப்பதாகவும், அவனை அழைத்து வரச் சொன்னதாகவும் வண்டிக்காரன் சொன்னான்.

அருணகிரி வைத்தியத்திற்காக நூறு பொற்காசுகள் பையில் எடுத்துக் கொண்டான். வண்டிக்காரனுக்கு ஐந்து பொற்காசுகள் பரிசளித்தான்.

''போகும் வழியில் வேசிகள் உண்டா.'' அடிக்குரலில் கேட்டான்.

வண்டிக்காரன் மௌனமாக இருக்க, அருணகிரி மேலும் பத்துக் காசுகள் பரிசளித்தான். வண்டி வடக்கே போகாமல் மேற்கே திரும்பியது. அந்தமனத்தைத் தொடர்ந்தது.

நாற்பது வயதுக்கும் மேலான ஒரு வேசி ஐம்பது பொற்காசுகள் வேண்டுமென்றாள். அவளிடம் ஐம்பது பொற்காசுகளைக் கொடுத்துவிட்டு மீதி பொற்காசுகளை வண்டிக்காரனிடம் கொடுத்து வைத்தான்.

வேசி அவன் முகத்தை விளக்கேற்றிப் பார்த்தாள்.

''சற்று நேரம் உட்கார்ந்திருங்கள் குளித்து விட்டு வருகிறேன்.''

கொல்லைப்புறம் போனாள் கொல்லை வழியே திருவண்ணாமலை விட்டு வேறு வண்டி பிடித்து வெளியேறினாள்.

மாட்டு வண்டிக்காரன் அரைத் தூக்கத்திலிருந்த அருணகிரியைப் பார்த்துவிட்டு, ஓசைப்படாமல் வண்டியை நகர்த்திக் கொண்டு சிறிது தூரம் சென்று குச்சிப்பாளையம் நோக்கி விரைந்தான். அருணகிரி எங்கோ குதித்து ஓடி விட்டதாக சொன்னான்.



வேசி வீடு விசாரித்ததாக தகவல் சொன்னான். சந்திரமௌளீஸ்வரர் அந்த வண்டியில் திருவண்ணாமலை வந்தார். அந்த வேசி வீட்டுத் திண்ணையில் படுத்திருப்பதைப் பார்த்தார். இனி அவன் திருந்த மாட்டான் என்று ஊர் திரும்பினார்.

அருணகிரி மெல்ல நடந்து ஊருக்கு திரும்பினான். அவன் அக்கா ஆதி அவனுக்கு சோறு போட்டாள்.

அருணகிரி தூக்கம் வராமல் அவஸ்தைப்பட்டான். காமம் அவனை இடைவிடாது துன்புறுத்தியது.

காமம் மட்டுமில்லை. தன்னை ஏமாற்றிய அந்தகிழட்டு தாசி மீதும் கோபம் இருந்தது. ஒன்றா இரண்டா. ஐம்பது பொற்காசுகள். ஒருமுறை தொட்டுக்கூடச் செய்யாமல் ஐம்பது பொற்காசுகள். அவன் பொருமினான்.

வாசல் அறையில் அமர்ந்து ஜன்னல் வழியேதெருவைப் பார்த்துக் கொண்டிருந்தான் ஊர் மக்கள் நடுவே உலா வந்த பிள்ளை ஒதுங்கி நின்று ஊரை வேடிக்கை பார்த்தது உள்ளுக்குள் அழுதது.

ஒருநாள் இரவு தெருவில் அந்த தாசியின் குரல் கேட்டது. அருணகிரி உற்றுக் கவனித்தான். மிகவும் சிரிப்போடு கொய்யாப்பழம் விலை கேட்டுக் கொண்டிருந்தாள். ஒரு பெரிய பழத்தை எடுத்துக் கடித்துத் தின்று கொண்டிருந்தாள்.

அருணகிரி ஆயுதம் தேடினான். ஒரு கட்டை கிடைத்தது. தெருவில் இறங்கி அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். அவள் மிரண்டு நகர இடுப்பில் பலமாக அடித்தான். அவள் அலற மீண்டும் தாக்கினான். தெரு கூடியது. விலக்கியது. ஆபாசமான வார்த்தைகளுக்கு நடுவே அவள் ஏமாற்றியது சொன்னான்.

அந்த வேசி, அருணகிரியை இழிவுபடுத்தி ''இந்தப் பிணத்தோடு யாரும் படுப்பார்களா'' என்று கேட்டாள்.

ஊர் அவர்களை அதட்டி மூலைக்கு ஒரு பக்கமாக அனுப்பியது.

ஆதி அதிர்ந்து போனாள். ''இப்படி இழிவாக நடந்து கொண்டால் இந்த வீட்டில் இருக்க வேண்டாம் வெளியே போ'' என்றாள்.

அருணகிரியும் ரோஷத்தோடு வெளியே போனான்.

''பிச்சையெடுத்தாவது நிற்பேன். உன் வீடு திரும்ப மாட்டேன்'' என்று சபதம் செய்தான்.

திருவண்ணாமலை தெருக்களில் அருணகிரி உணவு பிச்சையெடுத்து வாழ்ந்தான். கோவில் ஓரத்தில் படுத்துக் கொண்டான்.

ஒருநாள் அருணாச்சலேஸ்வரர் கனவில் தோன்றி ''மனம் மாறு. நல்வழிக்கு போ''என்று உபதேசித்தார்.

ஆனால் அருணகிரியால் மனம் மாற முடியவில்லை.

காமம் மிக போதையான விஷயம். அனுபவித்தபோது அது தீர்ந்து விடவில்லை. அதுவரை அனுபவித்ததை அசை போடவே தோன்றுகிறது. பெண்ணின் நிர்வாணத்தைப் பல கோணங்களில் பார்த்தாள் திரும்பத் திரும்ப அந்த நிர்வாணம் புத்தியைத் தாக்குகிறது. கற்பனை செய்ய வைக்கிறது. கற்பனையில் கலவி நடக்கிறது.

அந்தக்கலவி உடல் சூட்டையும், சோர்வையும் தருகிறது. புத்தி குழம்புகிறது. நினைவாற்றல் குறைகிறது. பசியற்றுப் போகிறது. பேச்சு குழறுகிறது. உணர்ச்சிகள் சீராக இல்லாமல் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கின்றன.



''மனதை சுத்தமாக வைத்திரு, தெளிவாக வைத்திரு என்று இறைவனே சொன்னபிறகும் அருணகிரிக்குப் புரியவில்லை. காமத்தில் எண்ணக்கூத்துகள் அதிகம், எண்ணங்கள் குறைந்தால்தான் இறைவன் மீது நாட்டம் வரும்.

அருணகிரியால் காமத்திலிருந்து தன் மனதை விலக்க முடியவில்லை,

மனம் ஆசைப்பட்டது. உடம்பு நோய்ப்பட்டது. உடம்பின் ஒவ்வொரு அங்குலமும் கடுமையாக வலித்தன. நல்ல உணவு இல்லாததால் நோயின் தன்மை அதிகரித்தது. கெட்டுப்போன உணவு எடுத்துக் கொண்டதால் வயிற்றுப் போக்கும் வாந்தியும் வந்தன.

உஷ்ணத்தால் நீர்க்கடுப்பு ஏற்பட்டது. கண்பார்வை குறைந்தது. நடந்தால் மூச்சு வாங்கியது.

தெரிந்தவர்கள் தெரியாதது போல் போனார்கள். தெரியாதவர்கள் நின்று தூற்றிவிட்டுப் போனார்கள்.

மனம், வாழ்வதில் சலிப்படைந்தது. அவமானத்தால் முகம் சுருங்கியது.வலி வேதனை தாங்க முடியவில்லை. செத்துப் போக வேண்டும் என்கிற எண்ணம் அடிக்கடி எழுந்தது. எப்படிச் சாவது என்று மனம் யோசனை செய்தது.

விஷமும், கயிறும் கூட சற்று நேரம் துடிக்க வைக்கும் கபால மோட்சம்தான் உசிதம். கோபுரத்தில் ஏறி தலைகீழாகப் பாய்ந்து விட்டால் இடித்த க்ஷணம் வலிக்கும். பிறகு எல்லாம் முடிந்து விடும். எனவே, மோதிச் சாவது தான் நல்லது.

இந்தக் கையையும் காலையும் வைத்துக் கொண்டு கோபுரத்தின் மீது ஏறமுடியுமா. பிடிக்க வலுவற்ற

கைகள் நிற்க இயலாத கால்கள் தவறாக விழுந்து முடமாகி விட்டான்...

யோசனை வந்தது. ஆனால் போதும் வாழ்க்கை அனுபவித்தவரை போதும். இனி இறந்து மறுபடி பிறந்து வாழ்வோம்.

அருணகிரி சிரமப்பட்டு கோபுரத்தின் மீது ஏறினான். ஏறின அயர்ச்சியில் முதல் நிலை மாடத்தில் சரிந்து உட்கார்ந்தான். தென்மேற்கு பருவக் காற்று கோபுரத்துக்குள் புகுந்து குளிர் கொடுத்தது, துணியால் போர்த்திக் கொள்ள, சிறிது தூங்க வேண்டும் போல் இருந்தது.

அருணகிரி தூங்கினான்.

அவன் கனவில் ஆஜானுபாகுவான ஒரு ஆள் நடந்து வந்தான். பெரிய மீசை மதுவால் சிவந்த கண்கள். மாமிசம் தின்று வளர்த்த மாமிசம். அருணகிரிக்கு முன்னே ஒரு கதை நடந்தது. அவன் எழுதியதைப் போல ஒரு நாட்டிய நாடகம் நடந்தது. அது அருணகிரியின் போன ஜென்மத்து நாடகம்.

போன ஜென்மத்தில் அருணகிரி ஒரு திருடன். வழிப்போக்கர்களை அடித்து உதைத்து உணவும், நகைகளும் பிடுங்கிக் கொண்டு பலரைத் துன்புறுத்தி வாழ்ந்து வந்த திருடன்.

ஒருமுறை கோயிலுக்கு போனபோது தீண்டத்தகாதவன் என்று சொல்லி நிறுத்தப்பட்டான். முருகன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே பரவசமடைந்தான். தானே முருகன் கோயில் கட்டுவதாக அந்தத் திருடன் சபதம் செய்தான்.

நடுக்காட்டில் ஒரு கல்லை நிறுத்தி முருகா என்று அதைக் கும்பிட்டான். தேனடைகளைக் கொண்டு வந்து அதைப்பிழிந்து அந்தக் கல்லுக்கு தேனாபிஷேகம் செய்



தான். இடையறாது முருகா, முருகா என்று சொல்லி வந்தான்.

நடுவயதில் காவலர்களால் குத்தப்பட்டு மரணமடைந்தான். மரணத்தின்போதும் முருகன் பெயர் சொன்னான்.

மரணமடைந்ததும் அந்தக்கல்லை நோக்கி ஓடினான். முருகா...முருகா...உன் திரு வடிவம் காண்பி என்று கதறினான்.

முருகன் வேலோடும் மயிலோடும் தோன்றினார். ஒளிவட்டச் சக்கரமாய் திகழ்ந்தார்.

''இறந்த பின் காட்டுகிறாயே. இறப்பதற்கு முன் காட்டியிருக்கலாமே'' திருடன் அழுதான்.

''மறுபடி பிற. இறக்கும்முன் காட்டுகிறேன்.'' முருகன் வாய்விட்டுச் சிரித்தார்.

அவன் சிறிது நாள் அலைந்தான். முத்தம்மைக்கு மகனாகப் பிறந்தான்..

அவன் மறுபடி பிறக்கும்வரை அந்த ஜோதி அவன் கூடவே இருந்தது.

இப்போது மறுபடி தோன்றி வா. வா என்கிறது.

அருணகிரி எழுந்தான். கோபுரத்தின் முதல் நிலையிலிருந்து தரையைப் பார்த்தான். தொலைவிலே உள்ள வட்ட ஒளிச்சக்கரத்தைப் பார்த்தான்.

இந்த உடம்பு போதும் என்று கோபுரத்தை விட்டு வெளியே பாய்ந்தான்.

கால்கள் மேலே தூக்கின. தலை தரைநோக்கி வந்தது. முருகா என்று வாய் அலறியது. இடுப்பு வேட்டியும் மேல் துண்டும் தள்ளிப்போய் விழுந்தன. வெறும் கோவணத்தோடு அந்தத் தொழுநோய் உடம்பு தரைநோக்கி வந்தது.

ஆறடி உயரத்தில் சட்டென்று நின்றது. மெல்லப் புரண்டது. கால் தரைக்கு வந்தது. நிதானமாய் ஒரு பூஞ்சிறகைப் போல தரை இறங்கியது.

அருணகிரி ஆடியது போதும். இனி பாடு. எம்மைப் பாடு.''

குரல் கேட்டது அது முருகன் என்று மனதுக்கு தெரிந்தது.

''நான் என்ன பாடுவது. இதுவரை பாடியதெல்லாம் அபத்தம். மூடத்தனம் உன்னைப் பாட எனக்கு என்ன தெரியும். எதைப் பாடுவது எப்படிப் பாடுவது?

இறந்து போன உன் தாயின் பெயரென்ன அருணகிரி.''

''முத்தம்மை''

''முத்தம்மையை உன் தந்தை என்னவென்று கூப்பிடுவார்.''

''முத்தை என்று கூப்பிடுவார்.''

''அப்படியானால் முத்தைத் திருபத்தித் திருநகை என்று பாடு'' என்று அடியெடுத்துக் கொடுத்தார்.

''ஐயனே.''

''என்ன அருணகிரிநாதா.''

''எனக்கு ஏன் இந்த தொழுநோய், எதற்கு இந்த வலி வேதனை அவமானம்.''

''போன பிறவியில் நல்லவர்களை அடித்துத் துன்புறுத்திய ஒவ்வொரு அடியும் உனக்கு நோயாக வந்தது எனக்கு தேனாபிஷேகம் செய்தாய் அல்லவா, அது உனக்கு தமிழாக வந்தது.



வலியும் நோயும் உனக்கு இனி இல்லை என்னை உன் தமிழால் பாடு.'' என்று அந்த ஒளிச்சக்கரம் வாழ்த்தி மறைந்தது.

அருணகிரி குனிந்து தன்னைப் பார்த்துக்கொண்டான். நோய் இருந்த சுவடே தெரியவில்லை. மாறாய் உடம்பு ஒளிப்பிழம்பாய் இருந்தது. எல்லோரிடமும் ஓடிப்போய் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

எதற்கு என்று யோசித்தான்.

மௌனமானான்.

நிதானமாய் கோபுரத்தின் உச்சியில் ஏறி முதல் நிலையில் அமர்ந்து கொண்டான். கண்களமூடி கடவுளைக் கண்ட ஆனந்தத்தை மறுபடி அனுபவித்தான்.

அந்த அனுபவம் அவனை வந்து வந்துத் தாக்கியது.

# 4

கடவுள் என்பது இயல்பு.

இயல்பு என்பது இயற்கை.

எது எவ்விதம் உள்ளதோ அதை அவ்விதம் உணர்வதே கடவுள் தரிசனம்.

மனிதருடைய ஆத்மா என்பது அகோரப்பட்டு கடப்பாவிற்று. அகோரப்பட்டது இயல்பல்ல.

இயல்பல்லாதது இயல்பைக் கண்டுபிடிப்பது இயலாது.

எனவே ஆத்மாவின் இயல்பு நிலையை அறிந்தவரே கடவுள் அறிதலை உணரமுடியும்.

ஆத்மாவின் அகோரத்தனமான உடம்பை மறந்தால் தான் கடவுளை உணரக்கூடும். உடம்பு என்கிற சின்ன வட்டத்திலிருந்து வெளியேறினால்தான், பிரபஞ்ச சரித்திரம் தெரியும். இயற்கையின் பிரம்மாண்டம் உணர முடியும். எல்லாவற்றிலும் ஒரே சக்தியே நீக்கமற நிறைந்திருப்பதைத் தெரிந்து கொள்ளமுடியும்.

தான் உடம்பு என்று கொள்ளுகிறபோதுதான் காசு, புலமை, கலை, வீரம் போன்ற கர்வங்கள் முளைக்கின்றன. உலகின் எல்லாக் கர்வங்களும் உடம்போடு சம்பந்தப் பட்டவை.

ஆத்மாவுக்கு கர்வமே இல்லை. ஆத்மாவை அறிந்தவர்களும் கர்வப்படுவதில்லை. அமைதிதான் ஆத்மாவின் இயல்பு.

அந்த அமைதியை உடம்பால் எழுப்பப்பட்ட மனம் உணரவே உணராது. ஆனால் அப்படி ஒரு அமைதிக்கு அந்த மனம் ஏங்கும். இடையறாது ஏங்கும்.

மனம் உடம்பால் உருவாக்கப்பட்டது. உடம்பு அழிய மனமும் அழியும். ஆனால் ஆத்மா அழியாது. உடம்புக்குள் இருக்கும் ஆத்மாவே அறிய மனம் தேவைப் படுகிறது. மனதின் மூலமாகவே அறிதல் நிகழ்கிறது.

எனவே, மனது செம்மையாய் இருக்க, உடம்பும் செம்மையாய் இருக்க வேண்டும்.

உடம்பைப் பிராணாயாமத்தால் செம்மையாக்கி, குதிக்கின்ற மனதை நிதானமாக்கி, கூர்மையாக்கி, வெளியே பாராதே உள்ளே பார் என்று திசை மாற்ற வேண்டும்.

மனம் உடம்புக்குள் ஆத்மாவைத் தேடத் துவங்கும்.

எதனால் கை கால்கள் இயங்குகின்றன.



எதனால் ஞாபகச்சக்தி ஏற்படுகிறது.

எதனால் மூச்சு உள்ளேயும் வெளியேயும் போய் வருகிறது. யார் இருதயத்தை இயக்குகிறார்கள். எந்தச் சக்தி அது. எந்தச் சக்தி வெளியேறினால் மனிதன் இறந்து விடுகிறான்.

வெளியேறிய சக்தி இதுவரை எங்கே இருந்தது.

வெளியேறியபிறகு தேடமுடியாது என்பதால் உள்ளே இருக்கும்போதே, மனிதன்மூலம் அறிய முயற்சிக்க, எப்போதேனும் ஒரு நேரத்தில் ஆத்மதரிசனம் ஏற்பட்டு விடுகிறது.

ஆத்ம தரிசனம் அடைந்தபோது ஏற்படும் உணர்வுகள் எப்படி இருக்கும்.

ஒரு பெண்ணோடு கூடும்போது உச்சகட்ட இன்பத்தில் மனம் வசமிழந்து இன்பத்திலேயே தோய்ந்து கிடக்குமே, அதேபோல் ஆயிரம் மடங்கு இன்பம் ஆத்ம தரிசனம்.

தனக்கு வெற்றி கிடைத்துவிட்டது. பெரும் செல்வம் கிடைத்துவிட்டது என்கிறபோது ஒரு மனிதனுக்கு ஏற்படும் பரவசநிலை போலும் ஆயிரம் மடங்கு பரவசநிலை ஆத்ம தரிசனம்.

நல்ல பசியில் உணவு உண்பதும், கடும் தாகத்தில் நீர் குடிப்பதும் ஆத்மதரிசனத்தின் மெல்லிய சாயல்களே.

இதைப்போல பல நூறு மடங்கு சுகம் ஆத்மதரிசனம்.

உள்ளிருக்கும் ஆத்மாவே வெளியிலும் இருக்கிறது. பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கிறது. அது ஒரு சக்தி. எந்த வடிவமில்லாத சக்தி.

நீருக்குள் இருக்கும் நெருப்பு போல, நெருப்புக்குள் இருக்கும் நீர்போல வெறுமே விரவிக் கிடக்கும் சக்தி.

அந்த சக்திக்கே கடவுள் என்று பெயர்.

அந்த சக்தி காலா காலமாக இடையறாது அசைந்து கொண்டிருக்கிறது. சில சமயம் சில இடங்களில் குவிகிறது. சில சமயம் சில இடங்களில் ஜொலிக்கிறது. அனாதியாய் சில சமயம் எந்த இலக்குமின்றி அலைந்து கொண்டிருக்கிறது.

உடம்பு வேண்டாம் என்று வெறுத்து கோபுரத்தின் உச்சியிலிருந்து தூக்கிப்போட்டபோது, உடம்பு முற்றிலும் மறந்து போய் உடம்பைப் பற்றிய எண்ணமே மனதுக்கு அற்றுப் போய் மேலே இருந்து கீழே வருவதற்குள் உள்ளிருக்கிற ஆத்மாவைப் பார்த்துவிட்டது.

உள்ளிருக்கிற ஆத்மாவும் வெளியே இருக்கிற சக்தியும் ஒன்று என்று தெரிந்ததும் மிகப் பெரிய பரவசம் ஏற்பட்டு விட்டது.

அந்த சந்தோஷத்தில் உடம்பு என்னவாயிற்று என்று பார்க்கவேயில்லை.

இறை தரிசனம் ஏற்பட்ட பிறகு அருணகிரிநாதர் அமைதியாய் உட்கார்ந்து யோசித்தார்.

நடந்ததை நினைத்துப் பார்த்தார்.

அப்போது உணர்ந்த அந்த பரவசம் வந்து வந்து அவர் மீது மோதிற்று. கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. மூச்சு அடிக்கடி அடைத்துக் கொள்வதாய் அலறத் தோன்றிற்று. மயிர் பொடிப்பு ஏற்பட்டது. உடம்பெல்லாம் உதறல்கள் ஏற்பட்டன. பார்வை நிலை குத்தியது. நாக்கு குழறியது. மனம் மறுபடி அமைதியாயிற்று.



உள்ளே சுடரொளி வீசியது. குரல் மாறியது. கண்கள் கூர்மையாயின. கன்னம் பளபளத்தது. உதடு கனிந்து சிவந்தது.

வார்த்தைகளால் விளக்க முடியாத ஒரு மலர்ச்சி முகத்திலிருந்து வீசியது.

அந்த வட்டத் திகிரி மறுபடி தோன்றியது. அதிலிருந்து வேலும் சிவந்த முகமுமாய் முருகன் தோன்றினான்.

இன்னுமா திகைப்பு அடங்கவில்லை அருணகிரிநாதரே எழும். பாடும்.

''என்ன பாடுவது?''

''எம்மைப் பாடும்?''

''எப்படிப் பாடுவது. எனக்கு பாட வராதே.''

முருகன் சிரித்தான்.

''அருணகிரிநாதரே, முத்தைத் தரு பத்தித் திருநகை என்று ஆரம்பித்துப் பாடும். நான் துவக்கிவிட்டேன், நீர் தொடரும்.''

''முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர—எனவோதும்
முக்கட்பரமற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்து மூவர்க்கத் தமரரு—மடிபேண''

அருணகிரி சந்தோஷமாய் பாடினார்.

மறுபடி கோபுரத்துக்கு மேலே ஏறி முதல் நிலையில் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டு, ஊண் உறக்கமின்றி பல நாட்கள் பலதும் பாடினார்.

மறுபடி மறுபடி இறையருள் சுகத்தில் மிதந்தார்.

ஆதி அவரைப் பல இடங்களில் தேடினான்.

ஏதேனும் தவறான முடிவுக்கு போயிருப்பானோ என்று சஞ்சலப்பட்டான்.

அண்ணாமலையாரிடம் போய் ''என் தம்பியை எனக்குக் கொடுங்கள்'' என்று கைகூப்பி வேண்டினான்.

வேண்டிய நேரமெல்லாம் இறைவன். 'சரி' என்று பல்வேறு விதமாய் சொன்னான்.

பதினைந்து நாட்கள் கழிந்து கோபுரத்திலிருந்து கீழிறங்கி நிற்க, ஆதி கோபுரத்துக்கு அருகே வந்து கொண்டிருந்தான்.

அருணகிரி நாதரைப் பார்த்ததும் 'தம்பி' என்று கத்தினான்.

ஆதியை அருணகிரிநாதர் என்னும் மகான் கையெடுத்துக் கும்பிட்டார்.

அருகே வந்த ஆதி அவர் உடம்பைப் பார்த்து வியந்தான். அவர் கண்களைப் பார்த்து கலவரப்பட்டான். உடம்பிலிருந்து வீசிய சுகந்தம் முகர்ந்து மயங்கினான். அவனும் கை கூப்பினான். உணர்ந்து கொண்டான். மண்டியிட்டு நமஸ்கரித்தான்.

''எப்படி இது'' என்று கேட்டான்.

''இறைவன் கருணை, முருகப் பெருமானின் லீலை,

பாடும் பணியை எனக்குக் கொடுத்து. மனதையும் உடம்பையும் நொடிப் பொழுதில் பக்குவப்படுத்தி விட்டது.''

''நான் ஏதும் பிழை செய்திருந்தால் மன்னிக்க வேண்டும்.'' ஆதி குழறினான்;



''எது பிழை. எது சரி. இதில் நாம் செய்வது ஒன்றுமில்லை. எல்லாமும் இறைவனின் தீர்மானம்.''

''வா. அண்ணாமலையாரைப் பார்க்கலாம்.''

அக்காவும் தம்பியும் அண்ணாமலையாரை தரிசனம் செய்தார்கள்.

கோயில் திகைத்தது.

''இசை வேளாளர் குலமல்ல வா நீ. உனக்கெப்படி முகத்தில் இத்தனை ஒளி.''

உயர் ஜாதி என்று சொல்லிக் கொண்டது ஆச்சரியத்தோடு வினவியது.

''உன்னே இருப்பதை உணர ஜாதியை மற. இறைவன் குலம் தேடுவதில்லை. குணம் தேடுகிறான்.''

ஊர் அருணகிரியைச் சுற்றிக் கொண்டது.

நடந்தது என்ன என்று கேட்டது.

''இறை தெரிந்த பிறகு எப்படி உயிரோடு இருக்கிறீர்கள்.''

''இருக்கச் சொல்லி முருகன் உத்தரவு.

''மறுபடி உங்களால் இறையை உணர முடியுமா.''

''அது வந்து போவதல்ல எந்நேரமும் உள்ளே இருப்பது. சில சமயம் அமைதியாகவும், சில சமயம் உணர்ச்சி தூக்கலாகவும் இருக்கும்.''

''வந்தது முருகன் என்று எவ்விதம் உணர்ந்தீர். அது அண்ணாமலையாராகவும் இருக்கலாமல்லவா விஷ்ணுவாகவும் இருக்கலாமல்லவா.''

''இறை ஒன்றே ரூபம் பல வேலைக்குத் தகுந்தபடி வேடம். நீரே அர்ச்சகர், நீரே தகப்பன், நீரே புருஷன்,

நீரே மகன். ஒரு ஆளுக்கு எத்தனை வேலை அதுபோல இறை சக்தியும் உருக் கொள்ளும்.''

''அப்படியா இப்போது முருகன் என்று உருக்கொள்ள என்ன காரணம்.''

''இப்போது என்ன வேண்டுமோ உங்களுக்கு எது நல்லதோ அதற்கான வழி காட்டப்பட்டிருக்கிறது.

வைணவர்கள் சிறு கூட்டமாய் மற்றவர் எவரையும் மதிக்காமல் வாழ்ந்து வருகிறீர்கள். சைவர்கள் உலகம் அநித்யம் என்று பொய் துறவி வேடம் போட்டு அலைகிறீர்கள். சக்தி உபாசனை என்று ஒரு சண்டாளத் தனம் நடந்து கொண்டிருந்தது.

பெண்ணைக் கேவலப்படுத்தி போகம் துய்க்க இறை பேச்சு பேசுகிறீர்கள். சிறு தெய்வங்கள் வழிபாடு, துர்தேவதை பூஜை மக்களை கலவருகிறது.

இந்த பரத கண்டத்திற்கு, குறிப்பாய் இந்த திராவிட தேசத்திற்கு, இந்த கலாசாரத்திற்கு முகமதியர்களால் ஆபத்து வந்து விட்டது.

இப்போது வேண்டுவது வீரமும், விவேகமும், தைரியமும் செயல் திறனும், கல்வியும் ஒழுக்கமும், அன்பும் அறிவும் ஆற்றலும் இறை உணர்வும்.

முருகன் என்பது வீரம். முருகன் என்பது இல்லறம். முருகன் என்பது ஆண்மை, தர்மம். எனவே முருகனை துதிக்க வேண்டிய நேரமிது.

அது மட்டுமல்ல, வடமொழி, தெலுங்கு, கன்னடம், மராட்டியம் என்று பல மொழிகள் இங்கே குவிந்து தமிழ் பேசுபவரைக் கலங்கடித்துக் கொண்டிருக்கின்றன.

மந்திரம் சமஸ்கிருதத்திற்கு மட்டும் சொந்தமான இல்லை. தமிழில் மந்திர ஒலிகளைக் குவிக்கமுடியும். கூர்மைப்படுத்த முடியும். எல்லாவித பேய்களையும்விரட்ட



முடியும். வியாதிகளை நீக்க முடியும். தமிழ் பேசி துன்பம் அகற்ற முடியும். தமிழில் பாடி நல்ல வாழ்க்கையை யாசிக்க முடியும்.

தமிழும் தேவபாஷையே. தெய்வத்திற்கு தமிழ் பிடிக்கும். தமிழில் பாட தெய்வம் தரையிறங்கி வரும்.''

''ஐயா. பிறந்ததிலிருந்து எனக்கு வயிற்று வலி'' யாரோ ஒருவன் முன் வந்து கைகூப்பினான்.

''முருகா,'' அருணகிரிநாதர் அவனுக்கு நெற்றியில் திருநீறு இட்டார் வயிற்றில் பூசினார். வினை போயிற்று என்றார்.

அவன் வியந்தான். வயிற்றை உணர்ந்தான் வலியைத் தேடினான். ''ஆமாம், ஆமாம். வினை போயிற்று'' என்றான்.

அருணகிரிநாதரின் காலில் விழுந்தான்.

மெல்லிய துணியில் நெருப்புப் பிடித்துக் கொண்டது போல, திருவண்ணாமலை முழுவதும் அருணகிரிநாதர் புகழ் பரவியது. அவரைப் பற்றிய எல்லா எதிர்ப்புகளும் கேலிகளும் சாம்பலாயின. பெண் பித்தர் என்று கேலி செய்தவர்கள், ஜாதி பற்றி இழிவு பேசியவர்கள் வாயடைத்துப் போனார்கள்.

அரசருக்கு செய்தி போயிற்று.

''அப்படியா நான் ஆளும் காலத்தில் ஒரு மகானா என் காலத்தில் அற்புதம் நடந்திருக்கிறதா. கடவுள் என் ஆட்சிக் காலத்தில் தோன்றினாரா, எப்பேர்பட்ட பாக்கியம். அருணகிரிநாதரை நான் சந்திக்க வருகிறேன்.''

அரசன் படியிறங்கினான்.

தெருவில் இறங்கி நடந்து வந்து அருணகிரிநாதர் முன் கைகூப்பினான்.

'என் சபைக்கு வரவேண்டும்' என்று வேண்டினான்.

அருணகிரிநாதர் வீட்டிற்குப் போகவில்லை. இனி அவர் வீடு என்று எதுவுமில்லை. கடவுள் தெரிந்தவருக்கு வீடு என்று ஒன்று அவசியமில்லை. உறவு என்பது கடவுளைத் தவிர வேறு எதுவுமில்லை.

கடவுள் உறவாகிவிட்ட பிறகு எல்லார் மீதும் கருணை வந்து விடுகிறது. அந்தக் கருணையில் உண்மையான தரிசனம் இருக்கிறது.

முன்னம் அவரைச் சுற்றிக் கொண்டிருந்து விட்டு, விலகிப் போய் எள்ளி நகையாடியவர்கள் மறுபடி அவரை நோக்கி ஓடிவந்தார்கள். இந்த முறை ஒரே கடையிலிருந்து அப்பம் தின்னுகிற நண்பர்களாக இல்லாமல், அடியவர்களாக வந்தார்கள். வெறுமே அரட்டைப் பேச்சுக்கு இல்லாமல் அவரின் அடிபணிந்து கை கூப்பி நின்றார்கள்.

அருணகிரி என்று கூப்பிட்டவர்கள். ஐயா என்று அழைத்தார்கள். சத்குரு என்று சரணடைந்தார்கள். அதில் செல்வநாயகம் என்பவர் அருணகிரிநாதருக்கு அணுக்கத்தொண்டராக மாறினார்.

அருணகிரிநாதர் பாடப்பாட அவர் பாடல்களை ஓலைப்படி எடுத்து வைத்தார்.

இறைதரிசனம் பெற்ற அருணகிரிநாதருக்கு சித்திகள் கைவந்தன. ஆனால் இதுபற்றி அவர் வெளியே சொல்லவில்லை. அதைக்காட்டி வியாபாரம் செய்யவில்லை.

தனக்குக் கிடைத்த சித்திகளை இறையை இன்னும் அனுபவிக்கவே உபயோகப்படுத்திக் கொண்டார்.

சட்டென்று வேறு ஊருக்குப் போய் இறங்கி விடும் திறனை அடிக்கடி உபயோகித்தார். அங்கிருந்த கோவில்களைப் பாடினார். அப்படி அவர் பாடிய பாடல்கள் அருணகிரிநாதருக்கு அருகே கிடக்கும்.



செல்வநாயகம் அதைப் படித்துப் பிரதியெடுத்துக் கொள்வார்.

சிலசமயம் தெய்வீக சக்தி மிகுந்த நாய் ஒன்று, தன் வலது முன்காலால், அருணகிரிநாதர் பாடியதை மணலில் எழுதிவைக்கும். செல்வநாயகம் அதையும் படித்து பிரதியெடுத்துக் கொள்வார்.

அருணகிரிநாதர் இந்துமதத்தின் பிரிவுகளைப் பெரிது படுத்தவில்லை, தான் முழு வைஷ்ணவன் என்றோ வீர சைவன் என்றோ கொக்கரிக்கவில்லை. இந்து மதத்தின் பிரம்மாண்டத்தை உணர்ந்து, திரிபுரம் எரித்த சிவனையும் வைகுந்தபதியான நாராயணனையும், உமையையும், லட்சுமியையும், விநாயகரையும் சந்தோஷமாகப் புகழ்ந்து பாடினார்.

இவர்களை வைத்து இந்துமதம் சொன்ன வரலாற்றுக் கதைகளைத் தன் திருப்புகழில் விரவிப் பாடினார். பல் வேறு குழுக்களாகப் பிரிந்து கிடந்த இந்துமதம் இந்த பேரன்புமிக்க பெருந்தன்மையை பார்த்து விட்டு வியந்தது.

இந்து மதத்தின் உட்பூசல்கள் குறையத் துவங்கின. பிளவு பட்டதால்தான் அன்னிய மதத்தினர் உள்ளே வந்து கொள்ளையடித்துப் போனார்கள், கொடூரச் செயல்கள் செய்தார்கள் என்பது புரிந்தது. அவர் பாடல்களில் இருந்த சந்த அழகு, துள்ளல் நடை மக்களை எளிதில் கவர்ந்தது. எளிதில் மனனம் செய்ய முடிந்தது.

திருவண்ணாமலையில் குழுக்குழுவாய் மக்கள் சேர்ந்து அருணகிரியின் பாடல்களை வாயால் பாடினார்கள். சிறிதளவுகூட பிறழாமல் ஆழ்ந்த பொருளோடுஅமைந்த அந்தப் பாடல்கள் மக்களின் மனங்களைக் கவர்ந்தன.

"ஐயா, எனக்கொரு சந்தேகம்." செல்வ நாயகம் அருணகிரிநாதர் முன் கை கூப்பினார்.

''கேள் செல்வநாயகம்...'' அருணகிரிநாதர் அவரைத் திரும்பிப்பார்த்தார்.

திருவண்ணாமலை கோவிலுக்குள்ளே ஒரு மண்டபத்தில், அருணகிரிநாதரை பலரும் சூழ்ந்திருந்தார்கள். எல்லோரும் பழைய நண்பர்கள்.

''கொஞ்சம் தயக்கமாக இருக்கிறதய்யா.''

''எதுவாயினும் கேள் செல்வநாயகம். கேட்டால் தானே தெளிவு பெறமுடியும்.''

''பெண் போகம் தவறா.''

''இல்லையே இயற்கை எப்படித் தவறாகும்.''

''ஆனால் ஐயா, நீங்கள் கடுமையாக பெண்களைத் தாக்கி வருகிறீர்களே.''

''நாம் மறுப்பது பத்தினிப் பெண்டிரை அல்ல. அவர்கள் தாயின் உருவம், தெய்வத்திற்கு சமம். அவர்களுக்கு தீங்குவராது காக்க வேண்டியது நம்கடமை.

நாம் மறுப்பது பொதுமகளிரின் சேர்க்கையை, நாம் வெறுப்பது அவர்களின் ஆர்ப்பாட்டத்தை ஆண்கள் கவரப் படுகிறார்கள் என்ற தன்மையை வைத்து தங்களுடைய கவர்ச்சியை விலைகூறிவிற்கும் பொதுமகளிரை நாம் கண்டிக்கிறோம்.

தேவரடியார் என்பது மிகப்பெரிய தியாகம். இது மிக நேர்த்தியான குலம். வேதத்தைக் காப்பாற்ற அந்தணர். தேசத்தைக் காப்பாற்ற க்ஷத்திரியர். நீர் நிலம் காப்பாற்ற வேளாளர் பொருளாதாரம் காப்பாற்ற வணிகர் என்று இருப்பதுபோல் நமது திராவிட கலாச்சாரத்தைக் காப்பாற்ற தேவரடியார் குலம் முன் வந்திருக்கிறது.

கலாச்சாரம் என்றால் என்ன ஒரு கலாச்சாரம் எப்படி வெளிப்படுகிறது. ஆடல், பாடல், நீதிக்கதைகள், நாடகங்



கள் என்கிற குரலால் தமிழ் பேசும் சமுதாயத்தின் முகம் வெளியாகிறது. இந்த ஆடல் பாடல் கலையால் ஓவியமும், சிற்பமும், உலோக வார்ப்பும் ஒட்டுமொத்தமாய் கோவில்களும் சிறப்படைகின்றன. மெருகடைகின்றன.

கோவில் என்பது வழிபாட்டுத் தலமல்ல, அது நம் வீடு. நம்முடைய பள்ளி நம்முடைய கடிகை. நம்முடைய பண்பாட்டு மையம். கோவிலுக்கு நாம் தொழுவதற்கு மட்டும் போகவில்லை. வாழ்வதற்கும் போகிறோம். கோவில் இவ்வளவு பெரிதாகக் கட்ட காரணம் உண்டு.

கோவிலின் ஒரு பகுதியில் வேத பாராயணம். இன்னொரு பகுதியில் நாட்டிய நாடகம், இன்னொரு பகுதியில் ஆகம வகுப்பு. இன்னொரு பகுதியில் தேவார-திருவாசகப் பக்திப் பாடல்கள். இன்னொரு பகுதியில் அரசியல் அவசம். இன்னொரு பகுதியில் நெடுந்தூரம் போய் வந்த யாத்ரீகரின் உபந்யாசங்கள். அவசியமானால் அவ்வப்போது சுவையான உணவுப்பண்டங்கள். குளித்து சுத்தம் செய்து கொள்ள பெரிய குளங்கள். படித்து உறங்க காற்றோட்டமான மண்டபங்கள். வாழ்வின் மிகப் பெரும்பகுதியை ஒரு மனிதன் இங்கே கழிக்கமுடியும். மரை முடியும்.

கோயில்கள், காதலிக்குக் கட்டிய கட்டிடம் அல்ல. காமத்திற்குக் கட்டிய கட்டிடமும் அல்ல. மனிதனின் வாழ்க்கையை வளப்படுத்த வந்த கட்டிடம் மனிதர்களை பல நூறு ஆண்டுகள் வாழ வைக்கப் போகும் கட்டிடம். இங்கே தவறு ஏதும் நடக்கக்கூடாது.

கலாச்சாரம் வளர்த்து வந்த தேவரடியார், தாங்கள் செய்ய வந்த இறைப்பணியை மறந்து, இறைச்சி விற்க முன் வந்தால் கண்டிக்கத்தானே வேண்டும்.

''ஆனால் ஐயா, நீங்கள் குறிப்பாகச் சொல்லாமல் பெண்களை ஒட்டுமொத்தமாகச் சொல்வது போல் தோன்றுகிறதே.'' வேறொருவன் கேட்டான்.

''ஊன்றிப் படிக்காததன் விளைவு. தன்னை அதிகம் சிங்காரித்து தன்னை நாடிவரும் ஆடவரோடு சரசம் பேசி அவர்களை சொல்லாலும் செயலாலும் ஏமாற்றுபவர் களைத்தான் நம் பாடல்களில் கண்டித்துள்ளோம்.''

''ஐயா, துறவு முக்கியமில்லையா''

''இல்லை. இல்லறமே நல்லறம்.''

''ஐயா, நீங்கள் அவ்விதம் இல்லையே.''

''என் நிலை வேறு. என்னால் பூமியில் ஊன்றியிருக்க முடியாது.''

''துறவு தவறா''

''இல்லை. ஆனால் அவசியமில்லை.''

''இறைவனிடம் குடும்பத்திற்கான விஷயங்களைக் கேட்கலாமா.''

''ஆஹா. தாராளமாகக் கேட்கலாம். நல்ல உணவு, நல்ல உடை, நல்ல இருப்பிடம் முருகனைக் கேட்கலாம்.''

''ஐயா, நான் ஒரு வைணவரைப் பார்த்தால் என்ன செய்ய வேண்டும்.''

''ஹரி என்று நீங்கள் அவரை வணங்க வேண்டும். அவர் உம்மைப் பார்த்தால் சிவாய நமஹ என்று சொல்ல வேண்டும். இந்தப் பிரிவுகள் இந்து மதம் பெற்றெடுத்த குழந்தைகள், பக்தி மார்க்கத்தின் பல்வேறு வடிவம். இங்கே வன்முறைக்கு அவசியமே இல்லை.''

''வன்முறை காட்டினால் என்ன செய்ய.''

''வன்முறை காட்டுவோம்.'' அருணகிரிநாதர் புன்னகை செய்தார். ''வாளை வாளால் தடுப்போம்.''



''ஐயா முக்திக்கு என்ன வழி.''

''மௌனம்.''

''மௌனம் என்பது என்ன.''

''சும்மா இருப்பது.''

''நாம் சும்மா இருந்தால் எல்லாம் சரிவர நடந்து விடுமா.''

''புரிந்து கொண்டு பேசு.''

''சும்மா இருப்பதென்றால் யாதொரு வேலையும் செய்யாதிருப்பதா'' செல்வநாயகம் கவலையோடு கேட்டார்.

''இல்லை செல்வநாயகம். செய்யும் முயற்சிகளோடு சம்பந்தமற்று இருப்பது.''

''எனக்குப் புரியவில்லை ஐயா. ஒரு உதாரணத்தோடு புரிய வையுங்கள்.''

''செல்வ விநாயகம், உனக்குக் கவிதைகள் எழுத வேண்டும் என்று ஆசை இருக்கிறதல்லவா.''

''ஆமாம்.'', செல்வ விநாயகம் தயங்கிச் சொன்னார்.

''ஒரு கவிதை எழுதிவிட்டு அதை நீ எழுதியதாய் அலட்டிக் கொள்ளாதே. அந்தக் கவிதையை எங்கே கொடுக்கலாம். என்ன விலைக்குப்போகும் என்று கணக்குப்போடாதே. நல்ல விலைக்கு போயிற்று என்றால் நான் ஒருவனே கவிஞன். மற்றவரெல்லாம் என்காலின்கீழ் என்று கர்வம் கொள்ளாதே. அந்த கர்வத்தால் எள்ளிநகையாடாதே. எதிரிகளைச் சம்பாதிக்காதே. இளக்காரப்படாதே. பிறர்செய்த இளக்காரத்தால் சோர்வடையாதே.

சோர்வடைந்து கவிதையே வேண்டாமென்று ஓலையை கிழிப் போடாதே. வாழ்வே மாயம் என்று

பிதற்றாதே. செல்வ நாயகம், நான் சொல்வது புரிகிறதா? இல்லையெனில் மறுபடியும் நான் சொன்னதை யோசித்துப்பார். எப்போது என் கவிதை என்று சொல்கிறாயோ அப்போது சிக்கல் வந்து விடும். கவிதை எழுது. காரியம் செய். அதை நான் செய்தேன்...நான் செய்தேன் என்று மாட்டிக் கொள்ளாதே. செய்து விட்டு சும்மா இரு."

"புரிகிறது ஐயா. அதே சமயம் புரியாதது போலவும் இருக்கிறது."

"இது அறிவதில்லை செல்வ நாயகம். உணர்வது. இதை உணர முதலில் தேவை பணிவு. பணிவு பக்தியால் தான் வரும். பக்தி என்பது தன்னை இறைவனிடம் ஒப்படைப்பது இறைவன் என்பது மாபெரும் சக்தி. அங்கிங்கெனாதபடி நீக்கமற நிறைந்திருக்கும் விஷயம். அதை உன் மனம் விழுங்க முடியாது. அதாவது புரிந்து கொள்ள முடியாது.

எனவே முருகன், திருமால், சிவன் என்று உருவ வழிபாட்டிலிருந்து இனிமையான கதைகள் மூலம் அந்தப் பெரும் சக்தியைப் புரிந்து கொள். நீ தூசு என்பதை உணர்ந்தாலே பணிவு தானாக வந்து விடும். பணிவு பொய்யானதாக இல்லாமல் பார்த்துக் கொள். எவர் மீதும் கோபமில்லாமல் யோசிக்கப் பழகு. அப்போது உன் எந்தச் செயலுக்கும் நோக்கமிருக்காது.

நோக்கம் என்பது பலன் எதிர்பார்த்தல். பலன் எதிர்பார்த்தால் பிரச்சினை நிச்சயம்."

"சும்மா இரு என்று சொல்லித் திருமணம் செய்து கொள்ளத் தகுமா, குழந்தை பெற்றுக் கொள்ளுதல் முடியுமா."

"ஆஹா. தகும். நிச்சயம் முடியும் உன்னாலா நடக்கிறது குடித்தனம். சிறு கல் தடுக்கினால் மனிதனுக்கு



மரணம் ஏற்படும்' தடுக்காமல் காப்பது எது. தடுக்க வைப்பது எது. விசாரி"

"ஐயா நாத்திகம் சரியா?"

"இல்லை. அது அதீத கர்வம். நான் என்கிற மமதை. தன்னை உடம்பாகக் கொண்டதின் விளைவு. செல்வ நாயகம் என்பது உடம்பு மட்டுமல்ல. உள்ளிருக்கும் சக்தி. அது தான் செல்வநாயகம். அது இல்லா விட்டால் செல்வ நாயகம் சவம்.

தொன்னையில் பாயசம் இருக்கிறது. தொன்னை அழகாக இருக்கிறது என்று சொல்பவன் மூடன். தொன்னைக்கு மரியாதையே பாயசத்தால் தான். பாயசமற்ற தொன்னை குப்பை. பாயசத்தைத் தாங்கி நிற்பதே அதற்குப் பெருமை.

இந்தா என்று ஒரு தொன்னைப் பாயசத்தைக் கொடுத்தால் நான் தொன்னையைத் தருகிறேன் என்றா அர்த்தம்."

"ஐயா, எனக்கு வயிற்று வலி வந்தது. நீங்கள் அதை நீக்கினீர்கள். வயிற்று வலி இறைவன் கொடுத்ததுதானே. அதை மறுத்து ஏன் வைத்தியரிடமும், அருணகிரி நாதரிடமும் போகிறாய் என்று ஒரு நாத்திகர் கேட்கிறார். அப்படி போனதால் நீயும் நாத்திகர் என்கிறார்."

"இது விதண்டாவாதம். ஒருவன் முட்ட முட்ட கறி சோறு தின்ன என்ன காரணம். கறிசோறு நல்ல ருசி. ருசியால் ஒரு சந்தோஷம். பசி அடங்குவது இன்னொரு சந்தோஷம். வெந்த கறி, சோறு சுகமாக ஜீரணமாகி மலம் கழிப்பது இன்னொரு சந்தோஷம். மறுபடி இன்று எங்கே கறி கிடைக்கும் என்று அலைவது இன்னொரு சந்தோஷம்'

இதிலிருந்து என்ன புரிகிறது. கறிசோறு சாப்பிடுவது நல்லது என்று சொல்லாதே. மனம் இடையறாது

சந்தோஷத்திற்கு ஆசைப்படுகிறது என்பதைப் புரிந்து கொள். அப்படி இடையறாது சந்தோஷத்திற்கு ஆசைப்படுவதே மனதின் இயல்பு என்பதைத் தெரிந்து கொள்.

மனம் எதனால் இயங்குகிறது. ஆத்மாவினால், அப்போது ஆத்மாவின் இயல்பு என்ன...நிரந்தரமான சந்தோஷம், உணவு, பெண்போகம், உறக்கம், உடை பற்றிய காவம் போன்றவைகளெல்லாம், இந்த சந்தோஷங்களெல்லாம் ஆத்மாவின் சாயலே. அதாவது பிரதி பிம்பமே. நீ ஆத்மா. ஆத்மா என்பது நிரந்தர சந்தோஷம், அந்த நிரந்தர சந்தோஷத்தை அடிக்கடி உடம்பு நினைவுபடுத்திக் கொள்வது தான் இந்த இந்திரிய சுகங்கள்.

நாம் என்ன சொல்கிறோம். நிரந்தர சந்தோஷம் உன்னே இருக்கிற போது வந்து போய்க் கொண்டிருக்கிற சுகத்தில் சிக்காதே. இது சந்தோஷமல்ல, துக்கத்தையும் தரும் என்று எச்சரிக்கிறோம்.

இது அரசருடைய சிலை. பிரதிபிம்பம். ஆனால் அரசரல்ல. அதே சமயம் இதை வெறும் பாறாங்கல் என்றும் அலட்சியம் செய்து விட முடியாது. இந்த சிலையை பார்க்கும் போது அரசரின் ஞாபகம் வரவேண்டும். நிஜ அரசரை தரிசிக்க முயற்சி செய்ய வேண்டும்.

எனவே நிரந்தரமில்லாது வந்து போகும் சந்தோஷங்களில் மனம் லயிக்க விட்டால் ஒரு தட்டு தயிர் சோறு வயிறு முட்ட தின்றால் வயிற்று வலி வரத்தான் செய்யும். வலி ஆத்மாவின் இயல்பல்ல. அது உடம்பின் அவஸ்தை.

எனவேதான் வலியிலிருந்து நிவாரணம் தேட அதாவது சந்தோஷம் தேடி அலைகிறோம்.

இங்கு எவரும் நாத்திகரே இல்லை. சந்தோஷம் தேடும் அத்தனை பேரும் ஆத்திகரே. ஏனெனில் சந்தோஷம் தேடுவது மனித மனதின் இயல்பு.மனித மனம் ஆத்மாவின்



சாயல். ஆத்மா என்பது எங்கும் நிறைந்த இறை வடிவின் ஒரு துளி. உள்ளிருப்பு. அண்டத்திலிருப்பதும், பிண்டத்திலிருப்பதும் ஒன்றே. இரண்டும் அதுவே.

அடுத்தமுறை நாத்திகன் சோறு தின்பதைப் பார்த்தால் என்ன கடவுள் வழிபாடா என்று கேளுங்கள்.''

''புரிகிறது ஐயா.'' அடியவர் கூட்டம் கை கூப்பியது.

''ஐயா ஒரு விண்ணப்பம்.''

''என்ன?''

''இன்று கனியூரில் மூன்று காதுகள் அறுந்தன. ஒருவர் ரத்த சேதத்தால் மரணமானார்.''

''முருகா.'' அருணகிரிநாதர் மனம் பதறினார். நடுநாடு என்று அழைக்கப்படும் தொண்டை நாட்டில் உள்ள கனியூர் நோக்கி அருணகிரிநாதர் நடக்கத் துவங்கினார்.

பின்னே அடியவர் கூட்டம் தொடர்ந்தது.

கனியூரில் வில்லிப்புத்தூரான் என்கிற புலவர் வாழ்ந்து வந்தார். கொங்கு தேசத்தை ஆண்ட அரசன், அவர் அறிவு மெச்சி, தன் அவைக்களப் புலவராக அவரை வைத்துக் கொண்டான். மகாபாரதக் கதையைத் தமிழிலே எழுதித்தர வேண்டுமென்று வேண்டினான்.

புலவர் பாரதக் கதையைத் தமிழில் எழுதினார். அதற்கு வில்லிபாரதம் என்று பெயரிடப்பட்டது.

கொங்கு நாட்டு அரசன் மிகவும் சந்தோஷமடைந்து, அவருக்கு பல்லக்கு, பதாகை, பரிவட்டம், ஆள்படை எல்லாம் கொடுத்து கௌரவித்தான். அவருக்கு குறடு போன்ற வாளும் பரிசளித்தான். அந்தக் குறடுதான் ஊர் ஊராகப் போய், இல்லாத பொல்லாத வேலை செய்து கொண்டிருக்கிறது.

அருணகிரிநாதர் குறடை வீசி எறிந்து விட்டு, இனி எவர் காதையும் நீங்கள் அறுக்க வேண்டாம். உமது காதையும் நாம் அறுக்க மாட்டோம் என்று சொன்னார்'

கருணைக்கு அருணகிரி என்று தமிழ்மக்கள் அவரைக் கொண்டாடினார்கள்.

அருணகிரிநாதரின் புகழ் பல ஊர்களுக்குப் பரவியது. அந்த சித்த புருஷரை, திருவண்ணாமலை மகானை, இறைவனைப் பார்ப்பது போல மக்கள் வந்து பார்த்து விட்டு போனார்கள். தம் குறை சொல்லி குணமாகித் திரும்பினார்கள்.

அவர் புகழ் வளர வளர, சம்பந்தாண்டான் என்கிற புலவனுக்கு எரிச்சல் அதிகரித்தது.

திருமலையை ஆண்ட பிரபுட தேவராயனின் அவைக் களம் புலவன் இந்த சம்பந்தாண்டான்.

அவன் நான்கு மொழி தெரிந்தவன் மந்திர தந்திரம் அறிந்தவன் சாக்த உபாசகன் அதாவது சக்தி வழிபாடு செய்பவன்.

மந்திரம் உருப்போட்டு, யந்திரத் தகடுகளை பூஜை செய்து, சக்தி ஏற்றி தாந்த்ரீக வாழ்க்கை நடத்துபவன்.

தாந்த்ரீகர்களுக்கு பெண் போகம் மிக முக்கியம் என்கிற சூத்திரம் உண்டு எனவே, அவர்கள் தாசிகளோடு நெருங்கிய சம்பந்தம் வைத்திருப்பார்கள்.

அருணகிரிநாதர் பாடல்கள் பொதுமகளிரை மிகக் கடுமையாகத் தாக்கியதால், மக்களிடையே மனமாற்றம் ஏற்பட்டது. அதுவரை இருந்த மயக்க நிலை நீங்கி, விலை மாதர்களை பொது மக்கள் விலக்கி வைத்தார்கள்.

சில இடங்களில் இழிவுபடுத்தினார்கள். அவர்கள் பேசமுற்படும்போது முகம் முறித்து கதவுசார்த்தினார்கள்.



விலைமாதர்களோடு தொடர்பு வைத்திருப்பவர்களை வெறுத்துப் பேசினார்கள்.

இதுவரை கொண்டாடப் பட்டு வந்த விலைமாதர்கள் தங்கள் மதிப்பு அழிவது கண்டு சீற்றமுற்றார்கள். அருணகிரிநாதரின் மீது கோபம் கொண்டார்கள்.

நாட்டிய நாடகத்திற்குக் கூட்டமேயில்லை. மாறாய் கேலியும் சிரிப்பும் அதிகரித்தன.

குடும்பத்தைப் பேணுவது ஒழுக்கமாய் வாழ்வது குறைவாய் பேசுவது. கோபத்தையும் குணத்தோடு வெளிப்படுத்துவது, ஆழ்ந்து தியானிப்பது போன்றவை மக்களிடையே பரவின.

அருணகிரியார் பாடல்களை மனமுருகிப் பாடி அந்தத் தாளக் கட்டுக்கு மெல்ல நடனமாடி, பலர் பரவசநிலை அடைந்தார்கள். பலருக்கு முருக தரிசனம் கிடைத்தது உள்ளொளி பெருகியது.

இதற்கெல்லாம் அருணகிரியே காரணம் என்கிற பேச்சு, நம்பிக்கை மக்களிடையே பரவலாயிற்று. நோய் தீர்ப்பது மட்டுமின்றி நல்வழிகாட்டவும் ஒரு குரு கிடைத்தார் என்று திருவண்ணாமலை மக்கள் குதூகலம் அடைந்தார்கள். ஒவ்வொரு சிறிய சந்தேகத்திற்கும் அவரிடம் போய் நின்றார்கள். அவரைக் கேள்விகளால் துளைத்தார்கள்

''ஐயா, சக்தி வழிபாடு என்றால் என்ன அதில் வாமாச்சாரம் என்கிற பிரிவு பற்றி சொல்லுங்கள்.

மது மாமிச நிவேதனம், மங்கையின் யோனியில் குங்குமம் அப்பி பூஜை என்று பலதும் சொல்கிறார்களே வியப்பாக இருக்கிறதே இது சரியா.''

''சக்தி வழிபாட்டில் வாமாச்சாரம் ஒரு வகை. எது நம்மை பயமுறுத்துகிறதோ அதை உற்றுப் பார்ப்பது பயத்தை நீக்கும் என்பது ஒரு தத்துவம்.''

இது மிருந்த கர்வத்தையும் போதையையும் கொடுத்து விடும். கெட்டு அழிந்து போனவர்கள் இதில் அதிகம்.

எனவே இவ்வித சக்தி வழிபாட்டை முற்றிலும் மறந்து விடுங்கள். முருகன் தாளை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள்.''

''ஐயா, அரசர் உங்களை அழைக்கிறார்.''

''பிரபுட தேவராயனா...எதற்கு.''

''சம்பந்தாண்டான் ஏதோ போட்டிக்கு உங்களை அழைத்திருக்கிறான்.''

''அப்படியா. இது முருகன் திருவருள். போவோம்.'' அருணகிரி நாதர் தன் நீண்ட தாடியுடன் மேல் நோக்கி கொண்டையிட்ட தலை அலங்காரத்துடன், நெற்றியில் திருநீறும், நெஞ்சில் உத்திராட்ச மாலையும் அணிந்து அரசவை நோக்கி மெல்ல நடந்தார். அவரின் பக்தர்கள் அவரைப் பின் தொடர்ந்தார்கள். அரச சபை அவருக்காக காத்திருந்தது.

## 5

பிரபுடதேவராயன் படியிறங்கி வந்து அவரை வரவேற்றான். அவர் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினான். அவர் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான்.

மெல்ல அவர் கைகளைப் பற்றி தலைமை ஆசனத்தில் அமர்த்தினான்.



அவர் அமர்ந்த பிறகு அவருக்கு அருகே நின்று விசிறத் துவங்கினான். அவை இந்தக் காட்சியைக் கண்டு சந்தோஷப்பட்டது.

அறிஞர்களை அரசன் போற்றினால் மக்கள் மனம் மகிழ்வார்கள். ஆனால் எதிரே அமர்ந்திருந்த அவைக்களப் புலவன் சம்பந்தாண்டான் வயிறு எரிந்தான். இந்த அவையின் புலவனான இத்தனை வருடத்தில் ஒரு முறை கூட அவனுக்கு இந்த உபச்சாரம் கிடைத்ததில்லை. அரசன் ஒருதடவை கூட அவனைத் தொட்டதில்லை.

அவன் ஆத்திரத்தோடு மன்னனைப் பார்த்தான்.

''எம்மை அழைத்த காரணமென்ன, தேவராஜா'' அரசனை ஒருமையில் அழைத்து அருணகிரி நாதர் விசாரித்தார். அரசன் அந்த உரிமையான அன்பில் திணறினான்.

அவருக்கு அருகில் நிற்கும்போது தன் மனம் அமைதியானதை உணர்ந்தான்.

''சம்பந்தாண்டான் என்கிற மனிதர் இந்த அவைக்களப்புலவர்'' என்று எந்த விருதும் சொல்லாமல் அறிமுகப் படுத்தினான்.

சம்பந்தாண்டானுக்கு அரசர்மீது எரிச்சல் ஏற்பட்டது.

தன்னைப் பற்றிய அவநம்பிக்கை அதிகப்படுகிற போதுதான் விருதுகளும் கட்டியங்களும் மனிதருக்குத் தேவைப்படுகிறது. விழாக்களும், பாராட்டுகளும் மனிதருக்கு அவசியமாகின்றன.

தேவை தெரிந்தவருக்கு விருதுகள் அவசியமில்லை. கொண்டு வந்து கொடுத்தாலும் அதைப்பற்றி எந்தவித நினைப்புமில்லை.''

''ஐயா அருணகிரிநாதரே, உம்மை இந்த அவையில் அமர வைத்துப் பார்க்கவேண்டும் என்பதுதான் இந்த

அழைப்பின் முக்கிய காரணம். இன்று என் அரண்மனை முழுமையாயிற்று. புனிதமாயிற்று.

இது தவிர வேறு ஒரு காரணமும் உண்டு. என் அவைக்களப் புலவர் சம்பந்தாண்டான் சக்தி உபாசகர். தேவியை நேரே தரிசித்தவர். கடுமையான மந்திரப் பயிற்சியினால் மற்றவர்களுக்கும் தேவியின் தரிசனத்தை உணரவைத்தார்.''

உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டு ஆச்சரியப் படுகிறார்.

''அரசே, உங்களுக்கு தேவியை நான் நேரே காட்ட முடியும். அதுபோல் அருணகிரிநாதரால் முருகனை உங்களுக்கு நேரில் காட்டமுடியுமா' என்று சம்பந்தாண்டான் கேட்டார். அருணகிரிநாதர் காட்டினால் நான் சந்தோஷமடைவேன் என்று பதில் சொன்னேன். என் ஆட்சியில் இரண்டு இறை தரிசனங்களை ஒரு சேர நான் பெற்றால் இதைவிட சந்தோஷம் எனக்கு உண்டா?

அருணகிரி நாதரே, இதில் வற்புறுத்தல் எதுமில்லை. இதை செய்தாலும் செய்யா விட்டாலும் உங்கள் புகழ் குறையப்போவதில்லை. உங்களைப் பற்றிய என் எண்ணம் மாறப்போவதில்லை.

அருணகிரிநாதரே, தூண்டுதல் சம்பந்தாண்டான். கட்டளையிட்டது நான். இனி தயவு செய்து நீங்கள் பேசுங்கள்.''

அருணகிரிநாதர் மெல்ல சிரித்தார். அவருக்குச் சகலமும் தெளிவாய் புரிந்தது.

''நல்லது. இதற்குப் பெயர் போட்டி. எல்லாப் போட்டிக்கும் அடிப்படை பொறாமை. ஆயினும் என்ன செய்ய. சில சமயம் இதற்கு தலை கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. போட்டி துவங்கட்டும்.''



சம்பந்தாண்டான் கண் மூடினான். மனம் ஒருமைப் படுத்தினான். மந்திரஜபம் செய்யத் துவங்கினான்.

அறிவு வேறு. ஞானம் வேறு.
அறிவின் விளைவு அகந்தை.
ஞானத்தின் விளைவு அமைதி.

ஆன்மீகத்தில் இருக்கும் ஞானமற்ற அறிவாளி அதிகம் பேசத்துவங்குகிறான். அலட்டிக்கொள்ள ஆரம்பிக்கிறான். அகந்தையோடு ஆரவாரம் செய்கிறான். தான் அறிந்த சிறு சிறு வித்தைகளை, மிகப்பெரிய விஷயமாக ஊருக்குக் காட்டி, தன் புகழைப் பரப்பிக்கொள்ள நினைக்கிறான். எதையோ பயன்படுத்திக் கொள்ளும் பேராசை அங்கு வந்து விடுகிறது.

யோக்கியதைக்கு மிஞ்சிய கூச்சல் அங்கே நிலவுகிறது. பதட்டம் மிகுதியாகிறது. பதட்டத்தால் ஆவேசமும், கோபமும், கேவலமான வார்த்தைப் பிரயோகங்களும் வந்து விடுகின்றன.

சம்பந்தாண்டான் தேவதைகளை விளித்தான். அவர்களைக் கேவலமான வார்த்தைகளால் திட்டினான். தேவதைகள் மிக மெல்லிய உணர்வு கொண்டவை. நாற்புறமும் குங்குமத்தால் அடித்து அவர்களை விரட்டினான்.

''உடனே சக்திக்கு என் வரவைச் சொல். என் அழைப்பைச் சொல்'' என்று கூச்சலிட்டான்.

அரசவையின் தன்மை மாறியது. அங்கு ஒரு அசாதாரண இறுக்கம் பரவியது. பலபேருக்கு உடம்பில் மயிர்க்கூச்சம் எடுத்தன. இனம் புரியாத சங்கடம் வயிற்றை கலக்கியது. சிலருக்கு நெஞ்சு அடைத்தது.

பலவீனமானவர்கள் பயத்தில் கண்மூடினார்கள். ஆழ்ந்து தூங்க துவங்கினார்கள். தேவதைகள் சக்திக்கு மூர்க்கமான ஜபத்தைத் தெரியப்படுத்தின.

மனம் ஒருமைப்பட்டு ஜபம் செய்கிறவர்கள் கண்ணுக்கு தெய்வத்தின் தரிசனம் நிச்சயம் கிடைக்கும் பளிச்சென்று சம்பந்தாண்டான் கண்ணுக்கு தேவியின் தெய்வ உருவம் தெரிந்தது.

சம்பந்தாண்டான் ஆனந்தபரவசத்தில் கூச்சலிட்டான்.

'அதோ தேவி, அதோ தேவி' என்று கத்தினான். தாயே... பராசக்தி என்று அலறினான். ஆனந்தக் கூத்தாடினான். 'என் தாய் வந்து விட்டாள். என் தாய் வந்து விட்டாள்' என்று குழறினான்.

சபை அசையாது இருந்தது. சம்பந்தாண்டான், சமநிலைக்கு வந்தான்.

''நீங்கள் தேவியைப் பார்க்கவில்லையா'' அரசரை வினவினான்.

அரசர் 'இல்லை'யென்று தலையசைத்தார்.

''என் கண்ணுக்குத் தெரிகிறாளே, இதோ, செம்பஞ்சு வர்ணமாய். தங்கத்தகடாய் அவளைச்சுற்றி ஒளிரேகைகள் பரவ, புன்சிரிப்போடு நிற்கிறாளே உங்களுக்குத் தெரியவில்லையா.''

அரசன் இல்லையென்று மறுபடி தலையசைத்தான்.

சபை மௌனமாக அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தது.

சம்பந்தாண்டான் மனம் தளர்ந்தான். தேவியை நமஸ்கரித்தான்.

''அரசே, உங்களுக்கு மந்திர உபதேசம் அளிக்கிறேன். என்னைப் போல் மந்திர உச்சாடனம் செய்ய உங்களுக்கு



கற்றுத் தருகிறேன். நீங்கள் மந்திரம் ஜபித்தால் நிச்சயம் தேவியைப் பார்க்கலாம்.''

''சம்பந்தாண்டான். உங்கள் பேச்சு புரியவில்லை. நான் ஜபித்து, நான் தேவியைப் பார்ப்பதற்கு நீங்கள் எதற்கு என் அவைக்களப் புலவராக இருக்க வேண்டும்.

நான் தேவியை எல்லோருக்கும் காட்டுகிறேன். அருணகிரிநாதரால் முருகனைக் காட்ட முடியுமா என்று தானே கேள்வி.

அருணகிரி நாதர் சரியென்று அவைக்கு வந்து உட்கார்ந்திருக்கிறார். நீங்கள் காட்டுகிறேன் என்று மந்திர உச்சாடனம் செய்தீர்கள். உங்களுக்கு தேவி தெரிகிறது என்று கூவினீர்கள். எங்களுக்கு தேவி தெரியவில்லை. இப்போது உங்கள் நிலைமை என்ன, மறுபடி முயற்சி செய்கிறீர்களா, இல்லை அருணகிரிநாதரை ஆரம்பிக்கச் சொல்லட்டுமா.''

மன்னரின் பேச்சில் கடுமை துளிர்விட்டது. சம்பந்தாண்டான் திகைத்தான் பதட்டத்தோடு அவையை சுற்றும் முற்றும் பார்த்தான்.

அவையினர் அவனை கேலியாகப்பார்ப்பது அவனுக்குப் புரிந்தது.

'அருணகிரி முயற்சித்து இறை தரிசனம் முடியாது போனால் அப்போது மக்கள் சமாதானமாகி விடுவார்கள்' என்று தோன்றியது.

''சரி, அருணகிரியை முயற்சி செய்யச்சொல்லுங்கள்'' துண்டாகப் பேசிவிட்டு தன் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டான்.

அரசன், அருணகிரியை நோக்கி கை கூப்பினார். ஐயா. இனி நீங்கள் முயற்சி செய்யுங்கள். உங்களாலாவது எனக்கு இறைதரிசனம் கிடைக்கட்டும்'' என்று கை கூப்பினார்.

"மன்னா, இறையே விரும்பி நமக்கு தரிசனம் கொடுப்பது தான் நல்லது. நாம் கேட்பது அவ்வளவு உசிதம் இல்லை. அதிலும் இப்படி போட்டிக்காக கேட்பது உசிதம் இல்லை.

நான் இந்தக் காரியத்தை, இறைவனை வரவழைத் தலை சம்பந்தாண்டானுக்காகச் செய்யவில்லை. உங்களுக் காகவும் நடத்த முன்வரவில்லை, இங்கு கூடியிருக்கும் அவையினருக்காகவும் இதை செய்யப் போவதில்லை, இறை உண்டா இல்லையா என்று தடுமாறிக் கொண்டிருக் கும் இளைய சமுதாயத்தினருக்காகச் செய்யப்போகிறேன்.

நானும் இதை செய்யாவிட்டால் இறைவன் என்று யாருமில்லை. இருந்தால் தானே வரவழைப்பதற்கு என்று இளைஞர்கள் எண்ணி விடக்கூடும். நாத்திகம் பலமாகி விடக்கூடும்.

இறைவன் உண்டு. எங்கனும் நிரம்பிய இறைவன், நாம் விரும்பிய வண்ணம் ஒரு உருவம் எடுத்து நம் எதிரே வரமுடியும். இந்தத் தரிசனம் ஒரு ஆதாரம்தான். ஒரு வகையான அனுபவம் தான்.

இது முற்றான முடிவு அல்ல. இந்தக் காட்சிகள் ஞானமல்ல. இந்தக் காட்சிகள் ஆர்வம் தூண்டுமேயொ ழிய அமைதி தராது அறிதலை வளர்க்காது.

நான் அழைக்க முருகன் இங்கு வருவான்.

அவன் இங்குவந்து என்ன நிகழும். திகைப்புத் தவிர எதுவும் நிகழாது. திகைப்பல்ல ஆன்மீகம். அது பாமரத் தனம். திகைப்பு அடங்கிய நிலையே ஆன்மீகம்.

நாம் இறைவனிடம் போக வேண்டும் என்பதே முக்கி யம். தம்மை உணர்வதே மிகப்பெரிய தரிசனம். இறை வன் தோன்றி மறையும் காட்சியல்ல. வந்து போகும் சந் தோஷமல்ல. உள்ளே பார்க்க இடைவிடாது ஒரு பேரா



னந்தம் இருக்கும். அதைப்பார்ப்பதே முக்கியம். அதை நோக்கி நீங்கள் எல்லோரும் நகரவே இங்கே இதைச் செய் கிறேன். இறைதரிசனம் காட்டுகிறேன்."

அருணகிரிநாதர் விநாயகப் பெருமானைக் கைக்கூப்பி வேண்டினார். தன்னுடைய பிரார்த்தனை நிறைவேற வேண்டும் என்று விநாயகப் பெருமானை மனதுக்குள் வேண்டினார். முருகனை மனதுக்குள் நினைந்தார். பணி வோடு கைகூப்பினார்.

'எல்லாம் வல்ல முருகப்பெருமானே. எங்கள் எல்லா ருடைய உள்ளமும் ஆடுமாறு நீ மயிலின் மீது ஆடிவர வேண்டும். அர்ஜுனனுக்கு தேர் சாரதியாக வந்த கண்ணன் விரும்பும் திறலோனே, எங்கள் யாவருக்கும் நீ காட்சி தர வேண்டும்" என்கிற பொருளில் பாட ஆரம் பித்தார்.

"அதல சேடனார் ஆட அகிலமேரு மீது ஆட
அபின காளிதான் ஆட அவளோடு அன்று
அதிர வீசி வாதாடும் விடையில் ஏறுவார் ஆட
அருகு பூத வேதாளம் அவையாட
மதுரவாணி தான் ஆட மலரில் வேதனார் ஆட
மருவு வானுளோர் ஆட மதி ஆட
வனச மாமியார் ஆட நெடிய மாமனார் ஆட
மயிலும் ஆடி நீ வரவேணும்.

கதைவிடாத தோள் வீமன் எதிர்கொள் வாளியில் நீடு
கருதலார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலிபோய் மீள விசயன் ஏறுதேர் மீது
கனக வேத கோடு ஊதி அலை மோதும்
உததி மீதிலே சாயும் உலகம் ஊடு சீர்பாத
உவண ஊர்தி மாமாயன் மருகோனே.

உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராசன்
உளமும் ஆட வாழ் தேவர் பெருமாளே"

பிரபஞ்ச சக்தி என்பது ஒரு ஆட்டம். இடைவிடாத நடனம். அதை சூட்சுமமாக சொல்வதுதான் நடராஜர் உருவம். மணல் துகள் போன்றும் பிரபஞ்ச சக்தி அனாதியாய், காலம் காலமாய் இடையறாது எல்லா இடத்திலும் ஆடிக் கொண்டிருப்பது.

சில சமயம் அதுகுவிந்து அதற்கு வாகான இடத்தில் ஒரு உருவம் இருக்கிறது. ஜனன—மரண விஷயமே இந்த பிரபஞ்ச சக்தியின் நகர்வுதான்.

அந்த ஆட்டத்தை உற்றுக் கவனிக்கத் துவங்கி, அந்த நகர்வோடு தானும் நகர்ந்து, அதை நோக்கி, உருவம் தா என்று இறைஞ்ச, நாம் மனதுள் நினைத்துக் கொண்டிருக்கிற உருவத்தை அது எடுத்துக் கொள்கிறது.

அதாவது சட்டென்று ஒருசக்தி குவிப்பு அங்கே நடந்து விடுகிறது. அந்த சக்தி வேகமாக ஒரு இடத்தில் குவிந்ததால் அந்த இடத்தில் கடுமையான மாற்றங்கள் நிகழ்கின்றன.

அருணகிரிநாதர் பாடப் பாட சக்திகுவிப்பு அங்கே குவிந்தது.

பளீரென்று அந்தஇடம் பிரகாசமாயிற்று. அந்த பிரகாசம் உக்கிரமாயிற்று. காற்றின் அசைவு குறைந்தது. சப்தங்கள் கனத்தன. காது அடைத்தது. நரம்புகள் புடைத்தன. அங்கு கூடியிருந்த எல்லோருக்கும் நாடித்துடிப்பும் இதயத்துடிப்பும் லயம் மாறின. இதனால் ஒரு பிரமை ஏற்பட்டது. கண்கள் நிலைகுத்தின. மூச்சு மெல்லியதாயிற்று. உணவுச் செரிமானம் சட்டென்று நின்றுபோய் வயிற்றில் ஒரு சங்கடம் ஏற்பட்டது.

அவையோர்கள் தள்ளாடினார்கள்.

அரசன் எழுந்து நின்று மூச்சை அதிகரித்துக் கொள்வதற்காக ஆ ஆ ஆ என்று வினோதமாகக் கத்தினான்.



அரசன் எழுந்ததும் சபையும் எழுந்தது.

சபை எழுந்திருக்க, சபையின் நடுவே அந்த வெளிச்ச நீள் வட்டத்தில் முருகன் உருவம் வேலும் மயிலுமாய் தோன்றியது.

நின்றிருந்த முருகன் வடிவம், புன்னகை செய்யும் முகம், பளீரிடும் திருநீற்றுப்பட்டை. தங்க ஆபரணங்கள், நவரத்தினமாலை, கனிவிட்ட நெருப்புக் கங்குபோல் செப்பான மேனி, நீலமயில், கையில் தகதகக்கும் வேல், ஒரு பனை உயரத்திற்கு இந்த உருவம் எல்லோருக்கும் தெரிந்தது.

''முருகா முருகா முருகா'' என்று ஜனங்கள் கத்தினார்கள்.

அரசனுக்கு நாக்கு இழுத்துக் கொண்டது. அவன் வலக்கையை உயரே தூக்கி இடக்கையை நெஞ்சின் அடியே வைத்து விநோதமாய் சப்த மெழுப்பினான்.

வேறு ஒருவருக்கு நாக்கு வெளியே விழுந்தது. நெஞ்சின் நடுப்பகுதிவரை தொங்கிற்று. சிலர் குளிர்ஜுரம் வந்ததுபோல் நடுங்கினார்கள். உடம்பெல்லாம் குடைந்து குளிரெடுத்ததுபோல கதறினார்கள். சிலர் உருவத்தின் முன்பு விழுந்து வணங்கினார்கள். அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்து போனார்கள்.

சம்பந்தாண்டான் மட்டும் மிக மிக முட்டாள்தனமாக தனது கைத்தடியை எடுத்து குறுக்கே வைத்துக் கொண்டான்.

ஒருவேளை அந்தச் சக்தி தாக்கினால் பதிலுக்குத் தாக்க எண்ணம் கொண்டான். கடவுள் நம்பிக்கை இல்லாதவனுக்குத் தான் தடியும், தாக்குதலும் முக்கியமாகப் போகும். தடுத்தலும் அடித்தலும் காரியமாகப் போகும்.

மறுபடியும் ''அதல சேட நார் ஆட''என்று அருணகிரி நாதர் பாட, கூட்டமும் அவரோடு பாடியது. முருகன் உருவம் மெல்ல மறைந்தது.

ஓம் என்ற ரீங்காரம் உடம்பெல்லாம் பரவியது. காது களில் இடையறாது குடைந்தபடி கேட்டது.

'நாத விந்து கலாதி நமோ நம

வேத மந்த்ர சொருப நமோ நம.'

இறைவனை ஒளியாகவும், ஒலியாகவும் துதிக்க ஆரம் பித்தார்.

அவையோர்கள் கண்ணீர் பெருக்கினார்கள்.

அருணகிரிநாதருக்கு சுவாமிமலையில் பார்த்த திரு முருகன் உருவம் போலவே, இங்கு தோன்றியதும் காட்சி யளித்ததால் சுவாமி மலை ஞாபகம் வந்தது.

சம்பந்தாண்டான் தெய்வம் தோன்றிய பிறகும் மூடனைப் போல் பூர்வஜென்ம வினைப் பயனால் வணங் காதிருந்த கோலமும் நினைவுக்கு வந்தது.

சரண கமலாலயத்தை அரை நிமிஷ நேரம் மட்டில்
தவ முறை தியானம் வைக்க அறியாத
சட கசட மூட மட்டி பவ வினையிலே சனித்த
தமியன் மிடியால் மயக்கம் உறுவேனோ?
கருணை புரியாதிருப்பது என்ன குறை?
இவ்வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரேசனே.

கடக புயம் மீது ரத்னமணி அணி பொன்மாலை
செச்சை
கமழும் மணமார் கடப்பம் அணிவோனே.
தருணம் இது ஐயா, மிகுந்த கனமேறு நின் சவுக்ய
சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு



தகைமை சிவஞானம் முக்தி பரகதியும் நீ கொடுத்து
உதவி புரிய வேணும் தெய்த்த வடிவேலா,
அருணதள பாதபத்மம் அது நிதமுமே துதிக்க
அரிய தமிழ்தான் அளித்த மயில்வீரா.
அதிசயம் அநேகம் உற்ற பழநி மலைமீது உதித்த
அழகா, திருவேரகத்தின் முருகோனே.

என்ன குறை எங்களிடம் இருக்கிறது. மூடத்தனமாய் உன்னை வணங்காமல் இருக்கிறார்கள்.

ஐயா, எனக்கு அருள் செய்யுங்கள். அதிகமான பெருமை, நிலையான சுகம், செல்வ யோகம், மிகச்சிறந்த வாழ்வு, சிறப்பு, சிவஞானம், உயர்ந்த கதி இவைகளைக் கொடுத்தருள வேண்டும் என்று இறைஞ்சினார். அவையி லுள்ள அனைத்து மக்களுக்கும் இது கிடைக்க வேண்டு மென்று பிரார்த்தித்தார்.

மக்கள் அவர் காலிலும் விழுந்து வணங்கினார்கள். அரசன் தடுமாறி அவரிடம் ஓடிவந்தான். அருணகிரிநாதர் முகத்தை தன் கைகளில் ஏந்திக் கொண்டான்.

''அருணகிரி நாதரே, என் கண்கள் பார்வையை மெல்ல மெல்ல இழந்து கொண்டு வருகின்றன. கடவுள் தரிசனத்தால் என் உடம்பு திடீரென்று பலஹீனமாகி விட்டது. நான் நாட்கணக்கில், மாதக் கணக்கில் தூங்கப் போகிறேன் என்கிற பயம் வந்து விட்டது. எனக்கு எந்தத் தீங்கும் வராமல் பெரியோனே, நீங்கள் காக்க வேண் டும்.'' என்று காலில் விழுந்து அழுதான்.

அருணகிரி நாதர் அவர் தலையைத் தடவிக் கொடுத் தார்.

''தூங்கு. அது நல்லது.''

அரசனைத் தாதிகள் மெல்ல கை பிடித்து அழைத்துப் போனார்கள்.

"இது மாயை, இது நாடகம், இதற்குப் பெயர் கண்கட்டு வித்தை." தன் இடத்தில் இருந்தபடியே சம்பந்தாண்டான் உரக்கக் கத்தினான்.

பின்னே நின்றவர் கைத்தடியால் அவர் முதுகில் ஓங்கி அடித்தார். அருகே நின்றவர், முகத்தில் குத்தினார். நான்கு பேர் பாய்ந்து போய் சம்பந்தாண்டானை இழுத்து தரையில் தள்ளினார்கள். ஒருவன் சம்பந்தாண்டானின் வயிற்றில் எட்டி உதைத்தான். இன்னொருவன் அவன் வலக்கையை மிதித்து உடைத்தான். அவையோர்கள் அவன் மீது பாய்ந்து கண்டபடி தாக்கத் துவங்கினார்கள்.

சில நொடிகளில் சம்பந்தாண்டான் ரணமானான்.

சேனாபதிகள் உள்ளே புகுந்து மக்களை அப்புறப்படுத்த, சம்பந்தாண்டான் ரத்தம் ஒழுக எழுந்து தப்பித்து ஓடினான்.

காசு பணம் ஏமாற்றியவர்களைக் கூட மக்கள் மன்னித்து விடுவார்கள். கடவுள் பெயர் சொல்லி ஏமாற்றுபவனை அவர்கள் மன்னிப்பதேயில்லை.

கடவுள் பெயர் சொல்லி கொக்கரிப்பவனை மக்கள் ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். அவன் பொய்யன் என்று தெரிந்து விட்டால் அரசனை விட கோபமாய் அவனை தண்டிக்கக் கிளம்பிவிடுகிறார்கள். ஒரு மலக்குப்பையைப் போல் அவனை அருவருப்பாய் பார்க்கிறார்கள்.

மனைவியை வைத்து சூதாடுபவனை விடவும், பெண்களைக் கூட்டிக் கொடுப்பவனை விடவும் மிக இழிவாக அவனை நடத்துவார்கள்.

கடவுள் பெயர் சொல்லி பொய்யாய் ஜெயித்து வந்தவன் தோல்வியுறும் போது, தன் அசிங்க முகம் வெளிச்சத்துக்கு வரும்போது மிகவும் பதட்டமாகிறான். அசிங்கம்



கெட்ட வார்த்தைகள் சொல்கிறான். ஆவேசப்படுகிறான். ஆபாசமாய் நடந்து கொள்கிறான். தான் அறிவிலி என்பதை வினாடி நேரத்தில் ஊர் முன்னே காட்டிக் கொள்கிறான்.

உடனே அவன் வாழ்க்கை சிரிப்பாய் போகிறது. எல்லா மதிப்பு மரியாதைகளும் சிரிப்பாய் போகிறது. அவனும் அவன் சிறிய குழுவும் கேவலமாக மக்களால் நடத்தப்படுகிறார்கள்.

சம்பந்தாண்டான் வீட்டில் இடைவிடாது கல் வீசப்பட்டது. அவன் வீட்டு நிலைப்படியை இடித்து, மாடு கட்டி இழுத்து பிடுங்கிப் போட்டார்கள். தோட்டத்தை சின்னா பின்னப்படுத்தினார்கள்.

அரசனுக்கு இது தெரிவிக்கப்பட்டது. அரசன் சம்பந்தாண்டானை இரவோடு இரவாக ஊரை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டான்.

ஒரு விடியல் நேரத்தில் ஒற்றை ஆளாய் தலையில் துணி போட்டு, பாதுகை இல்லாமல் ஊரை விட்டு வெளியேறினான்.

அருணகிரி நாதர், ஊர் ஊராய் முருகன் புகழைப் பாடியபடி நடக்கத் துவங்கினார்.

விஜயநகர சாம்ராஜ்யம் குமரிமுனைவரை விரிந்திருந்தது. ஆயினும் இஸ்லாமியர்களுடைய கொள்ளையால் பல கோயில்கள் பாதிக்கப்பட்டுக் கிடந்தன. அங்கெல்லாம் அருணகிரிநாதர் போய் நொந்து கிடந்த மக்களுக்கு மீண்டும் நம்பிக்கை வருமாறு இறைபக்தியை ஊட்டினார். குடும்பத்தோடு வாழ்வதின் சிறப்பைச் சொன்னார்.

மந்திர ஜபம் பற்றியும், யோகம் பற்றியும் புராணங்களைத் தெரிந்து கொள்வதின் அவசியம் பற்றியும் பேசி

னார். சந்த நடையில் அழகாகப் பாடினார். பாடி விளக்கம் சொன்னார்.

மக்கள் மறுபடியும் புத்துணர்வு பெற்றார்கள். இந்து மதத்தின் ஆணிவேரைப் புரிந்து கொண்டார்கள்.

இந்துமதத்தின் ஆணிவேர் இல்லறம்தான். இல்லறத்தில் ஒருவன் தன் கடமையைச் சிறப்பாகச் செய்வானானால், பொறுப்பாக இருப்பானானால் பாதிஞானம் அவனுக்கு வந்து விடுகிறது.

பதட்டமில்லாத ஒரு யோசிப்பு அவனுக்கு எளிதில் கிடைக்கிறது.

இல்லறத்தில் குறைகள் உள்ளவன் பதட்டமாகவே இருப்பான். மனைவி மக்களை நேசிக்காதவன் ஆத்திரக்காரனாக இருப்பான்.

விபச்சாரம் என்பது ஆண்கள், பெண்கள்மீது கொண்டுள்ள மிகப்பெரிய அலட்சியத்தின் விளைவு. போகத்திற்கு மட்டும் பெண் என்பது மிகப்பெரிய கர்வம். உயிர் வாழ்தலை மதிக்காத அகம்பாவம்.

போகப்பெண்களை நாடுபவன் வீட்டுப்பெண்களையும் மதிக்கவில்லை, போகப் பெண்களையும் மதிக்கவில்லை என்றுதான் அர்த்தம். மனைவியை மதிக்காதவன் தான் போகப் பெண்களை நாடுகிறான்.

வெறும் போகம் கலையற்றது.

காதலற்ற காமம், உயிரற்ற உடல், வெறும் சவம். இல்லறத்தில் முழுமையாய் ஈடுபட, தத்துவம்பற்றி தெளிவு உண்டாகும். வீட்டை உதறி வேறு இடத்தில் உட்கார்ந்திருப்பவன் மன நோயாளி. பெண்களோடு பழகி அவர்களை மதித்து வாழ்கிறவனுக்குத்தான் நாகரீகமாய் நடந்து கொள்ளும் ஆசைவரும்.



அநாகரீகமாய் பேசுகிறவர்கள். தெல் முளையும் பெண்களை மதிக்காதவர்கள். ஆத்திரப்பட்ட சம்பந்தாண்டான் திருவண்ணாமலைக்கு வடக்கே வெளிச்சேரி (வேளச்சேரி) என்கிற கிராமத்தில் சமணர்களிடம் தஞ்சம் புகுந்தான். சம்பந்தாண்டான் முகம் கறுத்துக் கிடந்தது. சிகப்பும் கறுப்புமான திட்டுகள் அவன் முகத்தில் பரவின. வெட்ட வெளியில் நின்று தனக்குள்ள பித்துப்பிடித்தவன் போல் பேசிக்கொள்ள ஆரம்பித்தான். தன் மன வேதனை பொங்கி புரண்டு சுய பச்சாதாபமாக வெளிவந்தது.

மரத்தைப் பார்த்து அருணகிரிநாதர் என்று பேச ஆரம்பித்தான். செம்பருத்திச் செடிகளைப் பார்த்து டேய் வெட்டிக் கொன்றுடுவேன் என்று ஆள்காட்டி விரலை அசைத்து கத்த ஆரம்பித்தான். மனநோயாளியாக மாறிப் போனான். யாரும் அவன் பேசுவதைப் பார்த்துவிட்டால் முனிவர்களோடும், தேவர்களோடும் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னான். ராட்சஸர்களோடு வாக்கு வாதம் செய்து கொண்டிருப்பதாக பொய் சொன்னான்.

எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்ற ஆசை உள்ளவர்களுக்கு பொய் எளிதில் வரும். பொய் மீது பொய் அவர்களால் தொடர்ந்து சொல்ல முடியும். தன் புகழை நிலை நிறுத்திக் கொள்ள அவர்களால் எவ்வித தீயச் செயலிலும் இறங்குவார்கள்.

உள்ளூர் ஆட்களுக்குக் காசு கொடுத்து, பிரபுட தேவராயனிடம் அனுப்பி என் பரிதாப நிலையைச் சொல் என்று தூது விட்டான். இடையறாது ஆட்கள் அனுப்பி கெஞ்சினான்.

பிரபுடதேவராயன் இறையருள் கிடைத்தமையால் மென்மையாக மாறியிருந்தான்.

மனிதர்கள் குறையுள்ளவர்கள். அதிலும் சம்பந்தாண்டானைப் போல அரைகுறை உபாசிகள் மிகப்பெரிய

குறை உள்ளவர்கள். எனவே அவர்களை மன்னித்து விடுதல் நலம் என்கிற முடிவுக்கு வந்தான்.

திருவண்ணாமலைக்கு வரலாம் என்று உத்தரவு கொடுத்தான். அரசவைக்கு வரவேண்டாம் என்று தடையும் செய்தான்.

பிரபுடதேவராயனின் கண் பார்வை கடவுள் வெளிச்சம் பார்த்ததினால் மங்கிப் போயிற்று. பகல் நேரங்களில் மட்டுமே லேசாக உருவங்கள் தெரிந்தன. மற்ற நேரம் அவன் தனிமையில் உட்கார்ந்திருந்தார்கள். இதனால் மனச்சோர்வும் பெற்றான். மனச்சோர்வினால் உடல் சோர்வும் அடைந்தான்.

அருணகிரிநாதரை அரசன் பார்க்க விரும்பினான். ஆனால் அருணகிரிநாதர் தேச சஞ்சாரத்தில் இருந்தார். அவர் எந்த தேசத்தில் இருக்கிறார் என்று யாருக்கும் தெரியவில்லை.

அரசன் பிறந்த நாளுக்கு ஜனங்கள் வந்து வாழ்த்த, சம்பந்தாண்டானும் வரிசையில் நின்று அரசனை வாழ்த்தினான்.

''எல்லாம் என்னால் வந்த வினை'' என்று மன்னனின் கண் பார்வை போனதற்காக விம்மி விம்மி அழுதான்.

ஜெயிக்க வேண்டுமென்கிற பேராசை உள்ளவர்கள் எந்த வேஷம் வேண்டுமானாலும் போடுவார்கள். அங்கே விருந்து அழைக்கப் புலவர்களுக்கு அரசன் அறியா வண்ணம் கையூட்டுக் கொடுத்தான்.

ஐயோ பாவம் சம்பந்தாண்டான் என்று அவர்களும் அழுதார்கள்.

திருடன் சம்பந்தாண்டான் மறுபடியும் அரசசபையில் சேர்ந்தான். மிக அடக்கமாக நடந்து கொள்ள ஆரம்பித்தான்.



''அரசே, உங்கள் உடல் நலம் பெற ஒரே ஒரு வழி உள்ளது. தேவலோகத்து பாரிஜாத மலர் எவரேனும் கொண்டு வர, நீங்கள் முகர்ந்தால் வெகு நிச்சயமாய் இந்த சோர்வு நோய் தீர்ந்து, உங்கள் இளமை திரும்பி, கண் பார்வையும் புதிதாய் வரும்,

உங்கள் முகம் வசீகரமாகும். தலை மயிர் கறுக்கும். ஆண்மை சிறக்கும்'' என்று நைச்சியம் பேசினான்.

''தேவலோகத்து பாரிஜாத மலர் எப்படி இருக்கும்'' அரசன் வினவ நூற்றுக் கணக்கில் பார்த்தது போல சம்பந்தாண்டான் விவரிக்க துவங்கினான்.

புகழில் உள்ள பேராசை அவனை கோர்வையாய்ப் பொய் சொல்ல வைத்தது.

அரசன் மலைத்துப் போனான். ''ஆஹா இவ்வளவு அருமையா இந்த மலர்? இத்தனை அரிய விஷயத்தை யார் கொண்டு வருவார்கள்'' அரசன் ஆவலோடு கேட்டான்.

''பரத கண்டத்தில் ஒரே ஒரு வீரரால் தான் இதைக் கொண்டு வர முடியும்.''

''எங்கிருக்கிறான் அந்த வீரன்.''

''தெரியாது அரசே''

''யார் அந்த வீரன்''

''அருணகிரிதான் அரசே.''

''முனிவர் பெருமானா...'' அரசன், பெயர் கேட்டவுடனே கைகூப்பினான்.

''சம்பந்தாண்டான் நெஞ்சு கொதித்தது.'' ஆமாம் அரசே.''

''ஏன் அவரால் மட்டும்தான் முடியும் என்று சொல்கிறீர்கள்.''

''அட்டமா சித்திகள் தவிர கூடு விட்டுக் கூடு பாயும் மகத்தான வழியினை அறிந்தவர் அருணகிரிநாதர். பாரிஜாத மலரை மனித உருவால் பார்க்க முடியாது. பறவைகளால் தான் இதைச் செய்ய முடியும் அருணகிரி நாதர் ஏதேனும் பறவை வடிவில் உங்களுக்காகப் பறந்து சென்று அந்தப் பாரிஜாத மலரைப் பறித்து வர முடியும்.

மன்னர் பிரபுட தேவராயருக்கு ஒரு சிறிய வேதனை என்றாலும் அருணகிரிநாதரால் பொறுத்துக் கொள்ள முடியாது.

''இவ்விதம் அருணகிரிநாதர்செய்வாராயின்அவர்புகழ் இந்த உலகத்திலே பொன்னெழுத்திலே பொறித்து வைக்கப்படும்.

முருகனே அருணகிரிநாதராக வந்து விட்டான் என்று மக்கள் பேசுவார்கள். அருணகிரிநாதர் கடவுளின் அவதாரம் என்பதைப் புரிந்து கொள்வார்கள் அருணகிரி யின் சிறப்பைக் கூட்டவும், உங்களுடைய நோயைத் தீர்க்கவும் இந்த வழியைச் சொன்னேன்.''

அருணகிரி உங்கள் குறையைத் தீர்ப்பாராயின், அவரை ஆயிரம் பாக்களால் உயர்த்திப் பாடுவேன். ஆனால் அருணகிரி நாதரை எங்கே தேடுவது என்றுதான் தெரியவில்லை. எந்தத் திசையில் ஆள் அனுப்புவது என்றுதான் புரியவில்லை.

சம்பந்தாண்டான் மிகவும் அக்கறை உள்ளவன் போல புலம்பினான்? சம்பந்தாண்டானை விட அரசன் மிக உண்மையானவன். ஆள் அனுப்பி அருணகிரிநாதரைப் பிடிக்க முடியாது என்பதை புரிந்து கொண்டான். தன் இருக்கையிலே அமர்ந்து கை கூப்பினான்.

''சத்குருவே. அருணகிரிநாதரே, என்னை ஆட் கொண்ட பெருமானே''கண்முன்னே எனக்கு கடவுளைக் காட்டிய கற்பகத் குருவே என் மனம் உங்களைப் பார்க்க



ஏங்குகிறது. என் உடல் தளர்ந்து நோயுற்றிருக்கிறது. மரணபயம் என்னைக் கவ்விக் கொண்டிருக்கிறது, மக்களுக்காக என்னால் எதையும் சரிவரச் செய்ய முடிய வில்லை.

எனவே, என் அரசே, இங்கு வருக என் ஆருயிர் குருவே விரைவில் வருக, கண்மூடி உள்ளுக்குள் கதறினான்.

திருவண்ணாமலையிலிருந்து வெகு தொலைவே சஞ் சரித்துக் கொண்டிருந்த அருணகிரிநாதருக்கு இது புரிந் தது.

அவர் வெகு விரைவாக திருவண்ணாமலையை அடைந்தார். அவருடைய நெருங்கிய தோழர்கள் அவரு டைய வரவை உணர்ந்தார்கள். அவர் இருக்குமிடம் நோக்கி ஓடி வந்தார்கள். நமஸ்கரித்தார்கள்.

அதுவரை எழுதிய பல திருப்புகழ் ஓலைச்சுவடிகளைத் தன் அடியார் செல்வநாயகத்திடம் அருணகிரிநாதர் கொடுத்தார். வணங்கியவர்களை வாயார வாழ்த்தி னார்.

அரசன் எப்படி இருக்கிறார் என்று விசாரித்தார்.

அரசரைப் பற்றியும் அரசவை பற்றியும் விவரங்கள் அவருக்குத் தெரிவிக்கப்பட்டன. சம்பந்தாண்டான் மறுபடி வந்திருப்பதைக் கேட்டு புன்னகை செய்தார்.

''நல்லது. நாம் போவோம், அரசவை நோக்கி'' என்று சொன்னார்.

மக்கள் திருவண்ணாமலைத் தெருக்களில் கூடினார் கள். அவர் நடக்க நடக்க மக்கள் மண்தரையில் விழுந்து வணங்கினார்கள். குழந்தைகளை நீட்டி தொடச் சொன் னார்கள்.

அருணகிரிநாதர் மிக நிதானமாக, ஆனந்தமாய் ஆசீர்வாதம் வழங்கிக் கொண்டு சென்றார்.

அருணகிரிநாதர் மனிதரே அல்ல. அவரைச் சுற்றி ஒரு தெய்வீக ஒளி மிளிர்கிறது. அவர் குரல் வீணையின் குரல்போல் இருக்கிறது. அவர் கண்கள் அருளை அள்ளி வீசுகின்றன.

அவர் தொடுதல் பிராணனை உசுப்புகிறது. அவர் மூச்சுக்காற்று நம்மை ஆரோக்கியமாக்குகிறது அவர் அருள் மொழிகள் வேதம்போல் இருக்கின்றன. நன்கு சிந்திக்க வைக்கின்றன. தெளிவு தருகின்றன.

திருவண்ணாமலை செய்த தவப்பயன் அருணகிரி இங்கே வந்து பிறந்திருக்கிறார். அருணகிரி நமக்கு வழி காட்டி. அவருடைய திருப்புகழ் நமக்கு கை விளக்கு.

ஒரு வீட்டில் விளக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் திருப்புகழ் பாடல்கள். ஒரு வீட்டில் திருப்புகழ் இருப்பின் பேய்பிசாசு அண்டாது. ஒரு வீட்டில் நாள் தவறாது திருப்புகழ் பாராயணம் செய்தால் எந்த வித துன்பமும் வராது.

திருப்புகழ் இந்து மதத்தின் எல்லா கடவுளர்களையும் அரவணைத்துக் கொண்டு ஒரு இல்லறவாசியின் நியாய மான எல்லா வேண்டுகோளையும் நிறைவேற்றச் சொல்லி முருகனிடம் யாசிப்பவை.

செல்வம் வேண்டுமென்றும். மனைவி வேண்டு மென்றும், ஞானம் வேண்டுமென்றும், புகழ் வேண்டு மென்றும், கல்வி அறிவு வேண்டுமென்றும், நல்ல சித்திகள் கைவர வேண்டுமென்றும், இறைதரிசனம் கிடைக்கவேண்டு மென்றும், நோய் நீங்கி உடல் பொலிவு பெற வேண்டு மென்றும், மழை வேண்டுமென்றும், நாட்டில் வளம் பெருக வேண்டுமென்றும், அன்னியர் பகை விலக வேண்டு



மென்றும் மனம் உருக வேண்டுபவை. அருணகிரிநாதர் வாக் கான திருப்புகழால் கேட்க பலிதமாகியவை.

ஒரே ஒரு திருப்புகழை மனனம் பண்ணி தினமும் சுத்த மனதோடு பாடி வந்தால் நினைப்பது கை கூடும். நல்லது நினைக்கத் தோன்றும். அருணகிரிநாதர் மக்கள் திரளோடு அரண்மனை நோக்கி வருவதை பிரபுடதேவ ராயன் சேவகர்களால் தெரிந்து கொண்டான். அரண் மனை வாசலுக்கு வந்தான்.

தொலைவிலே மக்கள் கூட்டம் 'கைத்தல நிறைகனி, அப்பமொடவல் பொரி' என்று பாடிக் கொண்டு வந்தது. ஆயிரம் பேர் குரலில் அந்தப் பாடல் வானத்தை எட்டியது.

மக்கள் வாய் நிறைய அந்தத் தமிழ் பாடலை அனுப வித்து பாடினார்கள்.

இளைஞர்களும், யுவதிகளும், கிழவர்களும் கிழவிகளும் மத்திய வயதுடையவர்களும், ஏழைகளும் பணக்காரர் களும், படித்தவர்களும், படிக்காதவர்களும் எந்த ஜாதி பாகுபாடுமின்றி நாம் முருகனின் அடியார்கள், அருணகிரி யின் அணுக்கத் தொண்டர்கள் என்கிற நினைப்போடு ஊர்வலம் வந்தார்கள்.

அது திரட்டப்பட்ட ஊர்வலமல்ல. தானாய் திரண்ட ஊர்வலம்.

காசு கொடுத்து இழுத்து வந்த மக்களல்ல. அவர் கனிவான பார்வை பட்டு கிறங்கிப்போன அன்பர் கூட்டம். வாசம் மிகுந்த தமிழ் கேட்டு வணங்கி நின்ற அன்பர் கூட்டம்.

சிறிதளவும் குரல் உயர்த்தாமல் தேல் முனையளவும் தவறான வார்த்தை சொல்லாமல், கம்பீரமாய், கனிவாய் வாழ்ந்த ஒரு மனிதனைப் பின்பற்றிய கூட்டம்.

அரண்மனை வாயிலில் நின்ற மன்னன் பிரபுடதேவராயன் மனைவி மக்களோடு நெடுஞ்சாண்கிடையாய் அவர் காலில் விழுந்தான்.

அருணகிரிநாதர் அவனைத் தூக்கி அணைத்துக் கொண்டார்.

''ஐயா, அருணகிரிநாதா, என்னை மன்னித்து விடுங்கள் ஐயா.'' தனியே ஒரு குரல் கேட்டது.

சம்பந்தாண்டானை நோக்கி திரும்பி தன் வலக்கை ஐந்து விரல்களையும் விரித்து அருணகிரி நாதர் காட்டினார்.

அது அபயக் கரம் அல்ல. அங்கேயே நில் என்று அதற்கு அர்த்தம்.

''மன்னா, உனக்கு என்ன துயர்.'' அவனோடு நடந்தபடியே அருணகிரிநாதர் விசாரித்தார்.

பிரபுடதேவராயன் தன் உடற்குறை சொன்னான்.

அருணகிரி நாதர் அவன் நாடி பிடித்துப் பார்த்தார்.

உடம்பின் எல்லா சக்திகளும் அசந்திருப்பது தெரிந்தது. அவன் முதுகைத் தடவிக் கொடுத்து உற்சாகப்படுத்தினார்.

''பாரிஜாத மலரைக் கொண்டு வந்தால் மறுபடி இளமை திரும்பும் என்று சம்பந்தாண்டான் சொல்கிறார். இது அவசியமா என்று எனக்குத் தெரியவில்லை, கொண்டு வர இயலுமா என்பது பற்றியும் புரியவில்லை. என் குறை தீருங்கள் என்று வெறுமே விண்ணப்பிக்கிறேன். எது உசிதமோ அதை நீங்கள் செய்ய வேண்டும்,'' அரசன் கை கூப்பினான்.

அருணகிரிநாதர் அரசனோடு அவைக்குள் புகுந்தார். அமர்ந்தார். யோசித்தார்.



இந்த திராவிட தேசம் மறுபடி மொகலாயர்களால் தாக்கப்படும். சூறையாடப்படும். அப்போது அதைத் தடுக்க, தாமதிக்க வைக்க, கோவிலின் செல்வங்களையும் சிலைகளையும் பாதுகாக்க வலுவுள்ள அரசன் தேவை. காப்பதற்கு சரியான க்ஷத்ரியன் இல்லாமல் தான் இந்த தேசம் அன்னியரால் அடிபட்டு விட்டது.

க்ஷத்ரியர்கள் முட்டாள்களாகவும், போகிகளாகவும், நய வஞ்சர்களாகவும், பேடிகளாகவும் போய் விட்டார்கள்.

க்ஷத்ரியர்கள் தங்களுக்குள் பகைத்துக் கொண்டு க்ஷத்ரியர் க்ஷத்ரியரை மணக்காமல் தாசிகளை ராணியாக்கினார்கள். க்ஷத்ரிய வம்சத்தில் கலப்புத் திருமணம் நடந்தது போல. வேறு எந்த வம்சத்திலும் நடக்கவில்லை. இந்தக் கலப்பினாலேயே க்ஷத்ரிய வம்சம் க்ஷீணமடைந்து விட்டது.

க்ஷத்ரிய வம்சம் க்ஷீணமடைந்ததால் தான் அன்னியர்கள் அட்டகாசமாய் உள்ளே நுழைந்து விட்டார்கள்.

இனி அன்னியர் வருகையைத் தடுக்க முடியாது. தாமதப்படுத்தலாம். மிகப்பெரிய கொள்ளைகள் நடக்காமல் தப்பிக்கலாம்.

இந்த அரசன் முக்கியம்.

இந்த தேசத்திற்காக முக்கியம்.

இந்த தேசத்தின் கலாச்சாரம் காப்பாற்றப்படுவதற்காக இவன் முக்கியம்.

மாடு தின்கிற அன்னியர்களை நாம் தடுத்தே ஆக வேண்டும்.

''மன்னா, நான் நிச்சயமாக உதவுகிறேன். பாரிஜாத மலரைக் கொண்டு வந்து தருகிறேன். இதனால்

எல்லோர் விருப்பமும் நிறைவேறும்.'' பதில் சொன்னார். எழுந்து கை கூப்பினார்.

அரசனை விட்டு வேகமாக வெளியே வந்தார்.

மக்களைக் கலைந்து போகச் சொல்லிவிட்டு திருக்கோயில் வளைகாப்பு மண்டபத்தில் போய் அமர்ந்து கொண்டார்.

அவரது அணுக்கத் தொண்டர்கள் விலகி நின்றார்கள்.

அவர்களைப் பார்த்து சிரித்தார். அருகே அழைத்தார்.

அவர்கள் வட்டமாக உட்கார்ந்து கொண்டார்கள்.

செல்வநாயகம் கலங்கிய கண்களோடு கை கூப்பினார்.

''என்ன செய்யப் போகிறீர்கள் பகவனே. இது நல்லதற்கா, கெட்டதற்கா என்றே தெரியவில்லையே. பாரிஜாத மலரை எடுத்து வருவது எளிதா. அதற்கு மனிதன் பறவையாய் மாற வேண்டும் என்று சொல்லப்படுகிறதே.''

''ஆமாம் ஐயா.'' வேறொருவர் இடையில் புகுந்தார். ''இமயமலையின் அடிவாரத்தில் மானஸரோவர் என்கிற மிகப்பெரிய ஏரி இருக்கிறது. குளிர் மிகுந்த அந்த இடத்தில் கந்தர்வர்களும் தேவர்களும் வாழ்கிறார்கள். தெய்வீக அன்னங்கள் உலாவுகின்றன.

அந்த ஏரியின் கரையில் இந்த மலர்கள் இருக்கின்றன. ஒரு கிளிக்கு இந்த மலரின் அருமை தெரியாது. ஆனால் மனிதனுக்குத் தெரியும். அந்த ஏரிக்கு அருகே வெப்ப தேசத்திலிருந்து கிளிகள் தான் போக முடியும். அங்குள்ள அன்னங்கள் கூட இங்கு வரமுடியாது. வந்தால் இறந்து விடும்.

எனவே, ஒரு மனிதன் கிளியாய் உருவெடுத்து அம்மலரைப் பறித்து வந்து இங்கே போட வேண்டும்.



போட்டு விட்டு மறுபடியும் மனிதராய் உருவெடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறதே''

''உண்மைதான்'' அருணகிரிநாதர் பதில் சொன்னார்.

''மனிதன் கிளியாய் உருவெடுப்பது எப்படி?''

''கூடுவிட்டு கூடு பாய்தல்.''

''கூடுவிட்டு கூடுபாய முடியுமா ஸ்வாமி.''

''முடியும்.''

''எவ்விதம் என்று எங்களுக்கு விளக்குவீர்களா. பகவன்?''

''விளக்குகிறேன். புரிந்து கொள்ள முயற்சியுங்கள்''

''தோலும் நரம்பும், தசையும் கூடியது ஸ்தூலசரீரம். இதைத்தான் அருணகிரிநாதர் என்று சொல்லுகிறீர்கள். நீங்கள் கூப்பிட நானும் திரும்புகிறேன். மனிதனுடைய இந்த சரீரத்துக்குக் கீழே சூட்சம சரீரம் இருக்கிறது. அந்த சூட்சம சரீரம் இந்த ஜென்ம வாசனையைக் கொண்டது.

இந்த சூட்சம சரீரம் மனோ சக்தியால் ஆனது.

இந்த ஜென்மத்தில் நான் யார்?

ஒரு புலவன். கவிபாடும் திறமையுள்ளவன். எனவே அந்த மனோசக்தி இங்கு நிகழ்ந்தவை அனைத்தையும் நினைவில் வைத்திருக்கும். என் ஸ்தூல சரீரம் போலவே என் சூட்சம சரீரம் அளவும் இருக்கும்.

அந்த சூட்சம சரீரத்தின் கீழே இருப்பது காரண சரீரம் இந்தக் காரண சரீரத்திற்குப் பல வாசனை உண்டு.

நான் புல்லாய், புழுவாய், பூண்டாய், பல்வேறு மிருகங்களாய், பறவையாய் வெவ்வேறு தேசத்தில் வெவ்

வேறு மனிதனாய் பிறந்த வாசனையெல்லாம் அந்தகாரண சரீரத்தில் இருக்கும்.

இந்த மனோசக்தி அதாவது சூட்சும சரீரம், நல்லவனாகவோ கெட்டவனாகவோ, மூடனாகவோ, கெட்டிக்காரனாகவோ இருக்க இந்த வாசனைகள் காரணம், எத்தனையோ ஜென்மத்து வாசனைகள் ஒன்றாய் கலந்து என் சூட்சும சரீரத்தைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. அது ஸ்தூல சரீரத்திலும் வெளிப்படுகிறது. அந்தக் காரண சரீரத்திற்கும் கீழே இருப்பது பிராணன்.

இந்தப் பிராணனுக்கு குணமில்லை. ஆனால் அதற்கு நெருக்கமாய் மனம் இருக்கிறது.

மனம் அடங்க பிராணன் அடங்கும் பிராணன் அடங்க மனம் அடங்கும்.

இந்தப் பிராணன் மனதைத் தாக்கிக் கொண்டு அலைகிறது. அல்லது மனம் பிராணனைச் சுற்றிக் கொண்டிருக்கிறது என்றும் சொல்லலாம்.

ஒருவன் இறக்கும் போது அதாவது பிராணன் உடலை விட்டு வெளியேறும் போது பிறந்ததிலிருந்து இறக்கும் தருணம் வரை மனம் தன்னைப் பற்றி முழுவதுமாக யோசித்துப் பார்க்கிறது. மடமடவென்று எல்லா விஷயங்களும் ஞாபகத்திற்கு வருகின்றன. பல ஜென்ம வாசனைகள் மின்னலெனத் தோன்றுகின்றன.

அப்படி மனம் யோசித்தவற்றில் எதை மனம் அதிகம் விரும்புகின்றதோ அதுவாகவே பிராணன் மறுபடி பிறக்கிறது.

நாயைக் கல்லால் அடித்தது நினைவுக்கு வந்து அதை முக்கியமாகக் கருதினால் மறுபடி நாயாய் பிறக்கிறது.

போர் செய்து ஜெயித்ததை முக்கியமாக கருதினால் மறுபடி போர் வீரனாக பிறக்கிறது.



கவிதையை முக்கியமாக கருதினால் மறுபடி கவிஞனாகப் பிறக்கிறது. பெண்போகம் முக்கியமாகக் கருதினால் மறுபடி பெண் பித்தனாக பிறக்கிறது.

மனமற்றுப் போகத்தான் இறைவழிபாடு.

மனமற்றுப் போகத்தான் சரணாகதி.

மனமற்றுப் போகத்தான் பூஜைகள், புனஸ்காரங்கள் ஜெபதபங்கள், வேள்விகள்.

மறுபடி சொல்கிறேன். மனம் அடங்க பிராணன் அடங்கும்.

பிராணன் அடங்குவது என்பது பிறவியற்றுப்போவது. அண்டப் பெருவெளியில் உள்ள சக்தியோடு கலப்பது.

அப்படி பிராணன் பரம்பொருள் சக்தியோடு கலக்காதபடி மனோசக்தி இழுக்கிறது.

மனதை நாசப்படுத்துவதே முக்கியம் மனிதனின் வாழ்க்கை நோக்கம். வாழ்க்கை மீது விருப்பம் வைத்தால் மனம் நாசமடையாது. ஆத்திரம், கோபம், பொறாமை போன்ற குணங்கள் மனோசக்தியை தடித்துப் போகச் செய்துவிடும் தடித்த மனோசக்தியை அழிக்க பல பிறவிகள் எடுக்க வேண்டும்.''

''ஐயா இந்தக் கூடு விட்டுக் கூடு பாய்வது... ''செல்ல நாயகம் மெல்ல இழுத்தார்.

''அதைத்தான் சொல்ல வருகிறேன். நான் என் பிராணனை என் மனோசக்தியோடு வேறு ஒரு உடலுக்குள் புகுத்திக் கொள்வேன். ஒரு பறவைக்குள்புகுந்துகுதிப்பாய் இளமையான ஒரு கிளிக்குள் புகுந்து வடக்கே நெடுந்தூரம் பயணம் செய்து பாரிஜாத மலரைப் பறித்து மறுபடி திருவண்ணாமலைக்கு திரும்புவேன்.''

''இதைச் செய்வது கடினமா பகவன்.''

அருணகிரிநாதர் கேள்விக்கு சிரித்தார்.

''உயிர் போகும் போது வலி இருக்குமா ஸ்வாமி'' இன்னொருவர் கேட்டார்.

''சில கணங்கள் ஆயிரம் தேள்கள் கொட்டின வலி இருக்கும். உடம்பு பிராணனை விடாது அலறும். ஓயென்று அழும் உள் அவயங்களின் அழுகை, அலறல் வலியாய் வெளிப்படும். அந்த அவயங்கள் வலியை ஏற்படுத்தி பிராணனை மிரட்டும். ஆயினும் தாங்கிக் கொண்டு பிராணனை வெளியே அனுப்ப வேண்டியதுதான்.''

''பிராணனை எது வெளியே இழுக்கும்.''

''மனம்.''

''எப்படி பகவன்.''

''என் மனம் பிராணனை வெளியே அனுப்பும் அளவுக்கு பக்குவப்பட்டு விட்டது. போ என்று என் மனம் கட்டளையிட்டு விட்டால் வெளியே போக வேண்டியது தான். வா என்று கட்டளையிட்டால்வந்துபுகுந்திகொள்ள வேண்டியதுதான்.''

''பகவன், இது எல்லோருக்கும் சாத்தியமா.''

''இறையருள் இருப்பின் சாத்தியம்.''

''இது எப்போது நடக்கப் போகிறது ஐயா.''

''இன்றிரவு.''

''எங்கே நடக்கப் போகிறது ஐயா.''

''ரகசியமான இடத்தில்.''

''நாங்களும் அறியக் கூடாதா.''

''உங்களால் அந்தக் காட்சியைத் தாங்க முடியாது.''

''ஐயா, திரும்பி வந்து விடுவீர்களா.''

''இறையருள் இருப்பின் வருவேன்.''



''நீங்கள் வராது போவதும் நடக்குமோ பகவன்.''

''இறை விருப்பம் அதுவாயின் அதுவும் சரியே.''

''தயவு செய்து எங்களுக்காக வந்து விடுங்கள் ஐயா.''

அவர்கள் கை கூப்பினார்கள்.

''பிரச்சினையை இறைவனிடத்தில் ஒப்படைத்து விட்டு நாம் அவன் கருவிகளாகவே இருப்போம்.''

அருணகிரிநாதரும் மேலே பார்த்து கைகூப்பினார் அங்கு முருகன் சிரித்தான்.

அந்த இடத்தில் கூடியிருந்த அனைவரும் இறைவனின் வருகையை உணர்ந்தார்கள் அமைதியாய் இருந்தார்கள்.

நடுநிசிக்குப் பிறகு அருணகிரி எழுந்தார். மண்டபம் விட்டு வெளியே வந்தார். அவர்களை தொடர வேண்டாம் என்றுகை காட்டினார். தூங்குங்கள் என்று கை விட்டு கட்டளையிட்டார்.

அவர்கள் மந்திர சக்திக்குக் கட்டுப்பட்டது போல தூங்கினார்கள்.

அருணகிரிநாதர் மனம் முழுவதும் இறை உணர்வு ததும்பிநிற்க மேற்கு கோபுரத்திற்கு வந்தார். சில நொடி களில் மேலேறினார். இரண்டாவது மாடத்தில் உட் கார்ந்து கொண்டு கண்மூடி முருகனைத் தியானித்தார். அவர்மனம் வெளியேறி நின்றது. பிராணனை வா என்று அழைத்தது.

பிராணன் முறுக்கி நகர உள் அவயங்கள், வெளி அவயங்கள் விஷக்கடுப்பு பட்டதுபோல் வலியில்துடித்தன. இந்த முயற்சியைக் கைவிடு என்று பிராணன் மனதை பய முறுத்தியது. மனம் வலியைப் பொறுத்துக் கொண்டது. முழு அவஸ்தையையும் நிதானமாய் ஏற்றுக் கொண்டது.

பிராணன் மெல்ல வெளியே வந்ததும் பற்றிக் கொண்டது. உடல் சரிந்து விழுந்தது.

அந்த நிலைக்குமேல் நிலையில் ஒரு இளம் கிளி செத்து கிடப்பதை மனம் கவனித்தது. பிராணனை அதற்குள் புகுமாறு கட்டளை இட்டது. பிராணன் மனதோடு கிளிக்குள் புகுந்து கொண்டது. கிளி கண்களை உருட்டி எழுந்தது.

கோபுரப் பிறையிலிருந்து திருவண்ணாமலையைப் பார்த்தது. மறுபக்கம் போய் மலையை வணங்கியது.

நண்பர்கள் தூங்கும் மண்டபத்திற்கு போய் அவர்களைச் சுற்றி ஆசிர்வதித்தது. நண்பர்கள் கிளியின் சப்தம் கேட்டு புரண்டு படுத்தார்கள்.

கிளி அந்த இடம்விட்டு ஜிவ்வென்று எழும்பியது. கோவிலையும், மலையையும், ஊரையும் வலம் வந்தது. தேரடி மண்டபத்தின் உச்சியில் சற்றுநேரம் இளைப்பாறியது. உயரக் கிளம்பி வடக்கு நோக்கி வேகமாய் பறந்தது.

போகும்போது 'சம்பந்தாண்டான்' என்று ஒரு குரல் கொடுத்தது.

தூக்கத்திலிருந்த சம்பந்தாண்டான் திடுக்கிட்டு எழுந்தான். கை கால் அலம்பி மந்திரஜபம் செய்தான். பேய்களை அழைத்து என்ன நடந்தது என்று கேட்டான்.

பேய்கள் நடந்ததைச் சொல்லின. உடம்பு இருக்கும் இடத்தை அவர் மனக்கண்ணில் காட்டின.

இரவோடு இரவாக சம்பந்தாண்டான் கோவிலுக்கு ஓடினான். கோபுரத்தில் ஏறினான்.

அருணகிரிநாதரின் ஸ்தூல சரீரத்தைப் புரட்டிப் பார்த்தான். இறங்கி அரண்மனை வாசலுக்கு ஓடினான். விடியும்வரை காத்திருந்தான்.



விடிந்தபிறகு அரசனிடம் போய் அரசே அருணகிரிநாதர் நம்மையெல்லாம் விட்டு விட்டுப் போய்விட்டார் என்று கதறினான். அவர் உடம்பு அழுகத்துவங்கிவிட்டது. கோவிலில் அழுகிய உடம்பு இருப்பது தகாது என்று கூறினான்.

அரசன் அலற, அவன் ஊழியர்கள் கோபுரத்தின் உச்சியிலிருந்து அருணகிரிநாதரின் ஸ்தூலசரீரத்தை இறக்கினார்கள். அதை உற்றுப்பார்த்த சம்பந்தாண்டானுக்கு அவர் மூலாதாரத்திலிருந்து வெள்ளிக்கம்பி போன்ற ஒரு சக்தி அவர் மனோசக்தியோடு இணைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தான்.

கிளியாய் பறந்து கொண்டிருந்த அருணகிரி நாதருக்கு திருவண்ணாமலையில் நடக்கும் விஷயங்கள் தெள்ளெனத் தெரிந்தன.

சட்டென்று கிளி உடம்பை உதுத்து விட்டு சொடுக்கு நேரத்தில் தன் உடம்புக்குள் அவர் போய்விட முடியும். அப்போது பாரிஜாத மலர் பறிக்கும் முயற்சி தடைப்பட்டுப்போகும்.

மறுபடியும் பரகாயப் பிரவேசம் அதாவது கூடுவிட்டுக் கூடு பாய்தல் உடனே செய்ய இயலாது. பாரிஜாத மலர் உடனே வரவில்லையென்றால் அரசன் நோய்ப்பட்டு இறந்து போவான்.

அவன் நோய்ப்பட்டு இறந்தால் இந்த தமிழ் தேசம் சம்பந்தாண்டான் போன்ற கேவலமான பிறவிகள் கையில் சிக்கிச் சீரழியும், ஜனங்கள் பெரும் அவதிக்கு உள்ளாவார்கள்.

எனவே கிளியாகவே தொடர்ந்து பயணப்படுவது நல்லது. இறைவன் திருவருள்படி என்ன நடக்க வேண்டுமோ அது நடக்கட்டும்.

மானஸரோவர் நதிக்கரையில் அருணகிரிநாதர் கிளியாக இறங்கினார்.

அவர் ஸ்தூல சரீரம் நீராட்டப்பட்டது.

அடர்ந்த காடுகளில் பாரிஜாதம் மலர்தேடி அலைந்தார்.

அவர் ஸ்தூல சரீரம் சிதையில் வைக்கப்பட்டது.

பாரிஜாத மலரைக் கண்டு அதை வணங்கி வன தேவதைகளின் அனுமதி பெற்று ஒரே ஒரு பூவைப் பறித்தார்.

அவர் சரீரம் எரியூட்டப்பட்டது.

அந்த எரியூட்டலைத் தடுக்க அருணகிரிநாதன் அன்பர்கள் பலவேறுவிதமாய் முயன்றார்கள்.

சம்பந்தாண்டான் மிக தந்திரமாக வாதம் செய்தான்.

ஒருவன் கோவிலில் விழுந்து இறந்து போனால் அவன் உடம்பு தகனமாகும்வரை கோவிலுக்குத் தீட்டு உண்டு. தகனம் முடிந்தால்தான் கோவிலை அலம்பிவிட முடியும். தகனம் முடிக்க முடியும். தகனம் முடியவில்லையெனில் தீட்டுக் கழியவில்லை என்று அர்த்தம்.

தீட்டுக் கழியவில்லையென்றால் பூஜை நடக்காது. பூஜை நடக்காத ஒவ்வொருநாளும் ஒரு வருட பாவத்தை ஊருக்குக் கொடுக்கும் மழையின்மை வரும். நோய் நொடி பரவும். அரசனுக்கு ஆபத்து ஏற்படும்.

அருணகிரிநாதர் கூடுவிட்டுக் கூடுபாய்ந்தாரா செத்துப் போனாரா. யாருக்குத் தெரியும். அப்படி கூடுவிட்டுக் கூடு பாய்ந்தால் உடலை அரசனிடம் ஒப்படைத்துவிட்டு போயிருக்கலாமல்லவா...அல்லது சம்பந்தாண்டானிடம் ஒப்படைத்துவிட்டு போயிருக்கலாமல்லவா.''

பேசிப் பேசி அவன் மனதை மாற்றினான்.



அரசன் பயந்து போய் அருணகிரிநாதரின் ஸ்தூல சரீரத்தை தகனம் செய்ய உத்தரவிட்டான்.

சிதை பற்றி எரிந்தது.

அருணகிரிநாதரின் ஸ்தூல சரீரம் சாம்பலாயிற்று. கிளி அலகில் பாரிஜாத மலரோடு ஊர் திரும்பிக் கொண்டிருந்தது.

மறுநாள் அஸ்தி பாலில் சமனம் செய்யப்பட்டபோது அரசன் வாசலுக்கு கிளி வந்து நின்றது.

அரசன் மடியில் பாரிஜாத மலரைப் போட்டது. பாரிஜாத மலரை அரசன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

கண்கள் ஒளி பெற்றன.

மலரை முகர்ந்தான்.

உடம்பு வலுவாயிற்று.

இறைவன் பெயரைச் சொல்லி மலரை அப்படியே விழுங்கினான்.

சாறு அப்படியே உடம்பில் இறங்கி அவனுக்கு இளமை திரும்பியது.

''என் கடமை முடிந்தது மன்னா.'' கிளி பேசியது.

மன்னன் திடுக்கிட்டு எழுந்தான். ''ஐயா, உங்கள் உடம்பை இந்தப் பாவி எரித்து விட்டானே'' என்று கதறினான். நடந்ததை புலம்பிப் புலம்பிச் சொன்னான்.

கிளியாக இருந்த அருணகிரிநாதர் ''இறைவன் திரு உள்ளம், இறைவன் திரு உள்ளம் என்று கூறிவிட்டு தன் அன்பர்களுக்கு மத்தியில் அமர்ந்து கொண்டார்.

''ஐயனே, எல்லாம் தெரிந்த உங்களுக்கு ஏன் இந்தக் கதி. எதனால் இந்த வேதனை. இந்தச் சூழ்ச்சியை உங்களால் ஏன் தடுக்க முடியாமல் போயிற்று. ''அன்பர்கள் நெஞ்சில் அறைந்து கொண்டு அழுதார்கள்.

"நான் வந்த வேலை முடிந்து விட்டது அன்பர்களே. அருணகிரிநாதர் என்ற பிறவியிலே நான் பல தீங்குகள் செய்திருக்கிறேன். அதனால் நான் இன்னொரு பிறவி எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் கிளி பிறவியே எனக்கு கடைசிப் பிறவி. இனி பிறவியில்லை. என் எல்லா ஜென்மங்களும் என் நினைவில் இப்போது நிழலாடுகின்றன.

அந்த ஜென்மங்களின் வல்வினை தீர, முருகன் மீது கந்தரனுபூதி என்ற பாட்டைப் பாடப் போகிறேன். அதைத் தவறு செய்து குறித்து வைத்துக் கொள்ளுங்கள். பிறவி அறுக்கும் பாக்கியத்தை அந்தப் பாடல் படிப்பவருக்கு கொடுக்கும்.

கந்தரனுபூதி பாடிய பிறகு இந்த உடம்போடே இந்தக் கிளி வடிவத்தோடே நான் இறைவனோடு கலப்பேன்" என்று சொன்னார்.

அன்பர்கள் அழுதார்கள்.

கந்தரனுபூதி பாடினார்.

அன்பர்கள் ஓலையில் எழுதிக் கொண்டார்கள்.

தனக்கு நெருக்கமான ஒவ்வொரு அன்பரையும் தனித் தனியாக வாழ்த்தி விட்டு அண்ணாமலையாரை தரிசனம் செய்தார், உண்ணாமலை அம்மையை சுற்றி வந்து வணங்கினார்.

அன்பர்கள் எல்லோரும் பார்க்கும் போதே உண்ணாமலை அம்மையின் கையில் போய் உட்கார்ந்தார். மறைந்தார்.

அன்பர்கள் கதறினார்கள்.

அவர் கொடுத்த திருப்புகழை உரத்துப் பாடினார்கள். தெளிந்தார்கள்.

அவரை வாயார துதித்தார்கள்.



அரசன் சம்பந்தாண்டான் மீது கடும் கோபம் கொண்டான். அடித்துத் துரத்துமாறு படை வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

படை வீரர்களை முந்திக் கொண்டு பொது மக்கள் சம்பந்தாண்டானைப் பிடித்துக் கொண்டார்கள். கண்ட மேனிக்கு தாக்கினார்கள். குற்றுயிரும் குலை உயிருமாய் வண்டியில் போட்டு ஊர் எல்லையில் வீசி விட்டு வந்தார்கள். பற்கள் உடைபட்டு நாக்கு அறுபட்டு கண்கள் குருடாக்கப்பட்டு, கால் விரல்கள் நசுக்கப்பட்டு சம்பந்தாண்டான் ஊர்ந்து ஊர்ந்து ஊர் விட்டு வெகு தூரம் போனான்.

அருணகிரிநாதரின் அன்பர்கள் திருப்புகழைப் பல படிகள் எடுத்து ஊர் முழுவதும் பரப்பினார்கள்.

இல்லறம் தான் நல்லறம் என்று தெளிவாய் புரிந்து கொண்டு குருவாதிகளிடமிருந்தும் விலைமாதர்களிடமிருந்தும் விலகியிருந்தார்கள்.

மனைவி மக்களை நேசித்து, ஒற்றுமையாய் வாழ்ந்து, இறை வழிபாடு செய்வதே தவம் என்று தெரிந்து கொண்டார்கள்.

அருணகிரிநாதரின் கொள்கைதான் பழந் தமிழர் கொள்கை.

அருணகிரிநாதரால் அந்தக் கொள்கை தமிழ்நாட்டில் புதுப்பிக்கப்பட்டது.

இல்லறமல்லது நல்லறமன்று.

**முற்றும்**

# வாலிப வேடம்

பூமி நீர்குடித்து ஒளி உறிஞ்சி தன்னுள் ஏற்பட்ட இரசாயன மாற்றத்தைத் தாவரங்களுக்கு அனுப்ப, வயல்களில் நெற்கதிர்கள் மதாளித்துக் கிடந்தன.

தமிழ்நாட்டில் வேறெங்கும் இப்படி ஒரு பச்சை பார்க்க முடியாது. வண்டல் மண் மிகுந்த தஞ்சையில் தான் இந்தத் தனிப்பட்ட பச்சை கிடைக்கும்.

ஆடுதுறையிலிருந்து திருமங்கலக்குடிக்கு சைக்கிளில் போவது தான் உலகத்திலேயே மிகப்பெரிய சந்தோஷம். அதுவும் ஐப்பசி பருவ மழை முடிந்து கார்த்திகை சரக்காற்றில் காலை நேரம் போவதுதான் சந்தோஷம்.

பட்டணத்தில் நிறைய தவறுகள் இருக்கின்றன. பட்டணத்தில் மிகப்பெரிய தவறு காற்று. ஒரு சிக்னலில் நிற்கும் போது மூச்சு அடைத்து குப்பென்று வேர்க்கிறது. இத்தனை பெட்ரோல் புகையை ஒருவன் சுவாசித்தால் ஐம்பது வயதில் நோய்ப்படுவான். செத்துப் போனால் கூட பரவாயில்லை. நுரையீரல் கெட்டு இருதயம் சுருங்கி நரம்புகள் தளர்ந்து வீட்டிற்கு பாரமாய் இருக்கிற மனிதர்கள் அதிகமாய் இருப்பார்கள். ஆரோக்கியமான கிழவர்கள் அறவே இருக்கமாட்டார்கள்.

ஒரு மனிதன் ஆரோக்கியமாகவும், வயசாளியாகவும் இருப்பதுதான் அழகு. எத்தனை வயதானாலும் இடுப்பு வேட்டியை மடித்துக் கொண்டு இந்த ஆடுதுறைச் சாலை



யில் நடப்பதுதான் சந்தோஷம். வயதாக வயதாக ஆரோக்கியம் கூட வேண்டும். அந்த ஆரோக்கியத்தை சரியான முறையில் செலவு செய்ய வேண்டும். தன் ஆரோக்கியத்தால் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

ஒரு ஆரோக்கியமான கிழவர் கப்பல் கேப்டன் போல வாழ வேண்டும். வீடு முழுவதையும் நிர்வாகம் செய்ய வேண்டும். ஊருக்கு நீதி சொல்ல வேண்டும். மூன்றாம் தலைமுறைக்குப் புத்தி சொல்லி வழிகாட்ட வேண்டும்.

தொண்ணூறு வயது வரை நடமாடி விட்டு அதற்குப் பிறகு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து மந்திர ஜபம் செய்கிற ஆளாய் மாறிவிட வேண்டும். படியேறி யாரும் வந்தால், காலில் விழுந்து வணங்கினால், மனப்பூர்வமாக இந்த உலகம் வாழட்டும் என்பது போல் வணங்கியவர்களை வாழ்த்த வேண்டும். இன்னார் இனியார் என்கிற பாகுபாடு இல்லாமல் போய்விட வேண்டும். ஜாதி சடங்குகளை எட்டி உதைத்து விட்டு ஆச்சாரங்களையெல்லாம் அறவே மறந்து விட்டு தலை வருடி, முதுகு தடவி, கன்னம் வழித்து ஆசீர்வாதம் செய்ய வேண்டும்.

அந்த ஒரு தொடலில் வந்தவன் நடுங்க வேண்டும். மலர்ந்து நிற்க வேண்டும்.

''உனக்கு வேலை கிடைக்கும் போ. பயப்படாதே... போ என்று ஆசீர்வதித்தால் வேலை கிடைக்க வேண்டும் கல்யாணம் ஆகும் என்றால் கல்யாணமாக வேண்டும்.

அப்படி பலித்தால்தான் தொண்ணூறு வயது வரை வாழ்ந்ததற்கு அர்த்தம்.

ஆடுதுறை பக்கம் அமைதியாக வாழ்ந்தவர்கள்தான் தொண்ணூறு வயது வரை உயிரோடு இருக்க முடியும்.

முரளி தன்னுடைய ராலே சைக்கிளை மெல்லமிதித்துக் கொண்டு வாழ்க்கையைப் பத்தி ஒரு தொலைதூரப் பார்வையோடு தன் ஊர் நோக்கிப் போனான்.

அவனுக்கு ஊர் திருமங்கலக்குடி. அவனுக்கு வேலை இடம் ஆடுதுறை. ஆடுதுறையில் ஒரு தனியார் உரக்கம்பெனி நெல், வாழை, கரும்பு பரிசோதனை மையம் வைத்திருக்கிறது. அந்தப் பரிசோதனை மையத்தில் ஆறு விஞ்ஞானிகள் வேலை செய்கிறார்கள். அந்த விஞ்ஞானிகள் நிறைய படித்தவர்கள் வெளிநாடுகளில் பல வருடங்கள் வாழ்ந்து வேலை கற்றவர்கள்.

தஞ்சை மாவட்டம் தான் உயரத்திற்கு நல்ல வியாபார இடம் தமிழ்நாட்டுப் பயிர்களுக்கு என்ன உரம் தேவை, என்ன உரம் தேவையில்லை என்பதை இந்த விஞ்ஞானிகள் தான் முடிவு செய்கிறார்கள். அந்த விஞ்ஞானிகளில் நாலு பேர் தமிழர்கள். எப்போதுமே தானரம் பற்றிய சிந்தனையில் இருப்பவர்கள். இரண்டு பேர் தெலுங்கர்கள். அவர்களுக்கு உதவி செய்ய ஒரு ஜெனரல் மேனேஜர், ஒரு உதவி மேனேஜர், மூன்று குமாஸ்தாக்கள், மூன்று ஸ்டெனோகிராபர்கள். நான்கு பியூன்கள் அடங்கிய பட்டாளம் இருந்தது.

இது தவிர கார் டிரைவர்களும் வயல் வேலை செய்கிற கூலிகளும் இருந்தார்கள்.

சென்னையிலுள்ள குமாஸ்தாவுக்கு உரக் கம்பெனி என்ன சம்பளம் கொடுத்ததோ அதை இங்கேயும் கொடுத்தது. ஆனால் திருமங்கலக் குடியில் வாழ்கிற ஒருவருக்கு ஆறாயிரம் ரூபாய் சம்பளம் மிக அதிகம். இது கடவுள் தந்த வரம். திருமங்கலக்குடி தெய்வமான மங்களாம்பிகாவின் ஆசீர்வாதம்.

பல விஷயங்கள் முரளிக்கு அதிர்ஷ்டகரமாகவே கிடைத்தன. இந்த ராலே சைக்கிள் கூட அதிர்ஷ்டம்



தான். இது முப்பது வருடத்திய ராலே சைக்கிள் நீயே வச்சுக்க, எனக்கொண்ணும் காசுதர வேண்டாம் என்று ஒரு குமாஸ்தா கொடுத்து விட்டு போனார். முன்னூத்து ஐம்பது ரூபாய் செய்து வீல் மாற்றி, கோன் பேரிங் மாற்றி டயர், ட்யூப் மாற்றி வலதுபக்கம் பெடல் கட்டையை மாற்றிய பிறகு சைக்கிள் வெண்ணெய்மாதிரி இயங்குகிறது.

வேலைக்குச் சென்ற பத்தாம் நாள் கிடைத்த அற்புதமான வண்டி இது. அலுவலகத்தில் இங்கே அங்கே போய் வர பயணப்படி தருவார்கள். அதைச் சேர்த்து வைத்து இந்த சைக்கிளுக்குச் செலவு பண்ணுகிற போது வீட்டுக்குப் போய் வருதல்கூட எளிதாகி விட்டது. சனி, ஞாயிறு கிழமைகளில் வெளியே அலைவதற்கு சௌகர்யமாக இருந்தது.

திருமங்கலக்குடியிலேயே வீட்டுக்கும், கோயிலுக்கும் போய் வர வசதியாக இருந்தது.

திருமங்கலக்குடி அக்ரஹாரத்தில் எதையும் சட்டென்று கடன் கேட்பார்கள்.

''செத்த சைக்கிளக் குடேன். ஆடுதுறை போயிட்டு வந்துடறேன்'' என்று விடிகாலையில் வந்து நிற்பார்கள்.

''இது ஆபீஸ் சைக்கிள் ஆடுதுறைல யாராவது பார்த்தா எனக்கு வேலை போயிடும்'' முரளி கோபமாக மறுப்பான்.

''ஆமாம் பெரிய ஆபீசுக்காரு. அத ஆடுதுறைல நீக்க வச்சா அடடா முரளி வந்திருக்கானான்னு எல்லாரும் கேட்கபோறா கொடுறா.''

''ஸாரி. சைக்கிள் மட்டும் கேட்காதீங்கோ.'' முரளி மறுத்து விடுவான்.

அக்ரஹாரம் அவனை முறைக்கும்.

அலட்சியப்படுத்துவான்.

ஆயிரத்துக்கும் ரெண்டாயிரத்துக்கும் திருமங்கலக் குடியில் வாழ்ந்தவர்கள் சென்னையில் நாயாய் அலைந்து கொண்டிருக்கையில், ஊர் வாசலிலேயே உத்தியோகமும் ஆறாயிரம் ரூபாய் சம்பளமும் அவர்கள் கண்களை உறுத்தின.

ஆனால், முரளிக்கு அந்த உரக்கம்பெனி ஆடுதுறை டிவிஷனில் வேலை கிடைக்க காரணம் தமிழ் சுருக்கெழுத்து.

''எதுக்கு தமிழ் ஷார்ட்ஹேண்ட் படிக்கறே. இதுக்கு கவர்மெண்ட்ல தானேவேலை கிடைக்கும். நீயோ பிராமணன், கவர்மெண்ட் வேலை சுத்தமா கிடைக்காது. எதுக்கு இது படிக்கறே. லொங்கு லொங்குன்னு நடந்து ஆடுதுறை போய் தமிழ் சுருக்கெழுத்து படிக்கறதுக்கு ரெண்டு எருமை வாங்கி மேய்க்கலாம்.'' அக்ரஹாரத்து திண்டு பேப்பர்கள் அலட்டிக்கொள்ளும்.

ஆனால், தெய்வக் கட்டளையைக் கேட்டு நடப்பது போல எல்லா கேலிக்கும் நடுவே தமிழ் சுருக்கெழுத்து ஹையர் எழுதித் தேறினான்.

எட்டு வருடங்கள் முன்பு ஆடுதுறை விஞ்ஞானி. எழுபது பேரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க முயற்சித்த போது இவன் தமிழ் சுருக்கெழுத்து சான்றிதழ் பார்த்து விட்டு திகைத்தார்.

''எதுக்கு தமிழ் ஷார்ட்ஹேண்ட் படிச்சே.''

''இங்கிலீஷை விட தமிழுக்கு நல்ல எதிர்காலம்இருக்கு சார். அரசாங்க வேலை கிடைக்காட்டிகூட பரவாயில்லை சார். எங்கயாவது கூட்டத்துக்கு போனா அல்லது பெரிய தமிழ் அறிஞர்கள் கிட்ட போனா ஒரு பக்கத்துக்கு இவ்வளவுன்னு சம்பாதிச்சுடலாம்.''

''அப்படியா. நான் ஒருபக்கம் படிக்கிறேன். நீ தமிழ் சுருக்கெழுத்து எழுதி மறுபடி படிப்பியா.''



அவர் வேகமாகப் படித்தார். அவன் கவனமாக எழுதிக் கொண்டான். திரும்ப தெளிவாகப் படித்தான். ''சபாஷ் இந்த உரக்கம்பெனி நெல்லு பத்தி, கரும்பு பத்தி வாழைப் பத்தி இன்னும்பல வகை தாவரங்கள் பத்தி விவசாயிகளுக்கு புரியறவிதமா நிறைய புஸ்தகம் போடப் போறது. விவசாயிகளுக்கு புரியணும்னா எளிமையான தமிழ்லதான் போடணும். நானும் இன்னொருத்தரும் தான் இதுக்கு இன்சார்ஜ்.

எங்க லேப் ஒர்க் தவிர மற்ற வேலையெல்லாம் இந்த பரிசோதனைக் கூடத்துல தமிழ்ல இருக்கணும்னு ஆசைப் படறேன். விவசாயப் பண்ணைய இங்கிலீஷ்ல பேசினா யாருக்கு லாபம். நீ வேலைக்கு சேர்ந்துரு. லீவு போடக் கூடாது. சனிக்கிழமை ஞாயித்துக் கிழமைகளில் கூப்பிட்டாக்கூட நீ வரணும்.''

முரளி சந்தோஷத்தில் புளித்த கழுநீர் குடித்தமாடு போல் தலையாட்டினான்.

ஒரு வருடத்தில் வேலை உறுதியாயிற்று. சம்பளம் பகோர் என்று கூடியது. திருமங்கலக் குடியிலேயே தன்னுடைய இருபத்துமூன்றாவது வயதில் லட்சரூபாய்க்கு நான்கு கட்டு ஓட்டு வீட்டை முரளிகடன் பத்திரத்தில் கையெழுத்து போட்டு விட்டு வாங்கினான். அலுவலகத்திலேயே கடன் வாங்கி ஆறு வருடத்தில் அடைத்தான்.

உலகம் பற்றிமிக அமைதியாய் சிந்திக்க முரளிக்கு அவனது இருபத்தெட்டு வருடத்திலேயே சாத்தியமாயிற்று. தமிழ் நாட்டில் பல இளைஞர்கள் எந்த திசையை நோக்கி எப்படிப் பயணப்படுவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கையில் முரளி தன் வாழ்க்கையைக் குதூகலத்தோடு ஆரம்பித்தான். அதே சமயம் அலட்டியமில்லாமல் இருந்தான்.

திருமங்கலக்குடி மங்களாம்பிகை அவனுக்கு வழிகாட்டினாள். முரளிக்கு அப்பாவும் அம்மாவும் இருந்தார்கள். ஆயினும், திருமங்கலக்குடி மங்களாம்பிகையை அவனைப் பெற்ற தாயாக நினைத்தான்.

"வேலை கன்ஃபர்ம் ஆயிடுத்தும்மா. இன்னிக்கு ஆர்டர் வந்துடுத்து. இன்னிலேர்ந்து சம்பளமும்கூட வாங்கறேன். விஞ்ஞானி வீடு வாங்குடா லட்ச ரூபாய் கடன், வாங்குடாங்கறார். நான் வாங்கட்டுமா.

நான் வீட்டுக்குத் திரும்பப் போறச்ச பச்சைப் புடவை கட்டிண்டு பொம்மனாட்டி யாராவது எதிர்ல வந்தா கடன் வாங்குன்னு அர்த்தம். இல்லேன்னா வேணாம்னு அர்த்தம்.

அவன் திரும்ப, பச்சைப்புடவைக்காரி அர்ச்சனைத் தட்டோடு எதிரே நின்றாள். குருக்கள் இல்லையா அம்பாளுக்கு புடவை சாத்தறதா வேண்டிண்டோம். சாத்திட்டு நாங்க மெட்ராஸ் போகணும். நீங்க அவரைக் கூட்டிண்டு வரமுடியுமா."

அவள் பிளாஸ்டிக் கவரிலிருந்த புடவையை வெளியே எடுத்தாள். அது பச்சைப்புடவை. இன்னும் அழகான பச்சைப்புடவை.

அவன் ஓடிப்போய் சாம்பசிவன் மாமாவைக் கூட்டிக் கொண்டு வந்தான்.

"புடவையா...சார்த்திடலாமே..." முரளி கொஞ்சம் ஹெல்ப் பண்ணுடா." சாம்பசிவம் மாமா கோவிலுக்குள் வந்தார்.

முரளி சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டி விபூதி இட்டுக் கொண்டு கருவறைக்குள் நுழைந்து திரையை இழுத்து விடுவான். சாம்பசிவ மாமாவும் முரளியும் அம்பாளுக்கு இருக்கிற வஸ்திரத்தை நிதானமாய் களைந்து



விட்டு புதிய புடவையைக் கொசுவி அழகிய மடிசாராகக் கட்டுவார்கள். பிறகு நகை அலங்காரம் செய்வார்கள். விளக்குகளைத் தூண்டிவிட்டு பத்து ஊதுபத்தி ஏற்றி வைத்து வெளியே குரல் கொடுத்துவிட்டு பளிச்சென்று திரை விலக்குவார்கள்.

வெளிப் பிரகாரத்திலிருக்கிற சர்ச்லைட் உள்ளே பாயும் அம்பாள் முகம் தகதகக்கும்.

"எப்படி இருக்கு இந்த பட்டுப்புடவை என்று கேட்கும். சில சமயம் கண் சிமிட்டுவதுபோலவும் தோன்றும்."

"என்னடா அப்படியே நின்னுட்ட. தேங்காய உடை."

"இல்ல மாமா. மங்களாம்பிகா பேசறா. உத்துப் பார்த்தா என்னென்னமோ சொல்றா. எனக்குத்தான் புரிஞ்சுக்கத் தெரியலை."

முரளி மற்ற வேலைகளில் படபடவென்று ஈடுபடுவான். முரளி சிவதீட்சை பெற்றவனல்ல. ஒரு கோவிலில் பூஜை செய்ய அவனுக்கு உரிமை இல்லை. ஆனாலும், சாம்பசிவம் குருக்களுக்கு உதவியாய் சிறுவயதிலிருந்தே அந்தக் கோவிலோடு ஒன்றிவிட்டான்.

"இப்படி கோவிலைலயே சுத்திண்டிரு. ப்ளஸ் டு புட்டுக்கப் போறது."

அப்போதும் திருமங்கலக்குடி மகாஜனங்கள் கேலிச் செய்தார்கள்.

"புட்டுக்காது மாமா. அம்பாள் பார்த்துப்பாள்." அவன் கலவரப்படாது பதில் சொல்வான். இரசாயனம், பௌதிகம் எடுக்காமல் வேண்டுமென்றே வணிகவியல் எடுத்தான். இன்ஜினியரிங் படிக்க வசதியில்லாதபோது வணிகவியல்தான் நல்லது என்று அவனுக்குத்தோன்றியது.

பள்ளிக் கூடத்தில் படிக்கும் படிப்பு அதற்குப் போதுமாய் இருந்தது. மற்ற நேரங்களில் அவன் கோவிலில் செலவழித்தான். காவிரியிலிருந்தும் வீரசோழ ஆற்றிலிருந்தும் சுவாமிக்கு ஜலம் கொண்டுவந்தான். கோயில் பெருக்கினான். வாரம் தவறாமல் ஒட்டடை அடித்தான்.

கர்ப்பகிரஹத்தை நார் பிரஷ் போட்டு தேய்த்தான். கோயிலில் பூஜைக்குரிய திருச்சின்னங்களையும் தூப தீப பாத்திரங்களையும் புளி போட்டு மெருகேற்றினான். விக்கிரஹங்களுக்கு பாலிஷ் ஏற்றினான்.

அவன் அப்பாவும் அம்மாவும் அவனைப் பற்றி மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

''என்ன சார்...எப்பவும் கோயில்லயே இருக்கான். உங்க புள்ளைய படிக்க சொல்லுங்க சார்.'' எதிர் வீடு அப்பாவிடம் பொய்யாய் கவலைப்படும்.

அப்பா புன்சிரிப்போடு சரி என்று தலையாட்டுவார். அவன் கோவிலிலிருந்து வரும் வரை சாப்பிடாமல் காத்திருப்பார்.

உனக்கு மூணு வயசு. அப்ப மாந்தம் வந்து இழுத்துண்டிருந்தது. ரெண்டு மணி நேரத்துல போயிடும்னு வைத்தியன் சொன்னான். ஆடுதுறைக்கோ, மாயவரத்துக்கோ எடுத்துண்டு போகச் சொல்லி எல்லாரும் கத்தினா. நான் மாயவரம் போகலை. மங்களாம்பிகாகிட்டதான் போனேன்.

இவன் உன் குழந்தை. உனக்கு வேணும்னா வச்சுக்கோ. இல்லைன்னா அனுப்பிச்சிருன்னு சொன்னேன். கோயில் வாசல்ல உட்கார்ந்துண்டிருந்தேன். என்ன சேதி வேணா வரட்டும்னு விட்டேத்தியா இருந்தேன். குழந்தை கண் முழிச்சு பார்க்கறான்னு செய்தி வந்தது. தானே தான்...எழுந்து விளையாட ஆரம்பிச்சுட்டே. அன்னிலேர்ந்தே எனக்கு தெளிவா தெரிஞ்சுடுத்து.



நீ அவ வேலைக்கு வந்திருக்கறே. நாம சைவர்கள். ஆனா குருக்கள் இல்லை. நமக்கு வேத அத்யயனம்தான் முக்கியம்.

வேதம் படிக்கிறவாளுக்கு கோயில் பூஜை ஒண்ணும் முக்கியமில்லை. ஆனா நாம இதெல்லாம் விட்டுட்டு ஆபீஸ் வேலைக்கு போயிட்டோம். காசு சம்பாதிக்க அலைய ஆரம்பிச்சுட்டோம். இங்கிலீஷ் பேசி அலட்ட ஆரம்பிச்சுட்டோம். ஆனா அதுவும்தான் வேண்டியிருக்கு.

நீ ரெண்டையும் புடிச்சுண்டிருக்கறது எனக்கு ரொம்ப சந்தோஷம். இது பக்தி காலம். வேத அத்யயனத்தை விட கோயில் பூஜைகள் பல பேருக்கு உதவி பண்ணும்.

என்ன சொல்றோம்னு தெரியாம சொல்லிண்டு என்ன கேட்கறோம்னு தெரியாம கேட்டுண்டு வெறிக்க உட்கார்ந்திருக்கறதை விட சிவ பூஜை முக்கியம்.

அதுவும் இந்த அம்பாள் சாந்த ஸ்வரூபி. வரப்பிரஸாதி. உயிர்களை தரும்பிகிற சிவா ரூபி. பேரழகி.

எம் புருஷனைக் காப்பாத்துன்னு யார் வந்து அழுதாலும் மாங்கல்ய பலம் தருகிற தெய்வம்.

இது புருஷர்களுக்கு போறாத காலம். போருக்குப் போய் செத்துப் போற மாதிரி கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி ஆண்கள் அவஸ்தைப்படுகிற காலம்.''

எனவே, ஆண்கள் எண்ணிக்கை குறைவு. பெண்கள் எண்ணிக்கை அதிகம்.

பொம்மனாட்டியை மதிச்சு அவ பேச்சு கேட்டு நடக்கற ஆண்களுக்கு நம்ம மங்களாம்பிகை அழகா உதவி பண்ணுவா. ஒரு பொம்மனாட்டி வந்து புருஷனைக் காப்பாத்துன்னு திருமங்கலக்குடி மங்களாம்பிகையாண்ட வந்து அழுதா எப்படியாவது அம்பாள் காப்பாத்திடுவா.

இந்தக் கோயில் பிரசித்தியாக போஸ்டர் போட வேண்டாம். நோட்டீஸ் அச்சடிக்க வேண்டாம். இப்படி காது காதா செய்தி பரவினா போதும். தினம் ஒரு புதுப் புடவை அம்பாளுக்குக் கிடைக்கும்.''

அப்பா சொல்படி நடந்தது.

ஆனால், மங்கலக்குடி ஆடுதுறை நண்பர்கள் முரளியைப் பார்த்து கொஞ்சம் ஆச்சரியப்படுவார்கள். லேசாய் பொறாமைப் படுவார்கள். அந்தப் பொறாமையை விதம் விதமாய் காட்டுவார்கள்.

''என்னடா... மங்கல குடியிலேயே உட்கார்ந்துட்ட ஆடுதுறை தாண்ட மாட்டேன்னு சங்கல்பமா.''

''ஏன் ஆடுதுறைக்கு என்ன குறைச்சல்'' முரளி அப்பாவியாய் கேட்பான்.

''உலகம் பெரிசு, முரளி. நான் அரபு எமிரேட்ஸ்ல வேலை செய்யறேன். நாற்பதாயிரம் ரூபா சம்பளம் என் செலவு என்ன தெரியுமா நாலாயிரம் ரூபா. மீதிஅப்படியே கொண்டு வந்து மெட்ராஸில கொட்டுறேன். மெட்ராஸ்ல எல்லா இடமும் புகைன்னு யார் சொன்னா. நான் நங்கநல்லூர்ல இருபது லட்ச ரூபாய்க்கு தனி வீடு வாங்கியிருக்கேன். ரெண்டு ரூம் ஏஸி பண்ணியிருக்கேன். வீடு முழுக்க சலவைக்கல் பாவியிருக்கேன். நங்கநல்லூரிலேயே விதம் விதமா கோயில் வந்துடுத்து.

அரபு எமிரேட்ஸ்லேர்ந்து எப்ப நங்கநல்லூர் வருவோம்னு தோன்றதே தவிர ஆடுதுறை பத்தியே மறந்து போயிடுத்து. வெளிய வாடா, முரளி. உலகத்துல எத்தினியோ சுகங்கள் இருக்கு. அதெல்லாம் ஒருத்தன் பார்க்க வேண்டாமா.



''அப்படியா. அப்படியா சொன்னான். உனக்கு என்ன தோன்றது.'' நண்பனின் பேச்சை முரளி விவரிக்க அப்பா பதில் சொன்னார்.

முரளி யோசிக்க துவங்கினான்.

''இதுல யோசிக்க என்ன இருக்கு. உனக்கும் படிப்பு இருக்கு. அவனுக்கும் படிப்பு இருக்கு. உனக்கும் வீடு இருக்கு. அவனுக்கும் வீடு இருக்கு. உனக்கும் வாகனம் இருக்கு. அவனுக்கும் வாகனம் இருக்கு.

நங்கநல்லூர்லேர்ந்து சென்ட்ரல் ஸ்டேஷன் வர காண்டமா கார் வேணும். திருமங்கலகுடியிலிருந்து ஆடுதுறை போக கார் வேணுமோ, சைக்கிள் ,போதும். வீடு மொஸைக் போட்டதா இருந்தா என்ன, சிகப்பு சிமெண்ட்டா இருந்தா என்ன, கண்ணை மூடி படுத்ததும் தூக்கம் வரணும் காத்து மழைல இருந்து காப்பாத்தணும் நம்ம வீடு காப்பாத்தறது.

ஆனால், வருஷத்துல பத்துமாசம் பாலைவனத்துலஒரு நாளைக்கு பன்னெண்டு மணி நேரம் வேலை செய்யற தண்டனை உனக்கு இல்லை. இந்தப் பச்சை வயலும், சிவ கோவிலும், மங்களாம்பிகா தரிசனமும் அவனுக்கு இல்லை.

எதுக்கு அவ்வளவு சம்பளம், எதுக்கு அத்தனைக் காசு நீ அவனுக்கு பதில் சொன்னது கரெக்ட். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

எப்ப சாப்பிடணுமோ, எவ்வளவு சாப்பிடணுமோ என்ன சாப்பிடணுமோ, அதை சாப்பிட்டா நோய்வராது. நீயாவது ஆடுதுறைக்கு, வேலைக்கு போற. நான் அந்த வேலைக்கூட போகலை.

வீட்டுத் திண்ணையிலேயே ஒரு தபாலாபிசு. கொஞ்சம் நஞ்சை, கொஞ்சம் புஞ்சை. நான் எல்லைத் தாண்டவே

இல்லை. அதுக்குக் காரணம் உங்க அம்மா. வருஷத்துக்கு
ஆறு புடவை போதும்னுட்டா. பிரிஞ்சு இருக்க
முடியாதுன்னு சொல்லிட்டா.''

''எங்க வீட்டுக்காரர் துபாய்க்கு போயிருக்கார்.
ரெண்டு வருஷம் கழிச்சு வருவார்னு என்னால சொல்லவே
முடியாதுன்னுட்டா.

இந்த உரக்கம்பெனி வேலை கூட உனக்கு ஜாஸ்தி. சனி
ஞாயிறு கூட தொந்தரவு. எனக்கு இந்தப் பதட்டம் கூட
இல்லை. தெய்வத்தின் குரல் அஞ்சு பாகம் வாங்கிதிரும்பத்
திரும்ப படிச்சுண்டிருக்கேன். பெரியவா சொன்னதையே
யோசனை பண்ணிண்டிருக்கேன். உங்கம்மாவையும்
படிக்கச் ' சொல்லியிருக்கேன். நாங்க ரெண்டு பேரும்
அதுபத்தித்தான் பேசுறோம்.

நீ பிறந்த பிறகு இவன் ஒருத்தன் போதும்னு நிறுத்
திண்டுட்டோம். ஒரு புள்ளை இருக்கறது புள்ளையே இல்
லாத மாதிரி அப்படீன்னு கிராமத்துல சொன்னா. அவா
ளுக்கு என்ன போச்சு. போதுங்கற இந்த மனசே என்னை
சௌக்கியமா வச்சிருக்கு. எனக்கு மட்டும் இந்த மன
சில்லை. உங்கம்மாவுக்கும் இந்த மனசு இருக்கறதுதான்
ஆச்சரியம். வீட்டுல பொம்பளை விரட்டினாபோய்
சேத்துல விழுந்தான் வேணும். உனக்கு நல்ல பொண்
டாட்டியா கிடைக்கணும்கறதுதான் என் கவலை.''

அப்பாவும் பிள்ளையும் ஆற்றில் குளித்துக் கொண்டே
வாழ்க்கைப் பற்றிப் பேசினார்கள்.

முரளி முதன் முதலாய் தனக்கு மனைவியாக வரும்ஒரு
பெண்ணைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தான்: சினிமாவில்
பார்த்த பெண்களைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தான்.

மனம் அலை பாய்ந்தது.

திருத்தினான்.



எழுந்துஉட்கார்ந்து சியாமளா தண்டகம் சொல்ல
ஆரம்பித்தான். சொல்லி முடித்த பிறகு கை கூப்பினான்.
தாயே, உலகில் உடல் ஆரோக்கியத்தை விடவும் உயர்
வாய் ஒருசெல்வம் இருக்கிறது. அது மனோ ஆரோக்கி
யம். என் எதிரே நடப்பவைகளைப் பற்றிய தெளிவு
சரஸ்வதி, நீ, தர வேண்டும். நான் என்ன செய்கிறேன்.
இது எவ்விதம் முடியும் என்கிற நிதானம் எனக்கு வரவேண்
டும். இந்தத் தெளிவுதான் உண்மையான ஆரோக்கியம்.

மங்களாம்பிகே, இந்தத் தெளிவை தயவுசெய்து
எனக்கு கொடுப்பாயாக. இந்தத் தெளிவுதான் மர
ணத்தை வெல்லும் வழி. மரணத்தை வெல்வது என்பது
மரணம் இல்லாமல் போவதல்ல. மரணம் என்ன என்று
தெரிந்து கொள்வது. தேவையெனில் அதைத் தள்ளி
வைத்துக் கொள்வது.

சியாமளா தண்டகம் சொல்லி சொல்லி முரளிக்கு
மனதிலும், மனதால் முகத்திலும் ஒரு அமைதி வந்து
விட்டது.

பம்பாய் கனவோ, துபாய் சொகுசோ அமெரிக்க
ஐரோப்பிய ஆட்டங்களோ அவனுக்குள் வரவில்லை.
'நான் வேர்ப்பூ. வேர் எங்கிருக்கிறதோ அங்கேயே பூத்த
லும் நடைபெறுகிறது. நான் தாமதமில்லாமல் பூக்கி
றேன். தெளிவாய் இருக்கிறேன்.'' என்று தனக்குத்
தானே பேசிக் கொண்டான்.

உரக் கம்பெனி விஞ்ஞானிகளுள் சுவாமிநாதன்
முரளியை அதிகம் வியந்தார். நிறைய விஷயங்கள் சொல்
லிக் கொடுத்தார்.

'தாவரம் இல்லேன்னா மனுஷா இல்லை. எங்க
தாவரம் இருக்குமோ அங்கதான் மனுஷா நாகரிகமும்
இருக்கும். ஆற்றங்கரை நாகரிகம்னா என்ன அர்த்தம்.
ஆற்றங்கரையில் விளைந்த தாவரங்களை உண்டு வளர்ந்த

நாகரீகம். தாவரம்தான் உணவு. தாவரம்தான் மருந்து. எங்கே தாவரம் இருக்கிறதோ அங்குதான் மனிதன்வாழ வேண்டும்.

இன்னொரு விஷயம் சொல்கிறேன் கேள். பார்வைக்கும் புத்திக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பார்த்தால் தான் முதல் தொடர்பு கேட்டல் பிறகு முகர்தல் அதற்கப்புறம் தொடல் தொடர்வது.

பச்சைப் பசேல் என்கிற பூமியைப் பார்க்க கண் பார்வை விரிவடைகிறது. கண்பார்வை விரிவடைய புத்தி மலர்கிறது. புத்தி மலர்ந்தவனால் தான் மனம் மலர வாழ முடியும். மணல் வெளியும், மணற்பாங்கும் மக்கள் கண்களை சுருக்கச் செய்கின்றன. புத்தியும் சுருங்கிப் போகிறது. இந்தச் சுருங்கிய புத்தியால் ஏற்படும் தத்துவங்களும் வாழ்க்கை முறைகளும், விதி முறைகளும் குறுகியவையாகத்தான் இருக்கும்.

எனவே, தாவரங்களுக்கு அருகே வாழ்வது தான் நல்லது. பட்டணத்துக் கரிப்புகையும் பாலைவனத்து வெப்பமும் மனசை சுருக்கச் செய்யும்.

இனிமேல் என்னால் பட்டணத்துக்குப்போக முடியுமா என்பது சந்தேகம்தான். தாம்பரம் பக்கம்தான் என் ஓய்வு நாட்களைக் கழிக்கப் போகிறேன் அல்லது கும்பகோணம் பக்கம் போய்விடப் போகிறேன்.

''ஏன் சார், ஊட்டி, கொடைக்கானல்னு போக மாட்டேளா.''

''கடவுளே...குளிர்காலத்துலயும், மழை நேரத்துலயும் அங்க போயிருக்கியா. வீட்டுக்குள்ள இருந்தாலும் குளிர் சாகடிச்சிடும். புத்திய தூங்க வைக்கிற குளிர் அது. பனியில கருகிப்போன கருத்த பசுமை அது. ஒரு மூணுமாசம் தான் அங்க வாழ்க்கை நல்லா இருக்கும். அப்ப தரைல இருக்கற இலங்க மலைக்கு வந்து ஊரை நாசம் பண்ணிடுவாங்க.



''நம்ம ஊர்ல வெய்யில் ஜாஸ்தியாச்சே சார். சம்மர்ல வெய்யில் பொறி பறந்துடுமே. அது தவிர புழுதி வேற பறக்குதே.''

''நம்ம ஊர் வெய்யில் ரொம்ப நல்ல சமாச்சாரம். இலங்க துப்பற எச்சலுக்குஇந்த வெய்யில் அடிக்கலேன்னா ஊர்ல ஏகப்பட்ட வியாதி வந்துடும். இந்த வெய்யில் வெக்காரம் பூமிக்கு நல்லது. பூமி வெப்பத்தில வெடிச்சு பொர பொர பொரன்னு உதிரும். அப்ப மழை பெஞ்சா மொத்த நீரையும் பூமி இழுத்துக்கும். இது பாலைவனம் அல்ல. களிமண் பூமி இல்லை. தாவரம் வளர்றதுக்காகவே தன்னை மாத்திக்கிற பகுதி. எங்கே தாவரம் இருக்கோ அங்கேதான் மனுஷன் இருக்கணும்.''

சுவாமிநாதனோடு ஜீப்பில் ஏறி முரளி சோழ தேசம் முழுவதும் சுற்றியிருக்கிறான். காவிரியின் எல்லா கரைகளையும் தொட்டிருக்கிறான்.

சுவாமிநாதன் வெறும் வயல்வேலைக்கு மட்டும் போக மாட்டார். ஒரு ஊரில் இறங்கியதும் அங்கு என்ன கோயில் இருக்கிறது என்று கேட்டு தெரிந்து கொள்வார். அந்தக் கோயிலைப் புகைப்படம் எடுத்துக் கொள்வார். அந்தக் கோயிலுக்கு ஒரு எண் கொடுத்து முரளியிடம் குறிப்புகள் சொல்வார்.

இது என்னடா, நடுநடுவுல வேலை கொடுத்து கழுத்தறுக்கறான்னு பார்க்கறியா. நான் ரிட்டையராகற அன்னிக்கு இந்த புஸ்தகம் ரிலீஸாகும். அதை அந்த உரக் கம்பெனிக்கு டெடிகேட் பண்ணியிருக்கேன். 'சோழ மண்டலத்துக்கோயில்கள்' அப்படீன்னு எழுதப்போறேன். இதுவும் நீதான் டைப் பண்ணணும். ஒரு பேஜுக்கு இத்தனைன்னு காசு வாங்கிக்க.

''வேண்டாம் சார். இதுக்கு நான் காசு வாங்கலை...''

அவனும் தகவல் சேகரித்தான். சென்னையிலிருந்து சில புத்தகங்கள் வரவழைத்தான். அந்தக் குறிப்புகளையும் அவருக்குக் காண்பித்தான். அதைப் படித்துவிட்டு அவர் சொல்ல மிக சந்தோஷமாய் அந்தப் புத்தகம் தயார் செய்தான்.

முரளிக்கு எந்நேரமும் வேலை இருந்தது. ஏதாவது வேலை இருந்தது. அவன் கவனம் வேறெங்கும் சிதறாமல் அலுவலகத்திலும் ஆலயத்திலுமே செலவழிந்தன. இது மிகப் பெரிய கொடுப்பினை. இதற்குப் பெயர்தான் சத்சங்கம். அருகே பேசிப் பழகுபவர்கள் அறிவுள்ளவர்களாகவும், தெளிவுள்ளவர்களாகவும் இருந்துவிட்டால் சண்டை சச்சரவு மிகக்குறைவாக இருக்கும். சண்டை சச்சரவுகள் குறைவாக இருந்தால் போட்டிபொறாமைகள் இருக்காது.

''மச்சி, என்னடா டிராம் பண்றே. நீ ஒரு கம்பெனில வேலை செய்யற மாதிரியே தெரியலை. ஆறாயிரம் ரூபா சம்பளம் வாங்கறமாதிரியே தெரியலை.

செக்ட் ஷர்ட் போர்ட்ஜீன்ஸ் பேண்ட்ல இன்பண்ணி நிக்கி ஷூ போட்டு நடந்தீன்னா மொத்த ஆடுதுறையும் உன்னையே பார்க்கும். இருக்கப்பட்டவன் போடமாட்டேங்கற. நான் இல்லாதவன், ஏங்கறேன்.''

''வாஸ்தவம். அவனுக்கும் படிப்பு இல்லை. வேலையில்லை. சொல்லிக்கறமாதிரி சாதனை எதுவும் இல்லை. அதனால் ட்ரஸ் போட்டு அலட்டறான். கண்ணுல ஒரு கோளாறும் இல்லை. ஆனாலும் கண்ணாடி போட்டுண்டிருக்கான். என்ன...அந்த ரிம்லெஸ் கண்ணாடிதான் அவனைப் படிப்பாளி மாதிரி காட்டறது. படிப்பு இல்லாதவன் படிப்பாளி மாதிரி வேஷம் போடணும். உனக்கென்ன.''

''நம்ம ராமச்சந்திரராவ்கிட்ட கொஞ்சம் அட்வான்ஸ் இங்கிலீஷ் கத்துக்கோ. அவன்கிட்ட என்ன புக் படிக்



கறதுன்னு கேளு. மும்மூணு புக்கா வாங்கி திருப்பிக் கொடுத்துரு.''

''ஜிட்டு கிருஷ்ணமூர்த்தின்னா யாரு. அவர் தத்துவம் என்ன...ராமச்சந்திர ராவை சும்மா கேளு. அவன் சட்டுன்னு வாயைத் திறக்க மாட்டான். பேச ஆரம்பிச்சா ப்ரவாகம்தான்.''

என்ன...கொஞ்சம் கவனமா கேட்கணும். கேட்கலைன்னா கன்னாபின்னான்னு திட்டுவான்.

கடவுள் நம்பிக்கை என்பதில் ஒரு மிகப் பெரிய தவறு இருக்கிறது என்று ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி சொல்கிறார். கடவுள் இருக்கிறார் என்று ஏற்கனவே நீ நம்பி விட்டாய். நண்பர்கள் மூலமாகவோ, புராணங்கள் வாயிலாகவோ, குருநாதர் மூலமாகவோ கடவுள் இருக்கிறார் என்கிற நம்பிக்கை உனக்கு வந்து விட்டது. நம்பிக்கை வந்து விட்டால் தேடல் நின்று போகும். தேடல் இல்லையெனில் கடவுள் தெரியாது.

நீ உன் நம்பிக்கை மூலம் கடவுளைத் தேடுவதை நிறுத்தி விடுகிறாய். உனக்கு சொல்லப்பட்ட கற்பனைகள் மீது உன் கற்பனைகளை ஏற்றி கடவுள் வருகிறார் என்றும் பேசுகிறார் என்றும் ஏமாறுகிறாய். நான் சொல்வது இந்து மதம் பற்றி மட்டுமல்ல. எல்லா மதங்களிடையும் இந்தக் குறை இருக்கிறது. கடவுளை நம்பு என்று எல்லா மதமும் கட்டளையிடுகின்றன. சந்தேகிக்கிறவனை வெளியேற்றி விடுகின்றன.

ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி கடவுள் என்பது யார்... அது என்ன என்று பார்க்க சொல்கிறார். கடவுள் இருக்கிறார் என்று கூவாதே. இல்லை என்று கூச்சலிடாதே. வெறுமே அமைதியாகப் பார். எந்தவிருப்பு வெறுப்புமின்றி பார். இதற்கு விருப்பு வெறுப்பின்றி உன்னைப்பார்க்கக் கற்றால் உன் மனதை ஆராயக் கற்றால் கடவுள் ஆராய்வதும்

எளிதாகிறது. விருப்பு வெறுப்பின்றி இருக்க பல விஷயங்களை உதற வேண்டும். நான் ஹிந்து...நான் பிராமணன், நான் ஆடுதுறைக்காரன், நான் மங்களாம்பிகாவின் பக்தன் என்பதையெல்லாம் உதற வேண்டும்.

இது எளிதல்ல. மிக மிக தெளிவாய் திடமாய் இதை செய்தாக வேண்டும். நீ பிராமணன் என்பதை மறந்தாலும் தெருவில் போகிறவன், டேய் பாப்பான் என்று அடையாளம் காட்டுவான். நீ மறுத்தாலும் அந்த வர்ணத்தை உன் மீது பூசுவான். ஒரு முஸ்லீம் எந்த காரணமும் இல்லாமல் நீ ஹிந்து என்கிற காரணத்துக்காக வெறுப்பான்.

இத்தனை விஷயங்களையும் தாண்டி நான் சாதாரண மனிதன் என்று உன்னை நீ நிர்வாணப்படுத்திக் கொள்வது எளிதல்ல. ஆனால் இந்தியாவில் பல மகான்கள் செய்திருக்கிறார்கள். எந்த சமயத்திலும் பதட்டமடையாமல் தான் எந்த இனத்தோடும் சேர்ந்தவனல்ல என்று தனிமைப் பட்டிருக்கிறார்கள்.

நான் சொல்வது புரிகிறதா முரளி, உன்னை என்றேனும் தனிமைப்படுத்திக் கொண்டதுண்டா. நீ இங்கு உள்ள எந்த விஷயத்தோடும் உன்னை சேர்த்துக் கொள்ளாமல் நான் புதியவன் என்று நினைத்ததுண்டா. கடவுளைத் தேட இது ஒன்றே வழி.

நீ மதத்தில் இருந்தால் முஸ்லீமாக, கிறிஸ்தவனாக, இந்துவாக, புத்தனாக, யூதனாக இருந்தால் உனக்கு கடவுள் தெரியாது. எந்தக் குழுவில் இருந்தாலும் கடவுள் தெரியாது. குழுதான் மனதில் நிற்கும். இரண்டாவது வழி இல்லை. இது தவிர வேறு எந்த வழியும் இல்லை. இருக்கிறது என்று சொல்வது உண்மைக்கு புறம்பானது. கடவுளுக்கு எதிரானது.



ஏதாவது ஒரு மதவாதி, அல்லது மடாதிபதி கடவுளை உனக்குக் காட்டுகிறேன் என்று சொன்னால், வாய்விட்டு சிரிக்கலாம், நீ பார்த்திருக்கிறாயா என்று கேட்கலாம். நீ கேட்கும் ஊரைப் பற்றியே அறியாதவன் உனக்கு எப்படி வழிகாட்ட முடியும். அவன் பொய்யன் என்பதற்கு சாட்சியங்கள் ஏதும் தேவையில்லை. அவன் உரத்த குரலே சாட்சி.

மேலும் கடவுளைத் தெரிந்தவன் பேசுவதில்லை. அது ஒரு கனிவான அனுபவம். அருமையான மலர்ச்சி.

ஒரு பூ தான் பூத்ததை, வாய் விட்டு சொல்லுமா. மெல்லிய வாசனையாய் மிக இயல்பாய் எந்த லட்சியமுமின்றி தன்னை அது வெளிப்படுத்திக் கொள்வதுபோல கடவுளை அறிந்தவனிடமிருந்து எந்த லட்சியமுமில்லாமல் எந்த உத்தேசமும் இல்லாமல் அன்பு வெளியாகிறது.

மனிதர்கள் வெளிப்படுத்தும் அன்புக்கு உத்தேசம் இருக்கிறது. எல்லாவற்றிலும் சுயநலம் இருக்கிறது. அந்த அன்புக்குப் பின்னால் திட்டங்கள் இருக்கின்றன. சுயநலத்திட்டங்கள் அடியில் வைத்துக் கொண்டிருப்பது அன்பாகுமா. அது கொடுக்கல் வாங்கல் அல்லவா. வியாபாரம் அல்லவா. சீசீ...வியாபாரத்தை எப்படி அன்பென்று சொல்கிறாய்.

எதுவும் எதிர்பார்க்காத அன்பு...அப்படி என்றால் என்ன...உனக்குத் தெரியாது. உனக்குத் தெரிந்ததெல்லாம் வியாபாரம். வாழ்க்கையில் வியாபாரம் என்று வந்து விட்டால் பெருத்த நஷ்டங்களும் உண்டு என்று மறந்து விடாதே.

மேலும், வியாபாரிக்கு வியாபாரம் செய்யும் வரை தான் மரியாதை.

என்னிடம் விற்பதற்கு ஏதும் இல்லை என்று அசந்து போய் உட்கார்ந்து விட்டால் உன்னை இழுத்து ஓரம்

போட்டு விட்டு மறந்து விடுவார்கள். வியாபாரியாய் இருப்பதில் இப்படி ஒரு அபாயம் இருப்பதைப் புரிந்துக் கொள்.''

ரமசந்திர ராவ் பேசப்பேச முரளி அதிர்ந்து போனான்.

ஆடுதுறை உரக்கம்பெனி குளிர்விக்கப்பட்ட பெரிய பரிசோதனைக் கூடத்தில் இடைவேளையின் போது அவர் பிரசங்கம் கேட்டான்.

''அடாடா...இது ஒண்ணும் புதுசு இல்லை முரளி. இதுக்குப் பேர் வேதாந்தம், இந்து மதத்தை பொம்மைக் கம்பெனின்னு நினைச்சுண்டிருக்கியா. அப்படி நினைச்சா நீ முட்டாள்.

இந்த மதத்தினுடைய அடிப்படை வேதாந்தம். இது யாருக்கும் புரியாதுங்கறதால பக்தி மார்க்கத்தை முன்னால சொல்லி பிறகு தத்துவத்தை சொல்றது.

அஞ்சாங்கிளாஸ் வரைக்கும் படம் பார்த்து கதை சொல்லுனு பாடம் இருக்கும். இது என் வீடு அப்பாடன்னு எழுதி நிறைய படங்கள் போட்டிருக்கும். பஞ்சதந்திர கதையே படமாகவே சொல்லியிருக்கும்.

ஆறாங்கிளாஸ் வந்தவுடனே படங்கள் குறையும். பத்தாங்கிளாஸ் பாடப் புத்தகத்தில் படமே இருக்காது. விஷயம்தான் இருக்கும்.

கடவுள் விஷயம் மிகப்பெரிது. அதனால் புரியாதது என்று படத்தோடு பாடம் நடத்துகிறார்கள், கருங்கல் சிலையும் வெங்கலச் சிலையும் வைத்து உன்னை உனக்குக் காட்டுகிறார்கள்.

ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி சொல்வது கயிற்றில் நடப்பது போல. அவர் நடந்து போயிருக்கலாம். உன்னால் நடக்க முடியாது.



கடவுளை அடைய எளிமையான வழி பக்தி மார்க்கம் அருவத்தை ரசிக்க எளிமையான வழி உருவ வழிபாடு. ஒரு குழந்தை மரப்பாச்சி பொம்மையோடு எத்தனை நாள் விளையாடும். கடவுள் விஷயம் ஒரே பிறவியில் முடிந்து விடுவதல்ல. பல ஜென்ம வாசனைகள் அதில் உண்டு. ஏதோ ஒரு பிறவியில் தெளிவாகி அடுத்த பிறவியில் செயலாகும்.

பகவான் ரமணர் இதை மிக அழகாக சொல்லியிருக்கிறார்.

நான் யார். எது நான். எது பார்க்கிறது, எது கேட்கிறது. எதனால் மனம் இயங்குகிறது என்று விசாரித்துப் போகச் சொல்லியிருக்கிறார். மனம் இயங்குவதைப் பார்த்துக் கொண்டே இருக்கச் சொல்லுகிறார்.

இங்கேயும் போதகர்கள் இல்லை. நீதான் தனியே நடக்க வேண்டும். நீதான் விசாரிக்க வேண்டும்.

மத போதகர்கள் செவிலித்தாய் போல. சந்திரனைக் காட்டி சோறு ஊட்டி, பாட்டுப் பாடி கதைகள் சொல்லி தூங்க வைப்பார்கள். அவர்கள் சொல்லுகிற ஒழுக்க விதிகள் தான் சோறு. அதனால் ஏற்படும் நிம்மதிதான் தூக்கம். குழந்தைகளுக்கு குறிப்பிட்ட வயது வரைசெவிலித் தாய்கள் அவசியம். அதே பையன் வாலிபப் பருவம் வந்தால் செவிலித்தாயைத் திரும்பிக்கூட பார்க்க மாட்டான்.

எனவே ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியைப் படித்துவிட்டு எல்லாம் தெரிந்து விட்டதாய் நடிப்பதை விட கடவுள் என்றால் என்ன என்று விசாரிக்க ஆரம்பி. மங்களாம்பிகாவை உற்றுப் பார்க்கக் கற்றுக் கொள். அவளோடு பேச கற்றுக் கொள். நீதான் மங்களாம்பிகா என்று தொடியில் உனக்கு புலப்பட்டுப் போகும்.

அம்மா தாயே, இந்த வருஷம் எனக்கு டபுள் இன்கிரிமெண்ட் கிடைக்குமா என்று கேள். நிச்சயம் கிடைக்கும் என்று மங்களாம்பிகா பதில் சொல்வாள். இரண்டுமே நீதான்.

அப்பா அவனுக்குத் திண்ணையில் உட்கார வைத்து விஷயங்கள் சொல்லிக் கொடுத்தார்.

ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியைப் படித்து விட்டு பேசக் கூடாது. குழப்பம் வந்து விடும். அவர் சொன்னது புரிந்து விட்டதல்லவா. இப்போது பக்தி மார்க்கத்தில் உன்னை ஈடுபடுத்தி கவனமாகப் பார்த்துக் கொண்டு வா. நீ பாடுவதை, ஆடுவதை, பூஜை செய்வதைக் கவனமாக செய்து வா. மயக்கமில்லாமல் விழிப்போடு செய்து வா. அப்போது இதன் சூட்சுமம் தெரியும்.

முரளி உலகத்தில் பல வாலிபர்கள் ஏதோதோ செய்து அலைந்து கொண்டிருக்கும்போது இந்த ஆடுதுறையில் உட்கார்ந்து இப்படி ஒரு அசல் செய்து கொண்டிருக்கிறாயே, எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது.

அந்த விஞ்ஞானிகள் சங்கத்தை விட்டு விடாதே. அவர்கள் நட்புதான் உன்னை மிகவும் மாற்றியிருக்கிறது. இது தெரிந்துகொள்ளும் பருவம். என்ன தெரிந்துகொள்ள வேண்டுமென்று நீதான் தீர்மானிக்க வேண்டும். சினிமாவும் அரசியலும் உன்னை எங்கும் கூட்டிக்கொண்டு போகாது. எதையும் சொல்லித் தராது? கதைப் புத்தகங்களிலும் நீ கவனமாக இருக்க வேண்டும். அவன் அழுதான். இவன் விம்மினான் என்கிற மில்ஸ் அண்ட் பூன் கதைகள் உன்னை முட்டாளாக்கும்.

எதுவுமே தெரிந்து கொள்ளாமல் வியாபாரியாக இருப்பது இன்னும் கேவலம். காக உன்னைக்காப்பாற்றாது



அது மிகப் பெரிய சிக்கலை ஏற்படுத்தும். யாரைக் கண்டாலும் பயம் வரும்.

எனவே முரளி வேதாந்தியாக இரு. எதில் ஈடுபட்டாலும் உன்னைப் பார். உன்னைத் தெரிந்து கொள். உன்னைத் தெரியும். சூட்சுமம். பிடிபட்டு விட்டால் சொல்லில் அடங்காத ஆனந்தம் ஏற்படுகிறது.''

அப்பா விரிவாகச் சொல்ல அம்மா அருகே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அப்பா, உன்னை நீ தெரிந்து கொண்டுவிட்டாயா''

முரளி ஆவலோடு கேட்டான்.

''இது உனக்குத் தேவையில்லாத விஷயம். உன்னைத் தெரிந்து கொள் என்றால் என்னைப் பற்றி ஏன் கவலைப் படுகிறாய்.''

தாயும், பிள்ளையுமாக இருந்தாலும் வாயும் வயிறும் வேறே. இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? அப்பா கேட்டார்.

'அவர் அவர் உணவை அவரவர் தான் சாப்பிட வேண்டும்.'

''முட்டாள், சொத்திலயே இரு. வாயும் அதாவது உண்பதும் அதாவது நீ கேட்டுத் தெரிந்து கொள்வதும். வயிறும் அதாவது ஜீரணிப்பதும் அதாவது கேட்பதைப் புரிந்து கொள்வதும் வெவ்வேறு விதம் என்று சொல்லப்படுகிறது. நீ கேட்கிற விதமாகவும், நீ புரிந்து கொள்கிற விதமாகவும் தான் உன் ஞானம் இருக்கும்.

நீ உன்னைப் பற்றிக் கவலைப்படு. என்னைப் பற்றிக் கவலைப்படாதே.''

அப்பா உதறி எழுந்தார்.

அம்மா அப்பாவின் அறிவு கண்டு மிக மலர்ச்சியாய் சிரித்தாள்; அவளும் எழுந்து நாய்க்குட்டி போல் அவர் பின்னே ஓடினாள்.

முரளி தான் தனித்து விடப்பட்டதைப் போல் உணர்ந்தான்.

இருபத்தியேழு வயதில் அவன் தன்னைப் பார்க்கத் துவங்கினான். வாழ்க்கை அவனுக்கு சுவாரசியமாக இருந்தது. இனி தொடர்ந்து தன்னைப் பார்க்க வேண்டும் என்ற முடிவோடு அழகான தெளிவோடு அவன் திருமங்கலக்குடி மங்களாம்பிகா கோயிலை நோக்கி நடந்தான்.

போகும் வழியில் ஆஞ்சநேயர் கோயிலைப் பார்த்து நின்றான்.

நீ யார் என்று கேட்டான். மனம் அவனோடு பேசத் துவங்கியது.

## 2

''நீனா...நானொரு வானரம்'' ஆஞ்சநேயர் பதில் சொன்னார்.

''எதற்கு இங்கே சிலையாக நின்று கொண்டிருக்கிறீர்''

''உன்னைப் பார்க்கத்தான்.'' ஆஞ்சநேயர் பதில் சொன்னார்.

''என்னை எதற்குப் பார்க்க வேண்டும்.''

''நானும் நீயும் உடன் பிறப்பல்லவா. நீ என் சாயலல்லவா.'' ஆஞ்சநேயர் கண் சிமிட்டி சிரித்தார்.



''எப்படி.''

''உன் மனமும் வானரம் தானே.''

''என்ன.''

''உன் மனசும் குரங்குத்தானே. நீதான் நான்.''

''இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்''

''இப்படி கை கூப்பி இரு என்று உனக்கு சொல்லிக் கொண்டிருக்கிறேன்.''

''ஏன்''

''அடக்கம் தான் ஜெயிக்கும் என்பதற்கு நான் ஒரு அடையாளம். மனம் குரங்கு. ஆனால் அடக்கினால் மிக வலிவுள்ளது என்பதற்கு நான் ஒரு அடையாளம். மனம் குரங்கு. ஆனால் அடங்கினால் மிக வலிவுள்ளது என்பதற்கு நான் ஒரு உபமானம். மனம் சரணடைய வேண்டும். மிகப்பிரகாசமான அந்த இறை முன்பு மண்டியிட்டு அடங்கி அமர்ந்திருத்தல் வேண்டும்.

ராமர் என்பது தெளிவு. இன்று, நேற்று, நாளை என்று எல்லாம் தெரிந்த தெளிவு. இந்தத் தெளிவு இருந்தாலும் அவர் ஆடியும் பாடியும், அழுதும் சிரித்தும், கோபித்தும் கொண்டாடியும் வாழ்ந்தார். இது உனக்கு இன்னொரு பாடம்.''

முரளி கண்மூடி விம்மினான். அவன் உள்ளுக்குள் ஒரு அழுகை துவங்கியது.

''என்ன முரளி ரொம்ப நேரமா ஆஞ்சநேயர் கோவில் வாசல்ல நின்னுட்டிருந்தே ஏதாவது பிரார்த்தனையா.'' சாம்பசிவ குருக்கள் கேட்டார்.

''கொஞ்சம் பேசிண்டிருந்தேன்'' முரளி பதில் சொன்னான்.

''ஆஞ்சநேயரோடயா''

''ஆமாம்.''

''சபாஷ். இப்படி சொல்றத்துக்கும் ஒரு தைரியம் வேணும். உள்ள வா.''

முரளி சட்டையைக் கழற்றி விட்டு உள்ளே போனான்.

''கொஞ்சம் தினசரி உதவி பண்ண முடியுமா. தினம் சாயந்தரம் ஒரு ஆறுமணிக்கு வர முடியுமா.''

''எதுக்கு மாமா.''

''ஒருத்தரா முடியலைடா. இந்த மாதிரி கோயிலுக்கு மூணு அர்ச்சகரா வேணும். எம்புள்ளைக்கு இங்க இருக்க புடிக்கலை. அம்பத்தூர் ருத்திர சந்துல இருக்கற புள்ளை யாருக்கு பூஜை பண்ண போயிட்டான். அங்க பூஜை பண்ணின்டே சினிமால நடிக்க ட்ரை பண்றான்.

குடுமியை எடுக்க மாட்டேன்னு உங்கம்மாக்கிட்ட சத்தியம் பண்ணியிருக்கியே. எப்படி நடிக்கப்போறேன்னு கேட்டேன். சினிமால அர்ச்சகளா, ''வைதீகனா தான் நடிப்பானாம். ராமகிருஷ்ணன்னு ஒரு குருக்களோட சிநேகி தமாம் பித்தளை சங்கிலியும் பவுடருமா அலையறான். அவனுக்கு இந்தக் கோயில் புரியலை. இந்த மூர்த்தி யோட மகிமை புரியலை. ஒன்றரை வருஷம் சினிமால நடிக்கறதுக்காக எல்லாத்தையும் உதறிட்டு ஓடிருக்கான்.

''அடேய் நம்ம சுப்புணிடான்னு ஆடுதுறைல இருக் கறவன் கத்' தனுமாம் இதுல என்ன சந்தோஷம்னு எனக் குத் தெரியலை.''

''என்ன காசு வரும்னு கேட்டேன். ஒரு நாளைக்கு இருநூறு ரூபாயாம். அதுல நூறுரூபாய் ராமகிருஷ்ண குருக்களுக்கு கொடுத்துடணுமாம்.''



''காசும் இல்லை, மரியாதையும் இல்லை...எதுக்கு இந்த வேதனைன்னு கேட்டேன்.''

''அவன் காலாகாலத்துக்கும் திப்பானாம், எப்பல்லாம் டிவில இந்த சினிமா போட்டாலும் அப்பல்லாம் இந்த ஆடுதுறை ஜனங்க பார்த்துடணுமாம்,

''உன்னைவிட முட்டாளை நான் பார்த்ததில்லைன்னு சுப்ரமணிக்கிட்ட சொன்னேன். உனக்கு பொறாமைப் பான்னான்.''

''அவன் அம்மா கேட்டா, உனக்கு ஒரு தங்கை இருக் காளே, அது ஞாபகம் இருக்கான்னு ''

''நீபெத்ததுக்கெல்லாம்நான் பண்ணனுமா அப்படீன்னு போயிட்டான். அந்த நாய் அடிபட்டு இருந்தப் போறது. ஆடுதுறைக்கு வந்து அவனைக்கிட்ட பார்த்தேன். இவ னைத் தொட்டுப் பார்த்தேன்னு நானு மொட்டைப் பசங் கள்கிட்ட பூத்திக்கப் போறது.''

''வந்தும் இங்க வணங்கி வேலை செய்யுமான்னு தெரி யலை. யாருமே இல்லாத கோயிலுல சாத்த வேண்டி வந்துடுமோன்னு ஒரு பயமிருக்கு. அது ஊருக்கு நல்ல தில்லை. இந்த தேசத்துக்கு நல்லதில்லை. சில சமயம் நினைச்சா பகீர்ங்கறது முரளி.''

''யாராவது கதவுதிறந்து வச்சு விளக்கேத்துவா...ஓம் புர்புவஸ்ஸுவன்னு அன்னம் நைவேத்தியம் பண்ணுவா. ஆனா அதுபோதுமா. சில தீட்சைய முறையா எடுத் துண்டவா அழகா அமைதியா பூஜைபண்ண வேண்டாமா''

''நீங்க என்ன சொல்ல வரேள். புரியலையே.''

''நீ தீட்சை எடுத்துக்கோ. ஒரே ஒரு வேளையாவது நிக்கமோ பூஜை பண்ணு.''

''என்னால முடியாது மாமா. ஆபீஸ் இருக்கு.''

''அதனாலதான் கூப்பிடறேன். உனக்கு சாப்பாட்டுக் குக் கவலையில்லை. அதுக்கு உரக்கம்பெனி வருமானம் இருக்கு. அதனால நீ ஆத்மார்த்தமா தட்டுக்காக பற்றி கவலைப் படாத பூஜை பண்ணமுடியும். தட்டுக்காசெல்லாம் நீயே எடுத்துக்கோன்னு வெளியூர்லேர்ந்து யாரையாவது வரவழைச்சுக்க முடியும்.

ஆனா, பிரியத்தோடயும், மரியாதையோடயும் ஒரு வேளையாவது மங்களாம்பிகாவுக்கு பூஜை பண்ணனும்.''

''முடிஞ்ச போதெல்லாம் உதவி பண்றேன். ஆனா நீ தான் எல்லாம்னு பொறுப்பை எங்கிட்ட கொடுக்காதீங்கோ. என் வேலைல நேரம் கிடையாது. மின்மினிப் பூச்சி பார்க்கறேன்னு ராமு முழுக்க ஸ்வாமிநாதன் வயல்ல உட்கார்ந்திருந்தா நானும் உட்கார்ந்திருக்கணும்.

மின்மினிப் பூச்சியைப் பிடிச்சு பாட்டில்ல போட்டுண்டிருக்கணும்.

ஆபீஸ் வேலையைத்தவிர சொந்த வேலையெல்லாம் வேற கொடுக்கறார். அதையும் நான் தான் செய்யணும். மாட்டேன்னு சொன்னா பொல்லாப்பு வரலாம். அதனால முகம் கோணாம செய்யறேன். அதுவும் தவிர கோயில் வேலைல என் மனசு ஈடுபடல. வேற எங்கயோ சுத்தறது.''

''வேற எங்கயோன்னா... சினிமாவுலயா.''

''சினிமால இல்லை. விக்ரஹ பூஜையைவிட எங்கயாவது உட்கார்ந்துண்டு தியானம் பண்ணலாம்னு தோணறது. நிறையப் படிக்கணும்னு ஆசை வர்றது.''

''அது கஷ்டம் முரளி. தியானத்துக்கு முன்னாடி ஜபம், மந்திரஜபம். ஒருநாளைக்கு அஞ்சுமணி நேரம் மந்திர ஜபம் பண்ணினாத்தான் அரை மணிநேரம் தியானத்துல உட்கார முடியும். தியானம் பண்றேன், தியானம் பண்றேன்னு நம்மளை நாமே கபடமா ஏமாத்திக்கலாம். கண்ணை மூடிண்டு ஏகப்பட்ட கற்பனை பண்ணலாம். அதையும்



தவிர பூஜை, புனஸ்காரம், ஹோமம், யாகம் இதெல்லாம் ஒரு ரவுண்ட் வந்துட்டு யோகத்துல உட்கார். இதையும் தவிர ஸ்வாமி பூஜை ஒரு வகை தியானம். பரீட்சை எழுதறது ஒருவகை தியானம். ஆபீஸ் வேலை ஒருவகை தியானம். முழு ஈடுபாட்டோட எந்த வேலை செய்தாலும் அது ஒரு வகை தியானம். முழிச்சுண்டு ஒரே முனைப்பா ஒரு வேலை ஈடுபடப் பழகினால், கண்ணை மூடிண்டு ஒரே முனைப்பா ஒரு மையத்துல இருக்க முடியும்.''

''புரியலை மாமா.''

''அம்பாளுக்கு சந்தனக்காப்பு பண்றே. சந்தனத்தை அப்பி, சரிகை பேப்பர்ல புடவை பண்றபோது. கண்ணுக்கு மை எழுதறபோது. உதட்டுக்குச் சிகப்பு எழுதறபோது. ஒரே முனைப்பா அந்த இருட்டு ரூம்ல உட்கார்ந்து செய்யணும். வெளில வந்து வேர்வையை துடைச்சுண்டு காத்தாட அந்தப்பக்கம் போய் நின்னுண்டு, அஞ்சுநிமிஷம் கழிச்சு உள்ளே போய் நாம பண்ணின அலங்காரத்துக்கு நாமே கற்பூர ஆரத்தி காட்டறபோது அம்மான்னு உள்ளுக்குள்ள ஒரு அலறல் வரும்.

அந்தக் கற்பூர ஜோதில தான் ஸ்வாமி உயிர்ப்போட இருக்கிறது தெரியும்.

ராத்திரி கனால வரும். கார்த்தால திரையப் போட்டுட்டு கலைக்க முடியாத அது எதிர்க்க உட்கார்ந்திருப்போம்.

நான் சுய நலத்துக்காக கூப்பிடலை, கோயில் பூஜை. சாதாரண விஷயம் இல்லை. இது ஒரு மாதிரி யாகம் ஈடுபாட்டோட பண்ணினா நம்ம உடம்பு சூடு ஏறி மனசுல ஒரு உத்வேகம் கூடும். இன்னிக்கு மழை வருமா... நீ கேட்டாவரும்னு உள்ளுக்குள்ள ஒருகுரல் பதில் சொல்லும். இன்னிக்கு யாரோ மெட்ராஸ்லேர்ந்து வந்து அவசரப் படுத்தப்போறா அப்படீன்னு உள்ளுக்குள்ள ஒரு எண்ணம் வரும். அது நடக்கும்.

முரளி மெல்ல சிரித்தான்.

''என்னடா சிரிக்கிறே.'' சாம்பசிவ குருக்களும் சிரித்தார்.

''சாயரட்சை பூஜைக்கு நான் வருவேனா மாட்டேனா மாமா.''

சாம்பசிவகுருக்களுக்கு அவன் கேலி புரிந்தது.

''நிச்சயம் வருவாய். வெகு நிச்சயம் வருவாய்.''

முரளி பதில் சொல்லாமல் கோயிலை பிரதட்சணமாக சுற்றினான். கொடிமரத்தின்கீழ் விழுந்து நமஸ்காரம் செய்தான்.

''முரளி, குட் ஈவினிங்'' பின்னால் குரல் கேட்டது. முரளி திரும்பினான்.

பத்மினி இடுப்பில் ஒருகுடமும், கையில் ஒரு குடமுமாய் நீர் தளும்ப நடந்துவந்து கொண்டிருந்தாள். அவள் இடுப்புப் பக்கபுடவை முழுக்க நனைந்து கிடந்தது. பளிச்சென்று வெள்ளையாய் வயிறு தெரிந்தது.

முரளி சட்டென்று பார்வையைக் குடத்துக்கு மாற்றினான்.

''என்ன...நீ ஜலம் எடுத்துண்டு போற...மடப்பள்ளி ஆள் இல்லையா''

''இன்னிக்கு யாரும் இல்லை.''

''அப்பா கார்த்தாலேர்ந்து புலம்பிண்டேயிருந்தா. அதனால நானே நாலுநடை தண்ணி எடுத்துடலாம்னு குடத்தைத் தூக்கிட்டேன்.

பத்மினி சாம்பசிவ குருக்களின் ஒரே மகள். பேரழகி. திருமங்கலக்குடியின் தேவதை. கொஞ்சம் குள்ளத்தோற்றம்.



சோத்தி, ஆனால் உருண்டு திரண்டு சிரிப்பும்; கண் வீச்சுமாய் ஒரு ரதம் போல் நகருகிற பெண். ஆடுதுறைக்கு படிக்கப் போனாள். ஒன்பதாவது வரை நன்கு படித்தாள். பத்தாவது அரசுப் பரீட்சைக்குப் போனவள் வெறும் பேப்பரை முதல் நாள் மடித்துக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்து விட்டாள். அவள் அம்மாவும் அப்பாவும் பதறினார்கள்.

''என்னடி...என்னாச்சு. யாராவது ஏதாவது சொன்னார்களா'' கிராமமே உலுக்கிக் கேட்டது.

''இது உன்வேலை இல்லை எழுந்து போன்னு யாரோ சொன்னா. எழுந்து வந்துட்டேன்.''

''யாருடி.''

''தெரியலைப்பா.''

''எப்படி இருந்தா.''

''மனுஷா ரூபமாவேயில்லை. என் உள்ளுக்குள்ள என்னமோ மாறித்து. பத்மினி, இதெல்லாம் உன் வேலை இல்லை. எழுந்து போன்னு சாதாரணமா, அதே சமயம் நிச்சயமா மனசுக்குள்ள ஒரு கட்டளை வந்தது. நான் கொஞ்சம் யோசனை பண்ணினேன். போமாட்டேன்னா... அப்பான்னு ஒரு அதட்டல் வந்தது.

நான் எழுந்து நின்னு யாருன்னு கேட்டேன்.''

ரெண்டு கண்கள் எதிரே வந்தது.

''நான் தான். வீட்டுக்கு போன்னு சொல்லித்து. நான் எழுந்து வந்துட்டேன்.''

''என்னடி இது...நல்லாத்தானே படிச்சுண்டிருந்தே. ஏதோ கச்சேரி வேலைக்கு போவேன்னு நினைச்சுண்டிருந்

தேனே. இப்படி பண்ணிட்டியே. ஏதாவது காத்துகருப்பா இருக்குமோ பகவானே'' பத்மினியின் அம்மா அழுதாள்.

அன்று இரவு எட்டு மணிக்கு உணவு முடித்து முரளி வீட்டில் எல்லோரும் தூங்குற நேரம். முரளியின் அப்பா ரேடியோவில் பிபிசி கேட்டுக் கொண்டிருந்தார்.

சாம்பசிவ ஐயரின் பிள்ளை ஓடி வந்தான்.

''மாமா, உங்களை அப்பா உடனே அழைச்சண்டு வரச்சொன்னா. முரளி நீயும் வாயேன்.'' கத்தலாய் கெஞ்சினான்.

''என்னடா விஷயம். பத்மினி என்னவோ, மாதிரி இருக்கா. என்னென்னவோ பேசறா.''

அவர்கள் இரண்டு பேரும் சாம்பசிவ குருக்கள் வீட்டுக்கு ஓடினார்கள். அவர்கள் வருவதற்கு முன்பே அந்த வீட்டு வாசலில் இரண்டு மூன்று பேர் நின்றிருந்தார்கள்.

பத்மினி ஒரு மர ஸ்டூலில் சுவர் பார்த்து சுவரிலிருந்து ஓரடி தள்ளி உட்கார்ந்திருந்தாள். அவள் தலைமுடி பிரிந்திருந்தது. தலை முடியிலிருந்து ஈரம் சொட்டிக் கொண்டிருந்தது. கீழே ஒரு குடம் உருண்டு கிடந்தது. தரையெல்லாம் ஈரமாக இருந்தது.

''என்ன சாம்பசிவம்.'' அப்பா கேட்டார்.

''சமயபுரம் மாரியம்மனாம். ஒன்னு கத்தறா.''

முரளி அந்த வீட்டிற்குள் ஒரு அனல் வீசுவதை உணர்ந்தான். அந்த ஒன்பது மணி இரவில் அவன் பிடித்திருந்த தூண் சுட்டது.

''எப்போ இது.''

பத்து நிமிஷம் ஆச்சு.

''என்ன சொல்றா.''



''நான் உன் வீட்டைத் தேடி வந்திருக்கேன்டா. உன் கூடத்தான் இருக்கப்போறேன்றா.''

''நல்ல வார்த்தையாத்தானே இருக்கு. நான் பேசறேன்.''

அப்பா யாரையோ மனதில் தியானித்து கை கூப்பினார்.

''பத்மினி'' என்று கூப்பிட்டார்.

பத்மினி பளிச்சென்று திரும்பினாள்.

''நான் மாரி. சமயபுரத்து மாரி.'' உட்கார்ந்தபடியே பூமியை உதைத்தாள். தலைமுடி ஆலவட்டம் அடித்து அவள் முன்னே வந்து விழுந்தது. கண்கள் சிவந்திருந்தன. அப்பாவியான பத்மினியின் முகம் காணாமல் போய் உக்கிரமான அரசியின் முகம் அங்கே தெரிந்தது. புருவங்கள் பல்வேறு விதமாய் நெரிபட்டன. கண்ணில் கோடி விளிம்பு தூக்கலாயிற்று. அதாவது கண்கள் பூமிக்கு சமமாக இல்லாமல் மொத்த கண்களும் தரை நோக்கி திரும்பி இருந்தன.

கடும் கோபத்தில் உள்ளவர்களுக்குத்தான் கண்களின் நுனி கீழ் நோக்கியும் கடை மேல் நோக்கியும் இருக்கும். பத்மினியின் மூக்கு விடைத்திருந்தது.

''சரி, நீ சமயபுரம் மாரி. என்ன வேணும் சொல்லு.'' அப்பா பவ்யமாகத்தான் கேட்டார்.

''ஓஹோ..., நீங்க நம்பலையோ. நீங்க வேதாந்தியாச்சே. எதையும் நம்ப மாட்டேளோ. எல்லாம் தெரிஞ்சவாளாட்டேளோ. மச்சினியும் வேணும்னு பொண் பார்க்கையில் தொந்தரவு பண்ணது உனக்கு மறந்து போயிருக்கலாம். எனக்கு மறக்காது.

அத்திம்பேர் என்னை வாழ விடுங்கோன்னு அந்தப் பெண் கெஞ்சியபோது ஒரே ஒருநாள் என் கூட சந்தோஷமா இருந்துட்டு நீ வாழ்ந்துக்கோன்னு சொன்னது எனக்கு மறக்கலை. மச்சினி எதிர்க்க, சட்டையைக் கழற்றிப் போட்டுட்டு குறுக்குக் கட்டையில தொங்கி மூச்சுப் பிடிச்சு உடம்பு உரம் காமிச்சேனே. உனக்கு மறந்து போயிருக்கலாம் எனக்கு மறக்கலை. ரெண்டு கையும் ரெண்டு தேள் கொட்டித்தே அது உனக்கு மறக்கலாம். எனக்கு மறக்கலை.

அன்னிக்கு கொட்டினது தேள் இல்லைடா, நான். என் அத்திம்பேர் கிட்டேயிருந்து என்னைக் காப்பாத்து. நான் மொட்டை அடிக்கக்கறேன்னு என்கிட்ட வேண்டினடா, நான் தேளா உன்னைக் கொட்டினேன்.

சங்கரா, நான் சமயபுரம் மாரி. மரியாதையா பேசு.

அப்பா ஆடிப்போய் பொத்தென்று சக்தியில்லாமல் தரையில் விழுந்தார்' பிறகு தவழ்ந்து போய் காலில் விழுந்தார்.

''எல்லாரும் நமஸ்காரம் பண்ணுங்கோ.''

பத்மினி உரத்த குரலில் கத்தினாள். அப்பாவும் அம்மாவும் காலில் விழுந்தார்கள்.

எல்லோரும் நமஸ்கரித்த பிறகு முரளி அவளுக்கு நேரே போய் நின்று அபிவாதயே சொன்னான்.

அவள் வாய் விட்டு சிரித்தாள்.

அவன் நமஸ்கரித்து எழ அவள் உச்சந்தலையில் கை வைத்தாள். கழுத்துவரை ஒரு குடு பரவியது.

பளிச்சென்று பத்மினி மறுபடியும் சுவர்பக்கம் திரும்பிக்கொண்டாள்.



மறுநாள் காலைவரை அப்படியே உட்கார்ந்திருந்ததாக அவள் வீட்டில் சொன்னார்கள்.

''என்ன பத்மினி இது. இப்படி பயமுறுத்திட்டே திருமங்கலக்குடி முழுவதும் கேட்டது.

இறுக்கி சொருகிய தாவணியும், சிரிப்பு நிறைந்த முகமுமாய் பத்மினி வெட்கப்பட்டாள்.

''எனக்கு தெரியலை மாமா. என்னமோ ஆயிடுத்து.''

''அருள் வாக்கா ஒண்ணும் சொல்லலையே. ஊர் சலசலப்பட்டது.''

''யாரும் கேட்கலையே.''

முரளி டக்கென்று பதில் சொன்னான்.

''சமயபுரம் மாரி இங்க ஏன் வரா?''

''அவ எங்க வேணா வருவா'' வேறு யாரோ பதில் சொன்னார்கள்.

''பத்மினி, அப்போ உனக்கு எப்படி இருந்தது.'' முரளி ஆவலோடு பத்மினி பார்த்து கேட்டான்.

''அது விநோதமான மனோநிலை முரளி. நான் என்ன பண்றேன்னு எனக்குத் தெரியறது. ஆனா எதுவும் நான் பண்ணலை. என்னை ஒரு ஓரமா உட்கார வச்சுட்டு என் உடம்பை யாரோ எடுத்துக்கறா. என் மூளையை வேறு யாரோ நிரப்பிக்கறா.''

''நன்னா இருக்கு நீ சொல்றது.''

''என்ன...''பத்மினி ஆவலாய் முரளியைக்கேட்டாள்.

''மூளையை நிரப்பிக்கறாங்கறது புது வார்த்தை. ஆமாம். மனசு எல்லாத்தையும் வேடிக்கை பார்க்கறது. நான் பேசினது எல்லாம் எனக்கு ஞாபகம் இருக்கு. எனக்கே என்னுடைய நடத்தை விநோதமா இருக்கு.''

''பயமா இருக்கா?''

''இல்லை.'' அம்மாகிட்ட என்ன பயம்.

''அம்மாவா. ஆமா. சமயபுரத்தாள். அவளுக்கு உட்கார ஒரு நாற்காலி வேணும். அதுக்கு என்னை பயன்படுத்திக்கறா. கொஞ்சநேரம் உட்கார்ந்திட்டு போயிடுவோ.''

''இதான் முதல் தடவையா.''

''இல்லை மூணாந்தடவை, பரீட்சை ஹால்ல வந்தது ரெண்டாந்தடவை. அதுக்கு முன்னாடி ராத்திரி பரீட்சைக்காகப் படிச்சுண்டிருந்தேன். கூரைவோர்த்து முற்றத்துக்கு இறங்கினா. துளசிச் செடிகிட்ட கொஞ்சநேரம் நின்னா. அப்படியே சமயபுரம் மாரியம்மன்.''

நான் கத்தணும்னு வாயெடுத்தேன். எனக்கு கொஞ்சம் வேலையிருக்கு. கத்தாத இருன்னா. நடந்து பத்தடி தூரத்துல நின்னா. பசக்குன்னு உள்ள பூந்துண்டுட்டா.

நான் என்னையே பார்த்துண்டிருந்தேன். கை, கால், தோள், வயிறு, மார்பு எல்லாத்துலயும் பூந்துட்டா. அப்புறம் என்னைப் பார்த்து சிரிச்சா. நான் கொஞ்சம் மிரட்சியா இருந்தேன். நான்னு இங்க சொல்றது என் மனசை. பயப்படாதே. இப்படித்தான். இது நடக்கும், நீ பேசாத இரு. அப்படீன்னு மிருதுவா பேசினா. ஹால் முழுக்கா நடந்தா. அதாவது நான் நடந்தேன்.

எங்கப்பாவையும் அம்மாவையும் உற்றுப் பார்த்தா. அண்ணாவைப் பார்த்து சிரிச்சா.

சமையக்கட்டு கொல்லைப் பக்கம், வாசல், எல்லா பக்கமும் சுலந்தோடு நடந்தா. அவ எந்த இடத்தைப் பார்த்தாலும் அது சுத்தமாகறது. வெளிச்சமாறது.

எங்க தாத்தா ஒருத்தர் ரேழிலரொம்ப வருஷமா உட்கார்ந்திண்டிருப்பார். அவளைப் பார்த்ததும் எழுந்து



நின்னார். ஒல்லியா நீளமா எதுவும் பண்ண சக்தியில்லாத வெறுமை சுருண்டுண்டு கிடந்த அவரைசுத்தி ஒரே அழுகை. சமயபுரத்தா ஹூம்னு விரட்டினா. விசுக்குன்னு அது வெளிய போயிடுத்து. ரேழி அவ்வளவு சுத்தமாயிடுத்து. வாசற்படியில இறங்கி ரெண்டுபக்கமும் தெருவைப் பார்த்தா. தெரு சுத்தமா போயிடுத்து.

தெருவுல இறங்கினா. அம்மா எனக்கு பயமா இருக்குன்னேன். என்னடி நீன்னு அதுத்துண்டே உள்ள வந்துட்டா.

''சமயபுரம் மாரியம்மன்கறது ஒரு உருவமா''

''இல்லை. ஒரு சக்தி, தக தகன்னு ஒரு தழல். ரொம்ப காலத்து நெருப்பு. எதைப் பார்த்தாலும் அவ சிரிக்கறா. எல்லாம் தெரிஞ்ச சிரிப்பு.''

''வேற என்னவெல்லாம் தெரியறது.''

''படுத்துக்கோ. ஸ்ரீரங்கம் போலாம்னு சொன்னா,''

''அப்படியா'' முரளி வியந்தான்.

'நான் பே பார்த்திண்டு படுத்தேன். நான் அவரெண்டு பேருமே உடம்பு விட்டு வெளிய வந்துட்டோம். எனக்கு அப்படியே வயிறு முறுக்கிண்டு நின்னுடுத்து. சரி அது அப்படியே இருக்கட்டும் வா. அப்படீன்னு என்னைக் கூட்டிண்டு போனா. அணைச்சமாதிரி நகர்ந்தா.

ஸ்ரீரங்கம் கோயில்ல இறங்கிட்டோம். ஆர்யப்படாள் வாசல்வோர்த்து உள்ளே நகர்ந்து போனோம்.

இருட்டு. ஆனா ஸ்ரீரங்கம் ரொம்ப பிரகாசமா ஜொலிக்கிறது. காயத்ரி மண்டபம் முழுக்க வெளிச்சம். அந்த வெளிச்சத்துக்குள்ள போய் இன்னொரு வெளிச்சத்தைப் பார்த்தோம். ரெங்கநாதர் சன்னதியில இருக்கற ரெண்டு தூணும் தகதகக்கற வெளிச்சம், உள்ள அந்த

பாம்பு பஞ்சணைக்குக் கீழ மேடை இருக்கு. அந்த மேடைக் குள்ள போறதுக்கு ஒரு வழி இருக்கு. ஒரு பலகைய புரட்டினா கீழ் பக்கமா போயிடலாம். அப்படின்னு எனக்கு தோணிச்சு. ஆமாங்கற மாதிரி அம்மா என்னைப் பார்த்து சிரிச்சா.

கொஞ்சநேரம் அந்த வெளிச்சத்தைப் பார்த்துவிட்டு வந்துட்டோம். வேசா என்னை திசை திருப்பினா. நான் என் உடம்புக்குள்ள போயிட்டேன். வயிறு முறுக்கு சரியாப் போயிடுத்து.''

''இந்தப் பொண்ணு ஒண்ணாம் நம்பர் டுப்பு சார். அப்பாவுக்கு கோயில் வேலை. கல்யாணத்துக்கு ஒண்ணும் சேர்த்து வைக்கல. தனக்கு மரியாதையா கல்யாணம் நடக்கும்னு இந்தப்பொண்ணுக்கு தோணலை. ஆடுதுறைல வெட்டிப் பசங்க மடக்கி னியூன்னு சொல்லியிருப்பாங்க. பயந்துருப்பா. டக்னு மாரியம்மன் வேஷம் போடறா.''

திருமங்கலக்குடி விளக்கம் சொன்னது.

நான் சொல்றேன் சார். இவ பாட்டி ஒருத்தி சரியா வாழலை. இருபத்திரெண்டு வயசுல ரெண்டு குழந்தைகளோட விடோவாயிட்டா. அவ மனசு நொந்து செத்துப் போன வீடு இது. இவாளும் அவளுக்கு சரியா காரியங்கள் பண்ணலை.

ஒரு கன்னிப்பெண் மனசு பலஹீனமான நேரத்துல உடம்புக்குள்ள பாஞ்சிட்டிருப்பா.

எல்லாம் பைத்தியங்கள். நாடகம் போடற பைத்தியங்கள். கேவலமான பிறப்புகள். தான் முக்கியமா தெரியணும், அதுக்கு என்ன பொய் வேணா சொல்ற பீடைகள்.

சங்கரன் மச்சினியை கத்தினது கிராமத்துல எல்லா ருக்கும் தெரியும். சாம்பசிவம் தன் பொண்ணு பத்மினிக்



கிட்ட சொல்லியிருப்பான். அந்தப் பொண்ணு நேரம் பார்த்து மிரட்டிடுத்து. இந்தப் பயந்தாங்குளி காலை விழுந்து அழுதுட்டான். புள்ளைக்கு முன்னாடி மானம் போயிடுத்தேன்னு கலவரப்பட்டுட்டான்.

அவ திருடி. இவன் தொடை நடுங்கி. இன்னும் ஒரு மாசத்துக்கு நமக்கெல்லாம் பேசறதுக்கு விஷயம் கிடைச் சிருக்கு. இந்தமாதிரி பேய்க் கதையைத் தேடித் தேடி பேசி நாமளா கற்பனை பண்ணி பொழுது போக்குவோம்.

ஊர் விதம்விதமாய் அபிப்பிராயம் சொல்லியது.

அப்பா அவளைப் பார்த்ததும் தலை குனிந்து கொண் டார். முரளி அவர் அருகே போய் நின்றான். அணைத்துக் கொண்டான்.

''என்கிட்ட எம்ப்பா வெட்கப்படறே. நான் உன் முரளிப்பா.''

அவர் அமைதியானதும் மெல்ல கேட்டான்.

''பத்மினிக்கிட்ட இருக்கற சக்தி என்னப்பா.''

''சமயபுரம் மாரியம்மன்.''

''தெய்வம் இப்படி வருமா.''

''வரும்.''

''பத்மினிக்கிட்ட ஏன் வந்தது.''

''தெரியாது.''

இது நடந்து நான்கு வருடங்களாகிவிட்டன. அதற்குப் பிறகு பத்மினி கத்தியதாகத் தெரியவில்லை. சமயபுரத் தாள் வந்ததாகத் தெரியவில்லை. ஊர் கேலி பேசுகிறது என்று ஒருவேளை சொல்லாமலும் இருக்கலாம்.

நடுவே பத்துப்பதினைந்து முறை பத்மினியை சந்தித்த போதுதானோ முரளி என்று சொல்லிவிட்டு போனாள்.

ஒருமுறை ஊரிலிருந்து ஆடுதுறை வரை அவனோடு சைக்கிளில் டபுள்ஸ் வந்தாள்.

பத்மினியின் அழகு நிறைய பேரை திரும்பிப் பார்க்க வைத்தது.

ஆனால் பத்மினியிடம் யாரும் தவறாய் நடந்து கொண்டதாக இதுவரை செய்தி இல்லை.

அந்த அழகு, அவள் குரல், அவள் நடை, அவள் பார்வை எல்லாவற்றிலும் ஒரு உக்கிரம் இருப்பதாய் அப்பா சொல்வார்.

''மாமா, நான் என்னவோ இஷ்டத்துக்கு பேசிட்டேன் போல இருக்கே.'' பத்மினி கை கூப்பி அப்பாவிடம் மன்னிப்பு கேட்டபடியே வந்தாள்.

''சேச்சே... அது நீ பேசலை. தெய்வத்தைத் தவிர அதை யாரும் பேசவும் முடியாது. மூணாம் பேருக்கு தெரியாம நடந்த விஷயம். ஒரு வயசுக் கோளாறுல நான் அவ மேல ஆசைப்பட்டது ஊருக்குத் தெரியும். ஆனா சமயபுரத்தானை துணைக்குக் கூப்பிட்டது எனக்கு மட்டும்தான் தெரியும்.''

பத்மினியால் அப்பா அவமானப்படவேயில்லை. அதைப்பத்தி முரளியிடம் பேசவும் அஞ்சவில்லை.

''நல்ல வேளை, சமயபுரம் ஆத்தான்னு சொல்லி உன் சித்தி என்னை பயமுறுத்தி நிக்க வச்சுட்டா. இல்லேன்னா நான் ஏதாவது முட்டாள்தனம் பண்ணி அவளுக்கும் தாலி கட்டி இழுத்துண்டு வந்து குடித்தனம் பண்ணி போவல்லைதயாயிருக்கும். என் பொழப்பு நாய் பொழப்பாயிருக்கும்.''

இத்தனை நடந்த பிறகும் உங்கம்மா என்னை வெறுக்கலை. எதிர்க்கலை. அங்கதான் நான் ஆடிப் போயிட்டேன். என் தங்கை கொஞ்சம் அழகாகத்தான் இருப்பா. நாங்க ரெண்டு பேரும் ரோடுல போகும்போது



அவளைத்தான் எல்லாரும் பார்ப்பா. அவளைத்தான் எல்லாரும் கேலி பண்ணுவா. என்னை யாரும் முக்கியமாவே நினைக்க மாட்டா. அதான் இங்கயும் நடந்திருக்கு. அப்படீன்னு சாதாரணமா சொன்னா.''

அன்னியிலேர்ந்து உங்கம்மாவை நான் மரியாதையா நடத்த ஆரம்பிச்சுட்டேன். சீ தூன்னு சொல்ற பொம்மனாட்டியைவிட இழிவா நடந்தாலும் கொண்டாடற பொம்மனாட்டி போறும்னு நினைச்சுட்டேன்.

இதுல என்ன விசேஷம் தெரியுமா. கொண்டாட கொண்டாட உங்கம்மா அழகாயிட்டா. பல்லு கொஞ்சம் தூக்கலா இருக்கும். யாரோ சொல்ல மெட்ராஸுக்கு போய் ராவி சரி பண்ணினோம். வரிசையா ஒழுங்கா பண்ணினோம். தலை வாரிக்கவும் புடவை கட்டிக்கவும் ஒரு அத்தை சொல்லிக் கொடுத்தா. அதுக்குப் பிறகு திருமங்கலக்குடில உங்கம்மாதான் தேவதை. சீ போன்னு சொன்ன உங்க சித்திக்கு சர்க்கரை வியாதி வந்துடுத்து. புருஷன் சள்ளுபுள்ளுன்னு எரிஞ்சு விழுந்தான். அவன்கூட சண்டை போட்டுண்டு அவ இங்க வந்து ஆறுமாசம் இருந்தா. எனக்கு மனசு ஆறவேயில்லை. அவ வேதனை தீரணுமேன்னு ஆஞ்சநேயர்கிட்ட தினம் வேண்டிப்பேன். அவளுக்காக வாரா வாரம் சமயபுரம் போவேன்.

பத்மினி மேல சமயபுரத்தான் வந்து பேசினது எனக்கு பிடிக்கலை. பஸ் ஏறி அங்க வந்து என்னை நம்பி பிரார்த்தனை பண்றே. நானே இங்க வந்தா நம்ப மாட்டியா... கேட்டா. நான் நம்பறேன்னு சொன்னேன்.

பத்மினி மீது யாருக்கும் எந்த சந்தேகமும் வரவில்லை. பத்மினியும் அதற்குப் பிறகு அருளுக்கு ஆட்படவில்லை.

கொடிமரத்துக்கு எதிரே நமஸ்காரம் செய்துவிட்டு மண்டபத்தில் நெடுநேரம் முரளி உட்கார்ந்தான்.

வாழ்க்கை இட்டமிட்டபடி யாருக்காவது நடக்கிறதா அல்லது எல்லார் வாழ்க்கையும் காட்டாறுதானா.

இப்படி ஆடுதுறையிலேயே படிப்பும், ஆடுதுறையிலேயே வேலையும் கிடைக்கும் என்று நினைக்கவேயில்லை ஆடுதுறையிலேயே திருமணம். ஆனால், வேறு உலகம் தெரிய போவதில்லை.

சாம்பசிவ குருக்கள் இன்னும் மேழ இருக்கிறார். திருமங்கலக்குடியிலேயே கட்டிப்போட நினைக்கிறார். சிவதீட்சை வாங்கிக் கொள்ளச் சொல்கிறார். இது ஒரு தனி படிப்பு. தனி உலகம். இதை செய்ய முடியுமா என்று தெரியவில்லை. போக்குவரத்து அதிகமாக இருந்தால் சந்தோஷமாக ஈடுபடலாம். கோயில் தட்டுக்காக பார்த்து விட்டு ஈடுபட பத்துபேர் வந்துவிடுவார்கள். ஆனால், இது உள்ளடங்கி வேறு இருக்கிறது. ராகுதோஷ பரிகாரம் இருந்தாலொழிய உள்ளடங்கி இருக்கிற கோயிலுக்கு பெரிய மரியாதை கிடைக்காது.

நாம அலங்காரம் செய்து நாம சந்தோஷமாய் பார்த்து நாமே உட்கார்ந்து கலைத்துக் கொண்டிருப்பது கொடுமை.

இந்த அலுப்புதான் சாம்பசிவ குருக்களுக்கு வந்து விட்டது.

ஆனி திருமஞ்சனத்திற்கு ஆளே இல்லை. ஒரே ஒரு சொம்பு ஜலத்தில் திருமஞ்சனம் முடிந்துவிடும். இது செய்யாதது வேதனையாக இருக்கும். செய்யவும் தோன்றாது.

கோயில்கள் பிரபல்யமாகிவிட்டால் தட்டுக்காசிலேயே தங்கச் சங்கிலி செய்து போட்டுக் கொள்ளலாம். தட்டுக்காசுக்கு பதில் யாரேனும் தங்கச் செயின் செய்தும் போடுவார்கள். ஸ்பெஷல் தரிசனம். ஸ்பெஷல் அபிஷேகம், ஸ்பெஷல் புறப்பாடு என்று ஏதாவது செய்து



கொண்டே இருக்கலாம். அரசாங்க அதிகாரிகளோடு சிறிது மல்லுக்கட்ட வேண்டும். ஆனால், இங்கே அரசாங்க பிரச்சனை ஏதுமில்லை. வருடத்துக்கு மூன்றுமுறை உண்டியல் திறக்க பஸ்ஸில் வந்து இறங்குவார்கள். உண்டியலில் இருக்கிற ஆயிரம் ரெண்டாயிரத்தை ஆடுதுறை பாங்கில் கட்டிவிட்டு போவார்கள்.

கோயிலில் பல மராமத்துகள் டியூப் லைட்டுகள் உட்பட உள்ளூர் ஜனங்களாலேயே நடைபெற்று வருகின்றன. இங்கிருந்து அரபு நாட்டிற்கு போன ஆறுபேர், விளக்கு எரிப்பதற்காக சாம்பசிவம் குருக்களுக்கு தனியே காசு கொடுத்துவிட்டு போகிறார்கள். எல்லா சன்னதிகளிலும் இரவு முழுவதும் விளக்கெரிவது அவர்கள் தயவால்தான்.

இந்தக் கோயில் ஒன்றும் மோசமில்லை. அதே சமயம் உசத்தியும் இல்லை. இங்கு வேலை செய்வது சந்தோஷம் தான். ஆனால், இதுவே வேலையாக இருக்க முடியுமா. காலை முழுவதும் அலுவலகத்தில் போராடிவிட்டு மாலையில் இங்கு வந்து தட்டு தூக்குவது சிறிது கஷ்டம்தான்.

ஆனால், மங்களாம்பிகா, மங்களாம்பிகா என்று உள்ளே ஒரு காதல் இருப்பதால் செய்துவிட முடியும்.

முரளி வெறுமே உட்கார்ந்து கருங்கல் தரையில் சந்து வெறி யோசித்துக் கொண்டிருந்தான்.

பத்மினி அவனைத் தாண்டிப் போனாள்.

ஏதாவது பேசுவாள் என்று எதிர்பார்த்தான்.

அவள் மௌனமாகப் போனாள். காலி குடத்தோடு கோயில் வாசல் நோக்கி அவள் நடப்பது விழியோரம் தெரிந்தது.

திடீரென்று யாரோ ஓடிவந்தார்கள்.

''சாம்பு சாம்பு'' என்று கத்தினார்கள். சாம்பசிவ குருக்கள் வெளியே ஓடிவந்தார்.

உன் பொண்ணுக்கு மறுபடி சாமிவந்துடுத்து உன்வீட்டு திண்ணைல உட்கார்ந்திருக்கா. தலைல தண்ணி கொட்ட சொல்றா. வந்து தண்ணி கொட்டறத்துக்குக்கூட எல்லாரும் பயப்படறா.'' யாரோ ஓடிவந்து சொன்னார்கள்.

சாம்பசிவ குருக்கள் வீடு நோக்கி ஓடினார்.

அவர் பின்னால் ஓடி வந்தபோது முரளி, நீ இங்கயே இருப்பா. கோவிலைப் பூட்ட முடியாது. நீ இங்கயே இரு என்று கத்தினார்.

அவன் கட்டுப்பட்டான்.

கோவில் கருவறைகளை சாத்திவிட்டு நடுமண்டபத்தில் நின்று கொண்டான்.

திடீரென்று அவனைச் சுற்றி வெப்பம் அதிகரித்தது. மண்டபத்திற்கு வெளியே வந்து நின்றான். கூடவே வெப்பம் நடந்து வந்தது.

அக்ரஹாரத்துக் கோடியில் வசிக்கும் கிருஷ்ணய்யர் ஓடி வந்தார்.

''கோவிலை நான் பார்த்துக்கறேன். நீ சாம்பசிவம் வீட்டுக்குப்போ. பத்மினி உன்னைத்தான் கூப்பிடறா.''

''எதுக்கு சார்.''

''தெரியலைப்பா. எங்கே முரளி, முரளின்னு கத்தறா.'' முரளி தயங்கினான். வேறு பக்கம் ஓடிவிடலாமா என்று நினைத்தான்.

''முரளி, நீ எங்கயும் போக முடியாது. அங்க அவக்கிட்ட போய் என்னன்னு கேட்கணும். வெளியூர் ஆட்கள்



ஆறேழுபேர் இருக்கா. அவாளும் வேடிக்கைப் பார்க்கறா. நீ வந்தாத்தான் அடங்குவா.''

முரளி போகும்போது வெளியூர் ஆட்கள் கதறிக் கொண்டிருந்தார்கள்.

''எங்கிட்ட வேண்டிண்டு இங்க என்ன கும்மியடிக்க வந்தேளா. இடது கை விளங்கலேன்னு எங்கிட்டத் தானே அழுதே. ஏழு வருஷம் ஆச்சே. திரும்பிக்கூட பார்க்கலையே. திருமங்கலக்குடிக்கு உன்னை யார் கூப்பிட்டா. இன்னும் பத்து நிமிஷத்துல இந்த ஊரைவிட்டு போகலை...என்ன நடக்கும்னே தெரியாது.''

ஒரு வயசாளியைப் பார்த்து கத்தினாள்.

''புடவை போட வந்தோம். புடவை போட வந்தோம்...'' ஒரு பெண் சொல்ல,

''அதைக் கொண்டு போய் தெருப்புல போடு. திருட்டுப் புடவை எனக்கெதுக்கு. வேண்டிண்டு வந்தா, காசு கொடுத்து வாங்கணும். நீ ஏமாத்தி கண்ணாமூச்சி ஆடறதுக்கு திருமங்கலக்குடியா கிடைச்சுது. இன்னும் பத்து நிமிஷத்துல இங்கிருந்து கிளம்பிடணும்.''

யார்வீட்டிலோ இறங்கியிருந்த அந்தக் குடும்பம் வாரி சுருட்டிக் கொண்டு கிளம்பியது. ஒரு முப்பது வயது வாலிபன் மட்டும் பத்மினியை முறைத்து உற்றுப் பார்த்தான்.

''என்னாது வேடிய விட்டு நாடகம் போடுறீங்க. இப்படி வர்றவங்களையெல்லாம் விரட்டிட்டேயிருந்தா கோவில் உருப்பட்டாப்போலத்தான்.''

பத்மினி அவனைத் திரும்பிப் பார்க்கவேயில்லை.

''ஐயரு பொண்ணைப் பாரேன், நல்லா நாட்டுக் கட்டை மாதிரி இருக்கு'' அவன் தொடர்ந்து பேசினான்.

''தம்பி, அந்த மாதிரியெல்லாம் பேசாதப்பா. அவ ளுக்கு சாமி வந்திருக்கு.''

''மயிரு'' அவன் அசிங்கமாக சைகை செய்தான். காரில் ஏறிய ஒரு பெண் அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

''இடிச்ச இடுப்பு உடையப் போறது' பத்மினி உரக்க கார் பார்த்து கத்தினாள்.

முரளி படியேறி பத்மினியைப் பார்த்தான். அவன் முகத்தில் பெரிய சிரிப்பு இருந்தது.

''வேற வழியில்லை. நீதான் சாயந்தரம் கோயிலுக்கு பூஜை பண்ணணும். நீதான் அப்பப்ப அபிஷேக அலங் காரம் பண்ணணும், மங்களாம்பிகாவை நீ விடக்கூடாது. இந்தக் கோயிலை விட்டு எங்கேயும் நீ போகக் கூடாது. உனக்கு வேலை கொடுத்ததும், வேலைக்கான படிப்பு கொடுத்ததும் இந்த மங்களாம்பிகா. இதை மறக்கக் கூடாது.''

முரளி பதில் சொல்லாமல் நின்றான்.

''சரின்னு சொல்லலைன்னா யாரும் விடப்போற தில்லை. ஆடுதுறை தாண்டி உன்னால போக முடியாது' இது என் கட்டளை.''

இந்த முறை முரளிக்கு பயம் தெளிந்திருந்தது.

''எனக்கு வேற எண்ணங்கள் மனசில இருக்கு.'' முரளி முணுமுணுத்தான்.

''தியானம் பண்ணி கிழிக்கப் போறயாக்கும். வேதாந்தி ஆயிடப் போறயாக்கும். பளிச்சென்று பத்மினி பதில் கொடுத்தாள். ''ஊருக்கு உபகாரம் பண்றதுக்குத் தான் தியானம். ஒர்குன்னு உட்கார்றதுக்கு இல்லை.''

''எனக்கு யோசிக்கணும்.''



''நீ என்ன யோசிச்சாலும் முடிவு நான்தான்டா.'' பத்மினியின் குரல் கரகரவென்றிருந்தது. சொல்லி முடித் ததும் பத்மினி எழுந்து வீட்டுக்குள் ஓடினாள். சுருண்டு படுத்துக் கொண்டாள்.

கத்திவிட்டு கார் ஏறின இளைஞனை முரளி நினைத் துக்கொண்டான். அவன் முறைத்து விட்டுத்தானே போனான். அவன் கேவலப்படுத்திவிட்டுத்தானே அகன் றான். அவனை இவள் கண்டு கொள்ளவேயில்லையே. தான் மட்டும் எதற்கு பயப்பட வேண்டும்.

வீட்டுக்கு ஐந்து ரூபாய் என்று வசூலித்தால் யாரேனும் ராத்திரி பூஜை செய்து விட்டு போகிறார்கள். பூஜை செய்ய தஞ்சை மாவட்டத்தில் ஆளா கிடைக்காது. இவர்கள் தேடுவதேயில்லை. யாரையும் விசாரிப்பதே இல்லை. ஒட்டு மொத்தமாய் ஊருக்கு கோயில் பற்றிய அக்கறையில்லை.

போதாக்குறைக்கு பத்மினி வேறு குரல் மாற்றிப்பேசி ஏமாற்றுகிறாள். ஒருவேளை இவளை இப்படிப் பேசச் சொல்லி சாம்பசிவ குருக்கள் கேட்டுக் கொண்டிருப் பாரோ. மிக அப்பாவியாய் இளித்துக் கொண்டு திரிப தால் தந்தையும் மகளும் இன்னும் முட்டாளாக்கப் பார்க் கிறார்கள். ஆனால், சாம்பசிவ குருக்கள் அப்படி செய்ய மாட்டார். எந்த நேரத்திலும் அவரிடம் ஒரு நேர்மை இருக்கிறது.

ஒவ்வொரு சங்கராந்தியின் போதும் ஊரில் பத்து பேரைக் கூப்பிட்டு கோயில் அதிகாரிகளையும் வைத்துக் கொண்டு நகைக் கணக்கு காட்டுவார். ஒரு சிறிய தவறு கூட அந்தக் கணக்கில் நிகழ்ந்ததில்லை. சமயத்தில் கை காசு போட்டு அரிசியும், உளுந்தும் வாங்கி நைவேத்தியம்

முடித்துவிட்டு பிறகு யாராவது கொடுத்தால் வாங்கிக் கொள்வார்.

ஒரு தஞ்சாவூர் பார்ட்டி தான் குறிப்பிட்டு நூறுரூபாய் அட்வான்ஸ் கொடுத்துவிட்டு அம்பாளுக்கு அபிஷேகம் பண்ணச் சொல்லி தேதி கொடுத்துவிட்டு போனார். எல்லா ஏற்பாடும் செய்துவிட்டு காத்திருக்க ஆள் காணோம்.

சாம்பசிவ குருக்கள் விமரிசையாய் செய்து முடித்தார். மிச்ச நானூற்றைம்பதுக்குக் கடிதம் எழுதினார். பதில் வரவில்லை. அன்று என் உபயம் என்று அவர் சிரிக்கும் போது, ஊரில் ஒருவன் தஞ்சாவூருக்கு போய் காசு கேட்க திருமங்கலக்குடியே தெரியாது என்று சொல்லிவிட் டானாம்.

திருமங்கலக்குடியே கொதித்துப் போயிற்று. வெறு மனே போய் கேட்டா கொடுப்பானா. மாலை மரியாதை யோடு போகணும். தஞ்சாவூருக்கு ஒரு சாமந்தி மாலை எடுத்துக் கொண்டு போய் அவர் கழுத்தில் போட அவன் சாம்பசிவ குருக்களை உற்றுப் பார்த்துவிட்டு மன்னிச்சுக் கங்க. குடிபோனதில எனக்குத் தெரியாதுன்னு சொல் விட்டேன். மன்னிப்பு கேட்டுக் கொண்டான். காசு கொடுத்தான்.

நடுவே உள்ள நான்கு மாதங்கள் அவரின் இந்த கஷ்டம் பத்தி யாரிடமும் வாய் திறக்கவில்லை.

ஊர் கொடுக்கணும். உலகம் கொடுக்கணும் என்று கேட்கவேயில்லை.

கோயில் பெருக்குகிற ஆள் வராது போனால் சாம்பசிவ குருக்கள் பெருக்குவார். அவனிடம் ஏன் நீ சம்பளம் வாங்குகிறாய் என்று சண்டை போட்டதில்லை. நான்கு மாதங்கள் அந்த ஆள் பெருக்காமல் சம்பளம் வாங்கியிருக் கிறான். அதை இவர் ஊருக்குள் சொல்லவில்லை.



ஜனமாக எங்கோ அமட்டிக் கொண்டபோது ஊர் விழித் துக் கொண்டு அவனை இரண்டு அறை விட்டது. ஆனால், இப்போது திடீரென்று வந்து நீயும் கோயிலைப் பார்த்துக் கொள் என்று சாமி ஆடி சொன்னால், எப்படி பார்க்கமுடியும்.

''என்ன முரளி, நீயா பார்க்கப் போற'' ஊரில் உள்ள வர்கள் விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

''தெரியலை சார், யோசனை பண்ணணும்.'' அவன் தழுவின மாதிரி பதில் சொன்னான்.

சைக்கிளை எடுத்துக்கொண்டு முரளி ஆடுதுறைபக்கம் போனான், அலுவலகத்துக்குப் பின்னேயுள்ள சுவாமி நாதன் வீட்டில் போய் இறங்கினான்.

சுவாமிநாதன், மகள் வயிற்றுப் பேரனோடு விளை யாடிக் கொண்டிருந்தார். என்ன என்பதுபோல் வியந்து அவனைப் பார்த்தார்.

முரளி விஷயம் சொன்னான்.

''முரளி, ஒத்துக்கோ அந்த மணிக்கு மேல நமக்கு வேலையே இல்லை. எப்பவாவது பார்ட்டி இருந்தா, டெல்லிலேர்ந்து எம்.டி. வந்தா வேலை இருக்கும். பார்த்தால சீக்கிரம் வான்னு சொல்வேனே தவிர ராத்திரி கேட்டா போன்னு நான் சொன்னதில்லை.

பூமி ஆராய்ச்சி எப்பவோ முடிஞ்சு போச்சு. அது நம்ம வேலையில்லை. இருந்தாலும் செய்து கொடுத் தோம். தெய்வம்தான் உத்தரவிடறது அப்படின்னா தெய்வம்தான் அதுக்குரிய வழியும் சொல்லிக் கொடுக்கும். இல்லைன்னா, சாம்பசிவகுருக்கள் எதுக்கு நாடகம் ஆடணும்.

இதுல நான் தரேன் அப்படின்னா யாராவது அப்பா புள்ளையோ, அண்ணன் தம்பியோ ஒரு குடும்பத்து பார்த்து வந்துட்டு போறா. அக்கம்பக்கத்துல எத்தனை

கோயில் இருக்கு' அங்கேர்ந்து பிடுச்சிண்டு வர தெரியாதா, உன்னை எடுத்துக்கோன்னு தெய்வம் சொல்றது. எடுத்துக் கத்தானே வேணும்.

அதை தெய்வம்னு நம்பினா நீ அப்படியத்தானே வேணும். பத்மினிங்கற பொண்ணு ஏமாத்தற பொண்ணா. அப்படி தோன்றதா.''

''எனக்குப் பிடிக்கலை சார். அவா சொல்ற அந்த வேலை எனக்குப் பிடிக்கலை. தெய்வம் கோயில்ல இல்லை சார். மனசுல இருக்கு.''

ராமசந்திரராவ் சொல்ற ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி ரொம்ப கரெக்ட் சார். இந்தக் கல்லுதான் சுவாமின்னு நம்பிட்டா கடைசிவரைக்கும் சுவாமியைக் கண்டுபிடிக்க முடியாது. கிருஷ்ணர்தான் சுவாமின்னு நினைச்சுட்டா கிருஷ்ணரே இல்லாத கடவுளை நாம் நினைக்க முடியாது. தெரிந்ததிலிருந்து விடுதலை. எனக்குத் தேவையில்லாம நிறைய தெரிஞ்சிருக்கு சார். அதை நான் உதற கத்துக்கணும்.

''அடிசக்கை. ரான் அவ்வளவு குழம்பிட்டானா. யார் என்ன சொன்னாலும் அப்படியே ஏத்துண்டு கத்துவியா... புரிஞ்சுக்க மாட்டியா. அப்படிப் பார்த்த ஜிட்டு கிருஷ்ண மூர்த்திலேர்ந்தும் விடுதலை வேண்டாமா. அவரைத் தப்புன்னு சொல்ல எத்தனை நாழியாகும்.''

''ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி தெளிவாத்தானே சொல்றார். இதுதான் கடவுள் என்று மற்றவர் சொல்வதை நம்பாதே. நீயா தேடுங்கறார்.''

''உலகத்துல ஒரு விஷயம் கூட அவர் சொல்ற மாதிரி பண்ண முடியாது. உன் பேரு முரளி. இதை நீயாவா தெரிஞ்சுண்டே. நீ போட்டுண்டிருக்கற சட்டை நீயாவா தைச்சுண்டே. மத்தியானம் சாப்பிட்ட சாப்பாட்டை நீயாவா உற்பத்தி பண்ணினே.



உலகத்தின் பிடியிலிருந்து யாரும் தப்பவே முடியாது. சொல்லிக் கொடுத்ததிலிருந்து விடுதலை அடையவே முடியாது. இப்படி சிந்தித்தல், இதற்கு உண்டான மொழி எல்லாம் பிறரால் தரப்பட்டதே. நீயாக சிந்திப்பது நீயாக வாழ்வது என்பது இல்லை.

ஆனால், முரளி இந்தக் குழந்தையை அடி என்று சொன்னால் நீ அடிப்பாயா. எதற்கு என்று கேட்பாய். ஒரு நாயை உசுப்பிவிட்டு கடி என்றால் அது கடித்து விடும். அடி என்று சொன்னால் நீ அடிக்க மாட்டாய். அதுதான் உனக்கும் நாய்க்கும் உள்ள வித்தியாசம்.

இன்னொரு வகையில் சொன்னால் நாம் எதையும் விசாரிக்கக் கற்றிருக்கிறோம். கேள்வி கேட்கப் பழகப் பட்டிருக்கிறோம். அதனால்தான் மாறுதல்கள் மனித இனத்துக்கு சாத்தியமாகின்றன.

கேள்விகளுக்கு அடிப்படை மறுத்தல். இந்து மதம் மறுக்கக் கற்றுக் கொண்ட மதம். நேதி, நேதி என்றொரு விஷயம் இருக்கிறது. இது இல்லை இது இல்லை என்று பொருள். எப்போது இது இல்லை என்று மறுக்க முடியும். இது வெறும் வார்த்தை இல்லை. விக்ரஹ வழிபாடு செய்து விட்டு இது இல்லை என்று மறு. மந்திர தந்திரங்கள் செய்துவிட்டு இல்லை கடவுள் என்று மறு. உன்னோடு நன்கு பழகிவிட்டு உன்னைக் கெட்டவன் என்று சொல்லலாமே தவிர உன்னைப் பார்த்தவுடன் கெட்டவன் என்று சொல்வது பழகிய பிறகு வரும் அபிப்ராயம் உறுதியானது. மறுப்பு தெளிவானது.

ராமசந்திர ராவைக் கேட்டுக் கொள். ஆனால் அவர் பின்பாதை தொடராதே. தயவு செய்து கோயில் பூஜையை ஏற்றுக்கொள்.

நீ படித்தவன். உனக்கு அடிப்படை வருமானத்திற்குக் குறைவில்லை. பெரிய பந்தங்கள் இல்லை. முரளி,

உன்னிடத்தில் நான் இருந்தால் மிக சந்தோஷமாக இந்த வேலை செய்வேன்.

முரளி, மந்திரங்கள் சொல்லி சொல்லி மூர்த்தியைத் தொடுவது என்று ஒன்று உண்டு. நான் அதை தெளிவாக செய்து பார்த்தேன். கடவுள் எங்கும் இருக்கிறார் என்றால், அதுதான் கடைசி தத்துவம் என்றால், அந்தக் கல்லிலும் இருக்கிறார் அல்லவா.

எனவே போய் பூஜை செய். பாதி புரிந்து கொண்டு மறுக்காதே.

சுவாமிநாதன் பூஜை பண்ணச் சொன்னாரா. சுவாமிநாதன் வாய்விட்டு சிரித்தார்.

யாரும் கேலி செய்யவில்லையென்றால் சுவாமிநாதனே பூஜை செய்வார். அவர் சிறு வயது ஆசை அது. தேறி என்று எப்போது மறுப்பாய், எந்த மாதம் மறுப்பாய்.

இப்படி ஒவ்வொன்றையும் அனுபவித்து மறுப்பது என்றால், இந்த ஆயுசு போதுமா. தடைகளை ஒரே வீச்சில் வெட்டக் கற்றுக் கொள். இவை எவற்றோடும் எனக்கு சம்பந்தமில்லை என்று உதறு. தனியே நில். கும்பலாய் வாழுகிறபோது, கும்பலோடு வாழ்கிறபோதுதான் இந்தப் பிரச்சினைகள் எழும். கும்பலை மறுக்கக் கற்றுக் கொள்.

ஒருக்காலும் சமாதானம் செய்து கொள்ளாதே. அப்பாவோடோ, அம்மாவோடோ, கடவுளோடோ, சர்க்காரோடோ சமாதானம் செய்து கொள்ளாதே. எது கடவுள். உன்னை கேட்கத் துவங்கு. இதற்கு தனியே இருக்கப் பழகு.

யார் பூஜை என்று சொல்கிறார்களோ அவர்களைப் பார்த்துதான் நீ கேள்வி கேட்கிறாய். ஆடுதுறையில் நாத்திகர்கள் உண்டோ, திராவிட கழகத்தினர். கம்யூனிஸ்ட்டுகள் உண்டோ. அவர்களைக் கேட்டாயா. கேட்டால் சிரிப்பார்கள்.



முரளி, ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் விஷயம் எளிதானதல்ல. அது மிகமிக சத்தியமானது. துணிச்சலும் வீரமும் இருந்தால்தான் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியை அணுகமுடியும்.

நீ அப்பனுக்குப் பிள்ளையாக, அந்தணக்குலத்தவனாக திருமங்கலக்குடி ஊரானாக வாழ ஆசைப்படுகிறாய். இதையெல்லாம் உதறினால்தான் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி கிட்டே வரமுடியும். இதை உதற உனக்கு தைரியம் உண்டா.

நீ வெறும் ஆள் உனக்கு எந்த அடையாளமும் இல்லை என்று நிற்கத் தெரியுமா.

நீ எரிந்த கட்சி அல்லது எரியாத கட்சி என்று ஏதேனும் ஒரு கட்சியில் இருந்தேயாக வேண்டும். எனக்கு எந்தக் கட்சியும் இல்லை என்று இருப்பவரே போற்றுதலுக்குரியவர். வாழும் வகை தெரிந்தவர்.

நீ உன்னை பத்திரப்படுத்திக் கொள்ளாதே. எந்தச் சிறையிலும் அடைத்துக் கொள்ளாதே. வெற்று ஆளாய் வெளியே வா.

நீ அந்தணனாய் இருப்பதால்தானே சிவபூஜைக்கு அழைக்கிறார்கள். உன்னை நீ முஸ்லீம் என்று சொல்லிக் கொள். அப்பொழுது கூப்பிடுவார்களா உன் பூணூலைக் கழற்றி எறி. எனக்கு மதமே இல்லை என்று சொல். அப்போது அழைப்பார்களா, மாட்டார்கள்.

அவர்கள் விரும்பிய களிமண்ணாய் நீ இருக்கிறாய் என்பதுதான் இங்கு முக்கியமான விஷயம்.

சார் யார் தெரியுமா வெறும் குருக்கள் இல்லை மிஸ்டர் முரளி, பி.எஸ்.ஸி மெத்தமேட்டிக்ஸ். உரக் கம்பெனி ஸ்டெனோகிராஃபர். ஏழாயிரம் எட்டாயிரம் சம்பளம். சொந்த வீடு. அப்பாவுக்கு ஒரே பிள்ளை ஆனாலும், மங்களாம்பிகை மேல ஒரு அபிமானம். நிதம் ராத்திரி பூஜைக்கு வந்துடுவார்.

உன்னை வைத்து மங்களாம்பிகையை உயர்த்துவார்கள்.

பி.எஸ்.ஸி. கணிதத்தை மங்களாம்பிகாவுக்கு சாதகமாக பயன்படுத்துவார்கள். எம்.எஸ்.ஸி. கணிதம் படித்த பிறகும் நீ முட்டாளாக இருக்கலாம். படிப்புக்கும் அறிவுக்கும் சம்பந்தமில்லை.

இன்றைய கோயில்களுக்கு பட்டதாரி பார்ப்பனர்கள் தேவைப்படுகிறார்கள். ஏனெனில் கோயிலின் பெருமைகள் குறைந்து விட்டன.

சுவாமிநாதனை அழைத்துப்போ. அவருக்கு தனிபூஜை செய். ஒரு சைன்டிஸ்டுக்கு மங்களாம்பிகாதான் தெய்வம் என்று ஏமாற்று. விஞ்ஞானமே தெரியாத இந்த தஞ்சை மாவட்டம் இந்தக் கோயிலுக்கு விழுந்தடித்துக் கொண்டு வரும்.''

திரும்பத் திரும்ப பொய். திரும்பத் திரும்ப ஏமாற்று வேலை. கடவுளை எப்படி கண்டுபிடிக்கமுடியும். முரளி குழம்பிப் போனான்.

திருமங்கலக்குடிக்கு போகாமல் வழியில் உள்ள வீர சோழர் ஆற்றுப் பாலத்தில் உட்கார்ந்து கொண்டான்.

மெல்லிய தெருவிளக்கு வெளிச்சத்தில் மாடுகள் வீடு திரும்பிக் கொண்டிருந்தன. முழங்கால் ஜலம் ஆற்றில் ஓடிக் கொண்டிருந்தது.

ஆற்றில் இறங்கிக் குளித்தான். உடம்பு புத்துணர்ச்சி பெற்றதும் அங்குள்ள துவைக்கிற கல்லில் உட்கார்ந்து கொண்டு தன்னைப் பார்க்கத் துவங்கினான்.

பார்க்கப் பார்க்க ஒரு தூக்கம் வந்தது. மிகுந்த அயர்ச்சி ஏற்பட்டது. அங்கேயே படித்துறையில் படுத்துக் கொண்டு விடலாம் என்று தோன்றியது. கால் நீட்டிப் படித்துறையில் படுத்தான். வானம் பார்த்தான். தூங்கிப் போனான்.



அது தூக்கம் கூட இல்லை. ஒருவித ஆழ்ந்த மயக்கம் ஏதோ மெஸ்மரிசம்.

விழித்தபோது நிசப்தம் அதிகமாயிருந்தது. நீரில் மீன் குதிக்கும் சப்தம் மட்டும் கேட்டது. கரைப்படியில் சிறிய நீரலைகள் மோதுவதும் கேட்டது.

எழுந்து உட்கார்ந்து முகம் கழுவிக் கொண்டான். உடம்பு வலித்தது. எழுந்திருக்க கால்கள் தள்ளாடின. படுக்கப் போட்டிருந்த சைக்கிளை நிமிர்த்தி சாவிபோட்டு திறந்து கொண்டு மெல்ல தள்ளிக் கொண்டு போனான். வாட்ச் கட்டவில்லை. எனவே, மணி தெரியவில்லை.

ஆற்றிலிருந்து அக்ரஹாரத்திற்கு நூறு கஜ தூரம் நடக்க வேண்டும்.

எங்கும் யாருமில்லை. எல்லா வீடுகளும் பூட்டியிருந்தன. விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. திண்ணைகளில் யாரோ புரண்டு புரண்டு படுத்தார். ஆறு வீடு தள்ளி திண்ணையில் படுத்திருந்த, யாரோ கனவு கண்டு உளறினார். ஆழ...ஊழ்...ஊழ்...ஆழ் என்று உளறிக் கத்தினார்.

சட்டென்று உரக்க ஒலித்த அந்தக் குரல் வயிற்றில் ஒரு பயத்தை ஏற்படுத்தியது. சாம்பசிவ குருக்கள் வீட்டை தாண்டித்தான் முரளி போயாக வேண்டும். பத்மினி உள்ளே படுத்திருப்பாளா. இப்போது பத்மினியாய் இருப்பாளா இல்லை சமயபுரத்தாளாய் இருப்பாளா... யாராய் இருந்தாலென்ன...பத்மினி ஒன்றும் முக்கியமில்லை. பத்மினியால் என் வாழ்க்கை திசைமாறப் போவதில்லை.

அவன் வீடு தாண்டிப் போனான்.

''என்னைத் திரும்பிப் பார்க்க மாட்டியா.'' பத்மினியின் குரல் கேட்டது.

அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். உடம்பு முழுவதும் உதறிப் போட்டது.

பத்மினி வீட்டில் இரண்டு திண்ணைகளும் காலியாக இருந்தன. அடுத்த வீட்டுத் திண்ணைகளிலும் ஆள் இல்லை. முரளி எதிர் திண்ணைகளைப் பார்த்தான். அங்கிருந்து சப்தம் வரவில்லை.

எங்கிருந்து சப்தம் வருகிறது. முரளி கதவு திறந்திருக்கிறதா என்று உற்றுப் பார்த்தான்.

''நான் இங்கிருக்கிறேன்'' குரல் சற்று மேலே கேட்டது.

முரளி நிமிர்ந்து பார்த்தான்.

பத்மினி கூரை மீது உட்கார்ந்திருந்தாள். விளக்கொளியில் நிழலாகத் தெரிந்தாள்.

முரளியின் கையிலிருந்த சைக்கிள் தடேரென்று நழுவி விழுந்தது.

''என்ன இது'' முரளி கத்தினான்.

''உனக்காகத்தான்டா காத்திருக்கறேன்'' அது பத்மினியின் குரலாகத் தெரியவில்லை.

முரளியை ஒரு வெப்பம் சூழ்ந்து கொண்டது.

முரளி பயந்தான். ராமா...ராமா...ராமா...என்று மனதுக்குள் கூவினான்.

பத்மினி சிரித்தாள்.

''பயத்தையும் தூக்கிப் போடணும்னு யாரும் சொல்லித்தரலையா. பயத்தை எப்படி தூக்கிப் போட முடியும். யோசனை பண்ணிருக்கியா.''

பத்மினி கூரையிலிருந்து செங்கல் சந்தில் கால் வைத்து திண்ணைத் தூணைப் பிடித்து தரையிறங்கினாள். ஒரு வாலிபனால்கூட அவ்விதம் இறங்க முடியாது.



முரளி ஓடிவிடலாமா என்று யோசித்தான்.

''நீ எங்கே ஓடினாலும் விடமாட்டேன். உன்னால ஓடவும் முடியாது'' பத்மினி அவனுக்கு எதிரே வந்து நின்றாள்.

அவன் முகத்தைத் தடவிக் கொடுத்தாள். நெஞ்சில் பட்பட்டென்று அடித்தாள்.

முரளி நிலை குலைந்து போனான். அந்த அடி அவன் உள்ளங்கால்வரை அதிர்ச்சியைப் பரப்பியது. அந்த வருடல் அவன் உயிரை ஏதோ செய்தது. முரளி அழுவதற்காக முகத்தைக் கோணினான்.

''நீ ஏன் அரபு தேசம் போகலை. நீ ஏன் மெட்ராஸ் ராத்திரி சந்துல அலையலை. இவ்வளவு சௌகர்யமா, இவ்வளவு நல்ல வேலைக்கு உனக்கு எப்படி கிடைச்சது. ஏன் கிடைச்சது. ஒன்னே முக்கால் லட்ச ரூபாய் வீட்டை உனக்கு கொடுத்துட்டு போனாளே ஏன். அந்தக் காசையும் கொஞ்சம் கொஞ்சமா வாங்கிண்டாளே எப்படி...

உனக்கு மங்களாம்பிகா இவ்வளவு செய்திருக்கா. ஒரு ரெண்டரை மணிநேரம் மங்களாம்பிகாவுக்காக நீ வேலை செய்ய முடியாதா. காசு போட்டா ஆள் கிடைப்பா. ஆனா நீ வெறும்னு மங்களாம்பிகா கேட்கறா போ. நான் காலைல வரேன்னு ஒத்துக்கோ.''

மறுபடியும் பத்மினி முகம் வருடினாள்.

முரளி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அந்தக் கையைத் தள்ளினான்.

மறுபடியும் ஒரு வெப்பம் அவனை இறுக்கியது. அந்த வெப்பம் கண்டு முரளி பயந்தான். வேறு ஏதோ சக்தி தன்னை தொந்தரவு செய்கிறது என்பதைப் புரிந்து கொண்டான்.

''என்ன...பயமுறுத்தறே. உன்னால என்ன பண்ண முடியும். நீ என்ன பண்ணினாலும் சரி. நான் அட்சதைத் தட்டு தூக்க மாட்டேன்'' ஆத்திரத்தோடு கத்தினான்.

அவன் குரல் சுவரில் பட்டு எதிரொலித்தது.

ஒரு வீட்டில் திண்ணை விளக்கு போட்டார்கள். இன்னொரு வீட்டிலும் விளக்கு எரிந்தது.

யாரது என்று குரல் கொடுத்தார்கள். கதவு திறந்து வெளியே வந்தார்கள்.

''முரளியா, என்ன சத்தம். யார்கூட பேசிண்டிருக்க. கேள்வி கேட்டார்கள்.

''இல வழில மடக்கிண்டு கத்தறா மாமா.'' விளக்கு வெளிச்சம் முகத்தில் விழுந்ததால் அவன் கண்களை சுருக்கிக்கொண்டு கை காட்டினான்.

''எவ...'' ஊர் பஞ்சாயத்து நடேசன் கேட்டார்.

''இந்த பத்மினி'' அவன் கை காட்டினான். அவன் கை காட்டிய இடத்தில் பத்மினி இல்லை.

''பத்மினியா. அவ எங்க வந்தா.''

''இங்க இருந்தாளே மாமா. அவன் பதறினான்.

''சுவரேறிந்து இறங்கி வந்தா''

''அப்படியா'' நடேசன் குரலில் கேலி இருந்தது.

பத்மினி சுவரேறிந்து இறங்கி வந்தாளாம். அடுத்த வரிடம் இன்னும் கேலியாய் நடேசன் பேசினார்.

''முரளி, முடிஞ்சா கோயில் வேலை பாரு. இல்லேன்னா விட்டுடு. ரொம்பக் குழப்பிக்காதே. ராத்திரி வேளைல நடந்து வருவானேன். சுவர, குடிசைன்னு பேச வானேன். வீட்டுக்கு போ முரளி.''



முரளி சைக்கிளை எடுத்துக்கொண்டு வீடு நோக்கி போனான். அவன் மனம் குழம்பித் தவித்தது. வண்டியை வீட்டுக்குள் ஏத்தி பூட்டிவிட்டு கதவு தட்டினான்.

அம்மா கதவு திறந்தாள். கூடத்து விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பேன் சுழன்று கொண்டிருந்தது. அப்பா சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு எதிரே பத்மினி உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

சொரேலென்று பயமும் கோபமும் முரளியைத் தாக்கின.

''என்ன என்ன இங்க உட்கார்ந்துண்டிருக்க. என்னைப் பைத்தியமா அடிச்சது போறாதுன்னு எங்கப்பாவையும் தேடிண்டு வந்துட்டியா ,போடி வெளியே எழுந்துப்போ.''

அவன் வீடு இரைந்தது.

அப்பா திடுக்கிட்டு எழுந்து அவனைப் பின்னுக்குத் தள்ளினார்.

''என்ன இழவுடா இது. குடிச்சிட்டு வந்திருக்கியா. உள்ள வந்ததும் வராததுமா அவன் மேல பாயறே.''

''சுவரேறிந்து கீழ இறங்கினாப்பா.''

''யாரு''

''இந்த சண்டாளி''

''எப்ப.''

''அந்த நிமிஷம் முன்னாடி.''

''பைத்தியமாடா உனக்கு''

''தெருலே சிரிச்ச போச்சப்பா. மாய்மாலம் காட்டுறா.''

''டேய்: ரெண்டு மணி நேரம்.'' அவ இங்கதான் உட்கார்ந்திருக்கா. வெறும் பத்மினியா உட்கார்ந்திண்டிருக்கா. அந்த நிலைல இந்த ஊரைப் பத்தி தனக்கு என்ன தோன்றதுன்னு சொல்லிண்டிருந்தா.

திருமங்கலக்குடி ரொம்ப பழசுடா. நாலாயிரம் அஞ்சாயிரம் வருஷத்து பழசு உள்ளே அம்பாள் வந்து இறங்கற போது இவளுக்கு ஏகப்பட்ட விஷயம் தெரியறது.

''எங்க தாத்தா எப்படி செத்துப் போனார். அப்படீன்னு கேட்டேன். கண்ணை மூடிண்டு கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தா நிலைப்படி இடிச்சு செத்துப் போனார்னு உடனே சொன்னா.''

வாசல்ல நெல்லுகாயப் போட்டிருந்தார். எவனோ அள்ளிண்டு போகட்டுமா பண்ணினான். தாத்தா பார்த்து ஓடி வந்தார். நங்குன்னு உச்சந்தலை இடிச்சுண்டுட்டார். அவன் நெல்லைப் போட்டுட்டு ஓடிப்போயிட்டான், தாத்தா வலில உட்கார்ந்துட்டார். ரெண்டுநாள் தடுமாறி தடுமாறி நடந்தார். மூணாம் நாள் படுத்துட்டார். ஏழாம்நாள் பிராணம் போயிடுத்து. இது எங்க வீட்டு மனுஷாளுக்குத் தான் தெரியும். அதுவும் உறுதியா தெரியாது. அவர் இடிச்சுக்காம இருந்தா இன்னும் இருபது வருஷம் இருந்திருப்பார்.

அதை பத்மினிக்கிட்ட கேட்டுத் தெரிஞ்சுண்டேன். நூறு வருஷத்துக்கு முன்னாடி திருமங்கலக்குடி ரொம்ப பிரமாதமா இருந்தது. பிரிட்டிஷ் ராஜாங்கம் வந்துடுத்து எல்லா பெரிய ஊர்களுக்கும் ரோடு போட்டான், ஊருக்கு ஒரு வெள்ளைக்காரனை நீதிபதியா போட்டுட்டான். கலாட்டா பண்ணின முஸ்லீம்களை அடக்கி வச்சுட்டான். துபாஷியா பிராமினை எடுத்துண்டான்.

அடேயப்பா இந்துமதம் குபீர்னு கிளம்பிடுத்து ராதா கல்யாண உற்சவம், தேவாரம், திருவாசகம், பாட்டு வேத



பாராயணம். ஆட்டம் பாட்டம் உற்சவம்னு மறுபடி விஷயங்கள் கிளம்பிடுத்து. யார் ஆட்சி பண்ணினா என்ன சுவாமி புறப்பாட்டுக்கு பிரச்னை இல்லைங்கற போது ஜனங்களுக்கு நிம்மதி ஆயிடுத்து பட்டணத்துல சுதந்திரம் பத்தி பேசிண்டிருந்தாளே தவிர கிராமத்துல யாருக்கும் வெள்ளைக்காரா மேல கோபம் இல்லை.

ஒரு மணி நேரமா நூறு வருஷத்துக்கு முன்னாடிய திருமங்கலக்குடி பத்தி சொன்னா.

ஆளுயர குத்துவிளக்கு வச்சு ராத்திரியோடு ஆண்கள் டான்ஸ் ஆடுவாளாம். அடுத்த இன்னொரு மணி நேரம் வேற பேட்ச் ஆடுமாம். எதிரும் புதிருமா நின்னு போட்டி டுவாளாம். பத்துவயசு பையன்களை தோள்ல தூக்கிண்டு கொடி டுவாளாம். ஆயிரம் பேருக்கு சாப்பாடாம். அஞ்சு நாள் ராதா கல்யாணமாம்.

கோபமோ, சண்டையோ இருக்கவே இருக்காதாம். யாராவது கோபமா பேச ஆரம்பிச்சா அவாளை சுத்தி ராதே கிருஷ்ணான்னு டான்ஸ் ஆட ஆரம்பிச்சுடுவாளாம்.

இத சொல்ல சொல்ல எனக்கு அழுகையா வந்துடுத்துடா. பயிர் நல்லா வளரணும்னு வரப்புல ஒத்த வரிசையா பாடிண்டே போவாளாம். கிராமம், கிராமமா போவாளாம். தன்னுடைய நிலம் மட்டுமில்லாமல் எல்லா நிலத்துக்கும் போய் பாட்டுப் பாடுவாளாம்.

பாகவத சம்பிரதாயம் வெறி பிடிச்ச மாதிரி நடந்திருக்கு. பத்மினி கண்ணை மூடிண்டு ஸ்ரீதரய்யாவாள் பாட்டெல்லாம் பாடறா. பத்மினிக்கு தெரியாத பாட்டெல்லாம் அவ வாயிலேர்ந்து தானா வர்றது.''

''அப்போ கரை மேலேருந்து இறங்கினது யாரு'' பத்மினி அவனை பார்த்து சிரித்தாள்.

''என்ன முடிவு பண்ணினே'' பத்மினி மறுபடி கேட்டாள்.

''நீ கேட்கிறாயா, அவ கேட்கிறாளா.''

''நான் கேட்கிறேன்.''

''எனக்குத் தெரியலை பத்மினி. கட்டாயப்படுத்தறது தெய்வ சக்தியா இருந்தாலும் எதிர்க்கத் தோன்றது.''

''நீ ஏன் உன்னை பெரிய ஆளா நினைச்சுக்கறே முரளி.''

''பெரியவனோ, சின்னவனோ எனக்குன்னு ஒரு விருப்பம் இருக்குமில்ல முரளி.''

''வயல் வயலா போய் பாடினவாளுக்கு என்ன விருப்பம் இருந்திருக்கும். ராதே கிருஷ்ணா, ராதே கிருஷ்ணான்னு தோப்புல டான்ஸ் ஆடினவாளுக்கு என்ன விருப்பம் இருந்திருக்கும், ஊர் நல்லா இருக்கணும்னு ஏன் இப்ப யோசனை பண்ணத் தெரியலை.''

''ஊர் நல்லா இருக்கறத்துக்கு என்னை நான் பாழ் படுத்திக்கணுமா.''

''நீ எப்படி பாழாயிடுவே? ஒருவேளை பூஜை பண்ணினா.''

''வேலை முடிஞ்சு வந்து தியானம் கத்துக்கலாம்னு இருக்கேன்.''

''எத்தனை நாள் பண்ணுவே.''

''நாளை சாயந்தரத்துலேர்ந்து என் ஆயுசு முழுக்க பண்ணப் போறேன்.''

''அடுத்த வாரம் உனக்கு கல்யாணம் முரளி, அதுக்கப்பறமும் நீ தியானம் பண்ணுவியா.''

''என்ன உளர்றே.''

'நான் உளரல. உள்ள உட்கார்ந்து அவ சொல்றா.'



அப்பா வெகுவாய் அதிர்ந்து போனார். அம்மா வாய் பிளந்தாள்.

''யாரு பொண்ணு'' அம்மா குழறி கேட்டாள்.

''இந்த பத்மினிதான்.''

''என்னடி தடோர்னு சொல்றே.'' அம்மா கலவரப் பட்டாள்.

''ஏன் வேண்டாம்னு சொல்லிடுவேனோ.'' பத்மினி சிரித்தபடி கேட்டாள்.

அம்மாவுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. அப்பாவுக்கு பதில் சொல்ல பயமாக இருந்தது.

''முடியாது. நான் உன்னை பண்ணிக்க மாட்டேன்.'

''வேற வழியே இல்லை முரளி.''

பிள்ளை எதிர்த்ததால் அம்மாவுக்கு தைரியம் வந்தது.

''உங்கப்பாவால எதாவது நகை போட முடியுமா. உங்களுக்கு சாப்பாட்டுக்கே கஷ்டம். எத்தனை கடன் வாங்குவார். எத்தனை தானம் வாங்குவார்.''

''எங்கப்பா நல்லவர் மாமி. அவர் கை நீட்டினா காசு கொட்டும். கல்யாணம்னு போய் நின்னா ஆடுதுறை பல பேர் ஆளுக்கொரு விஷயம்னு ஏத்துப்பா.''

''ஏதோ நூறு இருநூறு முந்நூறுன்னு கொடுப்பாடி. அந்த கல்யாணத்துக்கு போறுமா. அஞ்சு பவுன்ல தாலிக் கொடி பண்ண வேண்டாமா. அதைப் போய் தானம் கேட்க முடியுமா.''

''அம்மா போடுவா.''

''எந்த அம்மா.''

''சமயபுரத்தான்.''

''அடியே உனக்குள்ள கொஞ்சம் தெய்வசக்தி இருக்கு. உன் பித்ருக்கள் யாரோ உள்ள புந்துண்டு உனக்கு நல்லது சொல்லிக்கொடுத்துண்டிருக்கா. நான் அஞ்சு பவுன் தாலிக் கொடி கேட்கறேன். அதுவும் நான் பண்ணி போட்டுக்க கேட்கலை. நீ போட்டுக்க கேட்கறேன். காசு மாலையா இருந்தா கழுத்து மாத்தி கழுத்து போட்டுக்கலாம். தாலிக்கொடியை மாத்தி போட்டுக்க முடியுமா. நீ கழுத்துல போட்டிருக்கற ஒன்னே முக்கா சவரன் நகைதானே உங்ககிட்ட இருக்கறது.''

''உங்களுக்கு என்ன வேணும் மாமி.''

''கழுத்துக்கு அஞ்சு பவுன். கைல அஞ்சு பவுன். உனக்கு ரெண்டு மோதிரம், அவனுக்கு ரெண்டு மோதிரம் நாலு பவுன். ஒரு பவுன்ல திருமாங்கல்யம். மொத்தம் பதினைஞ்சு பவுன்.''

விடுக்கென்று பத்மினி எழுந்திருந்தாள். முற்றத்துக்கு போய் நின்றாள். தொட்டியிலிருந்த ஜலத்தை குடத்தால் மொண்டு தலையில் ஊற்றிக் கொண்டாள். முடியை உதறிப்பிடித்து தலையை சுழற்றினாள். வானம் பார்த்து கையேந்தினாள். பொத்தென்று அவள் கையில் ஒரு வெள்ளை பேப்பரில் கட்டப்பட்ட பொட்டலம் ஒன்று விழுந்தது.

அவள் தங்கு தங்கென்று நடந்து வந்தாள்.

அம்மாவின் எதிரில் பொட்டலத்தை வைத்தாள்.

அந்தப் பொட்டலத்தில் தங்க நகைகள் இருந்தன.

அம்மா திகைத்தாள். அப்பா வாயைப் பொத்திக் கொண்டார்.

''இன்னும் என்ன வேணும். சொல்லுங்கோ.''



''இதெல்லாம் சரியா. இப்படி பண்ணலாமா.''

''எல்லாம் சரி.''

''ஊர்ல ஏதாவது கேலி பண்ணப் போறாம்மா.''

''பண்ணாது. ஊர் எந்த தெய்வும் பண்ணாது. இந்த பத்மினி மேல அவா ஒரு தப்பும் சொல்லமாட்டா.''

''என்ன சொல்ற தாயே.''

''தானாவோத்து பத்மினி பத்மினியா இருக்க [illegible].''

''மூனி பாவம் இல்லையா. அவனுக்குன்னு அடங்கின பொண்ணை ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிண்டு வாழ விடாம அதிகாரம் பண்ணிண்டிருக்கறதைவிட்டு உன் பின்னால அலைஞ்சிண்டிருக்கணுமா. உன் எதிர்க்க கை கட்டி நிக்கணுமா.''

''மன்னாம்பிகாவுக்கு பூஜை பண்ணமாட்டேன்னு [illegible]ரோன்னா, எனக்கு பண்ணட்டும்.

''மன்னாம்பிகா பூஜை ரொம்ப முக்கியமோ.''

''ஆமாம். ரொம்ப முக்கியம்.''

''அதுக்குத்தான் இது எல்லாமுமா.''

''அதுக்குத்தான் இது எல்லாமும்.''

''இதை எடுத்துண்டு போ பத்மினி. நானைக்கு உங்கப்பாவை வந்து பேசச்சொல். இத்தனை பார்த்த பிறகும் உன்னை வேண்டாம்னு சொன்னா நான் பைத்தியக்காரன்.'' அப்பா கை கூப்பினார்.

''பதினைஞ்சு வயசுல நான் முத முதல்ல சமயபுரம் பிள்ளையார் கோயில் சுத்து மண்டபத்தில ஒரு கிழவி உட்கார்ந்திருந்தா. என்னைக் கூப்பிட்டு உன் பின்னைய

எனக்கு கொடுப்பியான்னு கேட்டா. நான் பயந்து வாசலுக்கு ஓடி வந்தேன். வாசல்ல நின்னுண்டிருந்தா. உன் பிள்ளையை எனக்குத் தான்னா.

அந்தக் கிழவி முகம் எனக்கு நன்னா ஞாபகம் இருக்கு. அப்ப எனக்கும் கல்யாணம் ஆகலை. உங்கப்பாவுக்கும் கல்யாணம் ஆகலை. ஆனா இதை அவன் கிட்டதான் முதமுதல்ல சொன்னேன்.

நூறு வருஷத்துக்கு ஒரு தடவை திருமங்கலக்குடில தெய்வம் வந்து இறங்கும்னு ஒரு ரகசிய கட்டளை இருக்காம். நீ சொன்ன ராதே கிருஷ்ணா டான்ஸெல்லாம் கூட யாரோ ஒரு தெய்வ தரிசனம் கிடைச்சவாக்கிட்டேருந்து பரவியிருக்கணும்.

இல்லேன்னா வயல் வெளி டான்ஸாட முடியுமா. தோப்பு தோப்பா பாட்டு பாட முடியுமா.

நூறு வருஷத்துக்கு முன்னாடி யாரோ ஒரு ஹனுமான் உபாசகர் திருமங்கலக்குடியில் இருந்திருக்கார். அக்ரஹாரக்குடில இருக்கற ஹனுமார் பொம்மையைத் தழுவித் தழுவி மந்திரஜபம் சொல்லுவாராம். எப்பவும் மந்திர ஜபம் சொல்லுவாராம்.

முதல் ஆனை தீப்பந்தத்தோட ஓட வச்சுட்டு ரெண்டாவது ஆனை ஜாயர் கட்டையோட ஓட விட்டுட்டு மூணாவதா கருங்கல் விக்ரஹத்தை இவர் தலைல வச்சுண்டு ஓடுவாராம்.

அந்த ஹனுமார் பின்னாடிதான் நூறுபேர் ஓடினான்னு சொல்லுவா.

ஆயிரம் பேர் நல்லவனா இருந்தா ஒருத்தன் கெட்டவனா இருக்கணும்னு தான் விதி. அது ஒரு திருஷ்டிப்பரிஹாரம்.



குரங்கு தூக்கிண்டு குரங்கு ஓடறதுன்னு அக்ரஹாரத்தில் ஒருத்தன் பேச அவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதுக்கு முகம் குரங்குமாதிரி இருந்தது. அப்பா ஜாடையோ அம்மா ஜாடையோ இல்லை. எத்தனை அடக்கி வச்சாலும் வெளியே ஓடிவந்துடும்.

ஜனங்க மிரண்டு கத்துவா. இதோ பாரு இதோ பாருன்னு குழந்தையை வினோதமா வேடிக்கை பாப்பா. குழந்தையைப் பெத்தவர் அவமானத்துல தவிச்சார். [illegible] எல்லார் முன்னாடியும் மன்னிப்பு கேட்டார்.

ஒரு ஹனுமார் படத்தை தலைல வச்சுண்டு தான் [illegible] ஓடினார். அந்த அஞ்சு வயதுக் குழந்தை ரெண்டு நாள்ல செத்துப் போயிடுத்து.

ஊர்ல அத்தனை பேரும் போய் பார்த்துட்டு பெத்தவாளை சமாதானப்படுத்தினா.

இது கேள்விப்பட்டிருக்கேன். இதே மாதிரி தப்பை தான் பண்ண விரும்பலை.

உன்னை மருமகளா ஏத்துக்க பரிபூரண சம்மதம். உனக்கு என்ன வேணுமோ அதை நீ கொண்டு வந்துக்கோ. முரளி ரொம்ப நல்லவன். எந்த கெட்ட வழிக்கும் போகாத பையன். கெட்டவனா இருக்கக் கூடாதுன்னு சங்கல்பம் பண்ணிண்டிருக்கற பையன். அவன் கண்ணுல எப்பவும் உண்மை நிக்கும். அவனுக்கு பொய் தெரியாது. சொல்ல [illegible] பண்ணாலும் முழுக்க சொல்ல முடியாது. அவனை ஜாக்கிரதையா பார்த்துக்கோ."

"வா. உன் வீட்டுக்கு போகலாம்" அப்பா அவனை அழைத்துக் கொண்டு படியிறங்கினார்.

முரளி கட்டிலில் போய் படுத்துக் கொண்டான். மறுபடியும் மயக்கம் போலும் தூக்கம் வந்தது.

மறுநாள் பத்மினியின் அப்பா தன் மகளின் திருமணம் பற்றி நடேசனிடம் சொல்ல முரளியின் அப்பா தம் அந்தத் திருமணத்திற்குச் சம்மதம் அளிப்பதாகச் சொன்னார்.

அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் அக்ரஹாரம் முழுக்க செய்தி பரவி கல்யாணத்திற்கு நாள் குறித்து இதை ஊர் நடத்தும் கல்யாணமாக தீர்மானித்தார்கள்.

பிறகு ஒதிவிட வேண்டிய திருமணப் பரிசுப் பணத்தை இப்போதே தரவேண்டும் என்று தீர்மானம் செய்யப் பட்டது.

ஆயிரம் ஐநூறு என்று நோட்டுப் புத்தகத்தில் எழுதப் பட்டது.

தாலிக்கொடி வரவழைச்சா சரி. முரளி அப்பா சொல்றதை நம்பறேன். அம்பி மிதிக்க அருந்ததி பார்த்துன்னு சொல்வானே...அம்பி வரவழைப்பானா.'' வெங்கடேசன் என்கிற அரபு தேசத்துக்கு வேலைக்கு போகிற பையன் கேட்டான்.

சடேரென்று மரம் முறிந்து விழுவது போல நடேசன் வீட்டுப் பக்கத்து சந்தில் கேட்டது.

'அம்பி விழுந்துருக்கு... அம்பி விழுந்துருக்கு' ஒரு பையன் கத்தினான்.

முழுவதும் மஞ்சள் தடவிய அம்பி. இரண்டு வீட்டுக்கும் இடைப்பட்ட சந்தில் இருந்தது. ஒரு அடி நீளமுள்ள அந்த அம்பியை இரண்டு இளைஞர்கள் தூக்கிக் கொண்டு வந்து சாம்பசிவ குருக்கள் வீட்டு வாசலில் வைத்தார்கள்.

பத்மினி வீட்டுக்குள் உட்கார்ந்திருந்தாள்.

''பத்மினிக்கு சமைக்கத் தெரியுமோ'' ஒரு பெண்மணி கேட்க, சாம்பசிவ குருக்கள் மெல்ல தலை நிமிர்ந்து தெரியாது என்று சொன்னார்.



கூட்டம் லேசாய் சிரித்தது.

பத்மினி எழுந்து நின்றாள். அவள் வீட்டு சமைய லறைக்குப் போனாள். அவள் பின்னாலேயே முரளியின் அப்பாவும் அம்மாவும் போனார்கள்.

''நீ ஒன்னும் பண்ண வேண்டாம் தாயே. எங்க உடம்புல தெம்பு இருக்கிற வரைக்கும் நாங்க உனக்கு சமைச்சு போடறோம். மனுஷா அப்படித்தான். நீ ஊர்மேலயும் கோபப்படாதே.'' முரளியின் அப்பா பேச அவள் அவர் கையை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள். முரளியின் அம்மாவைக் கட்டித் தழுவிக் கொண்டாள்.

''ஏண்டா தெரிஞ்சுண்டே இப்படி பண்றே. எதுக்கு அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறே. அவள் நிஜமா அம்மனா இல்லையான்னு கேள்வி இல்லை. அம்மனா இருந்துட்டு போகட்டும். நம்ம வீட்டுக்கு எதுக்கு.

கல்யாணங்கறது ரொம்ப அழகான விஷயம்டா. ஊரோட மல்லுக்கட்ட முடியுமா அப்பனும் பொண்ணும் பெரிய பிளான் பண்ணி திருமங்கலக்குடியையே பைத்திய மாக அடிச்சிண்டிருக்கா.

பெட்ரோல்கூட பேட்டைக்குப் பேட்டை இந்தமாதிரி வியாபாரம் ஆரம்பிச்சிருக்கா. ஏதாவது தேவதை உபாசனை பண்ணி எங்கிருந்தாவது எதையாவது எடுத் துண்டு வந்துடறது. எல்லாம் கொடுக்க முடியுங்கறானே. மிச்சம் நிலம் பத்துமா கேளேன். ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் போய் வைத்தியநாதய்யர் நிலத்தை உனக்கு மாத்தி விட்டுனா பாரேன். எல்லாம் பண்ண முடிஞ்சா இதையும் பண்ண முடியுமோன்னோ.''

பிசாசு இதெல்லாம் பண்ணாது. எங்கேருந்தாவது எதையாவது தூக்கிண்டு வந்துடும். உங்கப்பன் ஒரு பயங்கொள்ளி. உங்கம்மா ஒரு வாயில்லாப் பூச்சி.

உங்கப்பா பள்ளிக்கூட வாத்தியாரா பத்துநாள்வேலை செய்துட்டு பள்ளிக்கூடம் ஆடுதுறைல இருக்கு. என்னால போகமுடியாதுன்னுட்டான். நாலுகிலோ மீட்டர் தூரத்துல இருக்கற ஆடுதுறைல போய் வேலை செய்ய முடியலே. வீட்டுத் திண்ணையிலே புடவையை மறைப்பா கட்டி போஸ்டாபீஸ் வச்சுண்டிருக்கான்.

அவனுக்குத்தான் அறிவில்லைன்னா உனக்குமா அறிவில்லை.

ரெண்டு ஊரு போய் நாலு பொண்ணு பார்த்து பிள்ளைக்கு கல்யாணம் முடிக்க சோம்பேறித்தனம். எதுக்கும் ஒரு யோசனை. கேலி பண்ணுவாளோ குத்தமா பேசுவாளோன்னு ஒரு யோசனை. யாரைக் கண்டாலும் ஒரு கலவரம்.

உங்கப்பாவை அண்ணான்னு சொல்லிக்கவே எனக்கு வெட்கமா இருக்கு.

நீ ஒருத்தன் நம்ம குடும்பத்துல கெட்டிக்காரனா வருவேன்னு நினைச்சேன். நீயும் பேபேன்னுட்டே.

ஏன்டா ஏன் இப்படி வெத்தலைல்ல ஏதாவது மடிச்சு வச்சு கொடுத்துட்டாளா. நீயும் மந்திரிச்சு விட்ட கோழி மாதிரி தலையாட்டறே.

ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிண்டா சந்தோஷமா இருக்க வேண்டாமா. ஸினிமா டிராமான்னு போக வேண்டாமா. எந்நேரமும் குடத்து ஜலத்தை தலைல ஊத்திண்டிருப்பே. நீ தூங்கறபோது உன் தலையிலேயும் ஊத்துவா. ஆனன்னு அலறி அடிச்சுண்டு எழுந்து நிப்பே'' திருமங்கலக்குடியிலேயே இருக்கிற



அப்பாவின் ஒன்றுவிட்ட தம்பி நாலு பேர் கேட்க கத்தினார். அந்த நாலு பேர் தலையாட்ட தலையாட்ட கூடவே கத்தினார்.

''என் தம்பி கத்தினானா. சாக்கடைல இருக்கற காசை எடுத்து கடைவாய்ல ஒதுக்கிக்கற ஜென்மம். காசுக்காக எதையும் செய்யற பிராணி. ஆடுதுறை பஞ்சாயத்து ஆபீஸ்லேர்ந்து தினம் ரெண்டு ரெண்டு செங்கலா கொண்டு வந்து மாட்டுத் தொழுவம் கட்டினான். மூணாம் நாள் இடிஞ்சு விழுந்து மாடு செத்துப் போச்சு.

இந்தத் திருடனுக்கு மத்தவனைப் பத்திப் பேச என்ன யோக்கியதை.

செங்கல் திருடறதுக்காகவே ஞாயத்துகிழமை ஆபீஸ் போன ஜென்மம்... என்னை போஸ்ட் ஆபீஸ்னு சொன்னா குறைஞ்சு போயிடுவேனா. ஆடுதுறைல பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டர் பசங்க மத்தியான சாப்பாட்டுக்குத்திருட்டுக் கணக்கு எழுதி சாட்சி கையெழுத்து போடச் சொன்னாரு. நான் முடியாதுன்னுட்டேன். வேலை போயிடுத்து.

கோயிலுக்கு வர்றவாளை வாங்கோ வாங்கோன்னு வீட்டுக்கு கூப்பிட்டு மத்தியானம் சாதம் போட்டு இருநூறு ரூபா ஆச்சுன்னு காசு வாங்கறான். இதுல இவனுக்கும் முன்னொருத்தனுக்கும் சண்டை. பத்மினியோட கல்யாணங்கறது எப்பவோ நிர்மாணிக்கப்பட்ட விஷயம். இது எப்படி எங்க முடியும்னு எனக்குத் தெரியும்.

யோசனை பண்ணிப்பாரு. அவ அழகுக்கு ஈடா இங்க யாராவது உண்டா. அவ அறிவுக்கு ஈடா இங்க யாராவது உண்டா. அவ தேவதை. அவளா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேங்கறா. நம்ம கண்ணைத்திறக்க யாருன்னு காமிச்சா.

அந்தக் குழந்தைக்கு நாமதான் பாதுகாப்பு. அவளோ யார்கிட்டயும் போய் வேதனைபட்டுறக் கூடாது. அவ இடம் பார்த்துதான் வந்திருக்கா. ஆள் பார்த்துதான் எடுத்திருக்கா.

அவ உன் தலைல தண்ணி ஊத்தினாலும் சரி, என் தலைல தண்ணி ஊத்தினாலும் சரி... ஏம்மா இப்படின்னு கேட்க மாட்டோம்.

மூணு தடவை சமயபுரம் போயிருக்கேன்னு சொன்னேனே. ரெண்டாம் தடவை போனபோது என்ன நடந்தது தெரியுமோன்னோ...

நான் க்யூவில போயிண்டிருக்கேன். எனக்கு பின்னால கைல பட்டாக்கத்தியோட அம்மன் பின்னாடி வர்றா. அவ தலைல தழல் எரியறது. எம் முதுகுல அனல் அடிக்கறது.

படியேறினா எதிர்க்க அம்பாள் தெரியறா. பின்னால இருக்கற அம்மன் பார்த்துக்கோ பார்த்துக்கோங்கறா. நான் கண்ணை மூடிண்டு பயமா இருக்கு பயமா இருக்குன்றேன். எவனோ மூஞ்சில கொத்து விபூதி அடிச்சான். பின்னால யாரையும் காணோம்.

நான் அம்பாளை தரிசனம் பண்ணிட்டு ஆத்தங்கரைக்கு வந்துட்டேன். கண்ணெல்லாம் விபூதி. யாரோ ஒரு வயசான அம்மா தண்ணி அள்ளி முகமெல்லாம் துடைச்சு விட்டா.

இப்பவும் பயமா இருக்கான்னாங்க.

இல்லேன்னேன்.

இதுவும் நான்தான்னாங்க.

நான் மறுபடியும் கண்ணை மூடிண்டுட்டேன்.



மருமகனா வரப் போறேனே. என்ன பண்ண போறேன்னாங்க.

அன்னிக்கே சொல்லிட்டா. மத்தவா பேச்சை நாம எதுக்குடா கேட்கணும். பத்து பவுன் நகையும் உன்னங் கைல வந்து விழுந்ததுன்னா உடனே அவன் தனக்கு வேணும்னு ஆசைப்பட்டிருக்கான். அதுல பொருமறான்.

"இன்னொண்ணு சொல்றேன். 'பத்மினி எல்லா விதமாகவும் இந்த வீட்ல இருப்பா. நீ யார் என்ன சொன்னாலும் காது கொடுத்து கேட்காதே.

அப்பா சமாதானப்படுத்தினார்.

ஒரு சிறிய மரியாதையைக்கூட எதிர்பார்க்கவில்லை. ஒரு விரல் நீள பொருள்கூட வீட்டிற்கு வரவேண்டுமென கேட்கவில்லை. அவர்கள் பத்மினியை தெய்வமாகவே பார்த்தார்கள். தெய்வமாகவே பழகினார்கள். பத்மினி அவர்கள் மீது பிரியத்தைக் கொட்டினாள். இரவு நேரம் அம்மாவின் மடியில் உட்கார்ந்து கொண்டு, அப்பாவின் பல கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

முரளிக்குத்தான் ஒன்றும் புரியாமல் போயிற்று. ஏன் இப்படி? எதனால் இப்படி? ஊர் சொல்வது போல பத்மினியை திருமணம் செய்து கொண்டால், இல்வாழ்க்கை சுகங்கள் இல்லாமல் போகுமோ. அவளை இவனும் விழுந்து வணங்க வேண்டி வருமோ. இரவெல்லாம் அப்பாவைப் போல் பத்மினி தூங்க விழித்துக் கொண்டிருக்க வேண்டுமோ. இதற்கு எதற்கு கல்யாணம். ஆனால், வேறு என்ன செய்ய வேண்டும். இப்படி தெய்வமாய் ஒரு பெண் அருகே வந்து உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று எல்லோரிடமுமா சொல்லிக் கொண்டிருக்கிறது. என்னிடம் வந்து சொல்லியிருக்கிறது என்றால் என்னிடம் ஏதோ நல்ல விஷயம் இருக்கிறது என்றுதானே அர்த்தம். இதை நான் ஏன் மறுக்க வேண்

டும். இதற்கு நான் ஏன் பிணங்க வேண்டும். ஊர் என்ன வேண்டுமானாலும் சொல்லிவிட்டு போகட்டும்.

காரணமில்லாமல் ஒரு தெய்வம் இப்படி வராது. பத்மினி செய்த அற்புதங்கள் சந்தேகம் இல்லாமல் அவள் யார் என்பதை நிரூபித்து விட்டன. திரும்பத்திரும்ப அதைப் பற்றி கேள்வி கேட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. பத்மினியை எப்படி நடத்துவது என்பது தான் என்னுடைய யோசனையாக இருக்க வேண்டும். மிக மரியாதையுடன் நடத்துவதுதான் என் கடமையாக இருக்க வேண்டும்.

முரளி அமைதியாய் யோசித்தான். ஆயினும், கடைசியாய் ஒருமுறை ராமச்சந்திரராவுடன் போய் பேசிவிட்டு வரலாம் என்று சைக்கிள் எடுத்துக் கொண்டு போனான்.

ராமச்சந்திரராவும், சாமிநாதனும் ஒரே அறையில் உட்கார்ந்து கொண்டு, அவர்கள் சொந்த விஷயங்களைப் பேசி கொண்டிருந்தார்கள்.

''நானும் கேள்விபட்டேன், முரளீதரா. உன்னைப் பற்றி ஆடுதுறை முழுக்க கதைகதையாய் சொல்கிறார்கள்.'' சாமிநாதன் பேச ஆரம்பித்தான்.

முரளி தலை குனிந்து கொண்டு நின்றான்.

''நீ வெட்கப்படுவது போல் தெரிகிறது என்ன இப்படி ஆகிவிட்டதே என வேதனைப் படுவதுபோல தெரிகிறது. தவறு. நான் உன்னிடத்தில் என்னை வைத்தும் யோசனை செய்து பார்த்தேன். என் மனைவி அப்படிப்பட்ட ஒரு நிலையை அடைவாளேயானால், அவளுக்குத் தொண்டு செய்து வாழ்க்கையில் நல்ல கதிக்கு அடைய முயற்சி செய்வேன். இதில் எந்த வெட்கமும் இல்லை. எந்த பாசாங்கும் இல்லை. மற்றவர் பற்றி எந்த அக்கறையுமில்லை. பூர்வ ஜென்ம பலன், உன் வீட்டில் தெய்வம் குடிகொள்ள வந்திருக்கிறது. பேரழகியான



ஒரு பெண் தெய்வமாயத்தோடு வீட்டிற்கு வருவது எல்லோருக்கும் நடக்குமா. இதை நீ முழு மனதாக ஏற்றுக்கொள். சிறிதளவும் சஞ்சலப்படாதே. இந்த விஷயம் உனக்கு மட்டுமல்ல. இந்த ஊருக்கே நல்லதாக விளையும்.

நான் ஒருமுறை உன் மனைவியைப் பார்க்க வரவேண்டும் என்னைப்பற்றி அவளிடம் கொஞ்சம் சொல்லிவை. நெல் பற்றி எனக்கு சந்தேகங்கள் இருக்கின்றன. ஒருவகை காளான், ஒருவகை பூசனத்தை நம்மால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. மஞ்சள் நிற அந்தப் பூசணம் வந்தால், பயிர் மூன்று நாட்களில் வாடிவிடுகிறது. அதற்கு என்ன மருந்து என்பதை நான் அங்கு கேட்கப் போகிறேன்.'' மிகப் பணிவோடு சுவாமிநாதன் முரளியிடம் பேசினார்.

முரளி அவரை நோக்கி கை கூப்பினான். ராமசந்திரனை நோக்கித் திரும்பினான்.

''எனக்கு இது சம்மதமில்லை. முரளி ஒரு பெண் தெய்வ வசப்படுவது என்பது பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. தெய்வ வசப்பட்ட அந்த பெண், அல்லது தெய்வத்தை தன்னுள் மீட்டுள்ள அந்த மானுடப் பிறவி எதற்குத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.''

திருமணம் என்பது மனிதர்களுடைய விதி. இதில் தெய்வத்தின் பங்கு என்ன தெய்வமும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் அது மனிதர்களுடைய கற்பனையே தவிர, தெய்வம் என்ற விஷயம் பல படிகள் கீழிறங்கிவிடுகிறது.

ஒரு தெய்வம் திருமணம் செய்து கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏதுமில்லை. எனவே, ஒரு மனோநிலையில் ஏதோ மாற்றம் ஏற்பட்ட ஒரு பெண்ணுக்கு நீ கணவனாக போகிறாய். அவளை அனுசரித்து போகாவிட்டால், உன் வாழ்க்கை சிரமமாகிவிடும். ஆகவே, அவளை அனுசரித்து

போவதா அல்லது வேண்டாமென்று ஒதுக்கிவிடுவதா என்ற தீர்மானத்தை நீ திருமணத்திற்கு முன்பே எடுத்து விட வேண்டும்.

திருமணம் செய்து கொண்ட பிறகு உன்னால் அனுசரித்து போக முடியவில்லையென்றால், நீ என்ன செய்ய போகிறாய் என்பதையும் இப்பொழுதே யோசனை செய்ய வேண்டும். அந்த பெண் உனக்கு இன்னொரு திருமணம் செய்து வைப்பாளா. தான் மூத்த மனைவியாக, தெய்வமாக இருந்து உனக்கு இன்னொரு இளைய மனைவி தேர்ந்தெடுத்துக் கொடுப்பாளா. அப்போது உன்னுடைய உடல் சுகத்திற்கு என்ன உத்திரவாதம். நீ ஒரு ஆணாக இருப்பது அல்லது ஒரு புருஷனாக இருப்பதற்கு முயற்சி செய்ய போகிறாயா இல்லையா. இல்லையென்றால் இது கல்யாணமல்ல. வெறுமே கூடியிருப்பது. இது உண்டுமென்றால் அது தெய்வமா என்று எனக்கு கேள்வி இருக்கிறது.''

''முரளி, மிகப் பெரிய சங்கடத்தில் நீ மாட்டியிருக்கிறாய்.''

''உன்னை அந்தப் பெண் ஏன் தேர்ந்தெடுத்தது என எனக்கு தெரியவில்லை. நானும் சற்று நேரம் முன்பு சுவாமிநாதனிடம் பேசிக்கொண்டிருந்தேன். முரளி என்கிற அமைதியான, நல்ல, படித்த சற்று பணப்பசையுள்ள ஒரு ஆணை ஒரு குடும்பம் வளைத்துப் போட்டுவிட்டது என்றுதான் நினைக்கிறேன்.

நீ எனக்கு மகனாகவிருப்பின், நான் உன்னுடைய தந்தையின் ஸ்தானத்தில் இருப்பின், இந்தக் கூத்துக்கு ஒப்புதல் தரவே மாட்டேன். நீ வேறு யாரையாவது திருமணம் செய்து கொள். வேறு எங்கேயாவது போய் வேறு எப்படியாவது வாழ்க்கை நடத்து. என் வீட்டுப் படியேறாதே என்று சொல்லிவிடுவேன். கையில் பத்து பவுன்



தாலி கொடுத்தால் என்னபதினைந்து பவுன் நகை கொடுத்தால் என்ன அல்லது அம்மியைக் கொண்டு வந்து தலையில் போட்டாலென்ன. இது முக்கியமேயில்லை.

வாழ்தல் என்பது மனிதர்களுடைய விஷயம். தெய்வத்தினுடைய விஷயம் வாழ்தல் அல்ல. இருத்தல். வாழ்தல் என்பது வளர்ச்சியின்பாற் கொண்டது. இருத்தல் என்பது தேய்மானம் இல்லாதது. வளர்ச்சியே இல்லாத பூரணமான நிலை. பூரணமான ஒரு விஷயத்தோடு பூரணமில்லாத ஒரு விஷயம் எப்படி இணைய முடியும். தெய்வத்தோடு மனிதன் எப்படி குடுத்தனம் நடத்த முடியும். மிகப்பெரிய கோமாளித்தனமாக எனக்குப் படுகிறது.

முரளி, அந்த பெண்ணிடம், அதாவது உனக்கு மனைவியாக வரப்போறவளிடம் ஒரே ஒரு கேள்வியைக் கேள். கேட்கிறாயா? என்னுடைய கேள்வி என்று என் பெயரை சொல்லிக் கேள். ராமசந்திர ராவ் எம்பவன் கேட்கிறான். இந்த உலகத்தில் மனிதர்களுக்கு நடுவே, தெய்வத்தின் பங்கு என்ன? புரிந்து கொள்கிறாயா. மறுபடியும் சொல்கிறேன் கேள். இந்த உலகத்தில் மனிதர்களுக்கு நடுவே, தெய்வத்தின் பங்கு என்ன? ஏதேனும் உண்டா? அல்லது இருப்பதுபோல ஒரு ஏமாற்று வேலையா?

நான் கேட்ட கேள்வி புரிகிறதா முரளி.

மனிதர்கள் வாழ்க்கைக்கு நடுவே, தெய்வத்தின் பங்கு எதுவுமில்லை என்பதுதான் என்னுடைய எண்ணம். உன் மனைவி அதாவது அந்த தெய்வம் என்ன பதில் சொல்லுகிறது என்று என்னிடம் வந்து சொல்லு.''

முரளி தலையாட்டினான்.

''இன்றிலிருந்து எனக்கு ஒரு வாரம் விடுமுறை வேண்டும். நாளை மறுநாள் எனக்குத் திருமணம்

பத்திரிகை ஏதும் போடவில்லை. வேண்டாம் என்று சொல்லிவிட்டான். நீங்கள் வந்து ஆசீர்வாதம் செய்ய வேண்டும்.

நல்லதோ, கெட்டதோ நான் இதில் ஈடுபட துணிந்து விட்டேன். உங்களுடைய அன்பும் வழிகாட்டலும் எனக்கு மிக முக்கியம். முன்னைவிட அதிகம் தேவை என்று கருதுகிறேன். நான் உங்கள் இருவரையுமே என் ஆசிரியராக நினைத்து நமஸ்கரிக்கிறேன். என்னை வாழ்த்த வேண்டும்.

விஞ்ஞானிகளான சுவாமிநாதனையும், ராமசந்திரனையும், முரளீதரன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். இரசாயனத்திலும், பௌதிகத்திலும், தாவரப் படிப்பிலும் உயர்ந்த நிலையை எட்டிய அந்த அறுபது வயதுக்கிழவர்கள் அவனை தூக்கி நிறுத்தித் தழுவிக் கொண்டார்கள். "நாங்கள் முரளியின் நண்பர்கள். முரளிக்கு எல்லா விதத்திலும் உதவி செய்ய நாங்கள் காத்திருக்கிறோம்." என்று பதில் சொன்னார்கள்.

முரளி வீட்டிற்குத் திரும்பினான்.

திருமணம் மிக ஆரவாரமாக நடந்தது. கிராமம் முழுவதும் சுற்றிக்கொண்டது. காலையிலிருந்தே தேவார திருவாசகங்கள் சொல்லப்பட்டன. பத்துபேர் திண்ணையில் உட்கார்ந்து ரிக் வேதம் சொல்ல ஆரம்பித்தார்கள். எதிர் வீட்டு திண்ணையில் யஜுர் வேதம் ஆறு பேர் சொன்னார்கள். உள்ளே, ஔபாஸன நெருப்புக்கு அருகே சாம கானம் சிறிது நேரம் நடந்தது. திருமங்கலக் குடியைச் சேர்ந்த புரோகிதரே திருமணத்தை நடத்தி வைத்தார். சப்தபதியை விளக்கி, அவனுக்கு உரக்க சொல்லி அதன் பிரகாரம் நடக்கக் கட்டளையிட்டார்.

அவன் பத்மினி. அழகாக இருந்தான். கூறைப் புடவையில் சிலைபோல் ஜொலித்தான். எல்லார் கண்களும் அவனை ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தன.



எதாவது அதிசயம் செய்யப் போகிறானோ என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டேயிருந்தார்கள். ஆனால், பத்மினி ஒரு சாதாரண பெண்ணைப் போல இலேசாக நாணம் கொண்டும், மவுனமாக சிரித்துக் கொண்டும், சிற்சில வார்த்தைகள் பேசிக்கொண்டும், தன் திருமணத்தை முழுவதுமாய் ரசித்துக் கொண்டிருந்தான். முரளி மந்திரங்கள் சொல்லிக் கொண்டிருந்தாலும், அடிவயிற்றில் இடைவிடாது, ஒரு பயத்தை உணர்ந்தான். மஞ்சள் நாண் அணிவிக்கும்போது அந்தப் பயம் அதிகரித்தது. மெல்ல தன் வலக்கையெடுத்து முரளியின் மேல் வயிற்றில் பத்மினி வைத்தான். பயப்படவேண்டாம் என்பது போல் தலையாட்டினான்.

அடுத்தபடி ஐந்து பவுன் திருமாங்கல்யத்தை அவன் தலைவழியே முரளி மாட்டினான். அவர்கள் தீயைவலம் வந்தார்கள். பொரி தட்டிப் போட்டார்கள். மந்திரம் சொல்லஅவன் தோளுக்கு அருகே தர்ப்பைப் புல்லை பிடித்து கொண்டு பத்மினி நின்று கொண்டிருந்தான். பிற்பகல் பாலும் பழமும் சாப்பிட்டார்கள். பத்மினி வலக்காலெடுத்து முரளியின் வீட்டிற்குள் நுழைந்தான். அவனுடைய தாயையும் தகப்பனையும் நமஸ்கரிக்க முயன்றான், அவர்கள் வேண்டாமென்று தடுத்து விட்டார்கள்.

"நான் இப்போது பத்மினி. எப்போது சமயபுரத்தான் என்பது தெரியவில்லை. நான் சமயபுரத்தானாக இருக்கிறபோது வேறுவிதமாக இருப்பேன். இப்போது பத்மினியாக இருக்கிறேன், எனவே, நமஸ்கரிக்க என்னை அனுமதியுங்கள்." அவன் முரளியோடு விழுந்து நமஸ்கரித்தான். மெல்ல அந்த வீட்டைச்சுற்றி வந்தான். கொல்லைப்புறம் போனான். சமையலறை போனான். கூடத்துக்குப் போனான். படுக்கையறைக்குப் போனான். வராண்டாவுக்கு வந்தான். தெரு திண்ணையில் நின்று

வாசல்வழியே எட்டிப் பார்த்தான். மற்ற வீடுகளில் உள்ளவர்கள் அங்கிருந்தபடியே ஏதாவது குரல் கேட்கிறதா என்று முரளியின் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். பத்மினி வெளியே வந்தவுடன் எழுந்து நின்றார்கள். பத்மினி எல்லோரையும் பார்த்து சிரித்துவிட்டு உள்ளே போனாள். நடு ஹாலில் அமைதியாய் சம்மணம்கட்டி உட்கார்ந்து கொண்டாள்.

''இப்போது என் உடம்பில் மெல்ல ஒரு மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. என்னுடைய கால்களில் ஒருசக்தி ஏறிக்கொண்டிருக்கிறது. என் காதுகள் விறைப்பாகி கொண்டிருக்கின்றன. என் உச்சந்தலையில் ஒரு பரபரப்பு கூடுகிறது. என் முதுகு வழியே தோள்களை நோக்கி ஏதோ ஒருசக்தி நகர்ந்துக் கொண்டிருக்கிறது. ஒருமுப்பது விநாடிகளில் என்னையாரோ முழுவதுமாக ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். இன்னும் பத்து விநாடிகளில் நான் வேறுவிதமான குரலோடும், வேறுவிதமான யோசனையோடும் இருப்பேன்.'' அவள் அமைதியானாள் கண்மூடிக் கொண்டாள். சட்டென்று கண் திறந்தாள்.

அந்தப் பார்வை வேறு விதமாக இருந்தது.

''ரொம்ப சந்தோஷம், எனக்கு ரொம்ப சந்தோஷம் என் சந்தோஷத்துக்கு அளவே இல்லை. அத்தனை சந்தோஷம். இதுபல ஜென்மத்துக் கடன். அறநூறு வருஷத்துக் கடன். இந்த வீட்டில் வரவேண்டுமென்று எனக்கு நெடு நாள் ஆசை. இந்த வீட்டிற்கு மருமகளாக இருக்க வேண்டுமென்று என்தீராத அவா. இன்று தீர்ந்தது. எனக்கு ரொம்ப சந்தோஷம். எனக்கு ரொம்ப சந்தோஷம்'' உரக்க ஆனால் அழுத்தமான குரலில் ஆவேசமின்றிப் பேசினாள். முரளியைப் பார்த்தாள்.

''இங்கே வா'' கூப்பிட்டாள், முரளி அருகே போனான்.



''இப்போது நான் பத்மினி அல்ல. நான் வேறு, நான் [illegible] என்பதை ஒருநாள் உனக்குக்காண்பிப்பேன். அதுவரை நான் என்ன சொல்லுகிறேனோ அதுபிரகாரம் என்னோடு வாழ்க்கை நடத்து. எதற்கும் கவலைப்படாதே என் அடிக்கடி [illegible]படுகிறாய். உன் வயிற்றில்ஏன் இவ்வளவு பதட்டம் [illegible] இருக்கிறது இதுபழக்கமாகட்டும். இதுஉனக்குப் புரியட்டும். [illegible] இதுபற்றி ஒரு தெளிவோடு நீ இருக்கவேண்டும். உன்னிடம் நான் வந்ததற்கு மிகமுக்கியமான காரணம், இந்தக் கோவிலை நீ சரியானபடி பூஜைசெய்ய வேண்டும் இந்தக் கோவில் பூஜை சரியானபடி நடத்தவில்லையெனில், இந்த [illegible] முழுவதும் பாதிக்கப்படும். இந்த சோழதேசம் [illegible] பாதிக்கப்பட்டால் தமிழ் தேசம் முழுவதும் பாதிக்கப்படும், இந்தத் தமிழ்தேசம் பாதிக்கப்பட்டால், [illegible] பல்வேறு திசைகள் பாதிக்கப்படும். எனவே, இந்த திருமங்கலக்குடி மங்களாம்பிகைக்கு மிகச் சரியாக பூஜை நடத்த வேண்டியது அவசியம். இதற்கு நீதான் தகுதியான ஆள். உனக்கு மூர்த்தியை தொட தெரியுமா, [illegible] கரண்யாஸம் உனக்குச் சொல்லிக் [illegible] என் அப்பா சொல்லி கொடுப்பார் [illegible]. [illegible] மந்திரங்களோடு மூர்த்தியைத் தொட வேண்டும். [illegible] தொடுகின்றபோது மிக பரிசுத்தமான மனதும் [illegible] உச்சாடனத்தில் கவனமாகவும் இருக்க வேண்டும். [illegible] செய்யாததால்தான், கோயில்களில் உள்ள சிலை[illegible] சக்தி இழந்து கோயில் சிலைக்கு சக்தி இழப்பாகும். [illegible] சக்தியும் குறைந்து போகிறது. திருமங்கலக் [illegible] மங்களாம்பிகைக்கு சக்தி குறையக் கூடாது. [illegible] உன்னிடம் உன்னருகே நின்று கொண் [illegible]. உனக்கு இதைப் பற்றி அதிகம் சொல்லித் [illegible]. என் கையைப் பிடித்துக்கொள்'' அவள் கை [illegible].

முரளி அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

அவன் முரளியையே உற்றுப்பார்த்தான். முரளிக்குள் லேசாய் தலை சுற்றியது. மனம் கலந்தது. ஒரு தூக்கம் போலும் நிலை ஏற்பட்டது. முரளியை அவன் இழுத்து அருகே உட்கார வைத்துக் கொண்டான். முதுகு தடவினான். தலை தடவினான்.

முரளி தன்னுள் ஏதோ சக்தி கிளம்புவதை உணர்ந்தான்.

முரளியை அவன் தடவி தடவி பேசினான். அப்பாவும், அம்மாவும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''உன்னைப் பார்ப்பதற்கு நீ முயற்சி செய்தால், அது நடக்காது. உன்னைப் பார்ப்பதற்கு தெய்வம் உதவி செய்ய வேண்டும். உன்னை இப்போது பார். நீ யார் என்று பார். நீ எங்கு இருக்கிறாய் என்று தேடு. உனக்குள்ளே இருக்கின்ற உன்னை நீ கண்டுபிடி. அங்கிருந்து இந்த உலகத்தைப்பார். அங்கிருந்து பூஜைசெய்ய முற்படு. உனக்குள்ளே இருக்கிற அந்தசக்தியிலிருந்து. வெளியே இருக்கிறசக்தியை தேடு. உன் புத்தியிலிருந்து தேடாதே. உன்மனசு நான்கு விதமாகவும் கூவும், அந்தப் பேச்சைக் கேட்காதே. உன் மனதுக்கு கீழே அடித்தளமாய் நீ மூச்சு விடவும், பேசவும், உட்காரவும் உன் உடம்பில் ஆடவும் ஓடவும் காரணமாய் இருக்கின்ற அந்த சக்தியிலிருந்து வெளியே என்ன நடக்கிறது என்றுபார் உள்ளே போ. உள்ளே போ...உள்ளே பார் அங்கேயிருக்கிறது உனக்குத் தெரியும் பார்...உள்ளே போ...''

அவன் தலையைத் தடவிக் கொண்டே உரக்கக் கத்தினான்.

முரளி ஆழ ஆழ அமிழ்ந்தான். தனுக்குள்ளே தன்னைத் தேடினான். ஒரு நீலம் கண்முன்னே விரிந்தது. பளீரென்று பெரிசாகிறது. நூறு பகல்கள் சேர்ந்தது போன்ற கண் கூசுகின்ற உற்றுப்பார்க்க முடியாத ஒரு வெளிச்சம். அவனைச் சூழ்ந்துக் கொண்டது.



''முரளி இதுவே நீ. இதுவே எல்லாமும். இங்கே ஒரு உணர்வு தோன்றுகிறது அல்லவா. இங்கே நான் என்ற உணர்வு தோன்றுகிறது அல்லவா. இந்த வெளிச்சத்துக்கு நடுவே இருக்கின்றநான் என்று உன்னை உணருகிறாய் அல்லவா. அந்த நானிலிருந்து உலகத்தை பார். அந்த நானுக்கு முரளியென்ற பெயரில்லை. அந்த நானுக்கு எந்த வேலையும் இல்லை. அந்த நானுக்கு எந்த உடம்புமில்லை. அந்த நானிலிருந்து இப்போ வெளி உலகத்தைக் கவனி. கோவிலைப் பார், மங்களாம்பிகை சிலையைக் கவனி. இதுதான் பார்வை, இதற்குப் பெயர்தான் பார்ப்பது. இப்படித்தான் பார்க்க வேண்டும். மனதால் பார்க்கும்போது மனம் இரண்டு விதமாக பார்க்கும், நல்லது கெட்டது என்று பிரித்துதான் பார்க்கும் மனம் வழியே பார்வையை விட்டு விட்டு உயிர் வழியே உன் ஆத்மாவின் வழியே பார்க்கக் கற்றுக்கொள். இப்பொழுது பார். நான் யாரென்று பார்.''

முரளி மெல்ல பார்த்தான்.

பத்மினிதான். அதே உடம்புதான். அதே கண், கால், மூக்குதான் அதே உதடுதான். ஆனால் பத்மினிக்குள்ளே ஒரு தகதகப்பு ஓடிக்கொண்டிருந்தது, பத்மினிக்குள்ளே ஒரு அலை வீசிக்கொண்டிருந்தது. பத்மினிக்குள்ளே ஒரு பெரும் சக்தி சுழன்று கொண்டிருந்தது. பத்மினி சிரித்தாள். அந்த சக்தியும் சிரித்தது. பத்மினி கண் சிமிட்டினாள் அந்த சக்தியும் சிமிட்டியது. பத்மினி தலையசைத்தாள். அந்த சக்தியும் தலையசைத்தது. பத்மினி பெருமூச்சு விட்டாள். அந்த சக்தியும் வேகமாய் சுழன்றது. பத்மினி ஒவ்வொரு செயலுக்கும் அந்த சக்தியின் அடர்த்தி வேறுவேறு விதமாக மாறியது. அந்த சக்தி எழுந்து நின்று தரையை உதைத்தால் பூமி இரண்டாகப் பிளந்துபோகும் என்று முரளிக்குத் தோன்றியது. அந்த சக்தியை நோக்கி முரளி கைகூப்பினான். அம்மா என்றான்.

பத்மினி மெல்ல தரையில் சரிந்தாள். முரளியின் அம்மா ஓடிப்போய் தலையணை கொண்டு வந்தாள். அவள் தலையைத் தூக்கி வைத்தாள். அப்பா போர்வையால் போர்த்தினார். மெல்ல விசிறத் துவங்கினார். முரளி எழுந்து வாசலுக்குப் போனான். தெரு ஆவலாய் இறங்கி அவனிடம் விசாரிக்கத் துவங்கியது. முரளி அதிகம் பேசாமல், ஓரிரு வார்த்தைகளிலே பதில் சொன்னான்.

அவள் குடித்தனம் தெளிவாகத் துவங்கியது.

"அந்த ராமச்சந்திர ராவிடம் நான் சொல்லேன் என்று போய் சொல் முரளி" பத்மினி சற்று உரத்த குரலில் பேசினாள்.

உலகத்தினுடைய ஒவ்வொரு இயக்கமும் தெய்வத்தால் தான். மக்கள் வெறும் கருவிகள். இங்கே கிடக்கிற கல் அங்கே உதைக்கப்பட்டு விழுகிறது. கல் நகர்வதே இல்லை. அதே போலத்தான் மனிதர்களும். மனிதர்கள் நகர்வதேயில்லை. மனிதர்கள் நகர்விக்கப்படுகிறார்கள். எந்த உயிரினமும் நகர்வதில்லை. தெய்வம் அந்த உயிருக்குள் புகுந்து நகர்விக்க செய்கிறது. அழிவதும், வளர்வதும், பறப்பதும் இடைவிடாது. தெய்வத்தின் செயலாக இருக்கிறது. மக்களின் வாழ்க்கையில் தெய்வம் தான் முழுமையான பங்கு வகிக்கிறது. ஒரு சிறிதளவுக் கூட மக்களின் பங்கு இல்லையென ராமச்சந்திர ராவுக்கு சொல்."

நெல்லில் மஞ்சள் பூசணம் வரக் காரணம், மாட்டுச் சாணம் போடுவதை விவசாயிகள் மறந்து விட்டார்கள். குறைத்துக் கொண்டு விட்டார்கள். மாட்டுச் சாணம் ஒரு முறையேனும் வயலுக்குப் போடவேண்டிய விதியை புறக் கணித்து விட்டார்கள். மற்ற உரங்களில் பயிர் வளர்ச்சிக்கு போதுமானவையாக இருக்கிறது. நோய் எதிர்ப்புக்கு சக்திக்கு உண்டான விஷயம் அதில் இல்லை. மாட்டுச் சாணம் நோய் எதிர்ப்புச் சக்தியை உடையது. மாட்டுச்



சாணம் போட்ட வயல்களில் மஞ்சள் பூசணம் வராது. அந்த மஞ்சள் பூசணம் அடுத்த வருடம் மிகவும் குறைந்துவிடும். அதற்கு அடுத்த வருடம் வரவே வராது என்று ராமச்சந்திரனிடம் சொல். முரளியின் கேள்விக்கு பத்மினி பதில் சொன்னாள்.

"என்னை எங்கேயாவது அழைத்துக் கொண்டு போ முரளி." நிமிரென்று கட்டிக்கொண்டு கொஞ்சினாள்.

முரளி விழித்தான். "நான் இப்ப பத்மினி வீட்டிலே இருந்து போரடிக்குது ஆடுதுறைக்கு போலாமா, இல்லை...மாயவரம் போலாமா..." பத்மினி கேட்க, முரளியும், மனைவியும் மாயவரத்திற்குப் பஸ் ஏறினார்கள். பஸ்ஸில் தூங்கிக்கொண்டு வந்தாள். மாயவரத்தில் கடைத்தெருவெல்லாம் சுற்றி வந்தாள். விருப்பப்பட்டதை யெல்லாம் வாங்கினாள். கோயிலுக்குப் போய் இடமும் வலமும் பார்த்தாள். சிரித்தாள். விபூதியிட்டுக் கொண்டாள். குங்குமம் வைத்துக் கொண்டாள். கற்பூரம் ஏற்றிக் கொண்டாள். பிறகு சுற்றி வந்தாள். "என்ன கோயில் இது ஒன்றுமே இல்லாமல் வெறும் சிலையாக வெறும் கற்கள் மட்டுமே இருக்கின்றன" என்று சொன்னாள்.

வெளியே வந்தாள். பசிக்கிறதே என்றாள். முரளியும் பத்மினியும் ஹோட்டலுக்குள் ஏறினார்கள். உட்கார்ந்தார்கள். "அந்த ஃபேன் போடச் சொல்லு." குரல் பத்மினியுடையது அல்ல மாறியிருந்தது. அவன் பயத் தோடு திரும்பிப் பார்த்தான். "அந்தப் ஃபேனை போடச் சொல்லு" முரளி எழுந்து போய் மின் விசிறியை திருகினான். மின் விசிறி சுழல ஆரம்பித்தது. "நான் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சுடா முரளி. எனக்கு மசால் தோசை வேண்டும் ஆறு மசால் தோசை." அந்த ஹோட்டல் முழுவதும் பத்மினி சாப்பிடுவதை வேடிக்கை பார்த்தது. முரளி

பக்கத்தில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

யாரிட்டேயும் ஒன்னும் சொல்லாத முரளி.'' குரல் பத்மினியின் குரல். கலகலப்பாக இருந்தது.

''என்னங்க இன்னிக்கு மட்டும்தான் ஆறு மசாலா தோசை சாப்பிடுவாங்களா...? இல்ல டெய்லியே ஆறு மசாலா தோசை சாப்பிடுவாங்களா?'' பரிமாறியவன் வியந்து போய் கேட்டான். கல்லாவிலிருப்பவன் எட்டிப் பார்த்தான். எதிர்பக்கம் சாப்பிட்டுக் கொண்டிருப்பவன்தான் சாப்பிடுவதை நிறுத்தி விட்டு, மனைவியை அழைத்து அவன் சாப்பிடுவதை பலர் பார்க்க சுட்டிக் காட்டினான். ஒரு பத்து வயது பெண் குழந்தை ''அய்யோ எப்படி திங்கறாங்க'' என்று சத்தம் போட்டு கூவியது. வேறு யாரோ தங்களுக்குள் பேசி சிரித்துக் கொண்டார்கள்.

அவன் ஆறு மசால் தோசையையும் பத்து நிமிடத்திற்குள் வேகமாய் சாப்பிட்டு முடித்தான். இரண்டு கப் காபி கேட்டான். குடித்தான்.

அவர்கள் கல்லாவுக்கு அருகே போனார்கள்.

''ஒரு புருஷன் கதி என்னப்பா ஆகும், இப்படி ஒரு பொண்டாட்டி தின்னா.''

''ஒரே மாசத்துல அவன் போண்டி ஆயிடுவான். பார்த்தா புதுக்கல்யாணம் போலயிருக்கு. பாவம்...வசமா மாட்டிக்கிட்டான்.'' யாரோ பின்னால் பேசினார்கள்.

முரளி அவளோடு தெருவில் நடந்தான். பஸ் ஏறினான்.

''என்ன...ரொம்ப வருத்தமாயிடுத்தா'' பத்மினியின் குரல் மெல்லியதாக இருந்தது.

''ஆமாம், பத்மினி, சிரமமாத்தான் இருக்கு அடிக்கடி வெளிய போகணும்னு கேட்பியா.''



''தெரியலயே...நான் போகணும்னு கேட்கலையே. திடீர் திடீர்னு வர்றா...என்ன பண்றது. நீ பொறுத்துக்கத்தான் வேண்டும் முரளி, எனக்கு பசிக்கிறது. நான் சாப்பிடவே இல்லை ஆறு மசால் தோசையும் அவதான் சாப்பிட்டா. எங்கேயோ போயிடுத்து. வயித்துக்குள்ள போன அத்தனை சத்தையும், வேறெங்கேயோ உறிஞ்சு எடுத்துட்டா. எனக்கு இப்ப நிஜமா பசிக்கிறது தெரியுமா. ஆனா, ஒன்னும் வேண்டாம். வீட்டுக்குப்போய் சாப்பிடலாம். வீட்டிற்கு போய் இறங்கியவுடன், நிறைய சாதமும் தயிரும் போட்டுக் கொண்டு பிசைந்து ஊறுகாயோடு சாப்பிட்டாள். கையலம்பினாள். மாயவரம் போய் வந்த கதையை அம்மாவிடமும், அப்பாவிடமும் சொன்னாள்.

''நான் இன்னிக்கு ரூம்ல படுத்துக்கறேம்மா'' என்று சொல்லிவிட்டு முரளி இருக்கிற அறைக்கு வந்தாள். முரளிக்கு அருகே உட்கார்ந்து தலை தடவினாள்.

''கல்யாணமாகி, நாலு நாளாகி இன்னும் பொண்டாட்டிய தொடலே இல்லையேன்னு வருத்தமா இருக்கா? இன்னைக்கு தொடு. என்னவேன்னா பண்ணு. நான் பத்மினியாத்தான் இருப்பேன்.

மெல்ல அவள் முகவாயை நிமிர்த்தி முரளி கன்னங்களில் முத்தமிட்டான். பதிலுக்கு பத்மினியும் முத்தமிட்டாள். அவனுக்கு அருகே படுத்துக் கொண்டு விட்டாள். அவனைக் கட்டிக் கொண்டாள். முதுகு தடவினாள். முரளி உற்சாகமானான். மிக சந்தோஷமாக பத்மினியோடு இருந்து விட்டான்.

விடிந்து பத்மினி குளித்துவிட்டு தலைத் துவட்டி அவனைப் பார்த்து சிரித்தாள். அருகே வந்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

''சந்தோஷமா இருந்ததா'' என்று கேட்டாள்.

முரளி ஆம் என்று தலையசைத்தான்.

''இன்னிக்கு ஆபீஸ் போகணும், பத்மினி. ஒரு வாரம் லீவு ஓவர். நான் கிளம்பட்டுமா...''

''வேண்டாமே... இன்னிக்கு என் கூடவே இருங்கோளேன்.''

''ஆபீஸ்ல லீவு சொல்லலையே?''

''இல்லை இன்னிக்கு நீங்க லீவுன்னு எல்லாரும் நினைச்சுண்டிருப்பா. ஏன் லீவுன்னு யாரும் கேட்கமாட்டா என் கூடவே இருங்கோ.'' அன்று முழுவதும் அவளோடு பேசி சிரித்து பல்லாங்குழி ஆடி, அம்மா எதிரே உட்கார்ந்து மாறி மாறி பாட்டுபாடி ரேடியோ கேட்டு, பகல் உணவை நிதானமாய் சாப்பிட்டு, பூர்வீக கதைகளையெல்லாம் கேட்டுக் கொண்டு, பகலில் சிறிது நேரம் கண்ணயர்ந்து, மாலையில் வீட்டு வாசலில் உட்கார்ந்து தெருவை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய ஆபீஸ் பியூன் சைக்கிளில் வந்து இறங்கினான்.

''சாமிநாதன் சார் நீங்க என்னிக்கு வேலைக்கு வர்றீங்கன்னு கேட்டுட்டு வர சொன்னார். இன்னியோட முடியுதாமே.''

முரளி ஆச்சரியத்தோடு பத்மினியை திரும்பிப் பார்த்தான்.

''இல்லப்பா, நேத்தோடயே லீவு முடிஞ்சுடுச்சப்பா.''

''இல்லீங்க. நீங்க எழுதி கொடுத்தது பிரகாரம் இன்னிக்குத்தான் முடியுது. நாளையிலேர்ந்து வேலைக்கு வர்றீங்களான்னு கேட்டுட்டு வரச் சொன்னாரு. வரலைன்னா வேற ஏற்பாடு பண்ணணுமாம். அதுக்காக கேட்டாரு.''

அவன் திரும்பி பத்மினியைப் பார்த்தான்.



''நாளைக்கு போங்கோளேன் வேலைக்கு'' பத்மினி கட்டளை யிட்டாள்.

''நாளைக்கு வரேம்ப்பா'' முரளி பதில் சொன்னான்.

மெல்ல அந்தி மயங்கும்போது புருஷனும் மனைவியும் கோவிலுக்கு போனார்கள். இடுப்பில் தார்பாய்ச்சி பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு, இடுப்புத் துண்டு இறுக்கி கருவறைக்குள் முரளி நுழைந்தான்.

உள்ளே மங்களாம்பிகைக்கு சாம்பசிவ குருக்கள் அலங்காரம் செய்து கொண்டிருந்தார்.

''வா... பூஜையை நீ பண்றயா'' என்று கேட்டார்.

அவன் சரியென்று சொன்னான்.

அவர் திரை விலக்கினார். அவர் சொல்ல சொல்ல அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி பூஜை செய்யத் தொடங்கினான்.

அவர் கையில் தர்பையோடு ஒவ்வொரு விஷயமாகத் தொட்டு, ஒவ்வொரு மந்திரமாக சொல்லி அம்பிகைக்கு உருவேற்றி கொண்டிருந்தான்.

சிரசில் ஒரு மந்திரம் சொல்லித் தொட்டார். வலக் கையை ஒரு மந்திரம் சொல்லித் தொட்டார். இடக் கையை ஒரு மந்திரம் சொல்லித் தொட்டார். உயிரை ஒரு மந்திரம் சொல்லித் தொட்டார், பாதத்திற்கு ஒரு மந்திரம் சொல்லித் தொட்டார். அபயஹஸ்தத்தை ஒரு மந்திரம் சொல்லித் தொட்டார். காலை காண்பிக்கின்ற இன் சொல்லித் தொட்டார். மறுபடி ஒரு கைக்கு மந்திரம் சொல்லித் தொட்டார். கையும் தலை உச்சிக்கு மந்திரம் சொல்லித் தொட்டார். கை கூப்பினார். ''தேவதையே இங்கு பிரசன்னமாக இருக்க வேண்டும். எல்லோரையும் ஆட்சி செய்ய வேண்டும். எல்லோரையும் ரட்சிக்க வேண்டும்'' என்று வேண்டினார்.

முரளி மனதால், அடி மனதால், மனதிற்கு மேலே உள்ள சக்தியால், அவர் செய்வதை பார்த்துக் கொண்டிருந்தான். அந்த சிலை சிரித்ததுபோல அவனுக்குப்பட்டது.

சாம்பசிவ குருக்கள் மறுநாள் கலசம் வைத்து பூஜை செய்து, ஹோமம் வளர்த்து அவனை முன்னே உட்கார வைத்து தீட்சை கொடுத்தார். பூஜை விதிகளை காதோடு சொன்னார்.

அன்று காலை முழுவதும் நமச்சிவாய நாமம் செய்து விட்டு, பிற்பகல் சிறிதளவு உணவு எடுத்துக்கொண்டு அன்று மாலை மங்களாம்பிகைக்கு அலங்காரம் செய்ய உள்ளே போனான்.

திரையை போட்டு, அலங்காரம் கலைத்து, அம்மன் சிலை எதிரே கை கூப்பி நின்று, முதல் சொம்பு ஜலத்தை, காயத்ரி மந்திரம் சொல்லி, மங்களாம்பிகாவின் தலையில் ஊற்றி, துண்டால் ஈரத்தைத் துடைக்கிறபோது மிகப் பெரிய ஒரு சக்திக்குமுன்பு ஒரு சிறிய புழுவாக நெளிந்துக் கொண்டிருக்கிறோம் என்பதாய் முரளி உணர்ந்தான். உடம்பிலிருந்த பணிவு மொத்தமும் திரட்டி கைகளுக்கு கொண்டு வந்து கண்களில் தேக்கி மங்களாம்பிகாவின் பாதத்தில் தன் சிரம் பதியவைத்து என்னை வழி நடத்து தாயே என்று இறைஞ்சினான். அலங்காரங்கள் செய்ய ஆரம்பித்தான். முதலில் எழுதத் துவங்கினான். கண் வரைந்தான். நெற்றித் திலகம் எழுதினான். கிரீடம் சூட்டினான். கவசங்கள் மாட்டினான். தள்ளி நின்று உற்றுப் பார்த்தான். ஒவ்வொரு இடமாக சாம்பசிவகுருக்கள் சொல்லிக் கொடுத்ததுபோல விரல்களில் முத்திரையிட்டு. முத்திரைகளால் விக்ரகத்தை தொட்டு உயிரூட்டினான். இந்த சுவாசம் வரட்டும் என்று வேண்டினான். இது உயிர் தரட்டும் என்று பிரார்த்தனை செய்தான். திரையை விலக்கி தீபம் காட்டினான். வெளியே கூடியிருந்த பதினைந்து பேரும் 'ஆ' என்று ஒரே குரலில் கூச்சலிட்டார்



கள். அழகு...அழகு என்று கொண்டாடினார்கள். ஊருக்குள் ஓடிபோய் அலங்காரம் பற்றி சொன்னார்கள். இன்னும் பத்துபேர் ஓடி வந்து பார்த்தார்கள். முரளி தன்னை மீறி தன் விரல்களில் ஏதோவொரு சக்தி இயங்குவதை உணர்ந்தான்.

வீட்டிற்கு வந்தான்.

பத்மினி அவனைத் தடவிக் கொடுத்தாள். "இந்த வேலை என்னன்னு புரிஞ்சுதா. இந்த வேலைதான் முக்கியம். இந்த வேலைதான் முதல். இந்த வேலைக்கு ஏற்ற மாதிரிதான் உன்னுடைய மற்ற வேலையெல்லாம் இருக்கும். நீ ஆபீசுக்கு போகலைன்னா பரவாயில்லை. உனக்கு பிரசன்ட் போட அங்கு ஆள் இருக்கும். காசு இல்லையென்று கவலைப்படாதே. நீ எவ்வளவு கேட்டாலும் உன் மடியில் வந்து விழும். நீ என்ன ஆசைப்பட்டாலும் கிடைக்கும்....ஆனால். இந்த கோயில் வேலை, இந்த சிலையை உயிர்ப்பிக்கிற வேலை, இந்த சிலை ஜீவனை வெளி விடுகிற வேலையை, இதைச் சுற்றியுள்ள விஷயங்களை சுத்தப்படுத்தி, இந்த சிலையினுடைய மந்திர சக்தியை அதிகரிக்கிற வேலை, இடைவிடாது நீ செய்து கொண்டு தானிருக்கவேண்டும். எப்பொழுதெல்லாம் முடிகிறதோ அப்போதெல்லாம் நீ செய்து கொண்டு தானிருக்க வேண்டும்.

அவள் அடிக்குரலில் பேசினாள்.

முரளி சரியென்றான்.

"பத்து நிமிடம் கழித்து பால் சொம்போடு வந்தாள். "இப்ப நான் பத்மினி" என்றாள். அதற்கும் முரளி சரியென்று தலையசைத்தான். அவனுக்கு பத்மினியாக இருந்தாலும் வேறு யாராகயிருந்தாலும் அடங்கி அமைதியாக இருக்க வேண்டும் என்பது மனசுக்குள் பதிந்து போயிற்று. தான் வேறு ஏதோ ஒரு காரியத்திற்காக

இயக்கப்படுகிறோம் என்று தெரிந்து போயிற்று. பத்மினியோடு அன்றும் சந்தோஷமாக இருந்தான்.

விடிந்த பிறகு பத்மினி குளித்துவிட்டு அவன் தலையின் உச்சியில் கைவைத்தாள்.

''இன்று ஆபீஸ் போக வேண்டாம். ஈஸ்வரன் சன்னதிக்கும், மங்களாம்பிகைக்கும் மற்ற சன்னதிகளுக்கும் நேற்று எப்படி செய்தாயோ அதே போல பல முறை கோயிலை சுற்றிவா'' என்றாள்.

முரளி உரக் கம்பெனி அலுவலகத்தை சுத்தமாக மறந்துவிட்டு கோயிலோடு ஒன்றிப் போனான்.

''என்ன முரளி. நேத்து வராம விட்டுட்டே'' சுவாமிநாதன் கேட்டார். ''கோயில் வேலையா இருந்தது சார், லீவ் லெட்டர் எழுதிக் கொடுத்துட்டா'' முரளி பணிவோடு கேட்டான். சுவாமிநாதன் யோசித்தார். அவனை உற்றுப் பார்த்தார்.

''வேண்டாம். நான் பிரசண்ட் போட்டுக்கிறேன். நீ வந்தா மாதிரியே எழுதிக்கிறேன். ஆனா, என்கிட்ட ஒரு வார்த்தை வரமாட்டேன்னு முன் கூட்டியே சொல்லிடு. எனக்கு சௌகர்யமாக இருக்கும்.''

முரளி சரியென்று தலையாட்டினான். பணிவோடு கை கூப்பினான்.

''முரளி'' சுவாமிநாதன் அவன் திரும்பியதும் கூப்பிட்டார்.

''என்ன''

''எனக்கொரு பிரச்சனை முரளி.''

''சொல்லுங்க சார்.''

''பத்மினிக்கிட்ட கேட்டு சொல்லு. அடிவயிறு அடிக்கடி வலிக்குது. வெளிக்கு போறது சிரமமாயிருக்கு.



ரொம்ப அவஸ்தை படறேன். கட்டியிருக்குமோன்னு டாக்டர் சந்தேகப்படுகிறார். எக்ஸ்ரே எடுத்த போது, இருக்கலாம் அப்படின்னு ஒரு சந்தேகம் இருந்தது. டியூப் விட்டு பார்க்கணுங்கறா. டியூபில் கட்டியிருக்குன்னு தெரிஞ்சதுன்னா என் மலக்குடல் முழுவதுமெடுத்துடுவா. எடுத்துட்டு இடுப்புல பை கட்டி குடலிலிருந்து ஒரு டியூப் கொண்டு வந்து பைல மாட்டிக்கணும். அதாவது மலப் பையை இடுப்புலயே நான் வைச்சுக்கணும். நினைக்கிற போதே பயமாயிருக்கு. அருவருப்பாயிருக்கு. வாழ்க்கை முழுவதும் இடுப்புல ஒரு பையோட நான் தூங்க வேண்டியிருக்குமோன்னு நினைச்சா செத்து போயிடலாம்னு தோன்றது. எனக்கு ஒன்னும் வரக்கூடாது முரளி. நீ பத்மினி கிட்ட கேட்டு சொல்லு.''

''சரி சார்.''

''வேணுன்னா நீ இப்பவே போ முரளி.'' முரளி சைக்கிள் மீது உட்கார்ந்தான். மெல்ல மிதித்து திருமங்கலக்குடிக்கு வந்தான். வீட்டை நெருங்கினான். பத்மினி கொல்லைப்புறம் துணி துவைத்துக் கொண்டிருந்தாள்.

அவன் வந்தவுடன் அவனை உற்றுப் பார்த்தாள். மெல்ல கைகோர்த்துக் கொண்டாள். கிணற்றடிக்கு அழைத்துப் போனாள். கிணற்றடியை எட்டி பார்த்தாள். வானம் பார்த்தாள்.

''ஒன்னுமில்லை. சரியா போயிடும்னு சொல்லுங்கோ. சுவாமிநாதனை அழவேண்டாம்னு சொல்லுங்க. சுவாமிநாதனுக்கு லேசா அல்சர் வந்திருக்கு. மங்களாம்பிகை விபூதியை நெத்தியிலிட்டு ரெண்டு நாள் வெறும் திரவ ஆகாரமாக குடிக்க சொல்லுங்கோ. மூணாம் நாள் சரியா போயிடும்.''

மறுநாள் காலை சுவாமிநாதன் கக்கூஸில் உட்கார்ந்து சிரமப்பட்டார் வலியும், மலவேதனையும் தாங்காமல்,

அழுதார். வயிறு புரண்டது. முகத்தில் அடித்துக் கொண் டார். வயிறு மெல்ல வலித்தது. தூக்கு போட்டுக் கொண்டு செத்து விடலாமா என்று யோசித்தார். வயிற்றிலிருந்து ஏதோவொன்று கழன்றது. ஆவலாகப் பார்த்தார். வெளியே ஏதோ வந்து விழுந்தது. வயிறு காலியாகியது. உடனடியாக கை கால் அலம்பிக் கொண்டார்.

டாக்டரிடம் ஓடினார். மறுபடியும் எக்ஸ்ரே எடுக்க இன்னொரு இடத்திற்கு போனார். இந்த முறை எக்ஸ் ரேயில் எந்த சுவடும் இல்லை.

டாக்டர் ஆச்சர்யப்பட்டார்.

சுவாமிநாதன் அலுவலகத்திற்கு வந்து முரளிக்காகக் காத்திருந்தார்.

''சுவாமிநாதன் சார். விபூதி தரேன் சரியா போயி டும்னு பத்மினி சொன்னா. இரண்டு நாள் விபூதி சாப்பிட சொன்னா. ஒரு பிரச்சனையும் இருக்காதுன்னு சொன்னா.''

''சரியாயிடுச்சு. முரளி எப்படின்னு தெரியல. இவ ளுக்கு காத்தால சரியாயிடுச்சு.'' சுவாமிநாதன் எழுந்து நின்று முரளியின் கைகளைப் பற்றிக் கொண்டார்.

''நான் வரட்டுமா. இப்பவே உன்கூட திருமங்கலக் குடிக்கு வரட்டுமா''

''சார் இங்க வேலை...''

''இந்த வேலை வேண்டாண்டா. நான் திருமங்கலக் குடிக்கு வந்துடறேன். உன் கூட வந்துடறேன். அங்க இருக் கிறது உன் பொண்டாட்டி இல்லடா. அது தெய்வம். தெய்வத்துக்கெல்லாம் தெய்வம். என் வயிறு சரிபண் ணித்தே. அந்த தெய்வம்.'' அரற்ற ஆரம்பித்தார்.

முரளியும் சுவாமிநாதனும் காரில் திருமங்கலக்குடிக்கு வந்தார்கள்.



பத்மினியைப் பார்த்து சுவாமிநாதன் கை கூப்பினார்.

''சரியாயிடுச்சு எனக்கு எல்லாம் சரியாயிடுச்சு உங்க ளால சரியாயிடுச்சு.'' என்று விம்மினார். பத்மினி சிரித் தாள்.

''எனக்கு என்ன தெரியும். அவ என்னமோ வரா. பேசறா. போறா. நான் பத்மினி. எனக்கு ஒண்ணுமே தெரியாது. சரியாயிடுத்துன்னு சொன்னது சந்தோஷம் தான்.'' ''ஒருவாய் சாப்பிட்டு போறேளா.'' வீடு சுவாமிநாதனை உபசரித்தது.

சுவாமிநாதன் முரளியோடு கோயிலுக்கு நடந்து போனார்.

ஊர் அதிசயப்பட்டு அவரை விசாரித்தது. அவர் விளாவாரியாக தன்னுடைய கஷ்டத்தையும் நிவர்த்தி ஆனதையும் சொன்னார். ஊர் ஆச்சர்யப்பட்டது. பத்மினிக்கும், முரளிக்கும் ஊரில் மதிப்புக் கூடியது.

''பத்மினி...பத்மினி...என் குழந்தைக்கு உடம்பு சரி யில்லைடி. அனலாய் கொதிக்கறதடி.''

''அப்படியா...கொண்டு வந்து எங்க ஆத்து கூடத்துல போடு. நான் கொஞ்ச நேரம் கவனிச்சுக்கிறேன்.'' அப் புறம் கூட்டிண்டு போலாம்.

பிள்ளையைத் தூக்கிக் கொண்டு தாய் ஓடி வந்தாள். கூடத்தில் துணி விரித்துப் போட்டாள். பத்மினி அருகே வந்து மெல்ல குழந்தையை எட்டி உதைத்து ''சரியா போயிடுண்டி. எதையோ பார்த்து பயந்திருக்கிறான். சரியா போயிடும் என்றாள். எழுந்து வீட்டு வேலைகளை கவனிக்க ஆரம்பித்தாள். போகும் போதும், வரும் போதும் மெல்ல குழந்தையை எட்டி உதைத்தாள். எட்டி உதைக்க உதைக்க குழந்தையின் சுரம் குறைந்தது. குழந்தை எழுந்து கண்விழித்து பார்த்தது. எழுந்து உட்கார்ந்து கொண்டது. உட்கார்ந்து கொண்டிருந்த குழந்தையின் முதுகில் மறுபடி யும் வேகமாக உதைத்தாள். குழந்தை எழுந்து நின்றது.

''என் புள்ள அரபு தேசத்துக்கு வேலைக்கு போனான் ஆறு மாசமாச்சு ஒரு தகவலும் இல்லை. ரொம்ப கவலை யாயிருக்கு. பத்மினி ஏதாவது சொல்லப்படாதா.''

''மூணு லெட்டர் போட்டுட்டான். உங்க கைக்கு வராம வேறயாரோ மடக்கி பிரிச்சு, படிச்சு, தூக்கிபோட்டுட்டா. அடுத்த லெட்டர் அடுத்தவாரம் வரும். ஆறுமுறை போஸ்ட் ஆபிசுக்குபோய் காத்திருந்து வாங்கிக்கோ. அப்பவே யார் பிரிக்கறாங்கங்கறதும் தெரியவரும்.'' பத்மினி கேள்வி கேட்டவுடன் பதில் சொன்னாள்.

ஊர் அவளை மொய்த்துக் கொண்டது. ஒவ்வொரு சிறிய விஷயத்துக்கும் ஓடிவந்தது.

''என் பொண்ணுக்கு கல்யாணம் நடக்கணுமே,'' பத்மினி தேறி சொன்னாள்.

''நான் பரீட்சைக்கு படிக்க ஆரம்பிச்சிட்டேன்.''

''படிக்கறது போறாது. இன்னும் வேகமா படிக்கணும். வெறும்னே வந்துகை கூப்பினா பாஸாக முடியாது. கஷ்டப்படணும். கஷ்டப்படறத்துக்கு எது தடுக்கறது தெரியுமா. உன் தூக்கம். தூக்கத்துக்கு என்ன காரணம் தெரியுமா? உன் கற்பனை. உன் கற்பனைக்கு காரணம் தெரியுமா, கூத்தும் சினிமாவும், எல்லாத்தையும் ஒதுக்கி வைச்சுட்டு படிப்பு படிப்புன்னு உட்கார்ந்தா பாஸ் பண்ணிடுவே. இல்லைன்னா டப்பாஸ்தான். பத்மினி அதட்டினாள். அவன் உள்ளுக்குள் இருந்த பலஹீனத்தை அவனுக்கே தெரியாத பலஹீனத்தை அவள் உரித்துக் காட்டினாள்.

அவன் நமஸ்கரித்து விட்டு திசை மாறினான்.

கோயிலுக்கு ஆடுதுறையிலிருந்து ஆட்கள் வந்தார்கள். மங்களாம்பிகையை நமஸ்கரித்து விட்டு, பத்மினியையும் பார்த்துவிட்டு போனார்கள். பத்மினியை பார்க்க வந்தவர்கள், மங்களாம்பிகையையும் தரிசித்துவிட்டுபோனார்கள். மங்களாம்பிகாவின் சக்தி ஏறியது. பத்மினியால் அந்த ஊருக்கு மவுசு அதிகமாகியது.

பத்மினியைப் பார்க்கப் பட்டணத்தில் இருந்தும் ஆட்கள் வந்தார்கள். அருகே வந்து உட்கார்ந்துக் கொண்டார்கள். அழுதார்கள். பத்மினி திரும்பி பார்த்தாள். கழனி பானையில கைவுட்டுயிருக்க. அப்புறம் இங்கவந்து அழுதா என்ன புண்ணியம்.''



ஒண்ணு ஆம்படையானோட இரு. இல்ல யாரு மனசுக்கு புடிக்கறதோ அவனோட இரு. ரெண்டு பக்கமும் அல்லாடிண்டு இங்கவந்து அழுவானேன். எழுந்து போ'' சீறினாள். வந்தவன் எழுந்துபோய் கோயிலில் உட்கார முரளியை அனுப்பி அவனுக்கு தயிர்சாதம் கொடுக்கசொன்னாள். அவனை நூற்றிஎட்டுமுறை கோயிலை பிரதட்சணம் பண்ண சொன்னாள்.

என்ன நடந்தது என்று மற்றவருக்கு தெரியவில்லை. ''எனக்கு புத்தி வந்துடுத்து.'' நான் இன்னுமே ஒழுங்கா இருக்கேன்,'' வந்து அழுதவன் நமஸ்கரித்துவிட்டு போனான்.

அவளைப்பற்றி எந்த விவரமும் யாரிடமும் சொல்லவில்லை. முரளியிடம் கூட பகிர்ந்துக் கொள்ள வில்லை.

முரளி மந்திரத்தால் கட்டுண்டதுபோல கோயில் வேலை செய்தான். எப்பொழுது பத்மினி அழைத்தாளோ அப்பொழுதுபோய் அவள் அருகே படுத்துக் கொண்டான். சில நேரங்களில் பத்மினியின் முகம் மாறுவதில் யாராக மாறியிருக்கிறாள் என்று கண்டுபிடிப்பதையும் லட்சியமாக வைத்துக் கொண்டான். அலுவலகத்தில் அவனை யாரும் எதுவும் கேட்கவில்லை. அவன் வேலைகளை மற்றவர்கள் பகிர்ந்து போட்டுக் கொண்டு செய்தார்கள். அவனை எந்த நேரமும் வீட்டிற்குப் போக அனுமதித்தார்கள். திருமங்கலக்குடி முரளி வந்தால், எழுந்து நின்றது. பத்மினி வந்தால் கை கட்டிக் கொண்டது. முரளியின் அப்பா வந்தால், அவனுடன் இன்னிக்கு என்ன நடந்தது என்று விசாரித்தது. முரளி மூன்று வருடங்கள் கோயிலும், அலுவலகமும், வீடுமாய் வேறு எந்த சிந்தனையும் இல்லாமல், பத்மினியின் கட்டளைக்கு காத்துக் கொண்டிருக்கின்ற சேவகனாய் வாழ்க்கை நடத்தினான்.

திருமணம் நடந்த மூணாவது வருடம் முடிந்த பிறகு பத்மினி ஒரு நாள் அவனை அருகே அழைத்தாள். ஆரத் தழுவிக் கொண்டாள்.

''என் வேலை முடிந்து விட்டது. நான் எதற்காக உன்னைத் திருமணம் செய்து கொண்டேனோ அது முடிந்து விட்டது. திருமங்கலக்குடி மங்களாம்பிகை ஜொலிக்க ஆரம்பித்து விட்டாள். இனி அந்த நெருப்பு எளிதில்

அணையாது. அணைகிற நேரம் பார்த்து மறுபடியும்தான் இங்கே வந்து பிறப்பேன் ஊதி ஊதி நனைல் பரப்புவேன்.

இப்போது அந்தக் கனல் தழல் விட்டு வளர்கிறது நான் வயிற்றில் உன் கருவை சுமந்துக் கொண்டிருக்கிறேன். எப்போது கருவை சுமக்கிறேனோ அப்போது என் கதை முடியுமென எனக்கு சொல்லப்பட்டு இருக்கிறது. நான் இன்னும் மூன்று நாட்கள் தான் உயிரோடுயிருப்பேன். இந்த மூன்று நாட்களும் பத்மினியாகத்தான் இருப்பேன். என்னை விட்டு எங்கேயும் போக வேண்டாம். என்கூடவே இரு.'' என்று முரளிக்கு கட்டளையிட்டாள். முரளி அழுதான். அவள் மடியில் முகம் புதைத்துக் குலுங்கினான்.

பத்மினி அவன் முதுகு தடவி கொடுத்தாள். ''இது சிறிய கனவு. உனக்கு மறுபடியும் திருமணமாகும். யார் அந்த பொண்ணென்று நான் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறேன். ஆண் ஒன்றும், பெண் ஒன்றுமாய் இரண்டு குழந்தைகள் பிறக்கும். அந்தக் குழந்தைகளை நான் கவனித்துக் கொள்வேன். நீ இருக்கிற வீட்டில் தான்வளைய வருவேன். இந்தக் கோயிலில் நான் குடியிருப்பேன்.

இங்கே இந்த கோயிலைத் தூக்கி நிறுத்துவதற்காகவே நான் இங்கு பத்மினியாக பிறந்திருக்கிறேன். பத்மினி என்பது ஒரு உபாயம். பத்மினி என்பது பாதை. பத்மினி என்பது ஒரு கருவி. உன்னே நான் எனக்குள்ளேயிருக்கிறேன். என் வேலைக்காக பத்மினி என்ற கருவியை பயன் படுத்தி கொண்டிருக்கிறேன். எனவே பத்மினிக்காக நீ அழ வேண்டாம்.

உன் வேலை செய்து கொண்டிரு.''

மறுநாள் காலையில் அவளுக்கு ஜுரம் வந்தது பத்மினி அவன் கையை எடுத்து தலையில் வைத்துக் கொண்டாள்.

''எப்படி கொதிக்கிறது பார்த்தாயா.'' என்றாள். போய் கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

அப்பாவுக்கு அம்மாவுக்கும் விஷயம் சொன்னான்.

அம்மா பத்மினியின் தலைமாட்டில் போய் விசும்பத் துவங்கினாள்.

''இத்தனை சட்டுன்னு போகணுமா. இன்னும் இருந்து எங்களையெல்லாம் கடைத்தேத்தக் கூடாதா.''

''உன்னை எதுக்கு கடைத்தேத்தறது. நீ எற்கனவே கடைத்தேர்ந்தாச்சே. இனிமே, உனக்கும் இங்க பெரிய



வேலையில்லை. எல்லாத்தையும் வேடிக்கை பார்த்துட்டு முடிஞ்ச பிறகு, வந்து சேரு.'' என்று அம்மாவின் விரலைப் பிடித்துக் கொண்டாள். அப்பாவை அருகே அழைத்து தலையைத் தடவிக் கொடுத்தாள். முரளியைப் பக்கத்தில் உட்காரச் சொல்லி அவன் மடியைக் கட்டிக் கொண்டாள். மறுநாள் ஜுரம் அதிகரித்தது. முரளியின் அப்பா டாக்டருக்கு சொல்லியனுப்பினார். டாக்டர் வந்துபார்த்து விட்டு மருந்துகள் எழுதிக் கொடுத்தார். ஆடுதுறைக்கு போய் முரளி மருந்துகள் வாங்கி வந்தான். அந்த மருந்துகளை உற்றுப் பார்த்துவிட்டு பத்மினி விசிறியெறிந்தாள்.

இந்த மருந்துகள் விஷம். இதனால் எந்தபுண்ணியமும் இல்லை. எனக்கு வந்திருப்பது வெறும் ஜுரமல்ல. அது வேறு விஷயம். இந்த உடலிலிருந்து நான் பிரிந்துக் கொள்ள போகிறேன் என்று உடம்புக்கு சொன்னதும் உடம்பு கூடாது என்று மறியல் செய்கிறது. போராடுகிறது எனவே, அதற்காகத்தான் ஜுரம் என்றெல்லாம்வேடிக்கை காட்டுகிறது. இந்த ஜுரம் மாத்திரைகளால், சரியாகாது. வார்த்தைகளால் தான் சரியாகும். இனி வேறு வார்த்தை சொல்வதற்கு இல்லை. நான் கிளம்பவேண்டும். அதற்கான நேரம் வந்து விட்டது. நாளை காலை ஐந்தேகால் மணிக்கு நான் கிளம்பிவிடுவேன். உன்னை எழுப்புகிறேன். வந்து என் பக்கத்தில் படுத்துக் கொள். என் தலையை தடவிக் கொடு. என் மூச்சு நிற்பது உனக்குத் தெரியும். நான் எழுந்து போவது உன்னால் உணர முடியும். நான் எங்கே போகவில்லை. பத்மினி என்கிற உடம்புதான் அழி யும். மத்தபடி இந்த வீட்டில் தான் இருப்பேன்.

கண்மூடி படுத்துக் கொண்டாள். உடம்பு அனலாய் கொதித்தது. தூக்கிப் போட்டது. மூன்று போர்வை போர்த்தியும் குளிரில் நடுங்கியது. அனர்த்த துவங்கி னாள்.

மெல்ல அழத்துவங்கினான்.

''என்னை இப்படி இம்சை பண்றியேடி என்னை விட்டுட்டு போறியே நீ'' என்று அழுதான்.

முரளி ஊரில் முக்கியமான நண்பர்களுக்குச் சொன்னான். எல்லோரும் வந்து பார்த்தார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார்கள். பக்கத்தில் நின்று விளக்கேற்றி வைத்தார்கள். ஸ்வாமி படத்திற்கு மாலை போட்டார்கள். மெல்ல தாளம் எடுத்து இராம நாமத்தையும் கிருஷ்ண நாமத்தையும் சொல்லத் துவங்கினார்கள். விதவிதமான பஜனைப் பாடல்களை மெல்லிய குரலில் பாடத் துவங்கினார்கள். காலை ஐந்து மணிக்குக் கண் திறந்தாள். "நல்லாயிருக்கே யார் பாடறது. இதெல்லாம் தானா. நீங்களா? ஓ...ஓ...நீங்களா எல்லோரையும் விசாரித்தாள். முரளியைப் பார்த்தாள். கன்னம் வழித்து நெட்டி முறித்தாள். அம்மாவின் காலைத்தொட்டுக் கும்பிட்டாள். அப்பாவின் காலை எடுத்து தலையில் வைத்துக் கொண்டாள். உடம்பு மறுபடியும் உதறிப் போட்டது. மல்லாக்க திரும்பினாள். கண் மூடினாள். முரளியின் கையை எடுத்து நெஞ்சில் வைத்துக் கொண்டாள்.

மெல்ல முரளி அழத் துவங்கினான். "அழக்கூடாது" என்று கட்டளையிட்டாள்.

அவர்கள் வேகமாகப் பாடத் துவங்கினார்கள்.

இன்னும் வேகமாகப் பாடச் சொன்னாள்.

அவர்கள் இன்னும் வேகமாகப் பாடினார்கள். ஜாலர்கள் முழங்கின. சிப்லர் கட்டைகள் அதிர்ந்தன.

பத்மினி கண்மூடிக் கொண்டாள்.

முரளியும் அவர்களோடு சேர்ந்து பாடத் துவங்கினான். மெல்ல நடுநடுவே பத்மினி பத்மினி எனக் கூப்பிட்டான்.

உடம்பு வேகமாய் உதறியது. ஒருமுறை விசிறியெறிந்தது போல எழும்பி தடேரென்று சரிந்தது. மெல்ல மூச்சு பெரிதாயிற்று.



சுவாசம் பெரிதாக பெரிதாக அவர்கள் பாட்டு அதிகமாயிற்று.

சுவாசம் சட்டென்று நின்றது. மெல்ல அடங்கிற்று. காற்று போன பலூன் போல நீண்ட மூச்சு பத்மினியிடமிருந்து வெளியே வந்தது. பத்மினி சிரித்தபடி உயிர் துறந்தாள்.

பத்மினியை அடுத்த நான்கு மணி நேரத்தில் ஊருக்கு வெளியே கொண்டு போய் திருமங்கலக்குடி ஜனங்கள் தகனம் செய்தார்கள். முரளியின் தலையில் தண்ணீர் ஊற்றினார்கள். குலுங்கி குலுங்கி அழுதான்.

அழக்கூடாது அழக்கூடாது. தெய்வம் மாதிரிவந்தாள். தெய்வம் மாதிரி போய்விட்டாள். இது யாரானா சொன்னா நம்புவாளா. ஆனால், நாங்க நம்பறோம்... திருமங்கலக்குடி கிராமம் நம்பும். இந்தத் திருமங்கலக்குடியைத் தூக்கி நிறுத்தறதுக்காக வந்திருக்கா. இந்த திருமங்கலக்குடி இந்த தேசத்துக்கே வெளிச்சம் காட்டும். யாருக்கெல்லாம் கல்யாணம் ஆகலைன்னு நினைக்கிறாளோ அவாளுக்கெல்லாம் இங்கே நல்லகதி கிடைக்கும். யாருக்கெல்லாம் எந்த குறை இருக்கிறதோ அவாளுக்கெல்லாம் மங்களாம்பிகை தீர்த்துக் கொண்டிருப்பாள்.

ஒரு விக்ரகத்தை உயிர்ப்பிக்க தெய்வம் நேரே வந்திருக்கிறது. அழவேண்டாம் முரளி. நமக்கு வேலை இருக்கிறது. சுவாமிநாதன் அவனை அணைத்துக்கொண்டு சொன்னார். முரளி எழுந்து நின்றான். அவன் அப்பாவை நோக்கி அந்த அக்ரஹாரத்தை சேர்ந்த ஒருவர் பேசினார்.

"துக்கம் நடந்த வீடா எனக்குத் தெரியல. ஒரு பெரிய சம்பவம் நடந்து முடிஞ்சிருக்கு. அதனால சொல்றேன். எனக்கு ஒரு பொண்ணு இருக்கா. உங்க புள்ளை முரளிக்கு பண்ணிக்கிறேளா."

முரளியின் அப்பாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பத்மினிகிட்ட கேட்போம். அவ சரின்னு சொன்னா செய்வோம் என்று சொன்னார்.

''பத்மினிதான் சொன்னா. ''நீ தாண்டி எங்க ஆத்துக்கு வரப்போறேன்னு சொன்னா.'' அந்த தைரியத்தில்தான் இங்கு வந்து கேட்கறேன். எம் பொண்ணுகிட்ட சொன்னதை உங்கக்கிட்ட சொல்றேன்'' என்று அந்த மனிதர் சொன்னார்.

முரளியின் அப்பா யோசித்தார். ''சரி எல்லாம் முடியட்டும். பெண் பார்க்க வரோம்.'' முரளி வீட்டுக்குக் கொல்லைப்புறம் உட்கார்ந்து பத்மினியின் புடவைகளை மார்பில் போட்டுக் கொண்டான். வானத்தை வெறித்துப் பார்த்தான்.

— முற்றும் —